# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - மார்ச் 2020

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 11
தமிழ்நாடு செய்திகள் ........ 16
புதிய கடல் ரோந்து கப்பல்கள் ........ 16
கீழடி அகழ்வாராய்ச்சியின் 6வது கட்டம் ........ 17
தமிழ்நாடு சுகாதார முறை சீரமைப்புத் திட்டம் ........ 17
பெண் நீதிபதிகளை மட்டும் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு ........ 17
போர் பதக்கம் ........ 17
சங்கரன்கோயில் அருகே புத்த கோபுரம் ........ 18
அங்கக (கரிம) மாம்பழங்களின் ஏற்றுமதி ........ 18
நீர்நிலைகளின் சுற்றுச்சூழல் மீட்டெடுப்பு ........ 19
நாமக்கல் மருத்துவக் கல்லூரி ........ 19
எட்டு உணவுப் பதப்படுத்தும் திட்டங்களுக்கு அனுமதி ........ 19
சர்பங்கா நீரேற்றுப் பாசனத் திட்டம் ........ 19
தமிழ்நாட்டில் புதிய திட்டங்கள் ........ 20
கச்சத் தீவு ஆலயத் திருவிழா ........ 20
தஞ்சாவூரில் உணவு அருங்காட்சியகம் ........ 20
பெரம்பலூரில் இணை மின் நிலையம் ........ 21
நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி ........ 21
ஜவ்வாது மலைப்பகுதியில் நடுகல் கண்டெடுப்பு ........ 21
கண்ணகி நகர் கலை மாவட்டம் ........ 21
காற்றாலை ஆற்றல் மின் உற்பத்தி ........ 22
தமிழ்நாடு மாநிலத் திட்ட ஆணையத்தின் துணைத் தலைவர் – நியமனம் ........ 22
எண்ம (டிஜிட்டல்) நீர் அளவைகள் (மீட்டர்கள்) ........ 22
தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் 50வது ஆண்டு ........ 23
சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைக் கண்காணித்தல் ........ 23
தமிழில் பெயர்ப் பலகைகள் ........ 24
சோதனை ஆய்வகங்கள் ........ 24
இரட்டைமலை சீனிவாசனின் நினைவு மண்டபம் ........ 24
வண்டலூர் மிருகக்காட்சி சாலையில் வனவிலங்குகளைப் பார்வையிடுதல் (வனவிலங்கு உலா). 24
சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் குறைவு ........ 24
தூய தமிழ்ப் பற்றாளர் விருது ........ 25
தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கான சட்டத்தில் திருத்தம் ........ 25
வெள்ளாடு ஆராய்ச்சி மையம் ........ 25
தேனியில் கால்நடை மருத்துவக் கல்லூரி ........ 26
அம்மா சிறு சந்தைகள் ........ 26
கொரானா சோதனை மையம் - தமிழ்நாடு ........ 26
தமிழ்நாட்டின் 38வது மாவட்டம் ........ 26
தேசியச் செய்திகள் ........ 27
தேசிய முக்கியத்துவ நிலை ........ 27

தேசிய தொழில்நுட்ப ஜவுளித் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது ........ 27
24வது கிழக்கு மண்டலச் சபை ........ 27
மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ........ 27
மூத்தக் குடிமக்களுக்கு துணைக் கருவிகள் மற்றும் சாதனங்கள் - பிரதமர் நரேந்திர மோடி ........ 28
இந்திர தனுஷ் பயிற்சி - 5வது பதிப்பு ........ 28
வடகிழக்கு மாநிலங்களில் தொகுதி வரையறை ........ 29
விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகள் ........ 29
11வது தேசிய கிருஷி விக்யான் கேந்திர மாநாடு ........ 29
புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையங்கள் (REMCகள்) ........ 30
RaIDer-X ........ 30
வேலையின்மை விகிதம் ........ 31
விமானப் பயணத்தின் போது அருகலை வசதி (வைஃபை) ........ 31
இந்தியா மற்றும் அர்மேனியா ஆகிய நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு ஒப்பந்தம் ........ 31
உலகப் பாரம்பரியத் தளங்கள் ........ 32
சுபோஷித் மா அபியான் ........ 32
கௌசல் பாரத் ........ 33
பிரதான் மந்திரி லகு வியாபாரி மன் - தன் யோஜனா ........ 33
நதிநீர் இணைப்புத் திட்டங்கள் ........ 33
QS உலகத் தரவரிசை ........ 34
ஜன் அவுசாதி வாரம் ........ 34
வேளாண் ஏற்றுமதிக் கொள்கையைச் செயல்படுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ........ 34
மெய்நிகர் நாணயங்கள் ........ 35
பாதுகாப்பு மை ........ 35
பொதுத் துறை வங்கிகளை இணைக்க அமைச்சரவை ஒப்புதல் ........ 36
மேக் பிணைப்பு செயல்முறை ........ 36
நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு ........ 36
ஒருங்கிணைந்த உள்நாட்டு எரிசக்தி அமைப்புகள் ........ 36
மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021 ........ 37
மத்தியத் தொழில் பாதுகாப்புப் படையின் கட்டுப்பாட்டில் ஜம்மு விமான நிலையம் ........ 37
கோவாவின் கோலா மிளகாய் - GI குறியீடு ........ 37
உற்பத்திப் பொருள்களை மின் சந்தைப்படுத்துதல் மீதான ஒப்பந்தம் ........ 38
மிக முக்கிய நபர்களுக்கான விமானங்கள் மேம்படுத்தப்படல் - போயிங் -777 ........ 38
நாரி சக்தி புரஸ்கர் ........ 39
சுய உதவிக் குழுக்கள் ........ 40
பாஜக மற்றும் ஜே.வி.எம் ........ 41
நிகர அளவீட்டு (Net Metering) இணைப்பிற்கான அனுமதி ........ 41
இந்தியாவில் பெண்கள் மேம்பாடு ........ 41
தொகுதிகளின் மறுவரையறை ........ 41
கன்வால் ஜீத் சிங் தில்லான் ........ 42
பெண் விஞ்ஞானிகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கான உதவி எண் ........ 42
இந்தியாவை மாற்றும் பெண்கள் விருதுகள் ........ 43
துப்புரவுத் துணிகளை (மாத விடாய்த் துணிகள்) அகற்றும் பைகள் ........ 43

நான்கு நாடுகளில் தளவாடத் தளங்கள் – HAL ........ 44
பெண் விஞ்ஞானிகள் சர்வதேச அனுபவத்தைப் பெறுதல் ........ 44
காங்கிரஸ் உறுப்பினர்கள் தற்காலிக இடைநீக்கம் ........ 45
பிரதமர் மோடியின் சமூக ஊடகங்களைக் “கையாண்ட” 7 பெண்கள் ........ 45
ஸ்டார்ட்அப் இந்தியா ........ 45
2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் கேட்கப்படும் கேள்விகள் ........ 46
துணைநிலை ஆளுநரின் அதிகாரம் குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு ........ 47
இந்தியாவின் சிறந்த தனியார் கல்வி நிறுவனம் ........ 47
பிரக்யான் மாநாடு - 2020 ........ 47
இந்தியா நானோ 2020 ........ 47
சொத்துரிமை ........ 48
நிலக்கரி இறக்குமதி உயர்வு ........ 48
மக்களவை உறுப்பினர்களின் தற்காலிக இடைநீக்கம் ரத்து ........ 49
தொற்று நோய்கள் சட்டம், 1897 ........ 49
பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா ........ 49
தேசிய மக்கள்தொகைப் பதிவேடு (NPR) ........ 50
WIONன் உலகளாவிய உச்சி மாநாடு ........ 51
நொடித்தல் மற்றும் திவால் குறியீடு (Insolvency and Bankruptcy Code - IBC) திருத்த மசோதா, 2020 ........ 51
தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சி (SAREX - 2020) ........ 51
கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்டத் தகவல் அமைப்பு – 2017/18 ஆய்வு ........ 52
அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழ் முகமூடிகள் மற்றும் கை சுத்திகரிப்பான்கள் ........ 52
குற்றப்பிரிவு பல்பயன்பாட்டு முகமையகம் (Crime Multi Agency Centre) ........ 53
பூமி ராஷி இணைய வாயில் ........ 54
விங்ஸ் இந்தியா 2020 ........ 54
இந்தியாவில் கொரோனா வைரஸின் மரபுகூறு பிரிப்பு ........ 54
COVID-19 பாதிப்பிற்கான அவசரகால நிதியை இந்தியா முன்மொழிந்துள்ளது ........ 54
அறிவிக்கப்பட்ட பேரிடர் ........ 55
ICMR சோதனை உத்தியை உருவாக்கியுள்ளது ........ 55
கங்கை அமந்திரன் அபியான் ........ 55
நிலத்தடி நீர் மாசுபடுதல் ........ 55
விவாத் சே விஸ்வாஸ் மசோதா ........ 56
அனைத்து மகளிர் மருத்துவக் கல்லூரி ........ 56
ரஞ்சன் கோகோய் மாநிலங்களவைக்கு நியமனம் ........ 56
மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழக மசோதா, 2019 ........ 57
சீராய்வு மனுக்கள் ........ 57
என்சிசி சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை ........ 57
தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் இரண்டாம் நிலை ........ 58
ODF+, ODF++ and நீர் பிளஸ் ........ 58
தகுதிநீக்கம் செய்யக் கோரப்பட்ட மனு ........ 59
மாநிலப் பேரிடர் மீட்பு நிதி ........ 60
இடது சாரித் தீவிரவாதம் – குறைவு ........ 61
இந்திரா காந்தி மாத்ரிதவ் போஷன் யோஜன் ........ 61

அடல் பீமா வியாக்தி கல்யாண் யோஜனா ........ 62
இந்தியா – மூன்றாவது மின்சார உற்பத்தியாளர் நாடு ........ 62
ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் ஆயுஷ் சுகாதார மற்றும் நல மையம் ........ 63
மருத்துவ சாதனப் பூங்காத் திட்டம் ........ 63
தேசிய நீரக வரைபடமிடல் திட்டம் ........ 64
பாதுகாப்புக் கொள்முதல் நடைமுறை 2020 ........ 64
சுவலம்பன் விரைவு இரயில் ........ 64
பழங்குடியினருக்கான தொழில்நுட்பம் ........ 65
கோவிட் 19 தொற்று நோய்க்காக ஏற்படுத்தப்பட்ட இந்தியாவின் முதலாவது மருத்துவமனை ........ 65
இந்தியாவில் முழுமையான ஊரடங்கு ........ 66
குறுகிய காலச் சேவை ஆணையம் ........ 67
ஆயுஷ்மான் பாரத் மற்றும் கோவிட் 19 ........ 67
கர்நாடகாவில் இட ஒதுக்கீடு ........ 67
கோவிட் – 19ன் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான குழு ........ 68
டீஸ்டா நதிப் பாலம் ........ 68
பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன் யோஜனா ........ 69
மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021 ........ 69
ஆபரேஷன் நமஸ்தே ........ 70
இயற்கைப் பேரிடர் (மெஜுர் போர்ஸ் - Force Majeure) ........ 71
கொரானாவை எதிர்த்துப் போராடு என்ற IDEAthon ........ 71
நாடு முடக்கத்தின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் ........ 71
இந்தியாவில் எல்பிஜி எரிவாயு ........ 72
இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான உயர் நிலைக் குழு ........ 72
தேசிய செயற் குழு ........ 72
சர்வதேசச் செய்திகள் ........ 73
பூர்வோதயா திட்டம் ........ 73
ஆசியான் அமைப்பின் சந்திப்பை அமெரிக்கா ஒத்திவைப்பு ........ 73
‘மாதவிடாய் காலப் பொருள்களுக்கான’ தட்டுப்பாட்டை முடிவுக்கு கொண்டு வருதல் – ஸ்காட்லாந்து ........ 73
நட்சத்திர மதிப்பீட்டுத் திட்டம் அறிமுகம் – BEE ........ 73
அமைதி ஒப்பந்தம் ........ 74
இலவசப் பொதுப் போக்குவரத்து ........ 75
எண்ணெய் உற்பத்தியைக் குறைத்தல் – OPEC ........ 75
இந்தியப் பெருங்கடல் ஆணையம் ........ 75
ஐக்கிய நாடுகளின் உலகளாவிய காம்பாக்ட் ஆய்வு ........ 76
பாலின சமூக நெறிகள் குறியீடு ........ 76
சர்வதேச ஆயுத பரிமாற்றத்தின் போக்குகள் - 2019 ........ 77
ரஷ்யாவுடன் OPEC+ விநியோக நிறுத்த ஒப்பந்தம் ........ 77
ரஷ்யாவின் நிரந்தத் தலைவராக விளாடிமிர் புடின் ........ 78
சிறுமிகளுக்கான ஒரு புதிய சகாப்தம்: அறிக்கை ........ 78
சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ........ 78
காலநிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச இராணுவ மன்றம் ........ 79

ஈரான் மற்றும் சர்வதேச நாணய நிதியம் ..... 80
உலகளாவிய விலங்குப் பாதுகாப்புக் குறியீடு 2020 ..... 80
சர்வதேசச் சுகாதார ஒழுங்குமுறைகள் ..... 80
அயல்நாட்டு மக்களுக்கான இசைவுச் சீட்டு ..... 81
அமெரிக்காவில் தேசிய அவசரநிலை ..... 81
WHO COVID – 19ன் தீவிரத் தன்மையை சீனாவிலிருந்து ஐரோப்பாவிற்கு மாற்றி உள்ளது ..... 81
UNCTAD அறிக்கை ..... 81
கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான ஐக்கிய இராஜ்ஜியத்தின் உத்தி ..... 81
ஈராக்கின் புதிய பிரதமர் ..... 82
ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவர ஆணையம் ..... 82
பின்லாந்து – உலகின் மகிழ்ச்சிகரமான நாடு ..... 83
கரோனாவை கண்டுபிடிப்பதற்கான தொழில்நுட்பம் ..... 84
நாடு வாரியான (Country by Country) அறிக்கை ..... 84
CDRI – இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ..... 85
G7 மாநாடு 2020 ..... 85
உலக நகரங்கள் மாநாடு ..... 86
4 மிகப்பெரிய சோதனைகள் ..... 86
சேப் ஹேண்ட்ஸ் (Safe Hands) சவால் ..... 86
கோவிட் - 19 ஒற்றுமை மீட்பு நிதி (Solidarity Response Fund) ..... 87
குர்சார்பெய்ட் திட்டம் - ஜெர்மனி ..... 87
மீயொலி வேக ஏவுகணைகள் ..... 87
G20 காணொளி மாநாடு ..... 88
IMF கொள்கைக் கண்காணிப்பு ..... 89
உலகளாவிய மனிதாபிமான உறுதியளிப்புத் திட்டம் ..... 89
அமெரிக்காவின் பொருளாதார நிதியுதவித் தொகுப்பு ..... 89
தேசியப் பாதுகாப்புத் திட்டம் ..... 90
கண்டுபிடி, சோதி, குணப்படுத்து (Trace, Test, Treat) ..... 90
உலகளாவிய நிலக்கரி மின் உற்பத்தி ..... 90
பாதுகாப்பு உற்பத்திச் சட்டம் ..... 90
பொருளாதாரச் செய்திகள் ..... 91
காப்பீட்டு இடையீட்டாளர்களில் 100% அன்னிய நேரடி முதலீடு ..... 91
உள்நாட்டு (சிவில்) விமானப் போக்குவரத்தில் 100% அந்நிய நேரடி முதலீடு ..... 91
டிஜிட்டல் பரிவர்த்தனையில் சென்னை 2வது இடம் ..... 91
தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம் குறைப்பு ..... 92
யெஸ் வங்கி - நிதி நெருக்கடி ..... 92
போட்டிச் சட்டத்தின் பொருளாதாரம் குறித்த தேசிய மாநாடு ..... 93
பொதுத்துறை வங்கிகளின் மிகப்பெரிய ஒருங்கிணைப்பு ..... 93
குறைந்தபட்ச இருப்புத் தொகையைப் பராமரிக்க வேண்டியதில்லை – SBI சேமிப்பு வங்கிக் கணக்குகள் ..... 93
கிசான் ரயில் திட்டம் ..... 94
தாதுச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2020 ..... 94
ஏற்றுமதிப் பொருட்கள் மீதான வரிகளை நீக்கும் திட்டம் ..... 95

நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் கடன் வழங்கும் வரம்புகள் திருத்தம் ..... 96
சரக்கு மற்றும் சேவைகள் வரி ஆணையத்தின் 39வது கூட்டம் ..... 96
தங்க இறக்குமதி குறைவு ..... 96
பணவழங்கீட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள் ..... 97
பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை ..... 98
இன்வென்ட் இந்தியா வணிக நோய் எதிர்ப்புத் தினம் ..... 98
நிதிப் பரிமாற்றம் ..... 99
பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகள் ..... 99
மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணை, 2013 ..... 99
விவசாயம் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ..... 100
அணுகக் கூடிய இந்தியாவிற்கான புத்தாக்கம் ..... 100
உலகின் மீன் உற்பத்தி ..... 100
வட்டார கிராம வங்கிகளின் மறு மூலதனமாக்கம் ..... 101
உரங்களுக்கான மானியம் ..... 101
திருத்தியமைக்கப்பட்ட மின்னணு உற்பத்தித் தொகுப்புகள் திட்டம் (EMC 2.0) ..... 102
கோவிட் – 19 மறுவாழ்வு மற்றும் நிவாரண நிதி ..... 102
மாற்றியமைக்கப்பட்ட புதிய விலை திட்டம் - III ..... 102
மாவட்ட கனிம அறக்கட்டளை ..... 103
ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள் ..... 104
திட்டங்களை நிறுத்தி வைத்தல் ..... 104
பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதி (PMNRF) ..... 105
PM – CARES நிதி ..... 105
பெரிய வங்கிகள் ஒருங்கிணைப்புத் திட்டம் ..... 105
தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதி ..... 106
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 107
பிரபஞ்சத்தில் (பேரண்டத்தில்) மிகப்பெரிய வெடிப்பு ..... 107
பூமியின் 2வது சந்திரன் ..... 107
சிவப்புப் பாண்டா ..... 108
சூப்பர் எர்த் (வெளிக்கோள்) ..... 108
2020 ஏவி 2 சிறுகோள் ..... 108
தில்லியில் இரண்டாவது மேகக் கணினி (cloud) பகுதி ..... 109
மரபணு மாற்றக் கருவி - பார்வையின்மைக்குச் சிகிச்சையளிக்க முதன்முறையாகப் பயன்படுத்தப்படல் ..... 109
ஜீனோம் (மரபணு) இந்தியா திட்டம் ..... 109
ஆயுஷ் தொடர் ..... 110
பாலிமர் மின்பகுளி சவ்வு எரிபொருள் மின்கலம் ..... 110
சஹ்யாத்ரி மேகா ..... 110
சூரியப் புள்ளிகள் ..... 111
பெர்சிவியரன்ஸ் - நாசாவின் அடுத்த செவ்வாய் ஆய்வு வாகனம் ..... 112
யுவ விக்யானி காரியக்கரம் ..... 112
கொரோனா வைரஸ் – தொற்றுநோய் ..... 112
சூரிய ஒளியைப் பெறும் குழாய்த் தொழில்நுட்பம் ..... 113

கைகாயா காகா ..... 113
மெத்தனோட்ரோபிக் பாக்டீரியா கலாச்சாரம் ..... 114
எக்ஸோமார்ஸ் திட்டம் ..... 114
இரசாயனங்களைப் பயன்படுத்தாமல் ஒரு புதிய கை காப்பான் திரவம் ..... 115
COVID-19 நோய்க்கான முதலாவது தடுப்பூசிச் சோதனை ..... 115
தனியார் நிறுவனங்களால் கொரோனா வைரஸை பரிசோதித்தல் ..... 116
NAVIC தகவல் அனுப்பும் அமைப்பு ..... 116
ஹீமோஸ்டாட் ..... 117
நானோகாம்போசிட் மேல்பூச்சுகள் ..... 118
சாத்தியமுள்ள மீன்பிடி மண்டலம் ..... 118
எச்ஐவி எதிர்ப்பு மருந்துகள் – கோவிட் 19 ..... 118
ஹண்டிங்டின் நோய் ..... 119
ஹைட்ராக்ஸி குளோரோ குயின் ..... 119
எல்பிஸ்டோஸ்டேஜ் என்பதின் புதைபடிவம் - ஆராய்ச்சி ..... 120
தேசிய மீத்திறன் கணினித் திட்டம் ..... 120
மைலேப் (Mylab) ..... 121
ஹண்டா வைரஸ் ..... 122
உயிரிப் பாதுகாப்பு நிலைகள் ..... 122
உயிரி – செறிவூட்டப்பட்ட உயர் புரத கோதுமை வகை ..... 123
2020 CD3 ..... 123
83 தேஜாஸ் போர் விமானங்கள் - கொள்முதல் ..... 123
நோய் எதிர்ப்பொருள் சோதனை (Antibody test) ..... 124
எச் 1 மருந்து ..... 125
ஐசக் திட்டம் ..... 125
CONTec ..... 125
WHOன் சோதனைகள் ..... 126
கோவிட் – 19ற்காக இந்திய ஆராய்ச்சியாளர்களின் எதிர்வினை (ISRC - Indian Scientists' Response to CoViD-19) ..... 126
கோவிட் – 19ன் மூலம் அல்லது ஆதாரம் ..... 126
நோயினின்று நீக்கும் பிளாஸ்மா ..... 127
சுற்றுச்சூழல் செய்திகள் ..... 127
17 புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன ..... 127
இந்தியாவில் வெப்ப அலைகள் (அனல் காற்று) ..... 128
சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலம் ..... 128
ஒடிசாவில் யுரேசிய நீர்நாய்கள் ..... 129
கரிநுண்துாள் செறிவு ..... 130
பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான உலகளாவிய கூட்டிணைவு ..... 130
சுக்னா ஏரி ..... 131
தூய்மை இந்தியத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் ..... 131
சதுப்புநில மான் ..... 131
சுற்றுச்சூழல் தொடர்பான குற்றங்கள் ..... 132
அழிவின் விளிம்பில் நீலகிரி வரையாடு ..... 132

பவளப் பாறைகள் வெளுத்தல் ..... 133
சிவப்புப் பாண்டாவின் நிலை – Traffic..... 134
வால்மீகி காப்பகத்தில் மீண்டும் இந்தியக் காட்டெருமை ..... 135
பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான கூட்டிணைவு..... 135
பனிப் போர்வையில் மாற்றங்கள்..... 136
அபாயகரமான மாசுபாடு ..... 136
வெள்ளை ஒட்டகச் சிவிங்கி ..... 136
ஒக்குளுடெண்டாவிஸ் கௌங்கரே (Oculudentavis khaungraae)..... 137
தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டம் ..... 137
டனுபே-ஓடர்-எல்பி கால்வாய் ..... 138
பெங்களுருவின் நீர்ப் பாதுகாப்பு மதிப்பீடு ..... 138
வழக்கமான பருவகால மழை - இந்தியா ..... 138
பசுபிக்கில் நிலநடுக்கம்..... 139
மரபணு மாற்றப்பட்ட பயிர் வகையின் கள ஆய்வு ..... 139
அக்ஷய் உர்ஜா இணைய வாயில் ..... 140
சிக்கிம் பனிப்பாறைகள் ..... 140
கரி நிலங்கள்..... 141
உள்ளக எரிப்பு இயந்திரங்களின் எரிபொருள் திறன் ..... 141
பிஎஸ் IVலிருந்து பிஎஸ் VI..... 141
புவி நேரம் ..... 142
இமாலய மலையாடு..... 143
மாநிலச் செய்திகள் ..... 144
1000 நீரூற்றுகள் திட்டம் ..... 144
நிமத் மிளகாய்த் திருவிழா - 2020 ..... 144
சோன்பத்ரா தங்கச் சுரங்கங்கள்..... 144
பழங்குடி அமைப்புகள் நுழைவு அனுமதிப் படிவ முறையைக் கோருதல்..... 145
பாதுகாப்பு இல்லங்கள் - கேரளா ..... 145
பாகீரதா திட்டம் ..... 145
நில வழியாக இடப்பெயர்விற்கான சோதனைச் சாவடிகள்..... 146
தமிழகத்தைச் சேர்ந்த கேரள அஞ்சல் துறைத் தலைவர் ..... 146
சிறப்பு கிராம சபைகள்..... 146
கிஷோரி சக்தி காரியகிரம் ..... 146
ஆற்றுக்கால் பொங்கல் திருவிழா ..... 147
'பெயர் மற்றும் அவமானம்' குறித்த அறிவிப்புகளை நீக்க நீதிமன்ற உத்தரவு..... 147
மேற்கூரையில் சூரிய ஒளித் தகடுகள் நிறுவல்கள்..... 148
காலநிலை நெகிழ்திறன் மழை சார்ந்த விவசாயத்திற்கான ஒப்பந்தம் ..... 148
பாசுமதி புவிசார் குறியீடு ..... 148
மாநில சுகாதார அவசரநிலை ..... 149
பூல் டெய் திருவிழா..... 149
உத்தரன் திட்டத்தின் கீழ் அரங்கங்கள் ..... 149
உள்ளூர் மக்களுக்கான ஒதுக்கீடு – கர்நாடகா ..... 150
கோழிகளைக் கொல்ல கேரள அரசு உத்தரவு ..... 150

பொதுச் சொத்துக்களைச் சேதத்திலிருந்து மீட்பதற்கான அவசரச் சட்டம், 2020 ..... 150
ரோபேக்ஸ் (ROPAX) ..... 150
பொதுப் பாதுகாப்புச் சட்டம் ..... 151
அர் – ரினாம் ..... 151
அருணான்க் திட்டம் ..... 151
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 152
6வது சுவாமி விவேகானந்தா கர்மயோகி விருது 2020 ..... 152
உலக உற்பத்தித்திறன் மாநாடு - 2020ன் 19வது பதிப்பு ..... 152
உ.வே.சா. உலகத் தமிழ் விருது ..... 153
“இஸ்லாமிகா 500” விருது ..... 153
லலித் கலா அகாடமி விருதுகள் ..... 153
உலக வரலாற்றில் மிகச் சிறந்த தலைவர் ..... 153
இந்திரா காந்தி மற்றும் அமிர்த கவுர் ..... 154
இந்த ஆண்டின் இந்திய விளையாட்டுப் பெண்கள் விருது ..... 154
அவ்வையார் விருது ..... 155
பாவ்னா தேஹாரியா ..... 155
பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான் ..... 155
டாக்டர் கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருது ..... 156
அபெல் விருது ..... 156
சத்யருப் சித்தாந்தா ..... 156
விளையாட்டுச் செய்திகள் ..... 157
மரியா ஷரபோவா ஓய்வு பெறுகிறார் ..... 157
ஆசிய ஸ்குவாஷ் கூட்டமைப்புச் செயல்திறன் விருது பட்டியல் ..... 157
கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுகள் ..... 157
மகளிர் டி20 - 2020 ..... 158
ஒலிம்பிக் சுடர் 2020 ..... 159
டோக்கியோ 2020 ஒலிம்பிக்ஸ் ..... 160
திருநம்பிகளைக் கொண்ட நாட்டின் முதலாவது அணி ..... 160
FIFAன் கோவிட் – 19 பிரச்சாரம் ..... 160
முக்கிய தினங்கள் ..... 161
பாகுபாடற்ற தினம் - மார்ச் 1 ..... 161
உலக உள்நாட்டு (சிவில்) பாதுகாப்பு தினம் - மார்ச் 1 ..... 162
உலக கானுயிர் தினம் - மார்ச் 03 ..... 162
உலகக் கேட்புத் திறன் தினம் - மார்ச் 03 ..... 162
தேசியப் பாதுகாப்பு தினம் - மார்ச் 04 ..... 163
நீடித்த வளர்ச்சிக்கான உலகப் பொறியியல் தினம் - மார்ச் 04 ..... 163
ஜன் அவுசாதி திவாஸ் (மரபுசார் மருத்துவ தினம்) - மார்ச் 7 ..... 163
சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 8 ..... 164
மத்தியத் தொழிலக் பாதுகாப்புப் படையின் எழுச்சி (நிறுவன) தினம் - மார்ச் 10 ..... 165
உலக சிறுநீரக தினம் 2020 - மார்ச் 12 ..... 165
உலக ரோட்டராக்ட் தினம் - மார்ச் 13 ..... 166
உலக உறக்க தினம் - மார்ச் 13 ..... 166

பை நாள் - மார்ச் 14 ..... 167
நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் - மார்ச் 14 ..... 167
சர்வதேசக் கணித தினம் - மார்ச் 14 ..... 168
உலக நுகர்வோர் உரிமை தினம் - மார்ச் 15 ..... 168
தேசியத் தடுப்பு மருந்து தினம் - மார்ச் 16 ..... 168
ஆயுதத் தளவாட தொழிற்சாலைகள் தினம் - மார்ச் 18 ..... 169
சர்வதேச மகிழ்ச்சி தினம் – மார்ச் 20 ..... 169
உலக சிட்டுக் குருவி தினம் – மார்ச் 20 ..... 170
சம இரவு – பகல் புவி தினம் – மார்ச் 20 ..... 170
உலக வாய் சுகாதார தினம் – மார்ச் 20 ..... 170
உலக மீள்சுழற்சி தினம் – மார்ச் 18 ..... 171
உலகக் கவிதை தினம் – மார்ச் 21 ..... 171
சர்வதேச நவ்ருஸ் தினம் – மார்ச் 18 ..... 171
சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் – மார்ச் 21 ..... 172
சர்வதேசக் காடுகள் தினம் – மார்ச் 21 ..... 172
உலக மனநலிவு நோய் அறிகுறி தினம் – மார்ச் 21 ..... 172
உலக தண்ணீர் தினம் – மார்ச் 22 ..... 173
தியாகிகள் தினம் – மார்ச் 23 ..... 173
உலக வானிலை தினம் - மார்ச் 23 ..... 173
உலக காசநோய் தினம் - மார்ச் 24 ..... 174
மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கௌரவம் குறித்த உண்மைக்கான சர்வதேச உரிமைகள் தினம் - மார்ச் 24 ..... 174
அட்லாண்டிக் கடல் பகுதியின் அடிமைகள் வர்த்தகம் மற்றும் அடிமைத் தனத்தினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்வதற்கான சர்வதேச தினம் – மார்ச் 25 ..... 174
கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பணியாளர் உறுப்பினர்களுடன் ஒன்றிணைவதற்கான சர்வதேச தினம் – மார்ச் 25 ..... 175
உலக திரையங்கு (நாடகக் கொட்டகை) தினம் – மார்ச் 27 ..... 175
இராஜஸ்தான் தினம் – மார்ச் 30 ..... 175
உலக இட்லி தினம் – மார்ச் 30 ..... 176
இதரச் செய்திகள் ..... 177
“வேர்ட்லைன் இந்தியா டிஜிட்டல் பணவழங்கீடுகள் – 2019” என்ற ஒரு அறிக்கை ..... 177
பிரீடம் ஹவுஸ் அமைப்பின் வருடாந்திர அறிக்கை ..... 177
முதல் 5 இடங்களில் இந்திய மருந்துத் தொழில்துறை ..... 177

# TNPSC துளிகள்

- ஜூன் ஒன்றாம் தேதி முதல் பெட்டியில் அடைக்கப் படாத (Non-Packaged) இனிப்புப் பொருட்களில் கூட 'உற்பத்தி தேதி' மற்றும் 'காலாவதி தேதி' பற்றிய விவரங்களை, இனிப்புக் கடைகள் கட்டாயமாக காண்பிக்க வேண்டும் என்று இந்திய உணவுப் பாதிகாப்புத் தர நிர்ணயச் சங்கமானது உத்தரவு (FSSAI) பிறப்பித்துள்ளது.
- அமர் பிரசாத் ரெட்டி எழுதிய மறைந்த முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா பற்றிய புத்தகம் "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதாவின் வாழ்க்கை மற்றும் காலம்" என்ற தலைப்பில் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- பிறரின் உதவியுடன் தற்கொலை செய்து கொள்வதற்கான தடையை ஜெர்மனியின் உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. பிறரின் உதவியுடன் தற்கொலை செய்தலானது அந்நாட்டின் 2015 ஆம் ஆண்டுச் சட்டத்தால் தடை செய்யப் பட்டுள்ளது.
  - பிறரின் உதவியுடன் தற்கொலை செய்தல் என்பது பொதுவாக ஒரு மருத்துவர் அல்லது சுகாதாரச் சேவை வழங்குபவரின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் தற்கொலை ஆகும்.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது எதிர்வரும் மாநிலங்களவைத் தேர்தலுக்காக தமிழகத் தேர்தல் அதிகாரியாக கே. சீனிவாசன் என்பவரை நியமித்துள்ளது.
- FICCI (இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு - Federation of Indian Chambers of Commerce and Industry) அமைப்பானது '2020 ஆம் ஆண்டின் இந்தியா - நியூசிலாந்து வர்த்தக மன்றத்தின்' சந்திப்பை புது தில்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் சித்ரக்கூட்டில் 296 கி.மீ தொலைவுள்ள பண்டேல்கண்ட் அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- இந்திய ரயில்வேயானது தனது முதலாவது 'ரயில்களில் உணவு விடுதிகளை' (Restaurant on Wheels) மேற்கு வங்கத்தின் அசன்சோல் ரயில் நிலையத்தில் தொடங்கியுள்ளது.
- கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக, நிக்கோசியாவில் நடைபெறும் துப்பாக்கிச் சுடுதல் உலகக் கோப்பையில் இருந்து இந்தியத் துப்பாக்கிச் சுடுதல் அணி விலகியுள்ளதாக இந்திய தேசியத் துப்பாக்கிச் சுடுதல் சங்கம் (National Rifle Association of India - NRAI) அறிவித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 5 -15 வரையிலான தேதிகளில் நடத்தத் திட்டமிடப் பட்டிருந்த ஜெனீவா சர்வதேச மோட்டார் கண்காட்சியானது (Geneva International Motor Show - Gims) இப்போது வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக ரத்து செய்யப் பட்டுள்ளது.
- முஹைதீன் யாசின் என்பவர் மலேசியாவின் புதிய பிரதமராக உருவெடுத்துள்ளார்.
- கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியில் டூட்டி சந்த் (ஒடிசா) 2வது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- வழக்கமான பள்ளி மற்றும் கல்லூரி வகுப்புகளைப் பாதிக்கும் வேலை நிறுத்தங்கள், பேரணிகள் மற்றும் முற்றுகைப் போராட்டங்கள் ஆகியவற்றைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் வளாகங்களில் நடத்தக் கூடாது என்று கேரள உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- OECD (பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு - Organisation for Economic Co-operation and Development) அமைப்பானது 2020 ஆம் ஆண்டிற்கான தனது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக் கணிப்பை 6.2 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமாகக் குறைத்துள்ளது.

- இது உள்நாட்டு மற்றும் உலகப் பொருளாதாரத்தில் கொடிய கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தைக் குறைத்துள்ளது.

❖ சில நாடுகள் கொரோனா நோய்க் கிருமியைக் கட்டுப்படுத்தப் போராடி வரும் நிலையில், உலக சுகாதார நிறுவனமானது புதிய கொரோனா வைரஸிற்கான உலகளாவிய ஆபத்து மதிப்பீட்டை "கடுமையான" நிலையிலிருந்து "மிகக் கடுமையான" நிலைக்கு உயர்த்தியுள்ளது.

❖ விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமையவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான அடிக்கல் மார்ச் 1 அன்று நாட்டப்பட்டது.

❖ முதலாவது பிரசவத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றெடுக்கும் ஒரு பெண் அரசு ஊழியர் தனது இரண்டாவது பிரசவத்தின் போது ஊதியத்துடன் கூடிய மகப்பேறு சலுகைகளைப் பெறுவதற்குத் தகுதியற்றவர் என்று மதராஸ் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

❖ மனித உரிமைகளுக்கான ஐ.நா ஆணையத்தின் உயர் ஆணையரான மைக்கேல் பேச்லெட் என்பவர் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு (Citizenship Amendment Act - CAA) எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஒரு இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

❖ பாலியல் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தின் உலக தினமானது 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 4 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.

❖ 2020 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் தேதியன்று கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப் பட்டது.

❖ இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவின் புதிய தலைவராக இந்தியாவின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான சுனில் ஜோஷியை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் நியமித்துள்ளது.

❖ தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டிற்காக (National Population Register - NPR) 2010 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட கேள்விகளைக் கொண்டுப் பணிகளை மேற்கொள்ள ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது.

❖ இந்தியாவின் அடுத்த தலைமைத் தகவல் ஆணையராக பிமல் ஜூல்கா நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ மதுரையில் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவன (All India Institute of Medical Sciences - AIIMS) மருத்துவமனையானது 2022 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் திறக்கப்பட இருக்கின்றது.

❖ மக்களவையானது கனிம சட்டங்கள் (திருத்த) மசோதா, 2020ஐ நிறைவேற்றியுள்ளது. இந்த மசோதாவானது சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் சட்டம், 1957 மற்றும் நிலக்கரி சுரங்கச் சட்டம், 2015 ஆகியவற்றைத் திருத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ பொலிவுறு நகரங்களுக்கான திறன்மிகு எரிசக்தி மற்றும் நீர் குறித்த சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியானது 2020 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் தேதி முதல் மார்ச் 7 ஆம் தேதி வரை புது தில்லியில் நடத்தப்பட்டு வருகின்றது.

- புது தில்லியில் உள்ள திறன்மிகு தொடர் மன்றமானது (Smart Grid Forum - ISGF) இந்தியத் திறன்மிகு பயன்பாட்டு வாரம் - 2020 (India Smart Utility Week 2020 - ISUW) என்பதனை ஏற்பாடு செய்கின்றது.

❖ புனேவில் உள்ள தேசிய நச்சுயிரியல் நிறுவனமானது புதிய கரோனா வைரஸின் இரண்டு வகைப்பாடுகளை அனைத்து இன்ஃப்ளுயன்ஸா (சளிக் காய்ச்சல்) தகவல்களையும் பகிர்தல் குறித்த உலகளாவிய முன்னெடுப்புடன் (Global Initiative on Sharing All Influenza Data - GISAID) பகிர்ந்துள்ளது.

- o GISAID ஆனது இன்ஃப்ளுயன்ஸா வைரஸ் வகைப்பாடுகளை சர்வதேச அளவில் பகிர்வதை ஊக்குவிக்கின்றது.

❖ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் தொடங்கப் பட்டுள்ள 6 ஆம் கட்ட அகழாய்வில் பழமையான செங்கல் சுவர் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

❖ கோயம்புத்தூர்-பெங்களூரு செல்லும் உதய் எக்ஸ்பிரஸானது சர்வதேச மகளிர் தினத்தன்று முழுவதும் மகளிரைக் கொண்ட ஒரு குழுவினரால் இயக்கப் பட்டது.

❖ "ரோல்ஸ் ராய்ஸ்" என்ற உலகளாவிய தொழில்துறைத் தொழில்நுட்ப நிறுவனமானது கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்காக மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (Indian Institute of Technology Madras - IIT-M) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- o ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனமானது பிரிட்டனைச் சேர்ந்த சொகுசு ரக தானியங்கி மோட்டார் வாகனத் தயாரிப்பாளராகும்.

❖ சமீபத்தில் தமிழக உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகமானது FSSAI (இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் - Food Safety and Standards Authority of India) அமைப்பிடமிருந்து BHOG (கடவுளுக்குச் சுகாதாரமான உணவு வழங்குதல்) சான்றிதழைப் பெறுமாறு கோயில்களின் நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டது.

❖ தற்பொழுது ஆப்கானிஸ்தானின் அதிபராகப் பணியாற்றி வரும் அஷ்ரப் கனி இரண்டாவது முறையாக ஆப்கானிஸ்தான் நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

❖ திட்டமிடப்பட்ட இந்திய – அமெரிக்க இராணுவ ஒத்துழைப்புக் குழுவின் (Military Cooperation Group - MCG) சந்திப்பானது கரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக ரத்து செய்யப் பட்டுள்ளது.

❖ எச்ஐவி நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தப் பரவலாகப் பயன்படுத்தப்படும் இரண்டு மருந்துகளைக் கொண்ட ஒரு கலவையானது முதன்முறையாக, கோவிட் - 19 பாதிப்பிற்காக ஜெய்ப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வயது முதிர்ந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த தம்பதியினருக்கு வழங்கப்பட்டது.

- o லோபினாவிர் மற்றும் ரிடோனாவிர் ஆகிய மருந்துகளின் கலவையாக இந்த மருந்து இருக்கின்றது.

❖ அண்மையில் ஏற்பட்ட எண்ணெய் விலை வீழ்ச்சியின் காரணமாக ரிலையன்ஸ் தொழில்துறையின் தலைவரான முகேஷ் அம்பானி ஆசியாவின் செல்வம் மிக்கவர்கள் பட்டியலில் பின்னுக்குத் தள்ளப் பட்டுள்ளார்.

- o ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீட்டின் படி, சீன நாட்டைச் சேர்ந்த மின்னணு வணிக நிறுவனமான "அலிபாபா" குழுமத்தின் நிறுவனரான ஜாக் மா என்பவர் அம்பானியைப் பின்னுக்குத் தள்ளி ஆசியாவின் செல்வந்தர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

❖ சென்னையில் உள்ள கொரட்டூர், வேளச்சேரி மற்றும் அயப்பாக்கம் ஆகிய மூன்று பகுதிகளில் 'அம்மா திருமண அரங்குகள்' திறக்கப்பட உள்ளன.

❖ சமீபத்தில் கரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை விரைவாகக் கையாளுவதை உறுதி செய்யவும் கரோனா வைரஸிற்கான சிகிச்சைச் செலவை உள்ளடக்கிய காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்கவும் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (Insurance Regulatory and Development Authority of India - IRDAI) அறிவுறுத்தியுள்ளது.

❖ மும்பை மத்திய ரயில் நிலையத்தை நானா சங்கர்சேத் என்று பெயர் மாற்றம் செய்வதற்கு மகாராஷ்டிர மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- மத்திய ரயில்வே மணடலத்தின் பெயர் மாற்றம் குறித்த இறுதி முடிவு எடுக்கும் அதிகாரமானது மத்திய ரயில்வே துறை அமைச்சகத்திடம் உள்ளது. மத்திய ரயில் மண்டல நிலையங்கள் மத்திய ரயில்வே அமைச்சகத்தின் கீழ் வருகின்றன.

❖ பறவைக் காய்ச்சல் (bird flu) பாதிப்பானது கேரளாவின் பல்வேறு பகுதிகளில் பதிவாகி வருகின்றது.

- இது பறவைகளுக்கு மட்டுமல்லாமல் மனிதர்களுக்கும் பிற விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு வைரஸ் தொற்றாகும்.

❖ இமாச்சலப் பிரதேசத்தின் மண்டியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் (Indian Institute of Technology - IIT) தொழில்நுட்பப் புத்தாக்க மையத்தை (Technology Innovation Hub - TIH) அமைப்பதற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அனுமதி அளித்துள்ளது.

- இது தேசியப் பல்துறை இணைய வழி இயற்பியல் அமைப்புத் திட்டத்தின் (National Mission on Interdisciplinary Cyber-Physical Systems (NM-ICPS)) கீழ் வர இருக்கின்றது.

❖ பன்சி லால் பட் என்பவர் தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நிர்வாகத் தலைவராக 3 மாத காலத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ கிரீஸ் நாட்டின் முதலாவது பெண் அதிபரான கேத்ரினா சாகெல்லரோபவ்லு என்பவர் ஏதென்ஸில் பதவி ஏற்றுக் கொண்டார்.

❖ ஆளும் ஆம் ஆத்மி கட்சியின் (ஆம் ஆத்மி) தலைமையிலான தில்லி சட்டமன்றமானது தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (National Population Register - NPR) மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றிற்கு எதிராக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

❖ குடியுரிமைத் திருத்தச் சட்டம் (Citizenship Amendment Act - CAA), தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (National Population Register - NPR) மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens - NRC) ஆகியவற்றை எதிர்த்த ஏழாவது மாநிலச் சட்டமன்றம் தெலுங்கானா மாநிலச் சட்டமன்றமாகும்.

❖ அமெரிக்க மத்திய வங்கியானது முக்கியமான வட்டி விகிதங்களை 0% முதல் 0.25% என்ற வரம்பு வரை குறைக்கப் படுவதாக அறிவித்துள்ளது.

- இது அதிகரித்து வரும் கொரோனா வைரஸின் தாக்கத்திற்கு எதிர்வினை ஆற்றும் வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❖ மார்ச் 14 ஆம் தேதியன்று தமிழக முதல்வரான எடப்பாடி கே. பழனிசாமி திண்டுக்கல் மாவட்டத்தில் அமையவிருக்கும் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.

❖ கீழடியில் (சிவகங்கை மாவட்டம்) நடத்தப்பட்டு வரும் ஆறாவது கட்ட அகழ்வாராய்ச்சியில், 2500 ஆண்டுகள் பழமையான பெரிய அளவிலான பானை ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

❖ தில்லியின் துணைநிலை ஆளுநர் தனது சொந்த விருப்ப உரிமையின் பேரில், தில்லி காவல்துறை மற்றும் தேசியத் தலைநகர்ப் பகுதி அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக சட்ட அதிகாரிகள் அல்லது வழக்கறிஞர்களை அரசியலமைப்பு நீதிமன்றங்களில் வாதாடுவதற்கு நியமிக்கலாம் என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- இந்த உத்தரவானது மத்திய உள்துறை அமைச்சகத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது.

- தொற்று நோய்கள் சட்டம் 1897ன் கீழ், தொற்று நோய் மேலாண்மைக்காகப் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய தற்காலிக விதிமுறைகள் அடங்கிய பொது அறிவிப்பை அரசாங்கம் வெளியிட மற்றும் அரசாங்கம் தானாக முன்வந்து நடவடிக்கை எடுக்க அல்லது எந்தவொரு நபரும் அதற்காக சில நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கங்களுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.
- பீகார் அரசாங்கம் COVID-19ஐ ஒரு தொற்றுநோயாக அறிவித்து, தொற்றுநோய் நோய்கள் சட்டம் 1897 என்ற சட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பீகார் தொற்று நோய்கள் COVID-19 விதிமுறைகள் 2020 என்ற விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.
- "இந்தியாவை உலகிற்கு எடுத்துச் சென்ற துறவி" என்ற பெயர் கொண்ட சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை மற்றும் சிந்தனைகள் ஆகியவை அடங்கிய ஒரு தொகுப்பினை "தி இந்து" நாளிதழ் வெளியிட்டுள்ளது.
- பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி குறித்த ஒரு புத்தகமானது இந்துக் குழும வெளியீட்டினால் (திருவண்ணாமலையில் உள்ள ரமணா ஆசிரமத்தில்) வெளியிடப் பட்டடது.
  - இந்தப் புத்தகமானது "நான் யார், பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி, 1879-1950" என்ற தலைப்பைக் கொண்டது.
- பீகார் மாநிலம் உருவாக்கப்பட்டதை அனுசரிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22 ஆம் தேதியன்று பீகார் தினமானது (பீகார் திவாஸ்) அனுசரிக்கப் படுகின்றது.
  - 1912 ஆம் ஆண்டில் இத்தினத்தில் ஆங்கில அரசு வங்காள மாகாணத்திலிருந்து பீகார் மாநிலத்தைப் பிரித்தது.
- தில்லி ஒன்றியப் பிரதேசத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்று தில்லி ஒன்றியப் பிரதேச அரசு அறிவித்துள்ளது.
- இந்தியாவும், பிரான்சும், முதல்முறையாக, ரீயூனியன் தீவில் இருந்து கூட்டு ரோந்துப் பணிகளை நடத்தியுள்ளன.
  - ரீயூனியன் என்பது பிரெஞ்சுக் குடியரசின் ஓர் அயல்நாட்டுத் துறை மற்றும் ஒரு நிலப் பகுதி ஆகும். இது இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு தீவாகும்.
- அனோஸ்மியா எனும் வாசனை உணர்வு இழப்பு நிலையும், ஏஜுசியா எனும் சுவை உணர்வு குறைந்து வரும் நிலையும் கோவிட்-19 இன் விசித்திரமான அறிகுறிகளாகவும், நோய்த் தொற்றின் சாத்தியமான குறிப்பான்களாகவும் இருப்பதாக தெரிய வந்துள்ளன.
- மத்திய மனித வளத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசியப் புத்தக அறக்கட்டளை அமைப்பானது "புத்தகங்களுடன் இந்தியா வீட்டிலேயே இருக்க வேண்டும்" என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- கொரானாவினால் பாதிக்கப்பட்ட மற்றும் தொற்று அறிகுறியுள்ளவர்களை "வீடுகளில் தனிமைப்படுத்துதலை" குறிப்பதற்காக தேர்தல் கால மையைப் பயன்படுத்த தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.
  - இந்த மையானது அழியா மை, தேர்தல் கால மை, பாஸ்பரஸ் மை, தேர்தலுக்குப் பயன்படுத்தப்படும் மை என்றும் அழைக்கப்படுகின்றது.
- கோவிட்-19இன் பரவலைக் கட்டுப்படுத்த ஒடிசா அரசாங்கத்தால் "மோ ஜீபன்" எனும் திட்டம் (Mo Jeeban Programme) தொடங்கப் பட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## புதிய கடல் ரோந்து கப்பல்கள்

- இந்த திட்டம் மத்திய அரசாங்கத்தின் 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற முயற்சியின் கீழ் வருகிறது.
- இக்கப்பல்தளமானது இந்தியக் கடலோரக் காவல்படைக்கு அனுப்பப்படும் ஆறு கடல் சார் ரோந்து கப்பல்களை இதுவரை வழங்கியுள்ளது.
- அவை முறையே ஐ.சி.ஜி.எஸ் விக்ரம், ஐ.சி.ஜி.எஸ் விஜயா, ஐ.சி.ஜி.எஸ் வீரா, ஐ.சி.ஜி.எஸ் வராஹா, ஐ.சி.ஜி.எஸ் வரத் மற்றும் ஐ.சி.ஜி.எஸ் வஜ்ரா (37) ஆகும்.

### *வரத்*

- எல் & டி நிறுவனத்தால் கட்டப்பட்ட கடல் சார் ரோந்து கப்பல் ஐ.சி.ஜி.எஸ். வரத், பிப்ரவரி 28, 2020 அன்று இந்தியக் கடலோர காவல்படையுடன் (ஐ.சி.ஜி) இணைக்கப் பட்டது.
- இதை மத்தியக் கப்பல் துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவி, சென்னை அருகே உள்ள எல் & டி காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் துவக்கி வைத்தார்.
- ஐ.சி.ஜி.எஸ் வரத் கப்பலானது ஒரே முயற்சியில் அனைத்துக் கடல் ஏற்பு சோதனைகளிலும் தேர்ச்சிப் பெற்ற முதற் கடற்படைக் கப்பலாக, கப்பல் கட்டுமானத் துறையில் ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது.
- இக்கப்பலின் தொடர்ந்து செயல்படும் திறன் (Endurance) 5,000 கடல் மைல்களாகும் மற்றும் இதன் அதிகபட்ச வேகம் 26 நாட்ஸ் (Knots) ஆகும்.

### *யார்டு 45006 வஜ்ரா*

- பிப்ரவரி 27, 2020 அன்று ஆறாவது கடல் ரோந்து கப்பல் (ஒ.பி.வி ) "யார்டு 45006 வஜ்ரா" மத்திய கப்பல் துறை இணை அமைச்சர் மன்சுக் மண்டவியா முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது.
- இது கடலோரப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் இது பகல் மற்றும் இரவு ரோந்துக்குப் பயன்படுத்தப்படும்.
- ஒ.பி.வி 7 தொடரில் இது ஆறாவது கப்பலாகும். இது லார்சன் & டூப்ரோவால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளது.



- இந்த திட்டத்தின் குறிக்கோள்கள்,
    - 7500 கி.மீ. பரந்த கடற்கரையையும், 20 லட்சம் சதுர கி.மீ.க்கு மேலான பிரத்தியேக பொருளாதார மண்டலத்தையும் (Exclusive Economic Zone) பாதுகாக்க இந்தியக் கடலோரக் காவல்படையின் முயற்சிகளை வலுப்படுத்துவதும் மற்றும்,
    - உலகளாவிய வர்த்தகத்திற்காக வருடம் முழுவதும் இந்தியக் கடல் மார்க்கமாகச் செல்லும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வணிகக் கப்பல்களைப் பாதுகாப்பதும் ஆகும்.

## கீழடி அகழ்வாராய்ச்சியின் 6வது கட்டம்

- கீழடி அகழ்வாராய்ச்சியின் ஆறாவது கட்டமானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று தொடங்கப் பட்டது.
- சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது சுண்ணாம்புக் கல்லின் ஒரு சிறிய பகுதியானது கண்டுபிடிக்கப்பட்டது.
- கீழடியில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய ஐந்து கட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கிட்டத்தட்ட 13,000 கலைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- நான்காம் கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கலைப்பொருட்கள் சங்க காலமானது முன்பு நினைத்ததை விட மிகவும் பழமையானது என்பதைக் காட்டுகின்றது. இது கி.மு 6 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது என்பதைக் காட்டுகின்றது.

## தமிழ்நாடு சுகாதார முறை சீரமைப்புத் திட்டம்

- தமிழக முதல்வர் 2020 ஆம் ஆண்டு மார்ச் 3 அன்று தமிழ்நாடு சுகாதார முறை சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மொத்த செலவில், சுமார் ரூ. 2,000 கோடி நிதியானது உலக வங்கியாலும் ரூ. 857 மாநில அரசினாலும் செலுத்தப் படுகின்றது.
- இந்தத் திட்டமானது சுகாதாரத் தரத்தை மேம்படுத்துதல், தொற்றா நோய்களைக் குறைத்தல், இனப்பெருக்கம் மற்றும் குழந்தை நலச் சேவைகளில் உள்ள விகித இடைவெளிகளை நிரப்புதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பெண் நீதிபதிகளை மட்டும் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு

- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான அம்ரேஷ்வர் பிரதாப் சாஹி முதன்முறையாக பெண் நீதிபதிகளை மட்டும் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வை அமைப்பதன் மூலம் இந்த ஆண்டு கொண்டாடப்பட இருக்கும் சர்வதேச மகளிர் தினத்தைச் சிறப்பு மிக்கதாக மாற்றியுள்ளார்.
- இந்த அமர்வானது புஷ்பா சத்தியநாராயணா, அனிதா சுமந்த் மற்றும் பி.டி. ஆஷா ஆகிய 3 பெண் நீதிபதிகளைக் கொண்டிருக்கும்.
- சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு, மதராஸ் உயர் நீதிமன்றமானது அதிக எண்ணிக்கையில் 11 பெண் நீதிபதிகளைக் கொண்டிருந்தது.

## போர் பதக்கம்

- சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு போர் வீரர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு பதக்கமானது கரூர் மாவட்டத்தில் உள்ள குளித்தலையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.



## சங்கரன்கோயில் அருகே புத்த கோபுரம்

- சங்கரன்கோயில் (தென்காசி மாவட்டம்) அருகே வீரிருப்பு கிராமத்தில் கட்டப்பட்ட 100 அடி உயரமுள்ள உலக அமைதி புத்த மதக் கோபுரமானது மார்ச் 4 ஆம் தேதியன்று திறக்கப் பட்டது.
- மேற்குத் தொடர்ச்சி மலையின் அருகே வீரிருப்பில் கட்டப்பட்ட இந்த புத்த மதக் கோபுரமானது தென்னிந்தியாவில் கட்டப்பட்ட முதலாவது புத்த மதக் கோபுரம் ஆகும்.
- இந்நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புத்தத் துறவிகள் பங்கேற்றனர்.



## அங்கக (கரிம) மாம்பழங்களின் ஏற்றுமதி

- முதன்முறையாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து 4 ஆயிரம் மெட்ரிக் டன் அங்கக (கரிம) மாம்பழங்கள் விரைவில் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.
- இங்கு வசிக்கும் மக்களால் உற்பத்தி செய்யப்படும் மாம்பழங்கள் தரமான ஒரு பரிசோதனைக்குப் பின்னர், 'பரம்பரகத் கிருஷி விகாஸ் யோஜனா' (Paramparagat Krishi Vikas Yojana - PKVY) என்ற பெயரில், அதில் உள்ள பட்டைக் குறிமுறையுடன் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.

### *பரம்பரகத் கிருஷி விகாஸ் யோஜனா*

- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட PKVY ஆனது மண் வள மேலாண்மையின் (Soil Health Management - SHM) நீட்டிக்கப்பட்ட ஒரு கூறாகும்.
- PKVYன் நோக்கம் அங்கக வேளாண்மைக்கு ஆதரவளிப்பதும் ஊக்குவிப்பதும் ஆகும். இதன் விளைவாக மண்ணின் வளமானது மேம்படுகின்றது.

## நீர்நிலைகளின் சுற்றுச்சூழல் மீட்டெடுப்பு

- பேரழிவுகளின் போது தாங்குந்தன்மை மற்றும் நீர் வழங்கல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக உலக வங்கியானது ரூ. 5,000 கோடி நிதியுதவி வழங்கத் திட்டமிட்டுள்ளது.
- சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள 25 நீர்நிலைகளின் சுற்றுச்சூழல் மீட்டெடுப்பிற்காக சென்னை மாநகராட்சியானது இந்த நிதியுதவியைப் பெற இருக்கின்றது.
- சுற்றுச்சூழல் மீட்டெடுப்புப் பணிகள் நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்துவதோடு பேரழிவுகளின் போது தாங்குந்தன்மையை ஊக்குவிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.
- மேலும் உலக வங்கியானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் (Tamilnadu Slum Clearance Board - TNSCB) திட்டங்களுக்கு நிதியளிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.
    - சேரியில் குடியிருப்பவர்களுக்கு மாற்று வீடுகளை கட்டித் தருதல் மற்றும்
    - வாரத்தின் அனைத்து நாட்களிலும் (24X7) நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு நிதியுதவி வழங்குதல்.

## நாமக்கல் மருத்துவக் கல்லூரி

- தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி மார்ச் 5 ஆம் தேதியன்று நாமக்கலில் அமைய இருக்கும் ஒரு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.
- மொத்த இடங்களில் 85 சதவீத இடங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப்படவுள்ளன. மீதமுள்ள இடங்கள் விதிப்படி அகில இந்திய ஒதுக்கீட்டின் கீழ் வரும்.

## எட்டு உணவுப் பதப்படுத்தும் திட்டங்களுக்கு அனுமதி

- மத்திய அரசின் அமைச்சகங்களுக்கிடையேயான ஒப்புதல் அளிக்கும் குழுவானது தமிழகத்தில் செயல்படுத்தப்பட இருக்கும் எட்டு உணவுப் பதப்படுத்தும் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.
- மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சகத்தின் பிரதான் மந்திரி கிசான் சம்பாடா யோஜனாவின் (Pradhan Mantri Kisan SAMPADA Yojana - PMKSY) வேளாண் பதப்படுத்துதல் தொகுப்புத் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டங்கள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- PMKSYன் நோக்கம் வேளாண்மைக்குத் துணைபுரிதல், பதப்படுத்துதலை நவீனமயமாக்கல் மற்றும் வேளாண் கழிவுகளைக் குறைத்தல் ஆகியவையாகும்.

## சர்பங்கா நீரேற்றுப் பாசனத் திட்டம்

- தமிழக முதல்வர் மார்ச் 4 ஆம் தேதியன்று சர்பங்கா நீரேற்றுப் பாசனத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- இந்தத் திட்டமானது நீரேற்றுப் பாசன நுட்பத்தின் மூலம் மேட்டூர் அணையில் இருந்து உபரி வெள்ளநீரை சேலத்தில் உள்ள சரபங்கா நதிக்குத் திருப்பிவிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- எடப்பாடி, சங்ககிரி, மேட்டூர் மற்றும் ஓமலூரில் உள்ள 100க்கும் மேற்பட்ட நீர்த் தொட்டிகள் இந்த நடவடிக்கையின் மூலம் பயனடைகின்றன.
- இது அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்த உதவுகின்றது.

## தமிழ்நாட்டில் புதிய திட்டங்கள்

- தமிழக முதல்வர் திரு. பழனிசாமி காவிரி நீர்ப் படுகையில் கட்டளை உயர்மட்டக் கால்வாயின் உள்கட்டமைப்பை மீட்டெடுப்பதற்கான ஒரு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- தேனியில் ஒரு சட்டக் கல்லூரி கட்டப்படுவதற்குத் தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- மேலும் இவர் காவல்துறை பணியாளர்களுக்கான இரு சக்கர வாகனங்கள், கூண்டுந்துகள் மற்றும் பேருந்துகள் உட்பட 41 வாகனங்களையும் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

## கச்சத் தீவு ஆலயத் திருவிழா

- இலங்கையின் கச்சத் தீவில் உள்ள புனித அந்தோணியார் ஆலயத்தின் வருடாந்திரத் திருவிழாவானது தொடங்கியது.
- இரு அரசாங்கங்களுக்கிடையிலான ஒப்பந்தத்தின் படி, இந்தியக் குடிமக்கள் கச்சத் தீவிற்கு வருகை தர இந்திய கடவுச் சீட்டு அல்லது இலங்கையின் நுழைவு இசைவு வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- புனித அந்தோணியார் என்பவர் கடல் மாலுமிகளின் துறவியாக வணங்கப் படுகின்றார்.
- இந்த ஆலயமானது கச்சத் தீவில் அமைந்துள்ள ஒரே கட்டமைப்பாகும். இது கடந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கட்டப்பட்டது.
- இது இலங்கையால் நிர்வகிக்கப்படும் குடியிருப்பில்லாத ஒரு தீவாகும். இது 1976 ஆம் ஆண்டு வரை இந்தியாவால் உரிமை கோரப்பட்ட ஒரு சர்ச்சைக்குரியப் பிரதேசமாகும்.
- 1974 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட நிபந்தனை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சத் தீவு மீதான இலங்கையின் உரிமையை இந்தியா அங்கீகரித்தது.

## தஞ்சாவூரில் உணவு அருங்காட்சியகம்

- நாட்டில் முதல் முறையாக உணவு அருங்காட்சியகம் தஞ்சாவூரில், இந்திய உணவுக் கழகத்தால் நிறுவப்பட உள்ளது.

### *இந்திய உணவுக் கழகம்*

- இது இந்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும்.
- இது 1965 ஆம் ஆண்டில் முதன்முதலில் சென்னையில் தலைமையகத்துடன் அமைக்கப் பட்டது. பின்னர் இதன் தலைமையகம் புது தில்லிக்கு மாற்றப் பட்டது.

## பெரம்பலூரில் இணை மின் நிலையம்

- முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமி, பெரம்பலூர் மாவட்டத்தில் எரையூரில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் இணை மின் நிலையம் (18 மெகாவாட்) மூலம் பெறப்படும் மின் உற்பத்தியை துவக்கி வைத்தார்.
- தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களின் (ஐ.டி.ஐ) மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியை மேற்பார்வையிடுவதற்காக ஐ.டி.பி.ஏ (பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு பயன்பாடு) என்ற செயலியையும் அவர் அறிமுகப் படுத்தினார்.
- மின்சாரம் மற்றும் பயனுள்ள வெப்பம் இரண்டையும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்ய இந்த இணை மின் நிலையம் பயன்படுத்தப் படுகிறது.
- இது ஆற்றல் மாற்றத்தின் செயல்திறனை அதிகரிக்க உதவுகிறது.

## நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி

- நாகப்பட்டினம் அருகே ஒரத்தூரில் நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரிக்குத் தமிழக முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- தனது உரையின் போது, நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதன் மூலம் மயிலாடுதுறையை அதன் தலைமையகமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் பரிசீலித்து வருவதாக முதல்வர் கூறினார்.

## ஜவ்வாது மலைப்பகுதியில் நடுகல் கண்டெடுப்பு

- சோழர் காலத்தைச் சேர்ந்த நடுகல் ஜவ்வாது மலைப் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டது.
- நாய்களின் உருவங்கள் செதுக்கப்பட்ட நடுகற்களும் இங்கே காணப்பட்டன.
- ஜவ்வாது மலை என்பது வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் சில பகுதிகளில் பரவியிருக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் விரிவாக்கமாகும்.



## கண்ணகி நகர் கலை மாவட்டம்

- சமீபத்தில் சென்னைப் பெருநகர மாநகராட்சியானது கண்ணகி நகர் கலை மாவட்டத்தைத் திறந்து வைத்துள்ளது.
- கலை மாவட்டத்தைப் பெற்ற தமிழ்நாட்டின் முதலாவது நகரம் சென்னை ஆகும்.
- கண்ணகி நகர் கலை மாவட்டமானது சமூக மாற்றம் மற்றும் குடிமை மேம்பாட்டிற்காக கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சென்னைப் பொலிவுறு நகர நிறுவனம் மற்றும் St+art இந்தியா ஆகியவற்றின் உதவியுடன் இந்த முயற்சியில் பங்கேற்ற கலைஞர்களுக்கு சென்னைப் பெருநகர மாநகராட்சியானது ஆதரவு அளித்துள்ளது.
- தில்லியில் உள்ள லோடி கலை மாவட்டமானது ஐம்பது சுவரோவியங்களைக் கொண்ட இந்தியாவின் முதலாவது கலை மாவட்டமாக விளங்குகின்றது.



## காற்றாலை ஆற்றல் மின் உற்பத்தி

- காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் திட்டமிட்டுள்ளது.
- தமிழகத்தின் தற்போதைய காற்றாலை மின் உற்பத்தித் திறன் 8,507 மெகாவாட் ஆகும்.
- இந்தியாவின் மொத்த காற்றாலை மின் உற்பத்தித் திறனில் தமிழகத்தின் பங்கு 23 சதவீதமாகும்.
- 2022 ஆம் ஆண்டுக்குள் 1 லட்சத்து 75 ஆயிரம் மெகாவாட் திறன்களும் 2030 ஆம் ஆண்டுக்குள் 4 லட்சத்து 50 ஆயிரம் மெகாவாட் திறன்களும் கொண்ட மரபுசாரா எரிசக்தி மூலங்களை உருவாக்க மத்திய மின் அமைச்சகத்தால் இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இதன் ஒரு பகுதியாக, 2022 ஆம் ஆண்டுக்குள் 22,000 மெகாவாட்டை எட்ட தமிழகத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநிலத் திட்ட ஆணையத்தின் துணைத் தலைவர் – நியமனம்

- அதிமுகவின் மூத்தத் தலைவரும் மாநிலத்தின் முன்னாள் நிதியமைச்சருமான சி.பொன்னையனை தமிழ்நாடு மாநிலத் திட்ட ஆணையத்தின் துணைத் தலைவராக தமிழக அரசு நியமித்துள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் மாநிலத் திட்ட ஆணையத்தின் தலைவராக உள்ளார்.
- 1971 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் தேதி மாநில திட்டக் குழு தமிழ்நாட்டில் உருவாக்கப் பட்டது.

## எண்ம (டிஜிட்டல்) நீர் அளவைகள் (மீட்டர்கள்)

- சென்னை மாநகராட்சிக் குடிநீர் அமைப்பானது நகரத்தில் குடிநீர் நுகர்வோர்கள் மத்தியில் நீரின் நியாயமான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக வணிகக் கட்டிடங்களில் தானியங்கி மீட்டர் அளவீடுகளைக் (automated meter reading - AMR) கொண்ட டிஜிட்டல் நீர் மீட்டர்களைப் பொருத்துவதற்கான செயல்முறையைத் துரிதப் படுத்தியுள்ளது.

- இந்தத் திட்டமானது பொலிவுறு நகரத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியுடன் மேற்கொள்ளப் படுகின்றது.
- நுகர்வோர்கள் தங்களது நீரின் பயன்பாட்டிற்கு ஏற்ப கட்டணத்தைச் செலுத்துவதற்காகவும் நீர் நுகர்வைக் கண்காணிப்பதற்காகவும் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.



## தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் 50வது ஆண்டு

- திருவாங்கூர் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியரும் புகழ்பெற்ற தமிழ் அறிஞருமான மறைந்த பேராசிரியர் பி. சுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கவிதையானது தமிழக அரசின் நிகழ்ச்சிகளுக்கான தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.
- பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் நாடகமான "மனோன்மணியம்" என்பதிலிருந்து "நீராரும் கடலுடுத்த" என்று தொடங்கும் பாடலின் இரண்டு பத்திகளை அது கொண்டுள்ளது.
- இந்தப் பத்தியின் முதல் ஆறு வரிகள் மட்டுமே மாநில தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் நோக்கத்திற்காக பயன்படுத்தப் படுகின்றது.
- தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் குறித்த அறிவிப்பானது அப்போதைய முதல்வரான திரு. மு. கருணாநிதி அவர்களால் 1970 ஆம் ஆண்டு மார்ச் 10 அன்று வெளியிடப்பட்டது.

## சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைக் கண்காணித்தல்

- தற்பொழுது, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைச் 'சலோ' செயலியின் உதவியுடன் கைபேசியில் கண்காணிக்க முடியும்.
- இந்தச் செயலியானது அருகிலுள்ள பேருந்து நிறுத்தங்கள் குறித்தத் தகவல்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு நிறுத்தத்திற்கும் வருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அடுத்த ஐந்து பெருநகரப் போக்குவரத்துக் கழக (Metropolitan Transport Corporation - MTC) பேருந்துகள் குறித்த விவரங்களையும் அளிக்கும்.
- இது அகல்நிலை மற்றும் நிகழ்நேரம் (ஆன்லைன்) ஆகிய இரண்டு முறைகளிலும் இயங்கும் திறன் கொண்டது.
- தற்போது இந்தச் செயலியானது சோதனை முயற்சியாக (பீட்டா) தொடங்கப் பட்டுள்ளது. இது விரைவில் அரசாங்கத்தின் "லோக்கேட் மை பஸ்" (LAMB - Locate My Bus App) என்ற செயலியாக தொடங்கப்பட இருக்கின்றது.

## தமிழில் பெயர்ப் பலகைகள்

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவை தங்களது பெயர்ப் பலகைகளை தமிழில் வைத்திருக்க வேண்டும் என்று தொழிலாளர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.
- பெயர்ப் பலகைகள் ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளிலும் இருக்கக் கூடும் என்றாலும், தமிழில் உள்ள எழுத்துக்கள் மற்றும் எழுத்துருக்களின் அளவு ஆகியவை முன்னுரிமை பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

## சோதனை ஆய்வகங்கள்

- திருவாரூரில் உள்ள வைரஸ் ஆராய்ச்சி மற்றும் நோயறிதல் ஆய்வகத்துடன் சேர்த்து, தமிழ்நாடு தற்பொழுது COVID - 19 வைரஸ் பாதிப்பிற்குக் காரணமாக உள்ள வைரஸான SARS - CoV-2 என்ற வைரஸைக் கண்டறிவதற்கான மூன்று சோதனை ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.
- கிண்டியில் உள்ள கிங் தடுப்பு மருந்து நிறுவனமானது தமிழ்நாட்டில் உள்ள முதலாவது ஆய்வகமாகும்.
- இரண்டாவதாக தேனியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் இந்த ஆய்வகம் தொடங்கப் பட்டுள்ளது.

## இரட்டைமலை சீனிவாசனின் நினைவு மண்டபம்

- இரட்டைமலை சீனிவாசனின் நினைவு மண்டபத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா மதுராந்தகத்திற்கு அடுத்த அச்சிறுப் பாக்கத்தில் நடைபெற்றது.
- இவர் மகாத்மா காந்தியுடன் நெருங்கிய தொடர்புடையவர்.
- இவர் இந்தியாவின் பட்டியல் வகுப்பின மக்களுக்கான இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர் ஆவார்.

## வண்டலூர் மிருகக்காட்சி சாலையில் வனவிலங்குகளைப் பார்வையிடுதல் (வனவிலங்கு உலா)

- வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்காவில் வனவிலங்கு உலா அமைக்கப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்.
- திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுமலை வனப்பகுதியில் ஒரு சிறிய அளவிலான மிருகக்காட்சிச் சாலையை அமைக்கப் போவதாகவும் முதல்வர் அறிவித்துள்ளார்.
- சேலம் மாவட்டத்தில் உள்ள குரும்பப்பட்டி விலங்கியல் பூங்காவானது கூடுதல் விலங்குகளுடன் நடுத்தர மிருகக்காட்சிசாலையாக மேம்படுத்தப்படும் என்றும் இவர் அறிவித்துள்ளார்.

## சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் குறைவு

- திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டம் அமல்படுத்தப் பட்டதிலிருந்து நாட்டில் விபத்துக்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கையானது 10% குறைந்துள்ளது.
- கடந்த ஐந்து மாதங்களில் சாலை விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையை 24% என்ற அளவில் குறைப்பதில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

அடைந்துள்ளது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

- நாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக இறப்பைக் குறைத்தது தமிழ்நாடு ஆகும்.
- புதிய மோட்டார் வாகனச் சட்டமானது ஓட்டுநர் செய்யும் தவறுகளுக்கான அபராதங்களை அதிகரித்துள்ளது.
- மேலும் மோட்டார் வாகனச் சட்டமானது பொதுப் பட்டியலில் இருப்பதாகவும் இச்சட்டத்தில் குற்றங்களைக் கூட்டவும் தற்காலத் தேவைகளுக்கு ஏற்ப சட்டத்தின் விதிகளை அமல்படுத்தவும் மாநிலங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தூய தமிழ்ப் பற்றாளர் விருது

- தகவல் தொடர்பிற்கு தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் மக்களை ஊக்குவிப்பதற்காக செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநரகமானது இந்த விருதை அறிவித்துள்ளது.
- கோயம்புத்தூரைச் சேர்ந்த பட்டதாரியான சி. மணிகண்டன், புதுச்சேரியைச் சேர்ந்த ஆர். ஹரிதாஸ் மற்றும் திருச்சியைச் சேர்ந்த கல்லூரி மாணவரான டி. ஆரோக்கிய ஆலிவர் ராஜ் ஆகியோர் இந்தத் திட்டத்திற்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

## தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கான சட்டத்தில் திருத்தம்

- இந்த மசோதாவின் படி, தொடக்கப்பள்ளி முதல் தமிழ் வழியில் படித்த விண்ணப்ப தாரர்களுக்கு மட்டுமே 'தமிழ் வழியில் படித்த மாணவர்கள்' (Persons Studied in Tamil Medium - PSTM) என்ற ஒதுக்கீட்டின் கீழ் நேரடி ஆட்சேர்ப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட இருக்கின்றது.
- இந்த மசோதாவானது PSTM மாநிலச் சட்டம், 2010ன் கீழ், பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் தமிழ்நாட்டில் நியமனம் என்பதைத் திருத்தம் செய்ய முயலுகின்றது.
- 2010 ஆம் ஆண்டில், தமிழக அரசானது PSTM விண்ணப்பதாரர்களுக்கு 20% இட ஒதுக்கீட்டை அறிவித்தது.
- நேரடி ஆட்சேர்ப்பிற்காக PSTM இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்கள் இறுதியாகக் குறிப்பிடப் பட்டுள்ள கல்வித் தகுதியை மட்டும் தமிழ் வழியில் பெற்று விண்ணப்பிப்பதை அரசாங்கம் கண்டதால் இந்த திருத்தமானது கொண்டு வரப்படுகின்றது.
- உதாரணமாக, குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதி பட்டப்படிப்பாக இருப்பின், விண்ணப்பதாரர் பள்ளி மற்றும் கல்லூரியில் ஆங்கில வழியில் படித்திருந்தாலும், தொலைதூரக் கல்வி மூலம் தமிழ் வழியில் பட்டம் பெற்று இருக்கின்றனர்.

## வெள்ளாடு ஆராய்ச்சி மையம்

- புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தென்காசி மாவட்டத்தில் வெள்ளாடு ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்கப்படும் என்று தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சரான கே. ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.
- மேலும் இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

## தேனியில் கால்நடை மருத்துவக் கல்லூரி

- தேனி மாவட்டத்தில் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி திறக்கப்பட இருக்கின்றது.
- தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே. பழனிசாமி இது குறித்த தகவலை சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.
- மேலும் இவர் நாகர்கோவிலில் உள்ள கால்நடை மருத்துவமனை ஓர் சிறப்பு பன்னோக்கு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

## அம்மா சிறு சந்தைகள்

- தமிழ்நாடு அரசானது மாநிலத்தில் மேலும் 189 அம்மா சிறு கூட்டுறவுச் சந்தைகளைத் திறக்க இருக்கின்றது.
- தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே.பழனிசாமி இது குறித்த தகவலை மாநில சட்டமன்றத்தில் தெரிவித்தார்.
- 300ற்கும் மேற்பட்ட கட்டுப்படுத்தப் படாத பொருட்கள் அதிகபட்ச சில்லறை விலையை விட 50% குறைவாக தற்போது இயங்கி வரும் அம்மா சிறு கூட்டுறவுச் சந்தைகளில் விற்கப்பட்டு வருகின்றன.
- இந்தச் சந்தைகள் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் பொருட்கள் வழங்குவதையும் திறந்தவெளிச் சந்தைகளில் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## கொரானா சோதனை மையம் - தமிழ்நாடு

- சமீபத்தில் பின்வரும் மருத்துவமனைகளில் கொரானா சோதனை மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.
  - இராஜுவ் காந்தி அரசு மருத்துவமனை
  - சென்னை ஸ்டான்லி மருத்துவமனை
  - சேலம் அரசு மருத்துவமனை
  - இராஜாஜி மதுரை பொது மருத்துவமனை

## தமிழ்நாட்டின் 38வது மாவட்டம்

- மயிலாடுதுறையானது தமிழ்நாட்டின் 38வது மாவட்டமாக உருவெடுத்து உள்ளது.
- தற்போதைய மாவட்டமான நாகப்பட்டினம் பிரிக்கப்பட்டு ஒரு புதிய மாவட்டத்தின் தலைநகராக மயிலாடுதுறையானது உருவெடுக்க இருக்கின்றது.
- இதற்கு முன்பு மயிலாடுதுறையானது மாயவரம் அல்லது மாயூரம் என்றறியப் பட்டது.



# தேசியச் செய்திகள்

## தேசிய முக்கியத்துவ நிலை

- இரண்டு உணவு தொழில்நுட்ப நிறுவனங்களுக்குத் தேசிய முக்கியத்துவ அந்தஸ்தை வழங்க, மத்திய அமைச்சரவை தொழில்முனைவோர் மற்றும் மேலாண்மை மசோதாவை அங்கீகரித்துள்ளது.
- தஞ்சாவூரில் உள்ள தேசிய உணவுத் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும், குண்ட்லியில் (ஹரியானா) உள்ள தேசிய உணவுத் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் சிறப்பு அந்தஸ்து வழங்கப் படும்.
- இது வெளிநாட்டு உணவு நிறுவனங்களுடன் கூட்டுச் சேரவும், கல்வித் தரத்தை மேம்படுத்தவும் அவர்களுக்கு உதவும்.

## தேசிய தொழில்நுட்ப ஜவுளித் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது

- உலகளாவிய ஜவுளித் தொழில்நுட்பத்தில் நமது நாட்டை முன்னிலைப் படுத்தும் நோக்கில் மத்திய அரசு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2020-21 நிதியாண்டு முதல் 2023-24 வரை இத்திட்டம் நான்கு ஆண்டு செயல்படுத்தும் காலத்தைக் கொண்டிருக்கும்.
- சராசரியாக ஆண்டிற்கு 15-20% வளர்ச்சி விகிதத்தைக் கொண்டு உள்நாட்டுச் சந்தையின் அளவை 40-50 பில்லியன் டாலர்களாக உயர்த்தும் நோக்கில் இத்திட்டம் செயல்படும்.

## 24வது கிழக்கு மண்டலச் சபை

- மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான கிழக்கு மண்டலச் சபையின் 24 ஆவது கூட்டம் புவனேஷ்வரில் நடைபெற்றது.
- இக்கூட்டம் கீழ் கூறியவற்றின் மீது கவனம் செலுத்தியது,
    - பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் மற்றும் வன் புணர்வு வழக்குகள் குறித்து விரைவான விசாரணையையும் மேலும்
    - இந்திய-வங்கதேச எல்லை வழியாக கால்நடை கடத்தலைத் தடுக்கவும் தெளிவான திட்டங்களை மேற்கொள்ள உள்ளது.
- ஒடிசா, மேற்கு வங்கம், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலம், இதில் பங்குபெற்ற நான்கு கிழக்கு மாநிலங்கள் ஆகும்.

## மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம்

- மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஏப்ரல் முதல் வாரத்திற்குள் நிறுவப்படும் என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் அறிவித்தது.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 இன் கீழ் இந்த ஆணையம் உருவாக்கப் பட்டு வருகின்றது.
- இந்தச் சட்டம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986க்குப் பதிலாக, மேலும் நுகர்வோர் கவலைகளை நிவர்த்தி செய்யும் அதன் நோக்கத்தை விரிவுபடுத்துகிறது.

- பொருள் அல்லது சேவையின் தரம் அல்லது அளவு குறித்து தவறான தகவல்களை வழங்குதல், தவறான விளம்பரம் செய்தல் போன்ற குற்றங்களை புதிய சட்டம் கண்டுணர்கிறது.
- பொருட்கள் மற்றும் சேவைகள் "ஆபத்தானவை, அபாயகரமானவை அல்லது பாதுகாப்பற்றவை" எனக் கண்டறியப் பட்டால் அதன் பின் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் இது குறிப்பிடுகிறது.




## மூத்தக் குடிமக்களுக்கு துணைக் கருவிகள் மற்றும் சாதனங்கள் - பிரதமர் நரேந்திர மோடி

- பிரதமர் நரேந்திர மோடி உத்தரப் பிரதேசத்தில் பிரயாக்ராஜில் உள்ள ஒரு முகாமில் மூத்தக் குடிமக்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் உதவும் வகையில் துணைக் கருவிகளையும் சாதனங்களையும் வழங்கினார்.
- ராஷ்டிரிய வயோஷ்ரி யோஜனாவின் கீழ் மூத்தக் குடிமக்களுக்கும், துணைக் கருவிகள்/ உபகரணங்கள் வாங்குவது மற்றும் பொருத்துவது என்ற திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கும் பிரதமர் துணைக் கருவிகளையும் பிற சாதனங்களையும் வழங்கினார்.
- திவ்யாங்ஜன் (மாற்றுத் திறனாளிகள்) மற்றும் மூத்தக் குடிமக்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு இந்த துணைக் கருவிகளையும் மற்றும் சாதனங்களையும் கொண்டு உதவுவதே இதன் குறிக்கோளாகும்.

## இந்திர தனுஷ் பயிற்சி - 5வது பதிப்பு

- இந்திய விமானப்படை மற்றும் இங்கிலாந்தின் ராயல் விமானப்படை இணைந்து இந்திர தனுஷ் என்ற பயிற்சியின் 5ஆவது பதிப்பை உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஹிந்தான் விமானப் படை நிலையத்தில் தொடங்கியது.
- இரு விமானப் படைகளுக்கும் இடையிலான பரஸ்பர செயல்பாட்டுப் புரிதலை மேம்படுத்த இந்தப் பயிற்சி மேற்கொள்ளப் படுகிறது.

- ‘அடிப்படைப் பாதுகாப்பு மற்றும் படைபலம்’ இப்பயிற்சியின் நோக்கமாக அமைந்துள்ளது.
- இந்த பயிற்சியின் முதல் பதிப்பு 2006 இல் நடத்தப் பட்டது.

## வடகிழக்கு மாநிலங்களில் தொகுதி வரையறை

- 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 அன்று வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்வதன் மூலம் வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் தொகுதி வரையறையை மீண்டும் தொடங்குவதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்து உள்ளார்.
- 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மக்களவை மற்றும் மாநில சட்டசபைத் தேர்தல்கள் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு மாநிலம் மற்றும் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றைத் தொகுதிகளாகப் பிரிப்பதற்காக தொகுதி வரையறைச் சட்டம், 2002ன் கீழ் தொகுதி வரையறை ஆணையம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவில் இதுவரை நான்கு முறை தொகுதி வரையறை ஆணையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அவையாவன:
    - 1952ல் தொகுதி வரையறை ஆணையச் சட்டம், 1952ன் கீழ்,
    - 1963ல் தொகுதி வரையறை ஆணையச் சட்டம், 1962ன் கீழ்,
    - 1973ல் தொகுதி வரையறைச் சட்டம், 1972 மற்றும்
    - 2002ல் தொகுதி வரையறைச் சட்டம், 2002ன் கீழ் தொகுதி வரையறை ஆணையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

## விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகள்

- பிரதமர் மோடி உத்தரப் பிரதேசத்தின் சித்ரக்கூட்டில் 10,000 விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளைத் தொடங்கினார்.
- இது சிறு விவசாயிகளுக்கு அவர்களின் சவால்களை ஒருங்கிணைந்த வகையில் எதிர்கொள்வதற்காக ஒரு தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது விவசாயிகள் வணிகர்களாக மாறுவதற்கு உதவுகின்றது.

## 11வது தேசிய கிருஷி விக்யான் கேந்திர மாநாடு

- மத்திய வேளாண் மற்றும் விவசாயி நலத் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் புது தில்லியில் 11வது தேசிய கிருஷி விக்யான் கேந்திர (Krishi Vigyan Kendra – KVK) மாநாடு - 2020ஐத் தொடங்கி வைத்தார்.
- முதலாவது KVK ஆனது 1974 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் சோதனை அடிப்படையில் புதுச்சேரியில் நிறுவப்பட்டது.
- தற்போது நாடு முழுவதும் 700க்கும் மேற்பட்ட KVKக்கள் உள்ளன.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையங்கள் (REMCகள்)

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பிற்காக 11 REMCக்களை (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையங்கள் - Renewable Energy Management Centres) மத்திய மின் துறை அமைச்சரான ஆர் கே. சிங் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- இந்த நிகழ்வின் போது இவர் வடக்குப் பிராந்தியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையத்தையும் (Northern Region Renewable Energy Management Centre - NR-REMC) திறந்து வைத்தார்.
- REMCக்களில் செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முன்கணிப்பு மற்றும் திட்டமிடல் கருவிகள் உள்ளன. இவை தொடர் செயல்பாட்டாளர்களுக்கு அதிக காட்சித் திறன் மற்றும் மேம்பட்ட சூழ்நிலை விழிப்புணர்வை வழங்குகின்றன.

## RaIDer-X

- சமீபத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (Defence Research and Development Organisation - DRDO) மற்றும் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (Indian Institute of Science) ஆகியவை இணைந்து RaIDer-X என்ற பெயர் கொண்ட புதிய வெடிபொருட்களைக் கண்டறியும் சாதனம் ஒன்றை வெளியிட்டுள்ளது.
- RaIDer-X ஆனது சமீபத்தில் மார்ச் 01 அன்று நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டின் வெடிபொருட்களைக் கண்டறிவதற்கான தேசியப் பயிலரங்கத்தின் (NWED - National Workshop on Explosive Detection) போது காட்சிப் படுத்தப் பட்டது.
- இது ஒரு குறிப்பிட்ட வரம்பிலிருந்து வெடிபொருட்களைக் கண்டறிந்து செயல்பாட்டாளருக்கு அறிவிக்கும் திறன் கொண்டது.

### *DRDO*

- DRDO ஆனது இந்திய அரசின் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவாகும்.
- இது அதிநவீன பாதுகாப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளில் தன்னிறைவு அடைவதற்காக இந்திய ஆயுதப் படைகளை நவீன தொழில்நுட்பத்துடன் இணைக்கின்றது.
- இது 1958 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.



## வேலையின்மை விகிதம்

- இந்தியாவின் வேலையின்மை விகிதமானது பிப்ரவரியில் 7.78% ஆக உயர்ந்தது. 2019 ஆம் ஆண்டு அக்டோபருக்குப் பிறகு மிக அதிகமான விகிதம் இதுவாகும்.
- இந்தத் தரவானது இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தினால் (Centre for Monitoring Indian Economy - CMIE) வெளியிடப் பட்டுள்ளது.
- கொரோனா வைரஸ் தொற்றுநோயால் எழும் விநியோகச் சங்கிலிப் பிரச்சினைகளால் பொருளாதாரம் தொடர்ந்து பாதிக்கப்படுவதால் இந்த விகிதம் மேலும் உயரக்கூடும் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

## விமானப் பயணத்தின் போது அருகலை வசதி (வைஃபை)

- விமானப் பயணத்தின் போது அருகலை (வைஃபை) சேவைகளை விரைவில் அறிமுகப் படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- விமானத்தில் உள்ள விமானிகளின் அனுமதி பெற்ற பிறகு விமானத்தில் பயணிப்பவர்களுக்கு இந்த சேவை வழங்கப்பட இருக்கின்றது.
- விமானத்தில் உள்ள பயணிகள் விமானப் பயன்முறையில் இருக்கும் சாதனங்களுக்கு அந்த விமானத்தில் அருகலை (வைஃபை) சேவைகளைப் பெறலாம்.
- விமானம் புறப்பட்டு விமானத்தின் அனைத்து கதவுகளும் மூடப்பட்டவுடன் மட்டுமே இந்த சேவையைப் பயணிகள் பெற முடியும்.
- விமானப் பயணத்தின் போது இணையச் சேவையின் பயன்பாட்டிற்காக பொது இயக்குனரால் இதற்குச் சான்றளிக்கப்பட வேண்டும்.

## இந்தியா மற்றும் அர்மேனியா ஆகிய நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு ஒப்பந்தம்

- ஐரோப்பாவில் உள்ள அர்மேனியாவிற்கு ஆயுதங்களைக் கண்டறியும் வகையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நான்கு ரேடார்களை வழங்க வழிசெய்யும் 40 மில்லியன் டாலர் மதிப்பிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டு உள்ளது. ரஷ்யா மற்றும் போலந்து ஆகிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா அந்நாட்டுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது பாதுகாப்புத் துறையில் "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்திற்கு ஒரு பெரிய சாதனையாகக் கருதப் படுகின்றது.
- இந்த ஒப்பந்தத்தின் படி, இந்தியா "சுவாதி" என்ற ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் நான்கு ரேடார்களை அர்மேனியாவிற்கு வழங்க இருக்கின்றது.
- இது 50 கி.மீ தூரத்தில் உள்ள சிறு பீரங்கிகள், குண்டுகள் மற்றும் ராக்கெட்டுகள் (ஏவுகணை) போன்ற எதிரி நாட்டு ஆயுதங்களின் வேகம், தானியங்கும் தன்மை மற்றும் துல்லியமான இருப்பிடம் ஆகியவை குறித்த தகவல்களை வழங்க இருக்கின்றது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் மின்னணு மற்றும் ரேடார் வளர்ச்சி அமைப்பினால் (Electronics and Radar Development Establishment - LRDE) சுவாதி என்ற ரேடார் ஆனது உருவாக்கப் பட்டது.




## உலகப் பாரம்பரியத் தளங்கள்

- 2020 ஆம் ஆண்டில் உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் சேர்க்கப் படுவதற்காக பின்வரும் இரண்டு தளங்களை மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது.
    - 'தோலவீரா: ஹரப்பா நகரம்' மற்றும்
    - 'தக்காண சுல்தானத்தின் நினைவுச் சின்னங்கள் மற்றும் கோட்டைகள்'.
- தோலவீரா என்பது குஜராத்தின் கட்ச் பாலைவன வனவிலங்கு சரணாலயத்தில் அமைந்துள்ள ஒரு தொல்பொருள் தளமாகும்.
- இது பண்டைய சிந்து சமவெளி நாகரிகத்தின் எச்சங்களை (தொல்பொருள் மீதிகளை) கொண்டுள்ளது.
- 'தக்காண சுல்தானத்தின் நினைவுச்சின்னங்கள் மற்றும் கோட்டைகள்'.
    - பிடார் கோட்டை - நவீன காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட உலகின் இரண்டாவது பெரிய குவிமாடம்.
    - பிஜப்பூர் நினைவுச் சின்னங்கள்
    - கோல்கொண்டா கோட்டை - நீர் மேலாண்மைக்குப் புகழ் பெற்றது.
    - குல்பர்கா கோட்டை - பாமினி சுல்தானகத்தின் தொடக்க காலத் தலைநகரம்.

## சுபோஷித் மா அபியான்

- 2020 ஆம் ஆண்டு மார்ச் 1 அன்று மக்களவை சபாநாயகரான ஓம் பிர்லா ராஜஸ்தானின் கோட்டாவிலிருந்து ஒரு தேசிய அளவிலான பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது ஊட்டச்சத்து குறைபாடற்ற இந்தியாவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "சுபோஷித் மா அபியான்" ஆனது நாட்டில் உள்ள இளம் பருவப் பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை ஆதரிக்கின்றது.
- இந்த பிரச்சாரமானது கர்ப்பிணிப் பெண்களையும் புதிதாகப் பிறந்த குழந்தைகளையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் முதல் கட்டத்தில், 1000 கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா 17 கிலோகிராம் சீரான உணவைக் கொண்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

## கௌசல் பாரத்

- தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனம் (National Institute of Rural Development and Panchayati Raj - NIRDPR) ஆனது 'கௌசல் பாரத்' என்ற பெயரைக் கொண்ட ஒரு நிறுவன வள திட்டமிடல் தளத்தை உருவாக்கியுள்ளது.
- இது தீன் தயாள் உபாத்யாய கிராமீன் கௌசல்யா யோஜனா (Deen Dayal Upadhyaya Grameen Kaushalya Yojana - DDU-GKY) என்பதின் கீழ் உள்ள திட்டங்களின் தரவுகளைக் கண்காணிக்கவும் தகவல்களை ஒரு அமைப்பில் இணைக்கவும் மாநிலங்களுக்கு உதவுகின்றது.

### *DDU-GKY*

- மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது DDU-GKY என்ற திட்டத்தினை 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 (அந்தியோதயா திவாஸ்) அன்று அறிவித்தது.
- DDU-GKY என்பது தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் (NRLM - National Rural Livelihood Mission) ஒரு பகுதியாகும்.
- DDU-GKY இன் குறிக்கோள்கள் பின்வருமாறு:
  - கிராமப்புற ஏழைக் குடும்பங்களின் வருமானத்தில் பல்வேறு மூல ஆதாரங்களைச் சேர்த்தல் மற்றும்
  - கிராமப்புற இளைஞர்களின் தொழில் முயற்சிகளை (விருப்பங்களை) பூர்த்தி செய்தல்.

## பிரதான் மந்திரி லகு வியாபாரி மன் - தன் யோஜனா

- வர்த்தகர்கள், கடைக்காரர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுவரை 34,000க்கும் மேற்பட்டோர் மட்டுமே இணைந்துள்ளதால் இதன் செயல்திறனானது குறைந்து காணப் படுவதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சகத்தின் தொலைநோக்கு ஆவணமானது 2019 - 2020 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தின் கீழ் 25 லட்சம் பயனாளிகளைச் சேர்ப்பதை இலக்காகக் கொண்டிருந்தது.
- பிரதான் மந்திரி லகு வியாபாரி மன் - தன் யோஜனா என்பது ஒரு தன்னார்வ மற்றும் பங்களிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட மத்திய அரசின் திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது 18 - 40 வயதுக்குள் இந்தத் திட்டத்தில் இணைந்தவர்கள், 60 வயதை எட்டிய பின்னர் அவர்களுக்கு மாதாந்திரக் குறைந்தபட்ச உறுதிப்படுத்தப்பட்ட ஓய்வூதியமான ரூ. 3,000 அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நதிநீர் இணைப்புத் திட்டங்கள்

- நதிகளை இணைப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஒரு தனிப்பட்ட (பிரத்தியேக) அமைப்பை நிறுவ மத்திய அரசு முயற்சித்து வருகின்றது.
- இது நதிகள் தேசிய நதிநீர் இணைப்பு ஆணையம் (National Interlinking of Rivers Authority - NIRA) என்று அழைக்கப்பட உள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்த அமைப்பானது மாநிலங்களுக்கு இடையேயான மற்றும் மாநிலங்களுக்குள் மேற்கொள்ளப்படும் நதிநீர் இணைப்புத் திட்டங்களை செயல்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- மாநிலங்களுக்குள்ளும் மாநிலங்களுக்கு வெளியில் இருந்தும் நிதி திரட்டுவதற்கான ஏற்பாடுகளையும் இது மேற்கொள்ள இருக்கின்றது.

## QS உலகத் தரவரிசை

- QS உலகத் தரவரிசைப் படி, இந்த ஆண்டில் இந்தியாவில் இருந்து ஐந்து கல்வி நிறுவனங்கள் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் கனிம மற்றும் சுரங்கப் பொறியியல் மற்றும் தில்லிப் பல்கலைக் கழகத்தின் மேம்பாட்டு ஆய்வுகள் ஆகியவை இந்தியாவிலிருந்து முதலிடம் பிடித்துள்ள பாடப் பிரிவுகளாகும்.

| நிறுவனம் | தரவரிசை |
|---|---|
| இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் - கான்பூர் | 96 |
| இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் -மதராஸ் | 88 |
| இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் - கரக்பூர் | 86 |
| இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் – தில்லி | 47 |
| இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் - மும்பை | 44 |

## ஜன் அவுசாதி வாரம்

- 2020 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி முதல் பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசாதி கேந்திரங்களின் மூலம் நாடு முழுவதும் ஜன் அவுசாதி வாரமானது கொண்டாடப் படுகின்றது.
- ஜன் அவுசாதி கேந்திர உரிமையாளர்கள் உடல்நலம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறு வகையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்.
- இந்த வார அனுசரிப்பின் நான்காவது தினத்தில், ‘சுவிதா சே சம்மன்’ என்ற கருப்பொருளைக் கொண்டு நாட்டில் பெண்களை மேம்படுத்தும் நிகழ்ச்சியானது நடத்தப் பட்டது.
- பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசாதி பரியோஜனா என்பது மத்திய அரசாங்கத்தின் ஒரு முக்கியமான முயற்சியாகும்.
- தரமான மருந்துகளை குறைந்த விலையில் வழங்குவதற்கான அதன் முயற்சியானது இப்போது மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

## வேளாண் ஏற்றுமதிக் கொள்கையைச் செயல்படுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது (APEDA - Agricultural and Processed Food Export Development Authority APEDA) வேளாண் ஏற்றுமதிக் கொள்கையைச் செயல்படுத்துவதற்காக பல அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- வேளாண் ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தி, ஏற்றுமதி ஊக்குவிப்பு, பொருள்களுக்கான சிறந்த விலையை விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் இந்திய அரசின் கொள்கைகள் & திட்டங்களுக்குள் ஒத்திசைந்து போதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு விவசாய ஏற்றுமதிக் கொள்கையானது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது மதிப்புத் தொடர் முழுவதும் இழப்புகளைக் குறைப்பதற்கு உதவுவதற்காக மூலாதாரத்திலேயே மதிப்பைக் கூட்டுவதன் மூலம் மேம்படுத்தப்பட்ட வருமானத்திற்கான “விவசாயிகளை மையமாகக் கொண்ட அணுகுமுறையின்” மீது கவனம் செலுத்துகின்றது.

## மெய்நிகர் நாணயங்கள்

- 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ரிசர்வ் வங்கியானது மெய்நிகர் நாணயம் அல்லது பிட்காயின் போன்ற மெய்நிகர் நாணயங்களில் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதில் இருந்து வங்கி மற்றும் நிதியியல் சேவை நிறுவனங்களைத் தடை செய்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கையானது நாட்டின் வர்த்தகத்தில் தலையிடுவதன் மூலம் சட்டத்தை மீறுகின்ற காரணத்தினால் உச்ச நீதிமன்றம் தற்பொழுது மெய்நிகர் நாணயங்களைக் கொண்டு வர்த்தகத்தை (தடை நீக்கம்) மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.
- மெய்நிகர் நாணயங்கள் என்பது ஒரு டிஜிட்டல் நாணயமாகும். இதற்கான குறியாக்க நுட்பங்கள் அதன் பயன்பாட்டை ஒழுங்கு படுத்துவதற்கும் அதனை வெளியிடுவதை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.
- இது எந்தவொரு வங்கி, அரசு அல்லது மையப்படுத்தப்பட்ட நிதி அதிகாரிகளால் கட்டுப்படுத்தவோ ஒழுங்குபடுத்தவோ முடிவதில்லை.




## பாதுகாப்பு மை

- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (Council of Scientific and Industrial Research – CSIR) தேசிய இயற்பியல் ஆய்வகமானது இரு நிறங்களில் ஒளிரும் பாதுகாப்பு மை ஒன்றை உருவாக்கியுள்ளது. இது சிவப்பு மற்றும் பச்சை வண்ணங்களில் ஒளிரும் திறன் கொண்டது.
- உருவாக்கப்பட்ட இந்த மை ஆனது கள்ள ரூபாய் நோட்டுகளைத் தடுக்க உதவும்.
- கடவுச்சீட்டு, அரசாங்க ஆவணங்கள், அடையாள அட்டைகள் போன்றவற்றின் நம்பகத் தன்மையை சரிபார்க்க இந்த மையைப் பயன்படுத்தலாம்.



## பொதுத் துறை வங்கிகளை இணைக்க அமைச்சரவை ஒப்புதல்

- 10 பொதுத்துறை வங்கிகளை (public sector banks - PSBs) நான்கு நிறுவனங்களாக ஒருங்கிணைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது இந்தியாவில் குறைந்த எண்ணிக்கையிலான, ஆனால் வலுவான கடன் வழங்கு நிறுவனங்களைக் கொண்டிருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது, இந்தியாவில் 18 பொதுத் துறை வங்கிகள் உள்ளன. ஆனால் 2017 ஆம் ஆண்டில் இந்தியாவில் 27 பொதுத் துறை வங்கிகள் இருந்தன.
- இந்த இணைப்புக்குப் பிறகு இந்த எண்ணிக்கை மேலும் 12 ஆகக் குறையும்.

## மேக் பிணைப்பு செயல்முறை

- ஜம்மு காஷ்மீரில் சமூக ஊடகங்களின் பயன்பாட்டை மீண்டும் தொடங்கிய பின்னர், இப்போது இணையத்தை மேக் (ஊடக அணுகுக் கட்டுப்பாடு - media access control) பிணைப்புச் செயல்முறை மூலம் மட்டுமே அணுக முடியும்.
- MAC பிணைப்பு என்பது இணைய அணுகலை அனுமதிப்பதற்காக பயனரின் கணினியின் MAC முகவரி மற்றும் இணைய நெறிமுறை முகவரி (IP - Internet protocol) ஆகியவை பிணைக்கப்பட்ட ஒரு செயல்முறையாகும்.
- இந்தச் செயல்முறையின் மூலம், ஒரு குறிப்பிட்ட கணினியின் MAC முகவரி மற்றும் IP முகவரி பிணைக்கப்பட்ட கோரிக்கையானது ஏற்றுக் கொள்ளப்படும்.
- MAC மற்றும் IP முகவரி பிணைக்கப்பட்டுள்ள கணினியைப் பயன்படுத்தி ஜம்மு காஷ்மீர் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட வலைத் தளங்களை மட்டுமே அணுக முடியும் என்பதே இதன் பொருளாகும். மற்ற இணைய அணுகல்களை மேற்கொள்ள முடியாது.

## நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு

- ICONSAT (நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச மாநாடு - International Conference on Nano Science and Technology) என்பது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நானோ திட்டத்தின் தலைமையில் இந்தியாவில் நடைபெறும் ஒரு சர்வதேச மாநாட்டுப் பதிப்பாகும். இந்த மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது.
- ICONSAT -2020ஐ கொல்கத்தாவில் உள்ள எஸ்.என். போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையத்தால் நடத்தப்படுவதற்கு இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நானோ திட்டமானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மாநாடானது மார்ச் 5 ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரை கொல்கத்தாவில் நடைபெறுகின்றது.
- நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ந்து வரும் பகுதிகளில் சமீபத்திய வளர்ச்சியுடன் வேகத்தை வைத்திருப்பது இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

## ஒருங்கிணைந்த உள்நாட்டு எரிசக்தி அமைப்புகள்

- ஒருங்கிணைந்த உள்நாட்டு எரிசக்தி அமைப்புகள் குறித்த இந்தியா - ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் முதன்மைத் திட்டமானது 2020 இந்தியத் திறன்மிகு பயன்பாட்டு வாரத்தில் அறிவிக்கப்பட்டது.

- இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான இந்த கூட்டுப் பங்களிப்பானது தூய்மையான எரிசக்தி மற்றும் காலநிலைக்கு உதவ இருக்கின்றது.
- இது எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களில், முக்கியமாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் ஆற்றல் அமைப்பில் அதன் ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துகின்றது.
- இந்த ஒத்துழைப்பானது எரிசக்தி விநியோகத்தை தூய்மையானதாகவும் திறன்மிக்கதாகவும் அனைவருக்கும் குறைந்த விலையிலும் வழங்க வழிவகை செய்கின்றது.

### *இந்தியா - சுவீடன் ஒத்துழைப்பு*

- இந்தியத் திறன்மிகு பயன்பாட்டு வாரத்தில் இந்தியா - சுவீடன் கூட்டு தொழில்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டத்தை ஸ்வீடன் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் கூட்டாக அறிவித்துள்ளன.
- இந்தக் கூட்டுத் திட்டமானது திறன்மிகு தொடர் பகுதியில் உள்ள சவால்களை எதிர்கொள்ளுவதற்காக சுவீடன் மற்றும் இந்தியாவின் உலகத் தரம் வாய்ந்த நிபுணத்துவத்தை ஒன்றிணைக்க இருக்கின்றது.

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021

- 2021 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேட்டைப் புதுப்பித்தல் ஆகியவை ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் தொடங்கும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டுப் புதுப்பித்தலை புது தில்லி மாநகராட்சிப் பகுதியானது தொடங்கி வைக்கும். இந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் முதல் நபர் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆவார்.

## மத்தியத் தொழில் பாதுகாப்புப் படையின் கட்டுப்பாட்டில் ஜம்மு விமான நிலையம்

- ஜம்மு விமான நிலையத்தின் பாதுகாப்பை மத்திய தொழில் பாதுகாப்புப் படை (Central Industrial Security Force - CISF) ஏற்றுக் கொண்டுள்ளது.
- இதன் மூலம் தற்போது 63 விமான நிலையங்கள் CISFன் கீழ் உள்ளன.
- CISF ஆனது 1969 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது 1983 ஆம் ஆண்டில் ஒரு ஆயுதப் படையாக மாற்றப்பட்டது.

## கோவாவின் கோலா மிளகாய் - GI குறியீடு

- கோவாவின் கோலா கிராமத்தின் மலைகளில் வளர்க்கப்படும் புகழ்பெற்ற கோலா மிளகாய் அல்லது கொல்ச்சி மிர்ச்சி ஆனது புவிசார் குறியீட்டைப் (Geographical Indication - GI) பெற்றுள்ளது.
- GI குறியீடானது இந்தியாவின் புவிசார் குறியீட்டுப் பதிவக அமைப்பினால் வழங்கப்படுகின்றன.
- GI குறியீட்டைப் பெற்ற கோவா மாநிலத்தின் முதலாவது விவசாய உற்பத்தி பொருள் கோலா மிளகாய் ஆகும்.
- புவிசார் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பாதுகாக்கவும் அவற்றைக் குறிக்கவும் பயன்படும் அறிவுசார்

சொத்துரிமைகளின் (Intellectual Property Rights) ஒரு வடிவமாகும்.




## உற்பத்திப் பொருள்களை மின் சந்தைப்படுத்துதல் மீதான ஒப்பந்தம்

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தீன்தயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டமானது (DAY-NULM - Deendayal Antyodaya Yojana - National Urban Livelihoods Mission - DAY-NULM) அமேசான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- நாடு முழுவதும் நகர்ப் புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களால் (Self Help Groups - SHGs) தயாரிக்கப்படும் பொருட்களை மின் சந்தைப்படுத்துதலுக்காக இந்த ஒப்பந்தமானது கையெழுத்திடப் பட்டுள்ளது.
- இந்த ஒத்துழைப்பானது பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கான பரந்த வாடிக்கையாளர் தளத்தினை விரிவுபடுத்துதல் மற்றும்
  - நகர்ப் புறங்களில் நீடித்த வாழ்வாதாரங்களை உருவாக்கும் திட்டத்தை வலுப்படுத்தல்.

### *DAY-NULM பற்றி*

- இது நகர்ப்புற ஏழை மக்களின் வறுமை மற்றும் பாதிப்பைக் குறைப்பதற்காகத் தொடங்கப்பட்ட மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமாகும்.
- இது ஏழைகளின் வலுவான அடிமட்ட அளவிலான நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம், நிலையான அடிப்படையில் அவர்களின் வாழ்வாதாரங்களில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

## மிக முக்கிய நபர்களுக்கான விமானங்கள் மேம்படுத்தப்படல் - போயிங் -777

- இந்தியப் பிரதமர் மற்றும் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் பயணத்திற்குப் பயன்படுத்தப்படும் போயிங் 777 என்ற மிக முக்கிய நபர்களுக்கான விமானங்களுக்குப் புதிய ஏவுகணை எதிர்ப்பு பாதுகாப்பு முறையை வாங்க இந்தியா அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- இந்தியா தற்போது நான்கு ஏர் இந்தியா போயிங் 747 விமானங்களை மிக முக்கிய நபர்களுக்கான விமானங்களாக பிரதமர் மற்றும் இந்திய குடியரசுத் தலைவரின் பயணத்திற்குப் பயன்படுத்துகின்றது.

## நாரி சக்தி புரஸ்கர்

- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (மார்ச் 8) ராஷ்டிரபதி பவனில் 15 பெண்களுக்கு நாரி சக்தி புரஸ்கர் விருதினை இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், அதிலும் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய மற்றும் விளிம்புநிலைப் பெண்களுக்கு அதிகாரமளிக்கவும் வேண்டி பணிபுரியும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் சிறப்பான பணிகளை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இந்த தேசிய விருது வழங்கப் படுகின்றது.
- இந்த விருதானது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகத்தால் 1999 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது நிறுவனம் சார்ந்த ஆறு பிரிவுகளிலும் இரண்டு தனிநபர் பிரிவுகளிலும் வழங்கப் படுகின்றது.

### *2020 ஆம் ஆண்டின் விருதுகள்*

- 103 வயது நிரம்பிய தடகள வீராங்கனையான மான் கவுர்.
- இந்திய விமானப் படையின் முதலாவது மகளிர் போர் விமானிகளான மோகனா சிங், பாவனா காந்த் மற்றும் அவனி சதுர்வேதி.
- விவசாயிகளான படாலா பூதேவி மற்றும் பினா தேவி.
- கைவினைஞரான ஆரிஃபா ஜான்.
- சுற்றுச்சூழல் ஆர்வலரான சாமி முர்மு.



- தொழில்முனைவோரான நில்சா வாங்மோ.
- தானியங்கி ஆராய்ச்சி நிபுணரான ராஷ்மி உர்த்வர்திசி.
- பெண் கொத்தனாரான கலாவதி தேவி.
- மலையேற்ற வீராங்கனைகளான (உடன் பிறந்தவர்கள்) தாஷி மற்றும் நுங்ஷி மாலிக்.
- பாரம்பரியப் பாடகரான கௌசிகி சக்ரோபர்த்தி
- 2018 இல் எழுத்தறிவுத் தேர்வில் முதலிடம் பிடித்த 98 வயதான கார்த்தாயினி அம்மா.



### *ஆறு பிரிவுகள்*

- ❖ பெண்களின் நல்வாழ்வையும் நலனையும் மேம்படுத்துவதில் சிறப்பாகப் பணியாற்றும் தனியார் துறை அமைப்பு / பொதுத் துறை நிறுவனத்திற்கான தேவி அஹல்யா பாய் ஹோல்கர் விருது.
- ❖ குழந்தைப் பாலின விகிதத்தை (Child Sex Ratio - CSR) கணிசமான அளவில் மேம்படுத்தும் சிறந்த மாநிலத்திற்கான கண்ணகி தேவி விருது.
- ❖ பெண்களுக்குச் சேவைகள் மற்றும் வசதிகளை வழங்கும் சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கான மாதா ஜீஜாபாய் விருது.
- ❖ சிறந்த சிவில் (குடிமக்கள்) சமுதாய அமைப்பிற்கான (Civil Society organization - CSO) ராணி கைடின்லியு ஜெலியாங் விருது.
- ❖ பெண்களுக்கு அதிகாரமளித்தல் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் சிறந்து விளங்கும் நிறுவனத்திற்கான ராணி லட்சுமி பாய் விருது.
- ❖ இரண்டு மாவட்டப் பஞ்சாயத்துகள் மற்றும் இரண்டு கிராமப் பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்கு ராணி ருத்ரம்மா தேவி விருது.

## சுய உதவிக் குழுக்கள்

- ❖ 2022 ஆம் ஆண்டில் மேலும் 17 லட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் (Self Help Groups - SHGs) உருவாக்கப்பட இருப்பதாக 2020 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதியன்று மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் அறிவித்தார்.
- ❖ தற்போது, இந்தியாவில் 60 லட்சத்துக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் 6 கோடி பெண்களைக் கொண்டுள்ளன.

### *இது பற்றி*

- ❖ சுய உதவிக் குழுக்கள் என்ற கருத்தாக்கமானது 1992 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்டது.
- ❖ "குடும்பஸ்ரீ" என்ற திட்டமானது கேரளாவில் தொடங்கப்பட்ட நாட்டின் மிகப் பெரிய மற்றும் மிக வெற்றிகரமான ஒரு சுய உதவிக் குழுத் திட்டமாகும்.
- ❖ இத்திட்டமானது கேரள மாநில அரசின் சுய உதவிக் குழுவாகும்.
- ❖ இது 1998 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## பாஜக மற்றும் ஜே.வி.எம்

- ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் பாபுலால் மராண்டி தனது ஜார்கண்ட் விகாஸ் மோர்ச்சா கட்சியைப் பாரதிய ஜனதாவுடன் இணைத்துள்ளார்.
- இந்தியத் தேர்தல் ஆணையம் அதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது. மேலும் அது அக்கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தையும் திரும்பப் பெற்றது.
- 2000 ஆம் ஆண்டில், பாபுலால் மராண்டி முதல் ஜார்க்கண்ட் முதல்வராக ஆனார்.

## நிகர அளவீட்டு (Net Metering) இணைப்பிற்கான அனுமதி

- தெற்கு இரயில்வே தனது 4 மெகாவாட் கூரை சூரிய ஒளித் திட்டங்களுக்கு, நிகர அளவீட்டு இணைப்பிற்கான ஒப்புதலை மாநிலத்தின் 22 இடங்களில் பெற்றுள்ளது.
- இந்த திட்டங்கள் மூர் சந்தை வளாகம் மற்றும் பேசின் பிரிட்ஜ் சந்திப்பு போன்ற இடங்களில் உள்ளதைப் போல் செங்கல்பட்டு, காட்பாடி, அரக்கோணம், தாம்பரம், சென்னை எழும்பூர், ஜோலார்பேட்டை, திருச்சி, விழுப்புரம், மதுரை, விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரயில் நிலையங்களில் அமைக்கப்பட இருக்கின்றன.

## இந்தியாவில் பெண்கள் மேம்பாடு

- உலகளவில் நிறுவனங்களில் பெண் உறுப்பினர்களை கொண்ட தலைமைக் குழுவின் பட்டியலில் இந்தியா 12 வது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய ஆட்சேர்ப்பு தளமான MyHiringClub.com மற்றும் Sarkari-Naukri.info ஆகியவற்றால் 'வுமன் ஆன் போர்டு 2020' என்பது குறித்த ஒரு சமீபத்திய ஆய்வு இதுவாகும்.
- பட்டியலிடப்பட்ட இந்த 628 நிறுவனங்களில், 55 சதவீதம் பெண் இயக்குநர்களைக் கொண்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 14 சதவீதம் அதிகம் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- இந்தியாவில் ஒரு வாரியத்தில் பணியாற்றும் ஆண் இயக்குநர்களின் சராசரி பதவிக் காலமானது மூன்று ஆண்டுகள் ஆகும். இது அவர்களுக்கு இணையாகப் பணியாற்றும் பெண்கள் இயக்குநர்களின் பதவிக்காலத்தை விட அதிகமாகும்.
- ஆசியாவில் சுமார் 54 சதவீத ஊழியர்களும், இந்தியாவில் 39 சதவீத ஊழியர்களும் பெண்கள் ஆவர். ஆனால் அந்த எண்ணிக்கையில் ஒரு பகுதியினர் மட்டுமே நடுத்தர மற்றும் தலைமை நிர்வாக நிலைக்கு வருகிறார்கள்.
- இந்தப் பட்டியலில் நார்வே தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

## தொகுதிகளின் மறுவரையறை

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் அரசாங்கம் ஒரு தொகுதி மறுவரையறை ஆணையத்தை அமைத்துள்ளது.
- இது ஜம்மு-காஷ்மீர் ஒன்றியம், வடகிழக்கு மாநிலங்களான அசாம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களின் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும்.
- தொகுதி மறுவரையறை என்பது ஒரு சட்டமன்ற அமைப்பைக் கொண்ட ஒரு மாநிலத்தில் பிராந்தியத் தொகுதிகளின் வரம்புகளை அல்லது எல்லைகளை நிர்ணயிக்கும் செயல்முறையாகும்.

- 2002 ஆம் ஆண்டின் தொகுதி மறுவரையறைச் சட்டத்தின்படி அசாம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்கள் தொகுதி மறுவரையறை செய்யப்பட இருக்கின்றன.
- இந்திய ஜனாதிபதியால் குறிப்பிடப்படும் தேதியில் அந்த ஆணையத்தின் உத்தரவுகள் செயல்படுத்தப் படும்.
- இந்த உத்தரவுகளின் நகல்கள் மக்களவை அல்லது சம்பந்தப்பட்ட சட்டமன்றத்தின் முன் வைக்கப் படும்.
- இதில் எந்த மாற்றங்களுக்கும் அனுமதியில்லை.
- தொகுதி மறுவரையறைச் சட்டம், 2002 இன் படி, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட மறுவரையறை ஆணையத்தில் மூன்று உறுப்பினர்கள் இருக்க வேண்டும்:
    - தலைவராக உச்சநீதிமன்றத்தில் பணியாற்றும் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி இருக்க வேண்டும்.
    - தலைமைத் தேர்தல் ஆணையர் அல்லது அவர் பரிந்துரைத்த தேர்தல் ஆணையர் இருக்க வேண்டும்.
    - பதவி வழி உறுப்பினர்களாக மாநிலத் தேர்தல் ஆணையர் இருக்க வேண்டும்.

## கன்வால் ஜீத் சிங் தில்லான்

- ஸ்ரீநகரில் உள்ள 15வது படைப் பிரிவின் முன்னாள் தளபதியான கன்வால் ஜீத் சிங் தில்லான் என்பவர் மத்தியப் பாதுகாப்புத் துறையில் முப்படைத் தலைமைத் தளபதியின் (Chief of Defence Staff - CDS) கீழ் உள்ள பாதுகாப்புப் புலனாய்வுத் துறையின் பொது இயக்குநராகவும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு அதிகாரிகளின் (புலனாய்வு) துறைத் தலைவராகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.
- பாதுகாப்புப் புலனாய்வு அமைப்பு என்பது இந்திய ஆயுதப் படைகளுக்கு இராணுவ உளவு சார்ந்த தகவல்களை வழங்குவதற்கும் அவற்றை ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பான ஒரு அமைப்பாகும்.
- இது 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உருவாக்கப்பட்டது. இது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தினால் நிர்வகிக்கப் படுகின்றது.




## பெண் விஞ்ஞானிகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கான உதவி எண்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் மாணவிகள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் விஞ்ஞானிகள் ஆகியோருக்காக ஒரு உதவி எண்ணை வெளியிட்டுள்ளார்.

- இது அமைச்சகத்தின் திட்டங்கள் தொடர்பான அவர்களின் கேள்விகளுக்கு விடை அளித்து உதவ இருக்கின்றது.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்கான தகுதிகள் அல்லது பிற தேவைகள் பற்றிய தகவல்களையும் இவர்கள் பெற இருக்கின்றனர்.

## இந்தியாவை மாற்றும் பெண்கள் விருதுகள்

- சமீபத்தில் நிதி ஆயோக் அமைப்பானது இந்தியாவை மாற்றும் பெண்கள் (Women Transforming India - WTI) என்ற விருதுகளின் நான்காவது பதிப்பை ஏற்பாடு செய்தது.
- 2019 ஆம் ஆண்டின் WTI விருதுகளுக்கு 2,300க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் முதல் 30 விண்ணப்பங்கள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டன.
- WTI விருதுகளானது இந்தியாவில் உள்ள பெண் தலைவர்கள் மற்றும் மாற்றத்தை உருவாக்குபவர்கள் ஆகியோரின் பாராட்டத்தக்க மற்றும் பெரு முயற்சிகளை முன்னிலைப் படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிதி ஆயோக்கின் ஒரு முன் முயற்சியாகும்.
- 2018 ஆம் ஆண்டு முதல், தொழில்முனைவோர் மீது சிறப்புக் கவனம் செலுத்தி நிதி ஆயோக்கின் பெண் தொழில்முனைவோர்கள் பிரிவின் கீழ் இந்த விருதுகள் வழங்கப் படுகின்றன.




## துப்புரவுத் துணிகளை (மாத விடாய்த் துணிகள்) அகற்றும் பைகள்

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் துப்புரவுத் துணிகளை அகற்றும் பைகளைக் கட்டாயமாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்த அறிவிப்பானது மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவடேகரால் வெளியிடப் பட்டது.
- மேலும் இவர் துப்புரவுத் துணிகளை உற்பத்தி செய்பவர்கள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு துப்புரவுத் துணிக்கும் ஒரு மக்கக் கூடிய பையை கட்டாயம் வழங்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## நான்கு நாடுகளில் தளவாடத் தளங்கள் – HAL

- இந்தியாவின் இலகுரக போர் விமானமான தேஜாஸ் மற்றும் இராணுவ ஹெலிகாப்டர்களை வாங்குவதற்காக நாடுகளைக் கவர்ந்திழுக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக நான்கு நாடுகளில் தளவாடத் தளங்களை அமைப்பதற்கு மத்திய அரசிற்குச் சொந்தமான இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (Hindustan Aeronautics Ltd - HAL) முயற்சித்து வருகின்றது.
- மலேசியா, வியட்நாம், இந்தோனேசியா மற்றும் இலங்கை ஆகியவை இந்த நான்கு நாடுகளாகும்.
- தேஜாஸ் விமானமானது வானூர்தி மேம்பாட்டு நிறுவனம் மற்றும் HAL ஆகியவற்றால் மேம்படுத்தப் படுகின்றது.
- ஜெட் விமானத்தின் ஆயுட்காலமானது மற்ற முன்னணி போர் விமானங்களைப் போலவே குறைந்தபட்சம் 30 ஆண்டுகளாக இருக்கும்.
- மேலும் தேஜாஸ், தாக்குதல் ரக வானூர்தியான ருத்ரா மற்றும் மேம்பட்ட இலகுரக வானூர்தியான துருவ் போன்ற முக்கிய வானூர்திகளை விற்க இருக்கும் அரசாங்கத்தின் முன்னுரிமையுடன் ஒத்துப் போகும் வகையில் ஏற்றுமதியை அதிகரிப்பதில் HAL இப்போது தீவிரமாக கவனம் செலுத்துகின்றது என்றும் HAL தலைவரும் நிர்வாக இயக்குநருமான ஆர் மாதவன் கூறியுள்ளார்.



## பெண் விஞ்ஞானிகள் சர்வதேச அனுபவத்தைப் பெறுதல்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (Department of Science and Technology - DST) அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் மற்றும் மருத்துவம் (WISTEMM - Women in Science, Technology, Engineering, Mathematics and Medicine) ஆகிய துறையில் உள்ள பெண்களுக்கான இந்திய – அமெரிக்கத் தோழமைத் திட்டமானது இந்திய – அமெரிக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்துடன் (IUSSTF - Indo-U.S. Science & Technology Forum) இணைந்து பெண் விஞ்ஞானிகள் பலருக்குச் சர்வதேச அனுபவத்தை வழங்கியுள்ளது.
- சுமார் 20 பெண் விஞ்ஞானிகள் தங்களது ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் அவர்களின் ஆராய்ச்சி தொடர்பான புதிய தொழில்நுட்பங்களில் பயிற்சி பெறுவதற்காகவும் அமெரிக்கா முழுவதும் உள்ள 20 முன்னணி நிறுவனங்களுக்குப் பயணம் மேற்கொண்டனர்.
- WISTEMM ஆனது பின்வருவனவற்றிற்காக இந்தியப் பெண் விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கு வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - அமெரிக்காவில் உள்ள முதன்மை நிறுவனங்களில் சர்வதேசக் கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல் மற்றும்
    - அவர்களின் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்துதல்.

## காங்கிரஸ் உறுப்பினர்கள் தற்காலிக இடைநீக்கம்

- மக்களவையின் சபாநாயகரான ஓம் பிர்லா பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்களை கீழவையிலிருந்துத் தற்காலிகமாக இடைநீக்கம் செய்துள்ளார்.
- கௌரவ் கோகோய், டி.என். பிரதாபன், டீன் குரியகோஸ், ஆர். உன்னிதன், மாணிக்க தாகூர், பென்னி பெஹனன், மற்றும் குர்ஜீத் சிங் ஆஜ்லா ஆகியோர் எஞ்சி இருக்கும் நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடர் நிறைவடையும் வரை தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.
- இவர்கள் சபை விதிகளைப் புறக்கணித்து சபாநாயகரின் மேசையிலிருந்த ஆவணங்களைப் பறித்ததன் காரணமாக மக்களவையானது இந்த தீர்மானத்தை நிறைவேற்றியது.

## பிரதமர் மோடியின் சமூக ஊடகங்களைக் “கையாண்ட” 7 பெண்கள்

- பிரதமர் நரேந்திர மோடியின் சமூக ஊடகங்களானது தங்களது அதிர்ச்சியூட்டும் கதைகளை உலகுக்கு எடுத்துக் கூறுவதற்காக ஏழு பெண் சாதனையாளர்களால் கையாளப் பட்டது.
- சர்வதேச மகளிர் தினத்தன்று பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் ஏழு பெண்கள் தங்களது வாழ்க்கைப் பயணங்களையும் செய்திகளையும் பகிர்ந்து கொள்வதற்காக பல்வேறு தளங்களில் இருக்கும் தனது ஊடகக் கணக்குகளை அவர்களிடம் வழங்கினார்.
- மோடியின் கணக்குகளைப் பயன்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் பின்வருமாறு:

| பெயர் | சேவை |
|---|---|
| சினேகா மோகன்தாஸ் | பட்டினியை ஒழிக்கப் பாடுபட்டவர் |
| மாளவிகா ஐயர் - ஒரு பயங்கரமான குண்டு வெடிப்பில் இருந்து தப்பிய இரண்டு கைகளையும் இழந்த பெண்மணி | ஊக்கமூட்டும் பேச்சாளர், மாற்றுத்திறனாளி ஆர்வலர் மற்றும் விளம்பரங்களில் நடிப்பவர் |
| அரிபா ஜான் | காஷ்மீரின் பாரம்பரியக் கைவினைப் பொருட்களை ஊக்குவிப்பவர் |
| கல்பனா ரமேஷ் | நீர்ப் பாதுகாவலர் |
| விஜயா பவார் | மகாராஷ்டிர மாநில கிராமப்புறப் பகுதியின் பஞ்சாரா சமூகத்திலிருந்து கைவினைப் பொருட்களை ஊக்குவிப்பவர் |
| கலையாட்டி தேவி | கழிப்பறைகளைக் கட்ட நிதி வசூலிப்பவர் |
| வீணா தேவி | இடப் பற்றாக்குறையின் காரணமாக படுக்கையின் கீழ் காளான்கள் வளர்ப்பது |

## ஸ்டார்ட்அப் இந்தியா

- ஸ்டார்ட்அப் இந்தியா (புதிதாகத் தொழில் தொடங்குதல்) இணையதளத்தின் படி, இதுவரை 29,681 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையிடம் (Department for Promotion of Industry and Internal Trade - DPIIT) பதிவு

செய்துள்ளன.

- ❖ இது 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களை (8,939) விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- ❖ இந்தத் தரவானது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் தருவிக்கப் பட்டது.
- ❖ தற்போது இந்திய ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் நிலையானது அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக உலகளவில் மூன்றாவது பெரிய இடத்தில் உள்ளது.

***DPIIT***

- ❖ DPIIT ஆனது 1995 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- ❖ இது தொழில்துறை வளர்ச்சித் துறையுடன் இணைக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப் பட்டுள்ளது.
- ❖ DPIIT ஆனது தேசிய முன்னுரிமைகள் மற்றும் சமூகப் பொருளாதார நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, தொழில்துறை துறையின் வளர்ச்சிக்காக ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை உருவாக்கி, அவற்றைச் செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

## 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் கேட்கப்படும் கேள்விகள்

- ❖ 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது பணியாளர்களால் வீடு வாரியாக சென்று கேட்கப்படும் 31 கேள்விகளின் பட்டியல் குறித்த ஒரு அரசாணையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தக் கேள்விகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

1. Building Number
2. Census House Number
3. Predominant material of floor, wall and roof of the census house
4. Ascertain use of census house
5. Condition of the census house
6. Household number
7. Total number of persons normally residing in the household
8. Name of the head of the household
9. Sex of the head of the household
10. Whether the head of the household belongs to SC/ST/Other
11. Ownership status of the census house
12. Number of dwelling rooms exclusively in possession of the household
13. Number of married couple(s) living in the household
14. Main source of drinking water
15. Availability of drinking water source
16. Main source of lighting
17. Access to latrine
18. Type of latrine
19. Wastewater outlet
20. Availability of bathing facility
21. Availability of kitchen and LPG/PNG connection
22. Main fuel used for cooking
23. Radio/Transistor
24. Television
25. Access to Internet
26. Laptop/Computer
27. Telephone/Mobile phone/smartphone
28. Bicycle/scooter/motorcycle/moped
29. car/Jeep/Van
30. Main cereal consumed in the household
31. Mobile number

## துணைநிலை ஆளுநரின் அதிகாரம் குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு

- மதராஸ் உயர் நீதிமன்றமானது புதுச்சேரியின் துணைநிலை ஆளுநரான கிரண் பேடியை ஒன்றியப் பிரதேசத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் அன்றாட விவகாரங்களில் தலையிடுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தனது சொந்த உத்தரவை திரும்பப் பெற்றுள்ளது.
- மதராஸ் உயர் நீதிமன்றமானது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துடன் ஒற்றுமையாகச் செயல்பட துணைநிலை ஆளுநரைக் கேட்டுக் கொண்டது.
- மேலும் அது மத்திய அரசு மற்றும் ஆளுநர் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளை அனுமதித்துள்ளது.

## இந்தியாவின் சிறந்த தனியார் கல்வி நிறுவனம்

- QS பாடத் தரவரிசை - 2020ன் படி, வேலூர் தொழில்நுட்ப நிறுவனமானது (Vellore Institute of Technology - VIT) பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பாடத்திற்காக இந்தியாவின் சிறந்த (முன்னணி) தனியார் கல்வி நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- QS உலகப் பல்கலைக் கழகத் தரவரிசைகளில் இந்தப் பல்கலைக் கழகமானது உலகின் சிறந்த 450 பல்கலைக் கழகங்களிடையே சிறந்த பல்கலைக் கழகமாக இடம் பெற்றுள்ளது.
- QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை என்பது ஐக்கிய ராஜ்ஜியத்தின் குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் (Quacquarelli Symonds - QS) நிறுவனத்தால் வெளியிடப்படும் பல்கலைக்கழக தரவரிசைகளின் ஒரு வருடாந்திர வெளியீடாகும்.
- VIT ஆனது இந்திய அரசால் சிறப்புமிகு நிறுவனமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது இந்திய அரசாங்கத்தின் புத்தாக்க சாதனைகள் தொடர்பான நிறுவனங்களின் அடல் தரவரிசை (Atal Ranking of Institutions on Innovation Achievements - ARIIA) புத்தாக்கத்திற்காக முதலிடத்தில் (VIT) தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.

## பிரக்யான் மாநாடு - 2020

- "பிரக்யான் மாநாடு – 2020" என்ற இந்திய இராணுவ சர்வதேச கருத்தரங்கானது தரைவழிப் போர் ஆய்வு மையத்தினால் (CLAWS - Centre for Land Warfare Studies) ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்தக் கருத்தரங்கமானது புது தில்லியில் தொடங்கியது.
- இந்த நிகழ்வானது தேசிய மற்றும் சர்வதேச இராணுவ வல்லுநர்களுக்கு 'தரைவழிப் போரின் சிறப்பியல்புகளை மாற்றுதல் மற்றும் இராணுவத்தின் மீதான அதன் தாக்கம்' என்ற தலைப்பில் விவாதிப்பதற்கான ஒரு தளத்தை உருவாக்குகின்றது.

## இந்தியா நானோ 2020

- இந்தியா நானோ மாநாடு மற்றும் கண்காட்சியானது பெங்களூரில் நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டில் நானோ தொழில்நுட்பத் துறையில் கல்வியாளர்கள் மற்றும் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகள் ஆகியவை காண்பிக்கப் பட்டன.
- இந்த மாநாடானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, கர்நாடக அரசு மற்றும் ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையம் (Jawaharlal Nehru Centre for Advanced Scientific Research - JNCASR) ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டது.

- JNCASR ஆனது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி பெற்ற ஒரு நிறுவனமாகும்.




## சொத்துரிமை

- தக்க சட்ட முறைப்படி அல்லாமல் ஒருவருக்குச் சொந்தமான சொத்தை அவரிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பறித்தலானது மனித உரிமை மீறல் என்று இந்திய உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- சமீபத்திய தீர்ப்பில், இந்திய உச்ச நீதிமன்றமானது சொத்துரிமை என்பது ஒரு மனித உரிமை மற்றும் அரசியலமைப்பு உரிமை என்று வலியுறுத்தியுள்ளது. இந்த அரசியலமைப்பு உரிமையானது சரத்து 300ஏ என்ற விதியின் கீழ் வருகின்றது.

## நிலக்கரி இறக்குமதி உயர்வு

- இந்தியாவில் நிலக்கரி இறக்குமதியானது 2019 ஆம் ஆண்டில் 12.6% என்ற அளவிற்கு உயர்ந்து கிட்டத்தட்ட 200 மில்லியன் டன்னாக உள்ளது.
- இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியானது முக்கியமாக மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்தியாவின் மொத்த நிலக்கரி இறக்குமதியில் கிட்டத்தட்ட 60% இறக்குமதியானது இந்தோனேசியாவிலிருந்து வருகின்றது.
- இருப்பினும், எஃகு உற்பத்தியில் முக்கியமாக பயன்படுத்தப்படும் நிலக்கரியின் (coking coal) இறக்குமதியானது ஓரளவு சரிந்துள்ளது.
- உலகில் நிலக்கரி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நிலக்கரி உற்பத்தியில் சீனா முதல் இடத்தில் உள்ளது.
- சீனாவும் இந்தியாவும் உலகின் மிகப்பெரிய நிலக்கரி இறக்குமதியாளர் நாடுகளாக விளங்குகின்றன.
- உலகின் அதிக அளவு நிலக்கரியை நுகரும் இரண்டு நாடுகள் சீனா மற்றும் இந்தியா (உலகின் மிக அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள்) ஆகும்.
- ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் இந்தோனேசியா போன்ற நிலக்கரியை உற்பத்தி செய்யும் நாடுகள் தங்களது உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்த பின்னர் ஏற்றுமதி செய்வதற்கான அதிக திறனைக் கொண்டுள்ளன.

## மக்களவை உறுப்பினர்களின் தற்காலிக இடைநீக்கம் ரத்து

- மக்களவையானது ஏழு காங்கிரஸ் உறுப்பினர்களின் தற்காலிக இடைநீக்கத்தை ரத்து செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இது உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.
- ஏப்ரல் 3 ஆம் தேதியுடன் நிறைவடையும் நிதிநிலை அமர்வு வரை இந்த உறுப்பினர்கள் முன்பு இடைநீக்கம் செய்யப் பட்டிருந்தனர்.
- இந்தத் தீர்மானமானது மக்களவையில் நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சரான அர்ஜுன் ராம் மேக்வால் என்பவரால் கொண்டு வரப்பட்டு, குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

## தொற்று நோய்கள் சட்டம், 1897

- தொற்று நோய்கள் சட்டம், 1897ன் விதிமுறைகளை செயல்படுத்துமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதனால் சுகாதார அமைச்சகத்தின் ஆலோசனைகள் செயல்படுத்தப் படுகின்றன.
- இந்த விதிமுறைகள் பன்றிக் காய்ச்சல், டெங்கு மற்றும் காலரா போன்ற நோய்களின் பாதிப்புகளைக் கையாள்வதற்காக நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகின்றன.

## பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா

- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனாவின் கீழ் எட்டு கோடி எல்பிஜி எரிவாயு இணைப்புகள் வழங்க வேண்டும் என்ற இலக்கை மத்திய அரசு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் எட்டியுள்ளது.
- ஆனால் ஹரியானா, பஞ்சாப் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்கள் மட்டுமே மண்ணெண்ணெய்ப் பயன்பாடற்ற மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.
- தில்லி, சண்டிகர், டாமன் & டையு, தாத்ரா & நாகர் ஹவேலி, அந்தமான் நிக்கோபார் தீவு மற்றும் புதுச்சேரி ஆகிய ஒன்றியப் பிரதேசங்கள் மண்ணெண்ணெய்ப் பயன்பாடற்ற ஒன்றியப் பிரதேசங்களாக உருவெடுத்துள்ளன.

### *இத்திட்டம் பற்றி*

- இது 2016 ஆம் ஆண்டில் மே மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பெண்களுக்கு எல்பிஜி (திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு) எரிவாயு இணைப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## தேசிய மக்கள்தொகைப் பதிவேடு (NPR)

- NPR அல்லது தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டிற்காக (National Population Register) குடிமக்கள் எந்தவொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை.
- அத்தகைய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறினால் யாரும் "டி" (Doubtful - சந்தேகத்திற்குரியவர்கள்) என்று அறிவிக்கப்பட மாட்டார்கள்.
- இந்தத் தகவலானது நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை அமைச்சகத்தால் வெளியிடப் பட்டது.
- NPRக்கான தகவல்களைச் சேகரிக்கும் செயல்முறையானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கி செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவடைய இருக்கின்றது.
- அசாம் மாநிலம் தவிர, இந்தியா முழுவதும் NPR கணக்கெடுப்பானது நடத்தப்பட இருக்கின்றது. ஏனெனில் அசாம் மாநிலமானது ஏற்கனவே தேசியக் குடிமக்கள் பதிவேட்டின் கீழ் வருகின்றது.
- 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் போது தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டிற்கான தரவும் சேகரிக்கப் பட்டது.

### *NPR பற்றி*

- NPR என்பது நாட்டில் வழக்கமாக வாழும் மக்களின் தரவுகளைக் கொண்ட ஒரு பதிவேடாகும்.
- இது குடியுரிமைச் சட்டம், 1955 மற்றும் குடியுரிமை (குடிமக்களின் பதிவு மற்றும் தேசிய அடையாள அட்டைகளின் விநியோகம்) விதிகள், 2003 ஆகியவற்றின் கீழ் உள்ளூர் (கிராமம் / துணை நகரம்), துணை மாவட்டங்கள், மாவட்டம், மாநில மற்றும் தேசிய அளவில் சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளது.
- NPRன் நோக்கங்களுக்காக ஒரு வழக்கமான குடியிருப்பாளர் என்பவர் கடந்த ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக ஒரு உள்ளூர் பகுதியில் வசித்த ஒரு நபர் அல்லது அடுத்த ஆறு மாதங்களுக்கு அந்தப் பகுதியில் வசிக்க விரும்பும் ஒரு நபர் என வரையறுக்கப் படுகின்றார்.
- இந்தச் சட்டமானது இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனையும் கட்டாயமாகப் பதிவு செய்து தேசிய அடையாள அட்டையை வழங்க வழிவகை செய்கின்றது.
- NPR புதுப்பிப்புச் செயல்முறையானது இந்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இந்தியாவின் தலைமைப் பதிவாளர் மற்றும் பதவிவழி அதிகாரப்பூர்வ கணக்கெடுப்பு ஆணையரின் உதவியுடன் மேற்கொள்ளப் பட இருக்கின்றது.

### *NPR மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு*

- NPR மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் செயல்முறை ஆகியவை ஒரே நேரத்தில் தொடங்கும். ஆனால் இந்த இரண்டு தரவுத் தளங்களும் ஒரே மாதிரியானவை அல்ல.
- இந்திய மக்கள்தொகையின் வெவ்வேறு குணாதிசயங்கள் குறித்த பல்வேறு புள்ளி விவரத் தகவல்களின் மிகப்பெரிய ஒரு ஒற்றை ஆதாரமாக இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (பத்தாண்டுகளுக்கு ஒரு முறை) உள்ளது.
- NPR ஆனது மக்கள்தொகை சார்ந்த தகவல்களை மட்டுமே கொண்டிருக்கும். ஆனால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கு மக்கள்தொகை விவரம், பொருளாதாரச் செயல்பாடு, கல்வியறிவு & கல்வி மற்றும் வீடுகள் மற்றும் வீட்டு வசதிகள் போன்ற கூடுதல் தகவல்களும் தேவைப் படுகின்து.

- கடந்த பத்தாண்டில் நாட்டின் முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்வதற்கும் அரசாங்கத்தின் தற்போதைய திட்டங்களைக் கண்காணிப்பதற்கும் எதிர்காலத்திற்கான திட்டங்களுக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பானது அடிப்படையாக விளங்குகின்றது.

## WIONன் உலகளாவிய உச்சி மாநாடு

- WIONன் உலகளாவிய உச்சி மாநாட்டின் மூன்றாவது பதிப்பானது துபாயில் நடத்தப் பட்டது.
- இதன் கருப்பொருள், "உலகளாவிய தேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அது குறித்து பேச்சுவார்த்தை நடத்துதல்" என்பதாகும்.
- WION (World Is One News) என்பது இந்தியாவின் முதலாவது சர்வதேச செய்தி அலைவரிசையாகும். இது உலகளாவியப் பிரச்சினைகள் குறித்த இந்தியாவின் பார்வையை முன்வைப்பதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- WION உலகளாவிய உச்சி மாநாடு ஆனது பொதுவான உலகளாவிய செயல் திட்டங்கள் குறித்து உலகளாவிய தலைவர்கள் உரையாடலில் ஈடுபடுவதற்கான ஒரு தளமாகும்.

## நொடித்தல் மற்றும் திவால் குறியீடு (Insolvency and Bankruptcy Code - IBC) திருத்த மசோதா, 2020

- இந்தத் திருத்தமானது திவாலான நிறுவனங்களை ஏலம் எடுத்த ஏலதாரர்களை குற்றவியல் நடவடிக்கைகளின் ஆபத்திலிருந்துப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அந்த நிறுவனத்தின் முந்தைய பங்குதாரர்களிடமிருந்து குற்றவியல் நடவடிக்கைகள் எதிர்பார்க்கப் படலாம்.
- இது அவற்றில் உள்ள தடைகளை நீக்கி, பெருநிறுவன நொடித்தல் தீர்வு காண் செயல்முறையை சீராக்க முயல்கின்றது.
- முந்தைய உரிமையாளர்களின் தவறான செயல்களுக்காக வழக்குத் தொடரப்படுவதற்கு எதிராக கடனைத் திருப்பிச் செலுத்தும் நிறுவனத்தின் புதிய உரிமையாளர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

### *IBC பற்றி*

- 2016 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த IBC ஆனது ஏற்கனவே மூன்று முறை திருத்தப் பட்டுள்ளது.

## தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சி (SAREX - 2020)

- தேசிய அளவிலான தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சியானது (SAREX-2020) இந்தியக் கடலோரக் காவல் படையால் கோவாவில் நடத்தப்பட்டது.
- இந்தப் பயிற்சியில் முதல்முறையாக தேசிய SAR செயல்முறையின் 3 முக்கியமான துறைகளான, அதாவது மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகம், மத்திய உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் மற்றும் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆகியவை பங்கேற்றன.
- இது 'HAMSAR' என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட கடல்சார் மற்றும் வான்வெளித் தேடல் மற்றும் மீட்பின் ஒத்திசைவைப் பெற்ற கருப்பொருளைக் கொண்டிருக்கின்றது.

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

❖ தேசியக் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு வாரியத்தின் (National Maritime Search and Rescue Board - NMSARB) உதவியுடன் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் SAREX பயிற்சியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.



## கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்டத் தகவல் அமைப்பு – 2017/18 ஆய்வு

❖ நாட்டில் 40%க்கும் மேற்பட்ட அரசு பள்ளிகள் மின்சாரம் மற்றும் விளையாட்டு மைதானங்களைக் கொண்டிருக்கவில்லை.

❖ நாட்டில் 56% பள்ளிகள் மட்டுமே மின்சார வசதியைக் கொண்டுள்ளன. இதில் மணிப்பூர் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மிகக் குறைந்த விகிதத்தை (மின்சாரம் பெறுவதில்) கொண்டுள்ளன. இங்கு 20%க்கும் குறைவான பள்ளிகளுக்கு மட்டுமே மின்சாரம் கிடைக்கிறது.

❖ நாட்டில் 57%க்கும் குறைவான பள்ளிகள் மட்டுமே விளையாட்டு மைதானங்களைக் கொண்டுள்ளன. ஒடிசா மற்றும் ஜம்மு - காஷ்மீரில் 30%க்கும் குறைவான பள்ளிகள் மட்டுமே விளையாட்டு மைதானங்களைக் கொண்டுள்ளன.




## அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழ் முகமூடிகள் மற்றும் கை சுத்திகரிப்பான்கள்

❖ 2 மற்றும் 3 பிளை அறுவைச் சிகிச்சை முகமூடிகள், என் 95 முகமூடிகள் மற்றும் கை சுத்திகரிப்பான்களை அத்தியாவசியப் பொருட்களாக 2020 ஜூன் 30 வரை அறிவிக்க அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955 என்ற சட்டத்தினை அரசாங்கம் திருத்தி அமைத்துள்ளது.

- இத்திருத்தம், கொரோனா வைரஸின் தீடீர்ப் பெருக்கத்தினால், இந்தத் தயாரிப்புகள் சரியான விலையில் சந்தையில் கிடைப்பதை உறுதி செய்வதையும், அதை கையாளுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதையும் நோக்கமாக கொண்டு உள்ளது.
- மொத்தப் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றை நுகர்வோருக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதற்கும் 1955 ஆம் ஆண்டில் மத்திய அரசு இந்தச் சட்டத்தை இயற்றியது.




## குற்றப்பிரிவு பல்பயன்பாட்டு முகமையகம் (Crime Multi Agency Centre)

- மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் குற்றப்பிரிவு பல்பயன்பாட்டு முகமையகத்தைத் துவங்கி வைத்தார்.
- இது கடுமையான குற்றங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு தொடர்பான பிற பிரச்சினைகள் குறித்த தகவல்களைப் பகிர்வதற்காக நிறுவப் பட்டுள்ளது.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் 35ஆவது தொடக்கத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் அவர் இந்த மையத்தைத் தொடங்கினார்.
- காவல்துறை அதிகாரிகள், நீதிபதிகள், வழக்குரைஞர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு இணைய வழிக் குற்ற விசாரணை தொடர்பான தொழில் சார்ந்த தரமான மின்-கற்றல் சேவைகளுக்காகத் தேசிய இணைய வழிக் குற்றப் பயிற்சி மையத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் தனது 35ஆவது தொடக்கத் தினத்தை 2020 மார்ச் 12 அன்று கொண்டாடியது.
- இது புது தில்லியை தலைமையகமாகக் கொண்டுள்ளது. இது இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் ஒரு பகுதியாகும்.
- இது இந்திய தண்டனைச் சட்டம், சிறப்பு மற்றும் உள்ளூர் சட்டங்கள் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட குற்றத் தரவுகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்யும் ஒரு இந்திய அரசின் முகமை ஆகும்.

## பூமி ராஷி இணைய வாயில்

- 'பூமி ராஷி' இணைய வாயில் ஆனது தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணியைக் கணிசமாக அதிகரித்துள்ளது என்று சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்த இணைய வாயில் ஆனது ஒவ்வொரு கட்டத்திலும் நிகழ்நேரத்தில் செயலாக்கப்படும் அறிவிப்புகளுடன் செயல்முறையைப் பிழையில்லாமல் மற்றும் வெளிப்படையானதாக ஆக்கியுள்ளது.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகமானது பூமி ராஷி என்ற இணைய வாயிலை ஏப்ரல் 1, 2018 அன்று அறிமுகப் படுத்தியுள்ளது.

## விங்ஸ் இந்தியா 2020

- ஆண்டிற்கு இருமுறை நடைபெறும் விங்ஸ் இந்தியா 2020 எனும் உள்நாட்டு விமானத் துறை குறித்த நான்கு நாள் சர்வதேசக் கண்காட்சி மற்றும் மாநாடு ஆனது ஹைதராபாத்தின் பேகம்பேட் விமான நிலையத்தில் நடைபெற்றது.
- இதை உள்நாட்டு விமானத் துறையும் விமான நிலைய ஆணையமும் மற்றும் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பும் இணைந்து "அனைவரும் பறப்பதற்கு" என்ற கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்துள்ளது.

## இந்தியாவில் கொரோனா வைரஸின் மரபுகூறு பிரிப்பு

- COVID-19 வைரஸின் மரபுகூறைப் பிரித்தெடுத்த உலகின் ஐந்தாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இதற்கு முன்பு ஜப்பான், தாய்லாந்து, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் கொரோனா வைரஸின் மரபுகூறை வெற்றிகரமாகப் பிரித்தெடுத்துள்ளன.
- இது நாட்டில் மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் விரைவாக நோய் கண்டறிதல் கருவிகள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உதவுகின்றது.
- இந்தியாவில் பிரித்தெடுக்கப்பட்ட கொரோனா வைரஸின் மரபுகூறானது வுஹான் நகரில் இருந்த கொரோனா வைரஸின் மரபுகூறுடன் ஒப்பிடும் பொழுது 99.99% ஒத்தவையாக உள்ளது என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் (Indian Council of Medical Research - ICMR) பொது இயக்குநரான பல்ராம் பார்கவா கூறியுள்ளார்.

## COVID-19 பாதிப்பிற்கான அவசரகால நிதியை இந்தியா முன்மொழிந்துள்ளது

- கொரோனா வைரஸ் பாதிப்பை எதிர்த்துச் சமாளிப்பதற்கு ஒரு உத்தியை வகுப்பதற்காக சார்க் அமைப்பின் தலைவர்கள் காணொளி மாநாடு ஒன்றில் பங்கேற்றனர்.
- இந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பாக பிரதமர் மோடி கலந்து கொண்டார்.
- இந்த மாநாட்டில் கோவிட் -19 பாதிப்பிற்கான அவசரகால நிதியை உருவாக்க இந்தியா முன்மொழிந்துள்ளது.
- மேலும் இந்த வைரஸ் நோய்க் கடத்திகளைச் சிறப்பான முறையில் கண்காணிப்பதற்காக இந்தியா நோய் கண்காணிப்பு இணைய வாயிலை அமைக்க உள்ளது.
- "நோயை எதிர்த்துப் போராட தயாராகு, அச்சம் அடையத் தேவையில்லை" என்ற உத்தியுடன் இந்தியா கொரோனா வைரஸ் பாதிப்பை எதிர்த்துப் போராடுகின்றது.

## அறிவிக்கப்பட்ட பேரிடர்

- COVID-19 பாதிப்பை "அறிவிக்கப்பட்ட பேரிடர்" என்று இந்தியா அறிவித்துள்ளது.
- இதன் மூலம், தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களில் உள்ள நோயாளிகளுக்கு உணவு, மருத்துவப் பராமரிப்பு மற்றும் நீர் வழங்குதல் ஆகியவற்றிற்கு மாநிலப் பேரிடர் மீட்பு நிதியானது (SDRF - State Disaster Response Fund) தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட உள்ளது.
- பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005ன் கீழ், SDRF நிதியானது சூறாவளி, பூகம்பம், வறட்சி, நிலச் சரிவு, ஆலங்கட்டி மழை, மேகமூட்டம், பனிச்சரிவு, உறைபனி, பூச்சி தாக்குதல் மற்றும் குளிர் காற்று ஆகியவற்றிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.
- சிக்கலான மருத்துவச் சூழ்நிலைகள் அல்லது தொற்றுநோய்கள் ஆகியவை அறிவிக்கப்பட்ட பேரிடர் பட்டியலின் கீழ் இல்லை.
- எனவே, மத்திய அரசு COVID-19 நோய் பாதிப்பை அறிவிக்கப்பட்ட பேரிடரின் கீழ் சேர்த்துள்ளது.
- இது இப்போது கொரோனா வைரஸிற்குச் சிகிச்சையளிப்பதற்காக இந்த நிதியைப் பயன்படுத்த மாநில அரசுகளை அனுமதிக்கின்றது.
- பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 ஆல் அமைக்கப்பட்ட SDRF நிதியானது 13வது நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப் பட்டதாகும்.

## ICMR சோதனை உத்தியை உருவாக்கியுள்ளது

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றமானது COVID-19 வைரஸால் பாதிக்கப் பட்டவர்களுக்காக COVID-19 சோதனை உத்தியை உருவாக்கியுள்ளது.
- டெல்லி எய்ம்ஸ், புனேவின் தேசிய நச்சுயிரியல் நிறுவனம் மற்றும் டெல்லி தேசிய நோய்கள் கட்டுப்பாட்டு மையம் ஆகியவை கொரோனா வைரஸின் மூன்று முக்கியமான சோதனை மையங்களாகும்.
- இந்த முக்கியமான மையங்களைத் தவிர, COVID-19 வைரஸை சோதிப்பதற்காக 50 புதிய பிரத்தியேக மையங்களையும் இந்திய அரசு உருவாக்கியுள்ளது.

## கங்கை அமந்திரன் அபியான்

- தேசியத் தூய்மை கங்கைத் திட்டமானது "கங்கை அமந்திரன் அபியான்" (Ganga Amantran Abhiyan - GAA) என்ற ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.
- GAA என்பது கங்கை நதியில் நடத்தப்படும் ஒரு திறந்தவெளி படகுப் பயணம் மற்றும் கயாக்கிங் பயணம் (பனிக் கடற் படகு) ஆகும்.
- இந்தப் பயணமானது தேவபிரயாக் மற்றும் கங்கை சாகர் ஆகியவற்றிற்கு இடையே நடத்தப் படுகின்றது.
- தேவபிரயாக் என்பது கங்கை நதியை உருவாக்கக் கூடிய அலக்நந்தா மற்றும் பாகீரதி ஆகிய இரண்டு நதிகள் சந்திக்கும் இடமாகும்.
- கங்கை சாகர் நதியானது சுந்தரவனக் காடுகளின் ஒரு பகுதியாகும்.

## நிலத்தடி நீர் மாசுபடுதல்

- நாட்டில் ஒரு லிட்டர் நிலத்தடி நீரில் 30 மைக்ரோ கிராம் என்ற அளவில் யுரேனியமானது கலந்துள்ளதாக மத்திய ஜல் சக்தித் துறை இணையமைச்சரான ரத்தன் லால் கட்டாரியா நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

- சத்தீஸ்கர், ஆந்திரப் பிரதேசம், ஹரியானா, குஜராத், இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, ஜார்க்கண்ட், ஒடிசா, ராஜஸ்தான், பஞ்சாப், தெலுங்கானா, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் உள்ள நிலத்தடி நீரில் யுரேனியம் கலந்துள்ளது.
- இந்தியத் தர நிர்ணய அமைப்பானது குடிநீரில் யுரேனியத்தின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட வரம்பினை ஒரு லிட்டருக்கு 0.03 மி.கி ஆக நிர்ணயித்துள்ளது.

## விவாத் சே விஸ்வாஸ் மசோதா

- நேரடி வரி விவாத் சே விஸ்வாஸ் மசோதா, 2020 என்ற ஒரு மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது நேரடி வரி செலுத்துதலுடன் தொடர்புடைய வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நேரடி வரி விவாத் சே விஸ்வாஸ் என்ற கருத்தாக்கமானது 2020-21 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது மத்திய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமனால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 31க்குப் பிறகு வரி செலுத்தினால், வரி செலுத்துவோர் பிரச்சினைக்குரிய வரியின் மேல் 110% என்ற அளவில் அபராதத்தை செலுத்த வேண்டும் என்று இந்த மசோதா கூறுகின்றது.
- இந்தத் தேதிக்கு முன்பே வரியானது செலுத்தப் பட்டால், வரி செலுத்துவோர் சர்ச்சைக்குரிய வரியின் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். மேலும் இதற்கு அபராதம் எதுவும் விதிக்கப்பட மாட்டாது.
- மசோதாவின் ஆங்கிலப் பதிப்பு "பிரச்சினையற்ற ஆனால் நம்பிக்கை மட்டுமே கொண்டது" என்ற பொருளைக் கொண்டதாகும்.

## அனைத்து மகளிர் மருத்துவக் கல்லூரி

- சமீபத்தில் இந்திய மருத்துவ மன்றமானது புனேவின் சிம்பியோசிஸ் இன்டர்நேஷனல் (நிகர்நிலை) பல்கலைக் கழகத்திற்கு அனைத்து மகளிர் மருத்துவக் கல்லூரியை நிறுவ அனுமதி வழங்கியுள்ளது.
- பெண்களுக்கான இந்த சிம்பியோசிஸ் மருத்துவக் கல்லூரியானது ஐந்து மாணவிகளுக்கு இலவசமாக மருத்துவக் கல்வியை வழங்க இருக்கின்றது.

## ரஞ்சன் கோகோய் மாநிலங்களவைக்கு நியமனம்

- இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான ரஞ்சன் கோகோய் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மூலம் மாநிலங்களவைக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.
- மாநிலங்களவையின் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 ஆகும். அதில் 12 உறுப்பினர்கள் இந்தியக் குடியரசுத் தலைவரால் கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவை எனும் பிரிவுகள் மூலம் அந்த அவைக்கு நியமிக்கப் படுகின்றனர்.
- கோகோய் இந்தியாவின் 46வது தலைமை நீதிபதியாகப் பணியாற்றினார்.

## மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழக மசோதா, 2019

- மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழக மசோதா, 2019 என்ற ஒரு மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இது இந்தியாவின் மூன்று பல்கலைக் கழகங்களுக்கு மத்தியப் பல்கலைக்கழக அங்கீகாரத்தை வழங்க இருக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 16 அன்று மாநிலங்களவையானது மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழக மசோதா, 2019ஐ குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றியது.
- மூன்று பல்கலைக் கழகங்கள் பின்வருமாறு:
    - ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீத், திருப்பதி
    - ராஷ்டிரிய சமஸ்கிருத சன்ஸ்தான், புது தில்லி மற்றும்
    - ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீத், புது தில்லி

## சீராய்வு மனுக்கள்

- நிர்பயா வழக்கு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுக்களை இந்திய உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
- இறுதித் தண்டனைத் தீர்ப்பிற்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் ஒரு சீராய்வு மனுவானது தாக்கல் செய்யப் படுகின்றது.
- சீராய்வு மனுக்கள் இந்திய அரசியலமைப்பின் 142வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப் படுகின்றன.
- மறு ஆய்வு மனு இந்திய உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் இந்த சீராய்வு மனுவானது தாக்கல் செய்யப் படும்.
- சீராய்வு மனுவின் கருத்தாக்கமானது இந்திய அரசியலமைப்பின் 137வது சரத்தினால் ஆதரிக்கப் படுகின்றது.
- இந்த சரத்தானது 145வது சரத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை உச்சநீதிமன்றமே மறு ஆய்வு செய்ய அனுமதிக்கின்றது.
- மறு ஆய்வு மனுக்கள் அரசியலமைப்பின் 137வது சரத்தின் கீழ் தாக்கல் செய்யப் படுகின்றன. இது உச்ச நீதிமன்றம் தனது சொந்தத் தீர்ப்பையே மறு ஆய்வு செய்ய உதவுகின்றது.
- உச்ச நீதிமன்ற விதிகள் 1966ன் கீழ், உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

## என்சிசி சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை

- மத்திய ஆயுதக் காவல் படைகளின் (Central Armed Police Forces - CAPF) நேரடி ஆட்சேர்ப்புத் தேர்வுகளில் தேசிய மாணவர் படைச் சான்றிதழ் (National Cadet Corps - NCC) வைத்திருப்பவர்களுக்கு கூடுதல் மதிப்பெண்கள் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- NCCல் இந்திய இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

### *தேசிய மாணவர் படை*

- இது இராணுவம், கடற்படை மற்றும் விமானப் பிரிவுகளைச் சேர்ந்த இளம் மாணவர்களை உள்ளடக்கிய ஒரு முப்படைச் சேவை அமைப்பாகும்.

- இந்த அமைப்பின் குறிக்கோள் 'ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்' என்பதாகும்.
- 1948 ஆம் ஆண்டின் தேசிய மாணவர் படைச் சட்டத்தின் கீழ் தேசிய மாணவர் படைக் குழுவானது நிறுவப் பட்டது.

## தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் இரண்டாம் நிலை

- தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் இரண்டாம் நிலையை 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டமானது அதன் இரண்டாம் நிலையின் போது இரண்டு கோடி திட்டங்களின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- இது திறந்தவெளிக் கழிப்பிடமற்ற நிலை - பிளஸ் மற்றும் திட & திரவக் கழிவு மேலாண்மை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இந்த நிலையின் போது, கிராமப் பஞ்சாயத்துகளில் தீவிர கவனம் செலுத்தப்பட இருக்கின்றது.
- இந்தக் கிராமப் பஞ்சாயத்துகள் 15வது நிதி ஆணையத்தின் கீழ் அதிக நிதியுதவியைப் பெற இருக்கின்றன.
- தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கும் ரூ. 7 முதல் ரூ. 20 லட்சம் வரை நிதி கிடைக்கும்.
- இந்த நிதியானது திட மற்றும் திரவக் கழிவுகளை நிர்வகிப்பதற்காக 5 லட்சம் என்ற அளவில் அதிகரிக்கப்பட இருக்கின்றது.
- இந்த கூடுதல் நிதியானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட உள்ளது.
- இதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் பணிக் குழுவானது தூய்மை இந்தியா என்ற திட்டத்திற்கு பயன்படுத்தப்பட இருக்கின்றது.
- தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் இரண்டாம் நிலையானது 2020-21 முதல் 2024-25 வரை செயல்படுத்தப்பட உள்ளது.

## ODF+, ODF++ and நீர் பிளஸ்

- சமீபத்தில் நகர்ப்புற மேம்பாட்டிற்கான நாடாளுமன்ற நிலைக் குழுவானது மக்களவையில் தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் (நகர்ப்புற) செயல்திறன் குறித்த அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது.
- தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் (நகரம் -2) அடுத்த நிலையின் கீழ் ODF+, ODF++ and நீர் பிளஸ் என்ற மூன்று நெறிமுறைகளின் பணிகளானது 2024 ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், அதன் உண்மை நிலைமை ஒதுக்கப்பட்ட காலக் கெடுவுடன் பொருந்த வில்லை.
- ODF என அறிவிக்கப்பட்ட 4,320 நகரங்களில் 1,276 நகரங்கள் ODF + என சான்றளிக்கப் பட்டுள்ளன.
- ODF ++ நகரங்களின் எண்ணிக்கையானது 411 ஆகும். அதாவது 10 சதவீதத்திற்கும் குறைவான நகரங்கள் இதுவரை ODF ++ என சான்றிதழ் பெற்றுள்ளன.
- தூய்மை இந்தியாத் திட்டம் - நகர்ப்புறம் (Swachh Bharat Mission — Urban - SBM-Urban) என்ற திட்டத்தின் முதலாவது நிலையின் கீழ் ODF அங்கீகாரத்தை அடைந்த பின்னர் நகரங்கள் மேற்கொண்ட பணிகளை மேலும் தீவிரப்படுத்தவும் அவற்றைப் பராமரிக்கவும் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ODF + மற்றும் ODF ++ ஆனது தொடங்கப் பட்டன.

- ODF நெறிமுறைகளின் அடிப்படையில், ஒருமுறையாவது ODF சான்றிதழைப் பெற்ற நகரங்கள், தங்களை SBM - ODF+ & SBM - ODF++ என அறிவிக்கத் தகுதியுடையவை ஆகும்.
- ODF+ ஆனது கழிப்பறைகளில் நீர், பராமரிப்பு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது. ODF++ ஆனது கழிப்பறைகளில் கழிவுத் திரட்டு மற்றும் நச்சூட்டுப் பொருள் மேலாண்மை ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அறிவிக்கப்பட்ட நீர் பிளஸ் ஆனது தண்ணீரைச் சுத்திகரித்து, மறுபயன்பாடு செய்வதன் மூலம் கழிப்பறைகளைப் பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஜல் சக்தி அபியானின் கீழ் உள்ள நீரின் பயன்பாடு குறித்த உரையாடல் மற்றும் மறுபயன்பாடு குறித்து மத்திய அரசு கவனம் செலுத்துவதற்குப் பங்களிக்கின்றது. இது தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்சிக்கான இலக்கு எண் 6 உடன் இணங்குகின்றது.
- தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் முதலாவது நிலையின் கீழ், 99 சதவீத நகரங்கள் ODF நிலையை அடைந்துள்ளதாக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் கூறியுள்ளது.

## தகுதிநீக்கம் செய்யக் கோரப்பட்ட மனு

- உச்சநீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக, மணிப்பூர் மாநில அமைச்சரான தொனுவோஜாம் சியாம்குமார் என்பவரை அம்மாநில அமைச்சரவையிலிருந்து உச்சநீதிமன்றம் நீக்கியுள்ளது.
- மேலும் இந்திய உச்சநீதிமன்றமானது இவரை அம்மாநில சட்டசபைக்குள் நுழையவும் தடை விதித்துள்ளது.

*பின்னணி*

- சியாம் குமார் என்பவர் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற மணிப்பூர் மாநில சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின் அம்மாநில நகரத் திட்டமிடல், வனம் மற்றும் சுற்றுச்சுழல் அமைச்சராகப் பொறுப்பேற்பதற்காக பாஜக கட்சியில் இணைந்தார்.
- அம்மாநிலத்தின் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களால் இவரைத் தகுதி நீக்கம் செய்யக் கோரப்பட்ட மனுக்கள் 2017 ஆம் ஆண்டு முதல் அம்மாநில சட்டமன்ற சபாநாயகரிடம் நிலுவையில் இருந்து வருகின்றது.
- இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றத்திடம் முறையிடப்பட்ட போது, இந்திய உச்சநீதிமன்றம் சரத்து 142ஐப் பயன்படுத்தி அம்மாநில அமைச்சரவையிலிருந்து (கேபினேட்) இவரை நீக்கியது.
- சரத்து 212ன்படி, உச்சநீதிமன்றம் உள்பட இந்தியாவில் உள்ள எந்தவொரு நீதிமன்றமும் மாநில சட்டமன்றத்தின் உள் விவகாரங்களில் தலையிட முடியாது.
- இந்திய உச்சநீதிமன்றமானது சரத்து 142ஐப் பயன்படுத்தி தனது கீழ் உள்ள விவகாரங்களில் "முழுமையான நீதியை" நிலைநாட்டுவதற்காக ஓர் உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

## மாநிலப் பேரிடர் மீட்பு நிதி

- மாநிலப் பேரிடர் மீட்பு நிதியின் (SDRF – State Disaster Response Fund) மூலம் நிதியுதவியை அளிக்கும் நோக்கத்திற்காக கோவிட் – 19 நோயை "அறிவிக்கப்பட்ட பேரிடராக" அறிவிக்க மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இந்த நிதியானது பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005-ன் கீழ் அந்தந்த மாநிலங்களால் அமைக்கப் பட்டுள்ளது. இது "அறிவிக்கப்பட்ட பேரிடர்களை" கையாளுவதற்காக மாநில அரசுகளிடம் இருக்கும் ஒரு முதன்மையான நிதி ஆதாரமாகும்.
- இந்த நிதியானது 13வது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.
- பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், மாநில அரசுகள்/ஒன்றியப் பிரதேசங்கள் மாநில அரசிடம் இருந்து பெறப்படும் நிதியைத் தவிர, கூடுதலாக மாநிலப் பேரிடர் மீட்பு நிதியிலிருந்தும் நிதியைப் பெற முடியும்.
- இச்சட்டத்தின்படி, மாநிலப் பேரிடர் மீட்பு நிதியானது 2005 ஆம் ஆண்டின் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் "அறிவிக்கப்பட்ட பேரிடர்களுக்கு" மட்டுமே பயன்படுத்த முடியும்.
- பொதுப் பிரிவு மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களுக்கான SDRF நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசு 75 சதவிகித நிதியையும் வடகிழக்கு மாநிலங்கள், சிக்கிம், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்கள் உள்ளிட்ட சிறப்புப் பிரிவு மாநிலங்களுக்கான SDRF நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசு 90 சதவிகித நிதியையும் அளிக்கும்.
- SDRF ஆனது "ஒதுக்கப்பட்ட நிதியின்" கீழ் பொதுக் கணக்கில் உள்ளது.
- ஆனால் நேரடிச் செலவினங்களை பொதுக் கணக்கு நிதியிலிருந்து மேற்கொள்ளக் கூடாது.
- SDRFற்கு மத்திய அரசு கொடுக்கும் நிதி "உதவியாகக் கொடுக்கும் நிதியாக" கருதப் படும்.
- மத்திய உள்துறை அமைச்சகமானது SDRF-ன் செயல்பாடுகளை மேற்பார்வையிடும் தலைமை அமைச்சகமாகும். மேலும் இது குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்கும்.
- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) ஒவ்வொரு ஆண்டும் SDRFஐ தணிக்கை செய்கின்றார்.
- சூறாவளிகள், வறட்சி, சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பனிப்பாறைச் சரிவுகள், பூச்சித் தாக்குதல்கள் போன்றவை SDRFன் கீழ் உள்ளடங்கும்.
- பேரிடர் சார்ந்த 31 பிரிவுகள் முக்கியமான 5 துணைக் குழுக்களின் கீழ் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. அவையாவன: நீர் மற்றும் காலநிலை தொடர்பான பேரிடர்கள், புவியியல் சார்ந்த பேரிடர்கள், இரசாயன, தொழிற்துறை மற்றும் அணு ஆயுதம் தொடர்பான பேரிடர்கள், உயிரியல் சார்ந்த பேரிடர்கள் (உயிரியல் பேரிடர்கள் மற்றும் தொற்று நோய்கள்) ஆகியவையாகும்.

### *தற்போதைய நிலை*

- கரோனா வைரஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்காக நிதியை ஒதுக்கிய இந்தியாவின் முதலாவது மாநிலம் ஒடிசா ஆகும்.
- ஒடிசா மாநிலமானது இந்தக் கொடிய நோயை எதிர்த்துப் போராடுவதற்காக ரூ.200 கோடியை ஒதுக்கியுள்ளது.
- இந்தக் கொடிய நோயை எதிர்த்துப் போராடுவதற்காக தமிழ்நாடு அரசு ரூ.60 கோடியை ஒதுக்கியுள்ளது.

## இடது சாரித் தீவிரவாதம் – குறைவு

- கடந்த 5 ஆண்டுகளில் இடது சாரித் தீவிரவாதம் (LWE – Left Wing Extremism) குறைந்துள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் அறிவித்துள்ளார்.
- இடது சாரித் தீவிரவாதம் குறைந்ததற்கு முக்கியமான காரணம் "தேசியக் கொள்கை மற்றும் செயல் திட்டம் 2015" என்ற திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதாகும்.
- 2019 ஆம் ஆண்டில், LWE-ன் எண்ணிக்கையானது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 38 சதவிகிதம் என்ற அளவாகக் குறைந்துள்ளது.
- இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் எதிர்வினை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை 1967 ஆம் ஆண்டின் இந்தியாவின் சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தால் நிர்வகிக்கப் படுகின்றது.
- இந்த பகுதிகளில் பரவியுள்ள நக்சலைட் மற்றும் மாவோயிஸ்ட் ஆகிய அமைப்புகள் இச்சட்டத்தின் கீழ் தீவிரவாதக் குழுக்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- சிவப்புப் பிராந்தியமானது (Red Corridor) இந்தியாவின் தெற்கு, மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.
- இது ஆந்திரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, தெலுங்கானா, மேற்கு வங்காளம் மற்றும் கிழக்கு உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியுள்ளது.




## இந்திரா காந்தி மாத்ரிதவ் போஷன் யோஜன்

- இந்தத் திட்டமானது சமீபத்தில் இராஜஸ்தான் மாநில அரசால் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டமானது இந்த மாநிலத்தில் சோதனை அடிப்படையில் 4 மாவட்டத்தில் செயல்படுத்த இருக்கிறது.
- இந்தத் திட்டமானது மாநிலத்தில் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறிகாட்டிகள் மற்றும் தாய்மார்களிடையே இரத்த சோகை ஆகியவை சராசரியை விட மிக மோசமாக இருக்கும் உதய்ப்பூர், பிரதாப்கார், பன்ஸ்வாரா மற்றும் துங்கர்பூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- இது ஒரு மகப்பேறு உதவித் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் இரண்டாவது குழந்தைப் பிறப்பிற்காக ரூ.6000 கொடுக்கப்பட இருக்கின்றது.

- இந்தத் திட்டமானது முதலாவது குழந்தைப் பிறப்பிற்காக ரூ.5000 வழங்கப்படும் மத்திய அரசின் பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா என்ற திட்டத்துடன் ஒன்றிப் பொருந்துகின்றது.

### *PMMVY பற்றி*

- இது கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்காகத் தொடங்கப்பட்ட நிபந்தனையுடன் கூடிய ஒரு நிதியுதவித் திட்டமாகும்.
- இது குழந்தைப் பிறப்பின் போது மற்றும் குழந்தைப் பராமரிப்பின் போது ஏற்படும் ஊதிய இழப்பிற்காக பெண்களுக்குப் பகுதியளவு இழப்பீட்டுத் தொகையை வழங்குகின்றது. மேலும் இது பாதுகாப்பான பிரசவத்திற்கான சூழ்நிலை, சிறந்த ஊட்டச்சத்து மற்றும் சிறந்த பாலூட்டும் நடைமுறைகள் ஆகியவற்றையும் வழங்குகின்றது.

## அடல் பீமா வியாக்தி கல்யாண் யோஜனா

- அடல் பீமா வியாக்தி கல்யாண் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் அமைப்பு சாராத் தொழிலாளருக்கு வேலைவாய்ப்பற்ற நிதியுதவிப் பலன்கள் அளிக்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
- கொரானா வைரஸ் தொற்று நோயின் தாக்கத்தின் காரணமாக வேலையிழந்த நபர்கள் இந்தப் பிரிவில் உள்ளடங்குவர்.
- இந்த நோய்த் தொற்றின் காரணமாக வேலையிழந்த தொழிலாளர்கள் 3 மாதங்களுக்கு இந்த நிதியுதவியைப் பெற இருக்கின்றனர்.

### *இந்தத் திட்டம் பற்றி*

- இந்தத் திட்டமானது இஎஸ்ஐ திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பற்ற காப்பீடு வழங்குகின்றது.
- இ.எஸ்.ஐ. (ESI – Employee State Insurance) என்பது அரசுத் தொழிலாளர் காப்பீட்டுத் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், தொழிலாளர்கள் கடந்த 2 மாதங்களில் அவர்கள் பெற்ற ஊதியத்தின் 25% நிதியைப் பெறுகின்றனர்.
- இந்தத் திட்டமானது 2018 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.
- இந்தத் திட்டமானது மூன்று மாதங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டை வழங்குகின்றது.

## இந்தியா – மூன்றாவது மின்சார உற்பத்தியாளர் நாடு

- சர்வதேச ஆற்றல் முகமையின் தரவரிசை குறித்து மத்திய மின்துறை அமைச்சகமானது நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.
- இந்தத் தரவரிசையின்படி, உலகில் மின்சார உற்பத்தியில் 3வது மிகப்பெரிய நாடாக இந்தியா விளங்குகின்றது.
- மேலும் இந்தியா தலா அல்லது தனிநபர் மின்சார நுகர்வில் 106வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியா தற்பொழுது மின்சாரப் பற்றாக்குறையிலிருந்து மின்சார மிகை கொண்ட நாடாக உருவெடுத்துள்ளது.
- எனவே, இந்தியா தற்பொழுது நுகர்வோருக்கு தரமான மின்சாரம் வழங்குவதின் மீது கவனம் செலுத்துகின்றது.

- இந்தியாவின் மின்சார உற்பத்தியானது பெரும்பாலும் நிலக்கரியால் மேற்கொள்ளப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு மே மாதத்தின் படி, 72% இந்திய மின்சாரமானது நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்சார ஆலைகளில் உற்பத்தி செய்யப் படுகின்றது.
- இருப்பினும், பெரும்பாலான ஆற்றல் நிறுவனங்கள் இந்தியா நிலக்கரியைச் சார்ந்திருப்பது குறையும் என்று கணித்துள்ளன.
- இந்தியா தற்பொழுது சூரியஒளி ஆற்றல் போன்ற இதர ஆற்றல் மூலங்களுக்கு மெதுவாக மாறி வருகின்றது.
- 2022 ஆம் ஆண்டிற்குள் இந்தியா 175 ஜிகா வாட் திறனுள்ள ஆற்றலைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் பெறுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இதில், 100 ஜிகா வாட் ஆற்றல் சூரிய ஒளியிலிருந்து பெறப்பட்ட இருக்கின்றது.

## ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் ஆயுஷ் சுகாதார மற்றும் நல மையம்

- மத்திய அமைச்சரவையானது ஆயுஷ்மான் பாரத் என்ற திட்டத்தின் கீழ் ஆயுஷ் சுகாதார மற்றும் நல மையத்தை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மையங்கள் தேசிய அளவிலான சுகாதார நலனை அடைய உதவ இருக்கின்றன.
- இந்த மையங்கள் மக்கள், தங்கள் கைகளிலிருந்து பணம் செலவிடப் படுவதை குறைக்க இருக்கின்றன. இந்த மையங்கள் “சுய – சேவை” மாதிரியின் அடிப்படையில் செயல்பட இருக்கின்றன.
- இது நிதி ஆயோக்கினால் பரிந்துரைக்கப்பட்ட படி, நீடித்த வளர்ச்சி இலக்கு 3 (ஆரோக்கியமான வாழ்வை உறுதி செய்தல் மற்றும் அனைத்து வயதினருக்கான நலனை ஊக்குவித்தல்) என்ற இலக்குடன் ஒருங்கிணைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மத்திய சுகாதார குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய சுகாதார ஆணையத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.

## மருத்துவ சாதனப் பூங்காத் திட்டம்

- பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையானது மருத்துவ சாதனப் பூங்காத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டமானது நாட்டில் மருத்துவ சாதனங்களின் உற்பத்தியை (உள்நாட்டு உற்பத்தி) ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மருத்துவ சாதனப் பூங்காக்கள் அமைக்கப்பட இருக்கின்றன.
- ஒவ்வொரு பூங்காவும் ரூ.100 கோடி நிதியைப் பெற இருக்கின்றது.
- இந்தப் பூங்காக்கள் மருத்துவச் சோதனைகளின் இறக்குமதியைக் குறைப்பதற்கும் மருத்துவச் சோதனைகளின் தரத்தினை உயர்த்துவதற்கும் உதவ இருக்கின்றன.
- மேலும் இந்தத் திட்டமானது மருத்துவ உற்பத்திப் பொருட்களின் செலவைக் குறைக்க இருக்கின்றது.
- ஆசியாவில் மருத்துவச் சாதனங்களுக்கான 4வது மிகப்பெரியச் சந்தையாக இந்தியா விளங்குகின்றது.

- இருப்பினும், இந்தியாவில் உள்நாட்டு மருத்துவச் சாதன உற்பத்தித் தொழிற்துறையானது சிறிய அளவிலேயே உள்ளது.
- இந்தியாவின் உள்நாட்டு மருத்துவச் சாதனங்களானது சர்வதேச தொழிற்துறையில் 2% என்ற அளவில் உள்ளது.

## தேசிய நீரக வரைபடமிடல் திட்டம்

- மத்திய நிலத்தடி நீர் வாரியமானது (CGWB - Central Ground Water Board) நீரக வரைபடமிடல் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருப்பதாக மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகமானது அறிவித்துள்ளது.
- CGWB ஆனது 1970ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 என்ற சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டமுறை சார்ந்த ஒரு அமைப்பாகும்.

## பாதுகாப்புக் கொள்முதல் நடைமுறை 2020

- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் புதிய பாதுகாப்புக் கொள்முதல் நடைமுறையின் வரைவை வெளியிட்டுள்ளார்.
- இந்தப் புதிய நடைமுறையானது உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாதுகாப்புக் கொள்முதல் நடைமுறை என்பது பாதுகாப்புச் சாதனங்களின் கொள்முதலை எளிமையாக்குவதற்கான ஒரு செயல்முறையாகும்.
- இந்தப் புதிய செயல்முறையானது உள்நாட்டு உதிரிப் பொருட்களின் (பாதுகாப்பு) விகிதத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விகிதமானது இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட பாதுகாப்பு சார்ந்த உதிரிப் பொருட்களின் சதவிகிதத்தைக் குறிக்கின்றது.
- இந்த நடைமுறையானது “உலகளாவிய வாங்கல்” என்ற ஒரு பிரிவை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தப் பிரிவின் கீழ், தேவையான பாதுகாப்புத் துறை சார்ந்த பொருட்கள் மட்டுமே அயல் நாடுகளிடமிருந்து பெறப்பட இருக்கின்றது.
- தற்போது நடைமுறையில் உள்ள “வாங்கல்” மற்றும் “உற்பத்தி செய்தல்” என்ற வகைகளைத் தவிர கொள்முதலுக்காக “குறிப்பிட்ட கால ஒப்பந்தம்” (குத்தகை) என்ற ஒரு புதிய பிரிவும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- இது தொடர் வாடகை பணவழங்கீடுகளுடன் மிக அதிக அளவிலான ஆரம்ப கால மூலதன முதலீட்டிற்கு மாற்றாக விளங்குகின்றது.

## சுவலம்பன் விரைவு இரயில்

- புதிதாகத் தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்களுக்காக இந்த ஆண்டு ஜூன் 5 ஆம் தேதியன்று சுவலம்பன் விரைவு இரயில் தொடங்கப்படும் என்று இந்திய சிறு தொழிற்துறை வளர்ச்சி வங்கி (SIDBI - Small Industries Development Bank of India) அறிவித்துள்ளது.
- இந்த விரைவு இரயிலானது 15 நாட்களில் 11 நகரங்களுக்குப் பயணம் மேற்கொண்டு, 7000 கிலோ மீட்டர் தொலைவை உள்ளடக்க இருக்கின்றது. இது, அதன் “சுவலம்பன்” என்ற தலைமைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- இந்தத் திட்டத்தின் கீழ், இளைஞர்கள் சில கருத்தாக்கங்களுடன் பயிற்சி பெற இருக்கின்றனர். இவர்கள் பல்வேறு தொடர் சோதனை முயற்சிகளுக்குப் பின்னர் திறனுள்ள வணிகத் திட்டத்தைப் பெற இருக்கின்றனர்.

## பழங்குடியினருக்கான தொழில்நுட்பம்

- TRIFED அமைப்பானது பழங்குடியினர் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடன் இணைந்து மாற்றம் காணும் வகையிலான "பழங்குடியினருக்கான தொழில்நுட்பம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது 5 கோடி பழங்குடியினத் தொழில்முனைவோரை மேம்படுத்த இருக்கின்றது.
- இது மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகத்தினால் ஆதரிக்கப் படுகின்றது.
- இது பிரதான் மந்திரி வன்தன் யோஜனா (PMVDY) என்ற திட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ள, வனங்களில் உற்பத்தியாகும் பொருட்களைச் சேகரிக்கும் பழங்குடியினருக்கு தொழில்முனைவுத் திறனைப் பயிற்றுவிப்பதையும் அவர்களுக்கு திறன்களைக் கட்டமைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தரமான சான்றிதழ்களுடன் சந்தையிடல் பொருட்களுக்கான வணிகத்தை மேற்கொள்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதையும் வசதியை ஏற்படுத்தித் தருவதன் மூலம் பழங்குடியினத் தொழில் முனைவோரின் உயரிய வளர்ச்சி விகிதத்தையும் உறுதி செய்ய இருக்கின்றது.

### *வன்தன் திட்டம் பற்றி*

- வன்தன் திட்டம் என்பது மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் TRIFED அமைப்பு ஆகியவற்றின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இது பழங்குடியினப் பொருட்களின் மதிப்புக் கூட்டலின் மூலம் பழங்குடியினரின் வருமானத்தை அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் உள்ளூர் ரீதியாக கேந்திரங்கள் முன்மொழியப் பட்டுள்ளன.
- இவை வன்தன் சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மேலாண்மைக் குழுவினால் நிர்வகிக்கப் படுகின்றன.

## கோவிட் 19 தொற்று நோய்க்காக ஏற்படுத்தப்பட்ட இந்தியாவின் முதலாவது மருத்துவமனை

- ரிலையன்ஸ் குழும நிறுவனங்களானது பிருஹன்-மும்பை மாநகராட்சி நிர்வாகத்துடன் இணைந்து மும்பையில் உள்ள "செவன் ஹில்ஸ்" மருத்துவமனையில் கோவிட் – 19 மையத்தை அமைத்துள்ளது.
- இந்த மையமானது ரிலையன்ஸ் அமைப்பினால் முழுவதுமாக ஆதரிக்கப் படுகின்றது.
- இந்த மையமானது எதிர்மறை அழுத்தம் கொண்ட அறை உள்ளிட்ட தேவையான உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளது.
- எதிர்மறை அழுத்த அறைத் தொழில்நுட்பமானது நோயாளிகளைத் தனிமைப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது.




## இந்தியாவில் முழுமையான ஊரடங்கு

- இந்தியாவில் கோவிட் – 19 பரவி வரும் நிலையில், மார்ச் 25 ஆம் தேதியிலிருந்து அடுத்த 21 நாட்களுக்கு இந்தியா முற்றிலும் முடக்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
- கொரானா வைரஸை எதிர்த்துப் போராடுவதற்காக இந்திய அரசு ரூ.15,000 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது.
- இந்த நிதியானது நாட்டில் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்த பயன்படுத்தப்பட இருக்கின்றது.
- இது 2005 ஆம் ஆண்டின் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தைச் செயல்படுத்துகின்றது.
- கோவிட் – 19 ஆனது ஒரு "அறிவிக்கப்பட்ட பேரிடராக" அறிவிக்கப் பட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது இந்த முடக்கத்தின் போது தொடர்ந்து செயல்படும் வணிக அமைப்புகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- மின் உற்பத்தி அலகுகள், பெட்ரோல் நிலையங்கள், குளிர்ப் பதனக் கிடங்குகள், தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள், உணவு & மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவம் சார் சேவைகள் ஆகியன இதில் அடங்கும்.
- மத்திய அரசனாது நாட்டின் சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவையும் வேறு சில பகுதிகளில் பிரிவு – 144ஐயும் பல பகுதிகளில் ஒட்டுமொத்த முடக்கத்தையும் அறிவித்துள்ளது.
- கூடுவதற்கான அனுமதி சில கட்டுப்பாடுகளோடு நடைமுறையில் இருந்தால் அந்த நடவடிக்கை "முடக்கம்" என்று அழைக்கப் படுகின்றது.
- இருப்பினும், இந்தச் சூழ்நிலையில் அத்தியாவசியச் சேவைகள் வழக்கம் போல் கிடைக்கப் பெறும்.
- இந்த முடக்கமானது மாவட்ட ஆட்சியர் அல்லது தலைமை மருத்துவ அதிகாரியினால் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது.
- பிரிவு 144ன் கீழ், இந்திய தண்டனைச் சட்டத்தின் படி மக்கள் ஒன்று கூடத் தடை செய்யப் பட்டுள்ளது.
- பிரிவு 144ன் கீழ், 5ற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று கூட அனுமதி இல்லை.
- அத்தியாவசியச் சேவைகள் முடக்கத்துடன் பிரிவு 144 என்ற உத்தரவும் பிறப்பிக்கப் பட்டால் அதுவே ஊரடங்கு உத்தரவு என்று அழைக்கப் படுகின்றது.
- ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரமானது மாவட்ட ஆட்சியரிடமும் காவல்துறை ஆணையரிடமும் உள்ளது.

## குறுகிய காலச் சேவை ஆணையம்

- கடற்படையின் குறுகிய காலச் சேவை ஆணையத்தின் பெண் அதிகாரிகளுக்கு, அவர்களோடு பணிபுரியும் ஆண் அதிகாரிகளுக்கு இணையான நிரந்தர ஆணையம் அமைப்பதற்கான உரிமையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

### *நன்மைகள்*

- ஒரு நிரந்தர ஆணையம் என்றால் ஒருவர் ஓய்வு பெறும் வரை இராணுவ வேலையில் இருப்பதாகும்.
- நிரந்தர ஆணையத்தின் மூலம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஓய்வு பெறும் முழு வயது வரை நாட்டிற்குச் சேவை செய்ய வாய்ப்பு உள்ளது.
- குறுகிய காலச் சேவை ஆணையத்தின் ஒரு பெண் கடற்படை அதிகாரி 10 ஆண்டுகளில் ஓய்வு பெறுகிறார். அதே நேரத்தில் நிரந்தர ஆணையத்தில் உள்ள ஒருவர் இன்னும் நான்கு ஆண்டுகள் கூடுதலாகப் பணியாற்ற உரிமை உண்டு (மொத்தம் 14 ஆண்டுகள்).

## ஆயுஷ்மான் பாரத் மற்றும் கோவிட் 19

- கரோனா வைரஸுக்கு எதிராகப் போராட ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை அல்லது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனாவை சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்குள் சேர்த்துள்ளது.
- கரோனா வைரஸுக்கு எதிராகப் போராடுவதற்கு சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது தேசிய சுகாதார ஆணையத்தையும் உள்ளடக்கி உள்ளது.
- தேசிய சுகாதார ஆணையம் என்பது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரு ஆணையமாகும்.

## கர்நாடகாவில் இட ஒதுக்கீடு

- பதவி உயர்வுகளில் இட ஒதுக்கீடு இருக்கும் பொழுது பணியில் நுழையும் நிலையில் பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினரிடையே கிரீமி லேயர் (Creamy Layer) அல்லது சிறந்து விளங்கும் தனிநபர்களை அந்த வகையிலிருந்து நீக்கக் கோரிய மனுவினை இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- இந்த மனுக்கள் பிகே பவித்ரா வழக்கில் தாக்கல் செய்யப் பட்டன.
- கர்நாடக அரசினால் இயற்றப்பட்ட இச்சட்டமானது கர்நாடக இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் கீழ் பட்டியலிடப்பட்ட வகுப்பு மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின வகுப்பை (SC/ST) சேர்ந்த பணியாளர்களுக்கு வயது மூப்பு விளைவின் காரணமான அடிப்படை பொருந்தும் வகையில் பதவி உயர்வு பெற வழிவகை செய்கின்றது.
- வயது மூப்பு விளைவின் காரணமான அடிப்படையானது இடஒதுக்கீட்டுப் பிரிவைச் சேர்ந்த பணியாளர்களுக்கு தொடர் பதவி உயர்வுகளுக்கு வேண்டி தங்களது மூப்புத் தன்மையை தக்க வைத்துக் கொள்ள வழிவகை செய்கின்றது.
- இந்தச் சட்டமானது பதவி உயர்வுகளில் SC/ST பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இடஒதுக்கீட்டை அளிக்க அரசை அனுமதிக்கும் சரத்து 16(4A)ன் கீழ் மாநில அரசினால் கொண்டு வரப் பட்டுள்ளது.
- "அரசின் உதவியைப் பெறுவதற்கான தகுதிசார் சோதனை" (Means feet) மற்றும் "கிரீமி லேயர்" ஆனது முதன்முதலில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் 16 அன்று 9 நீதிபதிகளினால் தீர்ப்பு வழங்கப்பட்ட "இந்திரா சஹானி (எதிர்) இந்திய அரசு" என்ற புகழ் பெற்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது.

- "கிரீமி லேயர்" என்பது பிற்படுத்தப்பட்ட பிரிவினரிடையேப் பொருளாதார ரீதியாக மற்றும் கல்வி ரீதியாக மிகவும் மேம்பட்டு விளங்கும் உறுப்பினர்களைக் குறிக்கும்.

## கோவிட் – 19ன் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான குழு

- நாட்டில் கோவிட் – 19ன் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக பொதுச் சுகாதார வல்லுநர்களைக் கொண்ட ஒரு உயர் மட்ட தொழில்நுட்பக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- 21 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவானது நிதி ஆயோக்கின் உறுப்பினரான டாக்டர்.வி.கே.பால் என்பவரால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.
- இந்தக் குழுவில் மத்திய சுகாதாரத் துறைச் செயலாளர் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பொது இயக்குநர் ஆகியோர் இணைத் தலைவர்களாகச் செயல்படுவர்.

## டீஸ்டா நதிப் பாலம்

- எல்லைச் சாலை அமைப்பானது (BRO - Borders Road Organization) டீஸ்டா நதியில் கட்டப்பட்டுள்ள 360 அடி நீளம் கொண்ட ஒரு பாலத்தைத் திறந்துள்ளது.
- இந்தப் பாலமானது சுவஸ்திக் என்ற திட்டத்தின் கீழ் BROவினால் கட்டப் பட்டுள்ளது.
- டீஸ்டா என்ற நதியானது மேற்கு வங்காளம் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் பாய்கின்றது.






- இது வங்கதேசத்திற்குள் நுழைந்து அதன் பின்னர் வங்காள விரிகுடாவில் கலக்கின்றது.
- இது ஜமுனா நதியின் (பிரம்மபுத்திரா) துணை ஆறாகும்.

## பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன் யோஜனா

- மத்திய நிதித் துறை அமைச்சரான நிர்மலா சீதாராமன் பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன் யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளார்.
- இது கோவிட் – 19 தொற்று நோய் மற்றும் அவற்றின் தாக்கங்களை எதிர்த்துப் போராடுவதற்காக நாட்டில் உள்ள மக்களுக்காகத் தொடங்கப்பட்ட ஒரு பொருளாதார உதவித் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 1.7 இலட்சம் கோடி நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், நாட்டில் உள்ள ஏறத்தாழ 80 கோடி மக்கள் 5 கிலோ அரிசி மற்றும் கோதுமையை அடுத்த 3 மாதங்களுக்கு இலவசமாகப் பெற இருக்கின்றனர்.
- இதனுடன் சேர்த்து, ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு கிலோ பருப்பினையும் இலவசமாகப் பெற இருக்கின்றனர்.
- இந்தத் திட்டமானது கொரானா வைரஸை எதிர்த்துப் போராடும் மருத்துவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்களுக்காகக் காப்பீட்டு வசதியை வழங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஓய்வூதிய தாரர்கள் ஆகியோருக்குத் தலா ரூ.1000 ரூபாயை நேரடிப் பணப் பரிமாற்றத்தின் மூலம் வழங்க இருக்கின்றது.
- மேலும் இந்தத் திட்டமானது பிரதான் மந்திரி உஜ்வாலா என்ற திட்டத்தின் கீழ் இலவச சமையல் எரிவாயு உருளைகளையும் வழங்க இருக்கின்றது.
- இந்தப் பொருளாதாரத் திட்டமானது மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் தினக் கூலித் தொழிலாளர்களின் ஊதியத்தை ரூ.182லிருந்து ரூ.202 ஆக உயர்த்தியுள்ளது.
- மத்திய அரசு தற்பொழுது துப்புரவுப் பணியாளர்களை MNREGA (Mahatma Gandhi National Rural Employment Guarantee Act) என்ற திட்டத்தின் கீழ் சேர்த்துள்ளது.
- மேலும் இவர்கள் மூன்று மாத காலத்திற்கு ரூ.2000ஐ சிறப்பு ஊதியமாகப் பெற இருக்கின்றனர்.
- பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா என்ற திட்டத்தின் கீழ், வங்கிக் கணக்கு வைத்துள்ள பெண்கள் அடுத்த 3 மாதங்களுக்கு ரூ.500ஐப் பெற இருக்கின்றனர்.

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021

- கோவிட் பிரச்சினை காரணமாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேட்டைப் புதுப்பித்தல் ஆகிய இரண்டு பணிகளும் ஒத்தி வைக்கப் பட்டுள்ளன.
- மத்திய உள்துறை அமைச்சகமானது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021ஐ இரண்டு கட்டங்களாக நடத்த திட்டமிட்டிருந்தது.
- முதல் கட்டமானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை நடத்தத் திட்டமிடப் பட்டிருந்தது. இரண்டாம் கட்டமானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடத்தத் திட்டமிடப் பட்டிருந்தது.

- தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டைப் புதுப்பிக்கும் பணியானது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021 உடன் நடத்த திட்டமிடப் பட்டிருந்தது.
- இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தியத் தலைமைப் பதிவாளர் அலுவலகத்தால் நடத்தப்பட உள்ளது.
- தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டின் செயல்முறையிலிருந்து ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள ஒரே மாநிலம் அசாம் ஆகும்.
- அசாம் மாநிலத்திற்கான பதிவேட்டைப் புதுப்பிக்கும் பணியானது தேசியக் குடிமக்கள் பதிவேட்டின் கீழ் செய்யப் பட்டது.

### *தேசிய மக்கள் தொகைப் பதிவேடு*

- 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டிற்கான தரவுகள் முதன்முதலில் 2010 ஆண்டில் சேகரிக்கப்பட்டது.
- தேசிய மக்கள் தொகைப் பதிவேடானது உயிர்த்தரவுகள் மற்றும் மக்கள் தொகைத் தரவுகளை சேகரிக்கிறது.
- உயிர்த்தரவுகள் ஆதார் விவரங்கள் மூலம் புதுப்பிக்கப்பட உள்ளது.
- தேசிய மக்கள் தொகைப் பதிவேடானது உயிர்த்தரவுகளைச் சேகரிப்பது இதுவே முதல் முறையாகும்.
- முன்னதாக 2010 ஆம் ஆண்டில், மக்கள் தொகை விவரங்கள் மட்டுமே சேகரிக்கப் பட்டன.
- பின்னர் 2015 ஆம் ஆண்டில், ஆதார், ரேஷன் அட்டை எண்கள் மற்றும் அலைபேசி எண்களுடன் இத்தரவானது புதுப்பிக்கப் பட்டது.




## ஆபரேஷன் நமஸ்தே

- கொரானா வைரஸ் நாட்டில் பரவுவதைக் கட்டுப்படுத்த இந்திய இராணுவம் “ஆபரேஷன் நமஸ்தே” என்பதை மார்ச் 27, 2020 அன்று ஆரம்பித்தது.
- இதன் கீழ், இக்கொடிய நோய்க்கு எதிராகப் போராட இந்திய இராணுவமானது இந்திய அரசுக்கு உதவி புரியும்.



## இயற்கைப் பேரிடர் (மெஜூர் போர்ஸ் - Force Majeure)

- 22.03.2020 முதல் 14.04.2020 வரையிலான காலகட்டமானது "மெஜூர் போர்ஸ்" என்பதின் கீழ் கருதப்படும் என்று இந்திய இரயில்வே அறிவித்துள்ளது.
- இந்தக் காலகட்டத்தில் பொருள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, இரயில் மேடையில் பொருள்களைக் குவித்து வைத்தல், பொருள்களைத் தேக்கி வைத்தல் போன்றவற்றுக்குக் கட்டணம் எதுவும் விதிக்கப்பட மாட்டாது.

## கொரானாவை எதிர்த்துப் போராடு என்ற IDEAthon

- இது இரண்டு நாட்கள் நடைபெறும் ஒரு நிகழ்நேர நிகழ்வாகும்.
- இந்த முன்னெடுப்பானது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவு, அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி ஆணையம், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் ஸ்டார்ட் அப் மையம், இனோவேட்டியோகுயுரிஸ் மற்றும் சர்வதேச & இந்திய அளவில் உள்ள இதர நிறுவனங்கள் ஆகியவற்றினால் இணைந்து நடத்தப் பட்டது.
- இது கொரானா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துதல், அதிகரித்து வரும் அழுத்தத்தைக் குறைத்தல் மற்றும் வழக்கமான சூழ்நிலைக்கு விரைவாகத் திரும்புவதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு எளிதில் அணுகக் கூடிய மற்றும் விலை மலிவான தொழில்நுட்பத் தீர்வுகளை ஆராய்வதற்காக நடத்தப் பட்டது.




## நாடு முடக்கத்தின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள்

- வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கு நாடு முடக்கத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்படும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.
- இது நாடு முடக்கத்தின் போது மத்திய உள்துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 2வது அறிவிப்பின் போது வெளியிடப் பட்டது.
- இது விவசாயம் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளைத் தடையின்றி மேற்கொள்ள வழி வகை செய்கின்றது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் கீழ் சில புதிய விதிகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த விதிகளின் கீழ், அந்த நிவாரண நிதியானது இடப்பெயர்வுத் தொழிலாளர்களுக்கான தற்காலிக இருப்பிடம் மற்றும் உணவு ஆகியவை கிடைப்பதற்கு வழி வகை செய்கின்றது.
- ஏறத்தாழ 80 சதவிகித இந்தியத் தொழிலாளர்கள் அமைப்பு சாராத் துறையில் பணியாற்றுகின்றனர். இதில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒப்பந்தத் தொழிலாளர்களாக உள்ளனர்.

## இந்தியாவில் எல்பிஜி எரிவாயு

- கோவிட் – 19 வைரஸ் தொற்று அதிகரித்து வரும் சூழ்நிலையில், இந்தியாவிற்கு எல்பிஜி எரிவாயு தடை இல்லாமல் விநியோகிக்கப்படும் என்று சவுதி அரேபியா உறுதி அளித்துள்ளது.
- உலகில் எல்பிஜி எரிவாயுவை அதிக அளவில் இறக்குமதி செய்யும் இரண்டாவது நாடு இந்தியா ஆகும்.
- கத்தார், சவுதி அரேபியா, ஓமன் மற்றும் குவைத் போன்ற மத்திய கிழக்கு நாடுகளிடமிருந்து இந்தியா தனது எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்கின்றது.
- 2018 – 19 ஆம் ஆண்டில், எல்பிஜியின் பயன்பாடானது அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 6.9% அதிகரித்துள்ளது.
- இதன் இறக்குமதியானது முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் பொழுது 15.9% என்ற அளவில் அதிகரித்துள்ளது.
- 2018 – 19 ஆம் ஆண்டில் இந்தியா 24.9 மில்லியன் டன் அளவுள்ள எல்பிஜியை (LPG/Liquid Petroleum Gas – நீர்த்த பெட்ரோலிய வளிமம்) நுகர்ந்துள்ளது.
- உஜ்வாலா திட்டத்தின் அறிமுகத்திற்குப் பின்பு இதன் நுகர்வு மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளது.

## இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான உயர் நிலைக் குழு

- 21 நாட்கள் முடக்கத்திற்குப் பிறகு நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான முயற்சிகளை எடுப்பதற்காக ஒரு உயர் நிலைக் குழுவை பிரதம மந்திரியின் அலுவலகம் அமைத்துள்ளது.
- இந்தக் குழுவானது சுகாதார நலம், துயர் நிலைகளைக் குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வருதல் ஆகியவற்றிற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைக்கும்.
- இந்தக் குழுவானது பிரதம மந்திரியின் முதன்மைச் செயலாளரான பி.கே.மிஸ்ரா என்பவரின் தலைமையின் கீழ் செயல்பட இருக்கின்றது.
- மற்றொரு பணிக் குழுவானது நிதி ஆயோக்கின் உறுப்பினரான வி.கே.பால் என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தக் குழுவானது மருத்துவ உபகரணங்கள் விநியோகம், மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைத்தல் மற்றும் மருத்துவமனைகள் தொடர்ந்து செயல்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரை செய்யும்.

## தேசிய செயற் குழு

- பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 ஆனது தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவுவதற்காக ஒரு தேசியக் குழுவை (NEC – National Executive Committee) அமைப்பதற்கு வேண்டி மத்திய அரசிற்கு அதிகாரத்தினை வழங்கியுள்ளது.
- இந்தக் குழுவானது தேசியப் பேரிடர் மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளும். மேலும் இந்தக் குழுவானது இந்தத் திட்டம் வருடந்தோறும் மறு ஆய்வு செய்யப்பட்டு, புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்யும்.
- இந்தக் குழுவின் தலைவராக மத்திய உள்துறைச் செயலாளர் இருப்பார்.

# சர்வதேசச் செய்திகள்

## பூர்வோதயா திட்டம்

- இந்திய அரசு ஒடிசாவை இந்தியாவின் எஃகு உற்பத்தி மையமாக மாற்றும் என்று இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பயிலரங்கத்தில் மத்திய எஃகுத் துறை அமைச்சர் அறிவித்தார்.
- ஜப்பானின் உதவியுடன் இந்திய அரசினால் எஃகு உற்பத்தி மையமாக ஒடிசா மாற்றப் படும் என்று இவர் அறிவித்துள்ளார்.
- பூர்வோதயா திட்டமானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இது கிழக்கு இந்தியாவை ஒருங்கிணைந்த எஃகு உற்பத்தி மையமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் 300 மெட்ரிக் டன் எஃகு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற தேசிய எஃகு கொள்கையின் இலக்கை அடைய உதவ இருக்கின்றது.

## ஆசியான் அமைப்பின் சந்திப்பை அமெரிக்கா ஒத்திவைப்பு

- 2020 ஆம் ஆண்டு மார்ச் 14 அன்று நடைபெற இருந்த தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்களுடனான சந்திப்பை ஒத்தி வைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.
- அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பில் உள்ள 10 உறுப்பு நாடுகளின் (Association of Southeast Asian Nations - ASEAN) தலைவர்களை லாஸ் வேகாஸில் சந்திப்பதற்காக அழைத்திருந்தார்.
- கொரோனா வைரஸானது அமெரிக்காவில் வேகமாகப் பரவும் என்ற அச்சத்தின் காரணமாக இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## 'மாதவிடாய் காலப் பொருள்களுக்கான' தட்டுப்பாட்டை முடிவுக்கு கொண்டு வருதல் – ஸ்காட்லாந்து

- மாதவிடாய் காலப் பொருள்கள் மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் 'மாதவிடாய் காலப் பொருள்களுக்கான' தட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வரும் உலகின் முதலாவது நாடாக ஸ்காட்லாந்து உருவெடுக்க இருக்கின்றது.
- இந்த மசோதாவானது நாட்டில் உள்ள அனைத்து வயதுப் பெண்களுக்கும் மாதவிடாய் காலத்தியப் பொருள்களை இலவசமாக வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குறிப்பு - ஸ்காட்லாந்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் உள்ள மாணவியர்களுக்கு மாதவிடாய்ப் பொருட்கள் ஏற்கனவே இலவசமாக கிடைக்கின்றன.

## நட்சத்திர மதிப்பீட்டுத் திட்டம் அறிமுகம் – BEE

- எரிசக்தித் திறன் அமைப்பானது (Bureau of Energy Efficiency - BEE), சமீபத்திய நிகழ்வின் போது ஆழ்உறைப் பெட்டகம் மற்றும் இலகு ரக வணிக ரீதியிலான குளிர்சாதனப் பெட்டிகளுக்கான (Light Commercial Air Conditioners - LCAC) நட்சத்திர மதிப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- எரிசக்தி பாதுகாப்புச் சட்டம், 2001ன் கீழ், நட்சத்திரக் குறியீட்டுத் திட்டமானது, அதன் விதிமுறையின் ஒரு பகுதியாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

- நட்சத்திர மதிப்பீடானது ஒரு சாதனத்தின் ஆற்றல் செயல்திறனை வழங்குகின்றது. அதிக நட்சத்திர மதிப்பீடானது குறைவாக நுகரப்படும் ஆற்றலைக் குறிக்கின்றது.
- இந்த நிகழ்வின் போது உலக வள நிறுவனத்துடன் (WRI - World Resources Institute) இணைந்து BEE ஆல் எடுக்கப்பட்ட முதலாவது முயற்சியான உர்ஜா தக்சதா தகவல் கருவியானது (Urja Dakshata Information Tool - UDIT) தொடங்கப் பட்டுள்ளது.

### *உர்ஜா தக்சதா தகவல் கருவி*

- UDIT என்பது பயனருக்கு உகந்த ஒரு தளமாகும். இது தொழில், உபகரணங்கள், கட்டிடம், போக்குவரத்து, நகராட்சி மற்றும் விவசாயத் துறைகளில் இந்தியாவின் ஆற்றல் திறன் தகவமைப்பை விளக்குகின்றது.
- UDIT ஆனது பல்வேறு துறைகளில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட திறன் மேம்பாடு மற்றும் புதிய முயற்சிகள் ஆகியவற்றைக் காண்பிக்க இருக்கின்றது.




## அமைதி ஒப்பந்தம்

- கத்தாரில் உள்ள தோஹாவில் "ஆப்கானிஸ்தானில் அமைதியைக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம்" என்ற ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் தலிபானும் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது அமெரிக்காவின் மிக நீண்ட காலப் போரை முடிவுக்குக் கொண்டு வர வழிவகுக்கும்.
- இந்த ஒப்பந்தத்தின் சிறப்பம்சங்கள்:
    - இராணுவத் துருப்புக்களைத் திரும்பப் பெறுதல்: அமெரிக்கா, அதன் கூட்டணி நாடுகள் மற்றும் பங்காளர் நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த அனைத்து வித இராணுவப் படைகளையும் திரும்பப் பெறுவதற்கான 14 மாத கால காலக் கெடுவை இது ஏற்படுத்தியுள்ளது.
    - கைதிகளின் விடுதலை: ஆப்கானிஸ்தான் – தலிபான் ஆகியவற்றிற்கிடையேயான பேச்சுவார்த்தைகளின் முதலாவது நாளில் "5,000 தலிபான் கைதிகளும் 1,000 குடிமக்களும் (அரசுத் தரப்பில்)" விடுவிக்கப்பட வேண்டும் என்றும் இந்த ஒப்பந்தம் கோருகின்றது.

## இலவசப் பொதுப் போக்குவரத்து

- லக்சம்பர்க் நாடானது முற்றிலும் இலவசப் பொதுப் போக்குவரத்தை வழங்கும் உலகின் முதலாவது நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- இது ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காகவும் சாலைப் போக்குவரத்தைக் குறைப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும்.

## எண்ணெய் உற்பத்தியைக் குறைத்தல் – OPEC

- உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளைக் கொண்ட அமைப்பான OPEC (பெட்ரோலியப் பொருள்கள் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு - Organization of Petroleum Exporting Countries) ஆனது எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது.
- OPEC அமைப்பின் முக்கிய உறுப்பினரான சவுதி அரேபியா நாடானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஒரு நாளைக்கு 1.5 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது.
- எண்ணெய் விலைகள் சரிவடையாமல் இருக்க இந்தக் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- உலகம் முழுவதும் நிகழ்ந்து வரும் கொரோனா வைரஸ் பாதிப்பு மற்றும் அதன் தாக்கம் காரணமாக எண்ணெய்த் தேவை குறையும் என்று கணித்து OPEC இந்த முடிவை எடுத்துள்ளது.
- OPEC அமைப்பானது 5 உறுப்பு நாடுகளுடன் ஈராக்கில் உள்ள பாக்தாத்தில் நிறுவப்பட்டது.
- தற்போது, இந்த அமைப்பானது மொத்தம் 14 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.




## இந்தியப் பெருங்கடல் ஆணையம்

- இந்தியப் பெருங்கடல் ஆணையத்தின் ஐந்தாவது பார்வையாளர் நாடாக இந்தியா இணைந்துள்ளது.
- மால்டா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் OIF (லா ஃபிராங்கோபோனியின் சர்வதேச அமைப்பு) ஆகியவை இந்த ஆணையத்தில் உள்ள மற்ற நான்கு பார்வையாளர் அமைப்புகளாகும்.
- இந்தியப் பெருங்கடல் ஆணையமானது 1982 ஆம் ஆண்டில் மொரீஷியஸின் போர்ட் லூயிஸில் உருவாக்கப் பட்டது.

- இது மடகாஸ்கர், மொரீஷியஸ், கொமொரோஸ், ரீயூனியன் (பிரான்சு) மற்றும் செசல்ஸ் ஆகிய இந்தியப் பெருங்கடலை ஒட்டியுள்ள 5 ஆப்பிரிக்க நாடுகளைக் கொண்டுள்ளது.




## ஐக்கிய நாடுகளின் உலகளாவிய காம்பாக்ட் ஆய்வு

- ஐக்கிய நாடுகளின் உலகளாவிய காம்பாக்ட் ஆனது சமீபத்தில் ஒரு ஆய்வை நடத்தியது.
- பெண் தொழிலாளர் பங்களிப்பானது 2006 ஆம் ஆண்டில் 34% சதவிகிதத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டில் 24.8% சதவிகிதமாகக் குறைந்துள்ளது என்று இது கண்டறிந்துள்ளது.
- ஆய்வு செய்யப்பட்ட 153 நாடுகளில், அரசியல் இடைவெளியை விட பொருளாதாரப் பாலின இடைவெளி அதிகமாக உள்ள ஒரே நாடு இந்தியா மட்டும் தான் என்று இந்த ஆய்வு கூறுகின்றது.
- உலகளவில் 38.7% வேலை செய்யும் பெண்கள் வனவியல், விவசாயம் மற்றும் மீன்வளத் துறையில் பணியாற்றுகின்றனர்.
- இருப்பினும், இவர்களில் 13.85 சதவிகித நபர்கள் மட்டுமே நில உரிமையாளர்களாக உள்ளனர்.

## பாலின சமூக நெறிகள் குறியீடு

- ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தால் (UN Development Programme - UNDP) வெளியிடப்பட்ட முதலாவது பாலின சமூக நெறிகள் குறியீடானது (Gender Social Norms Index - GSNI) மொத்தமாக உலக மக்கள் தொகையில் 80%க்கும் அதிகமானோர் வசிக்கும் 75 நாடுகளில் ஆய்வை மேற்கொண்டது.
- இந்தக் குறியீட்டின் படி, உலகில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஆண்களையே சிறந்த அரசியல் தலைவர்களாகக் கருதுகின்றனர்.
- மேலும் 40%க்கும் அதிகமானவர்கள் ஆண்களைச் சிறந்த வணிக நிர்வாகிகளாகக் கருதுகின்றனர். வேலைகள் பற்றாக்குறையாக இருக்கும்போது வேலைக்குச் செல்வதற்கு ஆண்களுக்கே அதிக உரிமை உண்டு என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

## சர்வதேச ஆயுத பரிமாற்றத்தின் போக்குகள் - 2019

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (Stockholm International Peace Research Institute - SIPRI) புதிய தரவுகளின் படி, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிக அளவில் ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளன.
- இந்த அறிக்கையின் படி, உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளர் நாடாக இந்தியா உள்ளது.
- 2015 - 19க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இந்தியச் சந்தைக்கு அதிக அளவு ஆயுதங்களை வழங்கிய நாடு ரஷ்யா என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்தப் புதிய தரவானது மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆயுதங்களின் ஏற்றுமதியானது அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. சவூதி அரேபியா உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளர் நாடாக விளங்குகின்றது.
- SIPRI என்பது மோதல்கள், ஆயுதங்கள், ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுதக் குறைப்பு பற்றிய ஆராய்ச்சிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு சுயாதீன சர்வதேச நிறுவனமாகும்.
- இது 1966 ஆம் ஆண்டில் ஸ்வீடனில் நிறுவப்பட்டது.
- கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஊடகங்கள் மற்றும் ஆர்வமுள்ள பொது மக்களுக்கு அரசுத் தரவுகளின் அடிப்படையில் தரவு, பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகளை SIPRI வழங்குகின்றது.

## ரஷ்யாவுடன் OPEC+ விநியோக நிறுத்த ஒப்பந்தம்

- கொரோனா வைரஸ் பாதிப்பைச் சமாளிப்பதற்கு வேண்டி எண்ணெய் உற்பத்திக் குறைப்பிற்கு ரஷ்யா ஆதரவளிக்க மறுத்ததைத் தொடர்ந்து OPEC (எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு - Organization of the Petroleum Exporting Countries) மற்றும் ரஷ்யா இடையேயான மூன்று ஆண்டு கால ஒப்பந்தம் சமீபத்தில் முடிவுக்கு வந்தது.
- OPEC அமைப்பானது தனது சொந்த உற்பத்தியில் உள்ள அனைத்து வரம்புகளையும் (சலுகைகளையும்) நீக்கி இதற்கு எதிர்வினை ஆற்றியுள்ளது.
- OPEC+ என்பது கச்சா எண்ணெய் உற்பத்தியாளர்களின் கூட்டணியைக் குறிக்கின்றது. இவர்கள் 2017 ஆம் ஆண்டு முதல் எண்ணெய்ச் சந்தைகளில் மேற்கொள்ளப்படும் விநியோகத்தில் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.
- OPEC+ அமைப்பில் அசர்பைஜான், பஹ்ரைன், புருனே, கஜகஸ்தான், மலேசியா, மெக்ஸிகோ, ஓமன், ரஷ்யா, தெற்கு சூடான் மற்றும் சூடான் ஆகிய நாடுகள் உள்ளன.
- உலகின் முன்னணியில் உள்ள எண்ணெய் ஏற்றுமதியாளர் நாடான சவுதி அரேபியா இந்தச் சரிவிற்குப் பிறகு, ஏப்ரல் மாதத்தில் அதன் கச்சா எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு 10 மில்லியன் பீப்பாய்கள் என்ற அளவிற்கு உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.



## ரஷ்யாவின் நிரந்தத் தலைவராக விளாடிமிர் புடின்

- ரஷ்யாவில், அந்நாட்டின் அதிபரான விளாடிமிர் புடின் 2036 ஆம் ஆண்டு வரை தான் ஆட்சியில் தொடர அனுமதிக்கும் ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்தச் சட்டமானது ரஷ்யாவின் பாராளுமன்றத்தின் கீழ் சபையான டுமாவால் அங்கீகரிக்கப் பட்டது. ஆனால் இந்தச் சட்டமானது ரஷ்யாவின் அரசியலமைப்பு நீதிமன்றம் மற்றும் ஏப்ரல் மாதத்தில் அந்நாட்டில் நடைபெறவிருக்கும் பொது வாக்கெடுப்பு ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- ஏற்கனவே விளாடிமிர் புடின் 2024 ஆம் ஆண்டிற்கு மேலும் தான் ஆட்சியில் தொடர அனுமதிக்கும் அரசியலமைப்பு மாற்றங்களை முன்மொழிந்துள்ளார்.



## சிறுமிகளுக்கான ஒரு புதிய சகாப்தம்: அறிக்கை

- சமீபத்தில் "சிறுமிகளுக்கான ஒரு புதிய சகாப்தம்: 25 ஆண்டுகால முன்னேற்றங்கள் குறித்த ஆய்வு" என்ற ஒரு அறிக்கையானது யுனிசெஃப், பிளன் இன்டர்நேஷனல் மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பள்ளிகளில் சிறுமிகள் இடைநிற்றல் விகிதமானது 20%திலிருந்து 13.5% ஆகக் குறைந்துவிட்டாலும், அதிக முன்னேற்றமானது நிகழவில்லை என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- பல பெண்கள் இன்னும் வன்முறைச் சூழலை எதிர்கொள்கின்றார்கள் என்றும் 15 - 20 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு 20 சிறுமிகளிலும் ஒருவர் திருமணத்திற்குப் பின்பும் திருமணத்திற்கு முன்பும் வன்புணர்விற்கு உள்ளாகின்றனர் என்றும் இந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்த அறிக்கையில் “கற்றல் தொடர்பான பிரச்சினை” என்று அழைக்கப்படும் ஒரு சொல்லானது குறிப்பிடப் பட்டுள்ளது. இதன் பொருள் சிறுமிகள் பள்ளிக்குச் சென்றாலும் கூட, பலர் தரமான கல்வியைப் பெறுவதில்லை என்பதாகும்.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

- ஆப்கானிஸ்தானின் போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்கச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court- ICC) முடிவெடுத்துள்ளது.
- அமெரிக்காவிற்கும் தலிபானுக்கும் இடையில் ஒரு "வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தம்" கையெழுத்திடப்பட்ட சில நாட்களில் இந்த அறிவிப்பானது வெளி வந்துள்ளது.

- ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றமானது இனப் படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கான ஒரு உச்சபட்ச அமைப்பாக (கடைசி கட்டமாக) விளங்குகின்றது.
- சர்வதேசச் சமூகத்திற்காக மிகக் கடுமையான குற்றம் புரிந்த குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப் படுவதற்காக நிறுவப்பட்ட முதலாவது நிரந்தர, ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இதுவாகும்.
- இதன் அடிப்படை ஒப்பந்தமான ரோம் ஒப்பந்தமானது 2002 ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று நடைமுறைக்கு வந்தது.




## காலநிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச இராணுவ மன்றம்

- காலநிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச இராணுவ மன்றமானது (International Military Council on Climate and Security - IMCCS) மாறிவரும் காலநிலைப் பாதுகாப்பின் அபாயங்கள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் பகுப்பாய்வு செய்வதற்காகவும் அவற்றிற்குத் தீர்வு காண்பதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள உலகெங்கிலும் உள்ள மூத்த இராணுவத் தலைவர்கள், பாதுகாப்பு வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவாகும்.
- காலநிலை மாற்றத்தின் பாதுகாப்பு மற்றும் இராணுவ பரிமாணங்களுக்குத் தீர்வு காண்பதற்கான தகவல்களையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொள்வதற்காக இராணுவ நிபுணர்களிடமிருந்து அதிகரித்து வரும் கோரிக்கைக்கு எதிர்வினையாற்றுவதற்காக IMCCSன் அறிமுகமானது 2019 ஆம் ஆண்டில் நெதர்லாந்தின் ஹேக்கில் அறிவிக்கப் பட்டது.
- IMCCS ஆனது காலநிலை மற்றும் பாதுகாப்பு மையத்தால் நிர்வகிக்கப் படுகின்றது.
- சமீபத்தில் உலகக் காலநிலை மற்றும் பாதுகாப்பு அறிக்கையானது IMCCS அமைப்பால் வெளியிடப் பட்டது.

## ஈரான் மற்றும் சர்வதேச நாணய நிதியம்

- 1962க்குப் பிறகு முதல்முறையாக ஈரான் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை நாடுகிறது.
- 1979ல் இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர், ஈரான் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவி பெறுவதை நிறுத்தியது.
- விரிவான கூட்டு செயல் திட்டத்திலிருந்து (Joint Comprehensive Plan of Action) அமெரிக்கா விலகிய பின்னர், அது ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது.

## உலகளாவிய விலங்குப் பாதுகாப்புக் குறியீடு 2020

- உலகளாவிய விலங்குப் பாதுகாப்புக் குறியீடு 2020 ஆனது சர்வதேச விலங்குப் பாதுகாப்பு நலம்சார் அறக்கட்டளையான உலக விலங்குப் பாதுகாப்பு நிறுவனத்தால் வெளியிடப் பட்டது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ஸ்பெயின், மெக்ஸிகோ, பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுடன் இந்தியா இவ்விடத்தைப் பிடித்துள்ளது.
- விலங்குப் பாதுகாப்புக் குறியீடானது நாடுகளை A முதல் G வரை வரிசைப் படுத்துகிறது.
- இக்குறியீட்டின்படி, பலவீனமாகச் செயல்பட்ட நாடுகளில் ஈரான், மொராக்கோ, அல்ஜீரியா மற்றும் பெலாரஸ் ஆகியவை அடங்கும்.

## சர்வதேசச் சுகாதார ஒழுங்குமுறைகள்

- உலகெங்கிலும் உள்ள பொதுச் சுகாதார அவசர நிலைகளைக் கண்டறிந்து அறிக்கையிடுவதை மேம்படுத்த சர்வதேசச் சுகாதார ஒழுங்குமுறைகள் உலகளாவியச் சமூகத்தால் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளன.
- சர்வதேசச் சுகாதார ஒழுங்குமுறைகளின் கீழ், ஒரு உலகச் சுகாதார அமைப்பின் உறுப்பினர் ஒரு சாத்தியமான நிகழ்வை அடையாளம் கண்டவுடன், அது பொதுச் சுகாதார அபாயங்களை மதிப்பிட்டு உலகச் சுகாதார அமைப்பிற்கு அறிவிக்க வேண்டும்.
- சர்வதேசச் சுகாதார ஒழுங்குமுறைகள் நடைமுறைக்கு வந்ததிலிருந்து, உலகச் சுகாதார அமைப்பானது சர்வதேச அக்கறை நோக்கில் நான்கு பொதுச் சுகாதார அவசர நிலைகளை அறிவித்துள்ளது. அவை H1N1 இன்ஃப்ளுயன்ஸா (2009), போலியோ (2014), எபோலா (2014) மற்றும் ஜிகா வைரஸ் (2016) ஆகியனவாகும்.

- ஐந்தாவது பொதுச் சுகாதார அவசரநிலையாக கோவிட்-19ஐ உலகச் சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

## அயல்நாட்டு மக்களுக்கான இசைவுச் சீட்டு

- கொரோனா வைரஸ் நோயின் (COVID-19) திடீர்ப் பெருக்கத்தினால் உலகெங்கிலும் உள்ள அயல்நாட்டவர்களின் உள் நுழைவு இசைவு (Visa) இந்திய அரசால் நிறுத்தப் பட்டுள்ளது.
- நோயின் திடீர்ப் பெருக்கத்தினால் பாதிக்கப்பட்ட 120க்கும் மேலான நாடுகளுள் இத்தீவிர நடவடிக்கையை இந்தியாவே முதன் முதலில் மேற்கொண்டு உள்ளது.

## அமெரிக்காவில் தேசிய அவசரநிலை

- கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக அமெரிக்க அதிபரான டொனால்ட் டிரம்ப் அமெரிக்காவில் தேசிய அவசரநிலையை அறிவித்துள்ளார்.
- அமெரிக்காவில் இந்த வகையான அவசரநிலை அறிவிக்கப் படுவது ஒரு அரிதான நடவடிக்கையாகும்.
- இதற்கு முன்பு, வெஸ்ட் நைல் நோய் பாதிப்பின் காரணமாக அப்போதைய அமெரிக்க அதிபரான பில் கிளிண்டனும் இதே போன்ற ஒரு அவசரநிலையை அறிவித்தார்.

## WHO COVID – 19ன் தீவிரத் தன்மையை சீனாவிலிருந்து ஐரோப்பாவிற்கு மாற்றி உள்ளது

- சமீபத்தில் உலக சுகாதார அமைப்பானது கொரோனா வைரஸின் தீவிரத் தன்மையை சீனாவிலிருந்து ஐரோப்பாவிற்கு மாற்றியுள்ளது.
- சீனாவில் நோய்த்தொற்றுகளின் வீதம் கட்டுப்படுத்தப் பட்டு வரும் அதே சமயத்தில் ஐரோப்பிய நாடுகளில் இந்த நோய் பாதிப்பானது அதிவேகமாக அதிகரித்து வருவதன் காரணமாக அந்த அமைப்பு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.
- மேலும், ஐரோப்பாவில் இந்த வைரஸ் பாதிப்பின் காரணமாக இறப்பவர்களின் எண்ணிக்கையானது உலகின் எந்தப் பகுதியையும் விட அதிகமாக உள்ளது.

## UNCTAD அறிக்கை

- சமீபத்தில் உலகப் பொருளாதாரத்தில் COVID - 19ன் தாக்கம் குறித்த ஒரு அறிக்கையை ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (UNCTAD - United Nations Conference on Trade and Development) வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, இந்தியா 10வது இடத்தில் இருக்கின்றது.
- இந்த அமைப்பானது ஜெனீவா நகரைத் தலைமையிடமாகக் கொண்டு 1964 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டுள்ளது.

## கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான ஐக்கிய இராஜ்ஜியத்தின் உத்தி

- பிரதமரான போரிஸ் ஜான்சனின் கீழ் உள்ள ஐக்கிய இராஜ்ஜிய அரசானது கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக "ஹெர்டு இம்யுனிட்டி" (வெகுஜன எதிர்ப்புச் சக்தி) என்ற ஒரு உத்தியைப் பின்பற்றியுள்ளது.

### ஹெர்டு இம்யுனிட்டி

- வெகுஜன எதிர்ப்புச் சக்தியானது தடுப்பூசிகள் மூலமாகவும் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுவதன் மூலமாகவும் அடையப் படுகின்றது.
- அதிக எண்ணிக்கையிலான மக்களுக்குத் தடுப்பூசி போடும் போது, தடுப்பூசி போடாதவர்களும் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறுகின்றார்கள்.
- தொற்றுநோய்களில் கூட, குறிப்பிட்ட காலப் பகுதியில், பெரும்பான்மையான மக்கள் நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறும்போது, அதன் பரவலின் அளவானது குறைகின்றது.
- இது ஐக்கிய இராஜ்ஜியத்தில் "வெகுஜன நோய் எதிர்ப்புச் சக்தி" என்று பின்பற்றப்படும் ஒரு உத்தியாகும்.

### ஈராக்கின் புதிய பிரதமர்

- ஈராக் அதிபரான பர்ஹாம் சாலிஹ் என்பவர் மூத்த அரசியல்வாதியான அட்னான் அல் - ஸுர்பியை அந்நாட்டின் பிரதமராக நியமித்துள்ளார்.
- அல் - ஸுர்பி தனது அமைச்சரவையை அமைக்க 30 நாட்கள் கால அவகாசம் உள்ளது. அதன் பின்னர் அவர் ஈராக்கின் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தி வெற்றி பெற வேண்டும்.



### ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவர ஆணையம்

- சியரா லியோன் நாடு முதன்முறையாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றத்தில் இடம் பெற்றுள்ளது.
- சியரா லியோனின் பொதுப் புள்ளிவிவர ஆணையரான ஒஸ்மான் சங்கோ என்பவர் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவர ஆணைய அமர்வுகளின் அறிக்கைகளை வெளியிடும் உறுப்பினராக 4 ஆண்டுக் காலத்திற்கு (2020-2023) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் தேதியன்று நியூயார்க்கில் முடிவடைந்த 51 வது அமர்வில், நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (Sustainable Development Goals - SDG) உலகளாவிய குறிகாட்டிக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட முப்பத்தாறு மாற்றங்கள் ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவர ஆணையத்தால் (United Nations Statistical Commission - UNSC) ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- திருத்தப்பட்ட உலகளாவியக் கட்டமைப்பானது 231 குறிகாட்டிகளைக் கொண்டிருக்கும். அசல் கட்டமைப்பானது ஏறத்தாழ அதே எண்ணிக்கையிலான குறிகாட்டிகளைக் கொண்டிருந்தது.

- இந்த மாற்றங்கள் SDG குறிகாட்டிகள் மீதான ஐக்கிய நாடுகள் அமைப்புகளுக்கிடையேயான நிறுவனம் மற்றும் நிபுணர் குழுவால் (UN Inter-Agency and Expert Group on SDG Indicators - IAEG-SDGs) நடத்தப்பட்ட '2020 விரிவான ஆய்வின்' அடிப்படையில் அமைந்தவையாகும்.

### *முக்கியமான மாற்றங்கள்*

- 2, 3, 4, 10, 13 மற்றும் 16 ஆகிய ஆறு SDG இலக்குகளில் எட்டு கூடுதல் குறிகாட்டிகள் சேர்க்கப் பட்டுள்ளன.
- 1, 4, 8, 11, 13 மற்றும் 17 ஆகிய ஆறு SDG இலக்குகளில் உள்ள ஆறு குறிகாட்டிகள் நீக்கப் பட்டுள்ளன.

## பின்லாந்து – உலகின் மகிழ்ச்சிகரமான நாடு

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பில் உள்ள நாடுகளிடையே மிகக் குறைந்த சமத்துவமின்மை மற்றும் மிகக் குறைந்த வறுமை ஆகியவற்றுடன் மிக உயரிய வாழ்க்கைத் தரம், பாதுகாப்பு மற்றும் பொதுச் சேவைகள் ஆகியவற்றைப் பின்லாந்து நாட்டு மக்கள் அனுபவிக்கின்றனர்.

**Figure 2.1: Ranking of Happiness 2017-2019** (Part 1)



- ஐக்கிய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த வல்லுநர்கள் நடப்பு மூன்றாவது ஆண்டிற்காக உலகின் மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து நாட்டைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- உலக மகிழ்ச்சிகர அறிக்கைக்காக ஆராய்ச்சியாளர்கள் 156 நாடுகளில் உள்ள மக்களை, அவர்களின் மகிழ்ச்சிகர நிலையை மதிப்பிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.
- ஒவ்வொரு நாட்டிற்கும் மகிழ்ச்சிகர நிலைக்குரிய மதிப்பெண்ணைத் தருவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தி, சமூக உதவி, தனிநபர் சுதந்திரம் மற்றும் ஊழலின் நிலை ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுகின்றன.
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் பொது அவையின் நீடித்த வளர்ச்சி தீர்வுகள் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- மொத்தமுள்ள 156 நாடுகளிடையே இந்தியா 144வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- OECD என்பது 36 உறுப்பு நாடுகளைக் கொண்ட அரசாங்கங்களுக்கிடையே ஒரு பொருளாதார அமைப்பாகும்.
- இது பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் உலக வர்த்தகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக 1961ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

## கரோனாவை கண்டுபிடிப்பதற்கான தொழில்நுட்பம்

- அணுவை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்பப் பயன்பாட்டின் மூலம் புதிய கரோனா வைரஸைக் கண்டறிவதற்கான சோதனைகளை மேற்கொள்ள வளரும் நாடுகளுக்கு உதவ சர்வதேச அணு ஆற்றல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.
- பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வரும் சில வாரங்களில் வைரஸைக் கண்டறிவதற்கான தொழில்நுட்பம் குறித்த முதலாவது பயிற்சிக்குச் செல்ல இருக்கின்றனர்.
- இந்த பங்கேற்பாளர்கள் நிகழ்நேர தலைகீழ் குறிமுறை பதிப்பு பல்படிம நொதி தொடர்வினை அல்லது RT – PCR (Real-Time Reverse Transcription Polymerase Chain Reaction) சோதனையைக் கையாளக் கற்றுக் கொள்ள இருக்கின்றனர்.
- இந்த நோய் கண்டறிதல் முறையானது குறிப்பிட்ட மணி நேரத்திற்குள் கரோனா வைரஸை அடையாளம் கண்டு அதைக் கண்டறிவதற்காக அணுவை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.
- IAEA என்பது அணு சார்ந்த துறையில் ஒத்துழைப்பிற்கான ஒரு சர்வதேச மையமாகும்.
- இந்த அமைப்பானது அணு கலந்த தொழில்நுட்பத்தின் பாதுகாப்பான மற்றும் அமைதியான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக, தனது உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுகின்றது.

## நாடு வாரியான (Country by Country) அறிக்கை

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பானது "அடிப்படைத் தேய்மானம் மற்றும் இலாப செயல் மாற்ற செயல் திட்டம் 13" என்ற ஒரு செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளது (BEPS - Base Erosion and Profit Shifting).
- இது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் தனது இலாபத்தை எங்கு ஈட்டியதோ, அதைச் சரியாகக் குறிப்பிடப்படுவதை உறுதி செய்ய இருக்கின்றது.
- "BEPS செயல் திட்டம் 13" என்ற அறிக்கையானது பன்னாட்டு நிறுவனங்கள் ஒவ்வொரு

ஆண்டும் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான ஒரு வழிமுறையை வழங்குகின்றது.

- இந்த அறிக்கையானது “நாடு வாரியான அறிக்கை” என்று அழைக்கப் படுகின்றது (CBC - Country by Country).
- CBC ஆனது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்
    - பன்னாட்டு நிறுவனங்களின் உலகளாவிய வருமான அளவு, செலுத்தப்பட்ட வரிகள் மற்றும் இதர குறிகாட்டிகள் ஆகியவை தொடர்பாக தொகுக்கப்பட்ட நாடு வாரியான தகவல்.
    - ஒரு குறிப்பிட்ட பகுதியில் செயல்படும் பன்னாட்டு நிறுவனங்களின் அனைத்துத் துணை நிறுவனங்களின் பட்டியல் மற்றும் அது தொடர்பான நிறுவனங்களின் வணிகச் செயல்பாடுகளின் நிலை.

## CDRI – இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம்

- இந்தியா தலைமையிலான CDRI என்ற அமைப்பிற்கு (பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பிற்கான உலகளாவியக் கூட்டணி - Global Coalition for Disaster Resilient Infrastructure) ஐக்கிய இராஜ்ஜியமும் இணைந்து தலைமை தாங்க இருக்கின்றது.
- CRDI ஆனது 2017ஆம் ஆண்டில் நடைபெற்ற G20 சந்திப்பின் போது பிரதமர் மோடியால் தொடங்கப் பட்டது.
- இது ஆற்றல் போக்குவரத்து தகவல் தொலைத் தொடர்பு, நீர் போன்ற முக்கியமான துறைகளில் உள்கட்டமைப்புகளை மீண்டும் மாற்றி அமைக்கக் கூடிய வலுவான காலநிலை நெகிழ்திறன் உள்கட்டமைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பேரிடர்களின் காரணமாக மனித உயிரிழப்புகளைத் தடுப்பதற்காக தடுப்பு நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளுவதில் உலக அளவில் முன்னோடி நாடாக இந்தியா விளங்குகின்றது.
- இந்தியாவின் “இறப்புகளற்ற செயல்முறையானது” ஐக்கிய நாடுகள் உள்பட உலகெங்கிலும் இருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

## G7 மாநாடு 2020

- அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் G7 மாநாட்டில் நேரடியாகக் கலந்து கொள்வதை ரத்து செய்துள்ளார். இந்த மாநாடானது காணொளியின் மூலம் நடத்தப்பட இருக்கின்றது.
- G7 என்பது பிரான்சு, கனடா, அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், இத்தாலி, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய உலகில் உள்ள மிகப்பெரிய பொருளாதார நாடுகளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாகும்.
- சீனா மிகப்பெரிய பொருளாதார நாடாக இருந்த போதிலும், மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குறைந்த அளவிலான தனி நபர் வளத்தை மட்டுமே கொண்டுள்ளது என்று G7 அமைப்பு கருதுகின்றது.
- G7 உறுப்பு நாடுகளைப் பொறுத்த வரையில் சீனா ஒரு முன்னேறிய பொருளாதார நாடாக இல்லை என்பதை இது குறிக்கின்றது.

## உலக நகரங்கள் மாநாடு

- சமீபத்தில் உலக நகரங்கள் மாநாடானது கொரனா வைரஸ் பாதிப்பின் காரணமாக தள்ளி வைக்கப் பட்டுள்ளது.
- சிங்கப்பூரில் நடைபெற இருக்கும் இந்த மாநாடானது 2021ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
- இது சவால்களை எதிர்கொள்ளும் நகரங்களுக்கான புத்தாக்கத் தீர்வுகளை அடையாளம் காண்பதற்காக கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கும் ஒரு சர்வதேச மாநாடாகும்.
- இந்த ஆண்டின் இந்த மாநாடானது "வாழத் தகுந்த மற்றும் நீடித்த நகரங்கள் : பிரச்சினைக்குரிய உலகத்தை மாற்றியமைத்தல்" என்ற கருத்துருவுடன் நடைபெற இருந்தது.

*குறிப்பு:*

- உலக நகரங்கள் மாநாடானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.
- இது நீடித்த நகரங்களின் சவால்களைக் களைவதற்காக தொழில் துறை வல்லுநர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்களுக்கான ஒரு பொதுத் தளமாகச் செயல்படுகின்றது.

## 4 மிகப்பெரிய சோதனைகள்

- உலக சுகாதார அமைப்பானது கொரானா வைரஸ் சிகிச்சைகளின் ஒரு பகுதியாக 4 மிகப்பெரிய சோதனைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்த 4 சோதனைகள் பின்வருமாறு.
    - வைரஸ் எதிர்ப்புக் கலவையான ரெம்டெசிவிர்
    - மலேரியா சிகிச்சைக்குப் பயன்படும் மருந்தான குளோரோகுயின் மற்றும் ஹைட்ராக்ஸிகுளோரோகுயின்.
    - எச்ஐவி மருந்துகளான லோபினாவிர் மற்றும் ரிட்டோனாவிர் ஆகியவற்றின் கலவை.
    - லோபினாவிர் மற்றும் ரிட்டோனாவிர் கலவையுடன் இண்டர்பெரான் – பீட்டா என்ற மருந்து.
- காங்கோவில் எபோலா நோய் வெடிப்பு ஏற்பட்ட போது எபோலா நோய்த் தொற்றிற்கு சிகிச்சை அளிப்பதற்காக ரெம்டெசிவிர் மருந்தானது கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்த மருந்தானது இதர கொரானா வைரஸ்களான சார்ஸ் மற்றும் மெர்ஸ் ஆகியவற்றையும் தடுக்கும் திறன் கொண்டது என்று நிரூபிக்கப் பட்டுள்ளது.

## சேப் ஹேண்ட்ஸ (Safe Hands) சவால்

- இது 2019-20 ஆம் ஆண்டின் உலகளாவிய கரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுக்க உலக சுகாதார அமைப்பால் தொடங்கப்பட்ட ஒரு பிரச்சாரமாகும்.
- அனைவரும் தங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், நோய் பரவாமல் தடுக்கவும் 40 விநாடிகள் தவறாமல் கைகளைக் கழுவ வேண்டும் என்று இந்தப் பிரச்சாரத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.




## கோவிட் - 19 ஒற்றுமை மீட்பு நிதி (Solidarity Response Fund)

- ஐக்கிய நாடுகளின் அறக்கட்டளையும் சுவிஸ் தொண்டு நிறுவனமும் இணைந்து ஒற்றுமை மீட்பு நிதியினை உருவாக்கியுள்ளன.
- இது உலக சுகாதார நிறுவனம் மற்றும் அதன் கூட்டாளர்களை ஆதரித்து, கரோனா வைரஸைத் தடுக்க, கண்டறிய மற்றும் நிர்வகிக்க உலக நாடுகளுக்கு - குறிப்பாக அதிகபட்சத் தேவை இருப்பவர்களுக்கு உதவும் ஒரு மிகப்பெரிய முயற்சியாகும்.

## குர்சார்பெய்ட் திட்டம் - ஜெர்மனி

- குர்சார்பெய்ட் என்பது "குறுகிய காலப் பணி" என்பதற்கான ஜெர்மன் சொற்கூறாகும்.
- இந்தத் திட்டமானது "குர்சார்பெய்ட்கெல்டு" என்று அழைக்கப்படும் "குறுகிய கால பணிப் படியினை" வழங்குகின்றது.
- இது அசாதாரண பொருளாதாரச் சூழ்நிலைகளின் போது நிகழும் வேலை இழப்பீட்டிற்காகப் பகுதியளவு இழப்பீட்டுத் தொகையை வழங்குகின்றது.
- குர்சார்பெய்ட் திட்டத்தின் கீழ் பணவழங்கீடானது நிகர வருமான இழப்பு அடிப்படையின் கீழ் கணக்கிடப் படுகின்றது.

## மீயொலி வேக ஏவுகணைகள்

- அமெரிக்காவானது அணு ஆயுதத் திறன் கொண்ட மீயொலி வேக ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- சமீபத்தில் ரஷ்யா 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மீயொலி வேக ஆயுதத்தைச் சோதனை செய்தது. சீனா ஏற்கெனவே தனது டிஎப் – 17 மீயொலி வேகச் சறுக்கு (ஆயுத) வாகனத்தைக் காட்சிப்படுத்தியது.
- இந்தச் சறுக்கு வாகனமானது ஒலியின் வேகத்தை விட 5 மடங்கு வேகமாகச் செல்லும் திறன் கொண்டது.



## G20 காணொளி மாநாடு

- ❖ G20 அமைப்பின் காணொளி மாநாடானது சவுதி அரசரான சல்மான் அவர்களால் தலைமை தாங்கப்பட்டது.
- ❖ G20 அமைப்பில் ஒரு உறுப்பினர் நாடாக உள்ள இந்தியாவை பிரதமர் நரேந்திர மோடி பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- ❖ இந்த மாநாட்டில், 5 டிரில்லியன் அமெரிக்க டாலரைத் திரட்டி உலகப் பொருளாதாரத்திற்குச் செலவிட இந்த அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளின் தலைவர்கள் உறுதி பூண்டுள்ளனர்.
- ❖ ஒரு மாநாட்டில் காணொளியின் மூலம் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கு கொள்வது இந்த வகையில் இதுவே முதன் முறையாகும்.
- ❖ G20 மாநாடானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 மற்றும் 22ஆம் தேதிகளில் சவுதி அரேபியாவின் தலைமையின் கீழ் நடக்க இருந்தது.
- ❖ சவுதி அரேபியாவானது "21ஆம் நூற்றாண்டின் அனைவருக்குமான வாய்ப்புகளை உணர்ந்து கொள்ளுதல்" என்ற கருத்துருவை இந்த மாநாட்டிற்காகத் தேர்ந்தெடுத்து உள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டு G20 மாநாட்டிற்காக ஸ்பெயின், ஜோர்டான், சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் அழைப்பாளர் நாடுகளாக பங்கேற்றுள்ளன.

### *G20 பற்றி*

- ❖ G20 மாநாடு என்பது மிகப்பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் ஒரு வருடாந்திரச் சந்திப்பாகும்.
- ❖ இதன் உறுப்பு நாடுகள் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதத்தையும் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு மடங்கு மக்கள் தொகையையும் கொண்டுள்ளன.
- ❖ முன்னதாக G20 மாநாடானது "நிதியியல் சந்தை மற்றும் உலகப் பொருளாதாரம் குறித்த மாநாடு" என்று அழைக்கப் பட்டது.
- ❖ இந்த அமைப்பானது தனக்கேயுரிய நிரந்தரமான பணியாளர்களைக் கொண்டிருக்க வில்லை. எனவே ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் G20 அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகள் ஒரு பிராந்தியச் சுழற்சி முறையில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றன.
- ❖ 1997 – 1998 ஆம் ஆண்டின் ஆசிய நிதி நெருக்கடிக்குப் பிறகு, G7 அமைப்பின் நிதித்துறை அமைச்சர்கள் 1999 ஆம் ஆண்டில் G20 நிதியியல் அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கொண்ட ஒரு அமைப்பை உருவாக்க ஒப்புக் கொண்டனர்.

## IMF கொள்கைக் கண்காணிப்பு

- சமீபத்தில் சர்வதேச நாணய நிதியமானது (IMF - International Monetary Fund) "IMF கொள்கைக் கண்காணிப்பை" தொடங்கியுள்ளது.
- இந்தத் தளமானது கொரானா வைரஸ் நோய்த் தொற்றிற்கு எதிராக உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் குறித்தத் தகவலை வழங்க இருக்கின்றது.




## உலகளாவிய மனிதாபிமான உறுதியளிப்புத் திட்டம்

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது கோவிட் – 19ற்கு எதிர்த்துப் போராடுவதற்காக "உலகளாவிய மனிதாபிமான உறுதியளிப்புத் திட்டத்தை" தொடங்கியுள்ளது.
- இந்த அமைப்பானது இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2 பில்லியன் அமெரிக்க டாலரை ஒதுக்கியுள்ளது.
- இத்திட்டமானது ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவில் உள்ள 51 நாடுகளில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது சர்வதேச அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நேரடியாகச் செயல்படுத்தப் படுகின்றது.
- இத்திட்டத்தின் கீழ், இந்த அமைப்பானது கொரானா வைரஸ் சோதனைக்காக தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்களை வழங்க இருக்கின்றது.

## அமெரிக்காவின் பொருளாதார நிதியுதவித் தொகுப்பு

- கொரானா வைரஸின் திடீர்ப் பெருக்கத்தின் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட சேதங்களைக் கட்டுப்படுத்த வேண்டி அமெரிக்க செனட் சபையானது 2.2 டிரில்லியன் டாலர் பொருளாதார நிதியுதவித் தொகுப்பிற்கு ஏகமனதாக ஒப்புதல் தந்துள்ளது.
- நவீன அமெரிக்க வரலாற்றில் இந்த பொருளாதார நிதியுதவித் தொகுப்பு இவ்வாறான வகையில் மிகவும் அதிகமாகும்.
- இது 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் போது வழங்கப்பட்ட 800 பில்லியன் டாலர் உதவியை விட மிக அதிகமாகும்.

## தேசியப் பாதுகாப்புத் திட்டம்

- அமெரிக்காவின் விண்வெளிப் படை தனது இராணுவ தகவல் தொடர்புகளுக்காக ஒரு அதிவேக பாதுகாப்பான செயற்கைக் கோளை (hyper-secure satellite) ஏவியது.
- இந்த செயற்கைக் கோள் ஏவப்பட்டதன் மூலம் அமெரிக்கா தனது முதல் தேசியப் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- லாக் ஹீட் மார்ட்டினின் AEHF - Advanced Extremely High Frequency (மேம்பட்ட அதிவேக உயர் அதிர்வெண்) செயற்கைக்கோளானது புளோரிடாவிலிருந்து ஏவப்பட்டது.
- அமெரிக்க விண்வெளிப் படையானது அந்நாட்டின் ஆறாவது சேவையாகும்.
- இராணுவம் அல்லது தரைப்படை, விமானப்படை, கப்பற்படை, கடற்படை மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படை ஆகியவை நாட்டின் பாதுகாப்பிற்கான முதல் ஐந்து முக்கியச் சேவைகள் ஆகும்.

## கண்டுபிடி, சோதி, குணப்படுத்து (Trace, Test, Treat)

- தென் கொரியா "கண்டுபிடி, சோதி, குணப்படுத்து" என்ற தீவிரமான கொள்கையை நடைமுறைப் படுத்தியுள்ளது.
- கொரானா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இது குறிப்பிடத்தக்க சாதகமான முடிவுகளைக் காட்டியுள்ளது.
- தேசிய அளவில் ஊரடங்கை அமல்படுத்தாமல் இது நடத்தப்பட்டுள்ளது.

## உலகளாவிய நிலக்கரி மின் உற்பத்தி

- 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி, உலகளாவிய நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்ந்து நான்காவது ஆண்டாகக் குறைந்துள்ளது.
- குளோபல் எனர்ஜி மானிட்டர், சியரா கிளப், கிரீன்பீஸ் இன்டர்நேஷனல், எரிசக்தி மற்றும் தூய்மையான காற்றிற்கான ஆராய்ச்சி மையம் ஆகியன இணைந்து இந்த ஆய்வை நடத்தியுள்ளது.

## பாதுகாப்பு உற்பத்திச் சட்டம்

- சமீபத்தில் அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் பாதுகாப்பு உற்பத்திச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளார்.
- இந்தச் சட்டமானது கோவிட் – 19 தொற்றை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான செயற்கை சுவாசக் கருவிகளை உற்பத்தி செய்வதற்காக ஒரு பன்னாட்டு நிறுவனமான ஜெனரல் மோட்டார் என்ற நிறுவனத்திற்கு நெறிமுறைகளை அறிவுறுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தச் சட்டமானது கொரியப் போரின் போது 1950 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.



# பொருளாதாரச் செய்திகள்

## காப்பீட்டு இடையீட்டாளர்களில் 100% அன்னிய நேரடி முதலீடு

- தொழிற்துறை ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வணிகத் துறை, ஒருங்கிணைந்த அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கை 2017 ஐ திருத்தியுள்ளது.
- நேரடி வழி மூலம் காப்பீட்டு இடையீட்டாளர்களின் (insurance intermediaries) 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- காப்பீட்டு இடைத் தரகர்கள், மறுகாப்பீட்டு இடைத் தரகர்கள், காப்பீட்டு ஆலோசகர்கள், பெருநிறுவன முகவர்கள், மூன்றாம் தரப்பு நிர்வாகிகள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்கள் இதில் அடங்குவர்.
- முன்னதாக நேரடி வழி மூலம் காப்பீட்டு இடையீட்டாளர்களுக்கு 49 சதவீதம் வரை அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப் பட்டது.

## உள்நாட்டு (சிவில்) விமானப் போக்குவரத்தில் 100% அந்நிய நேரடி முதலீடு

- ஏர் இந்தியா விவகாரத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்களால் 100% வரை அந்நிய முதலீட்டை அனுமதிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- முன்னதாக திட்டமிடப்பட்ட விமானப் போக்குவரத்து சேவை / உள்நாட்டு திட்டமிடப்பட்ட பயணிகள் விமானத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான நேரடி வழியின் கீழ் 100% அந்நிய நேரடி முதலீடானது அனுமதிக்கப் படுகின்றது.

## டிஜிட்டல் பரிவர்த்தனையில் சென்னை 2வது இடம்

- சமீபத்திய ஆய்வின் படி, டிஜிட்டல் முறையின் (Paytm, Gpay முதலியன) மூலம் மேற்கொள்ளப்படும் பணப் பரிவர்த்தனைகளில் பெங்களூர் முதலிடத்திலும் சென்னை இரண்டாவது இடத்திலும் உள்ளன.
- மாநில வாரியான தரவரிசையில், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- இந்தியாவில் பொருட்கள் மற்றும் சேவைகளின் டிஜிட்டல் நிதிப் பரிமாற்றம் குறித்த இந்த ஆய்வானது வேர்ல்ட் லைன் நிதிப் பரிமாற்ற நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

## தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம் குறைப்பு

- ❖ தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பானது (Employees Provident Fund Organisation - EPFO) நடப்பு நிதியாண்டில் வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை 8.50 சதவீதமாகக் குறைத்துள்ளது.
- ❖ முன்னதாக இது 2018-19ல் 8.65 சதவீதமாக இருந்தது.
- ❖ இந்த நடவடிக்கையானது 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடையும் நிதியாண்டில் ஊதியம் பெறும் ஊழியர்கள் குறைந்த வருவாயைப் பெறுவார்கள் என்பதைக் குறிக்கின்றது.

***EPFO***

- ❖ இந்தியாவில் அமைப்புசார் துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்காக கட்டாயப் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி திட்டமான ஓய்வூதிய திட்டம் மற்றும் காப்பீட்டுத் திட்டத்தை நிர்வகிப்பதற்காக மத்திய வாரியத்திற்கு EPFO உதவுகின்றது.
- ❖ EPFO ஆனது இந்திய அரசாங்கத்தின் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றது.

**SAVINGS INSTRUMENTS**

| Rate of interest | (in %) |
|---|---|
| EPF | 8.5* |
| PPF | 7.9 |
| 5-year time deposit | 7.7 |
| National Savings Certificate | 7.9 |
| General Provident Fund | 7.9 |
| Savings deposit | 4 |

*yet to be notified; proposed for 2019-20
Source: EPFO, Finance Ministry

## யெஸ் வங்கி - நிதி நெருக்கடி

- ❖ 2020 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் தேதியன்று இந்திய ரிசர்வ் வங்கியானது YES வங்கியின் மீது ஒரு மாத கால தற்காலிகச் செயல்பாட்டுத் தடையை (moratorium) விதித்துள்ளது.
- ❖ ரிசர்வ் வங்கியானது இந்த வங்கியிலிருந்து ரூ. 50,000 அல்லது அதற்குக் குறைவான நிதியை மட்டுமே திரும்ப எடுக்க முடியும் என்ற கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
- ❖ ரிசர்வ் வங்கி யெஸ் வங்கியில் நிதியை முதலீடு செய்ய இந்திய பாரத வங்கியைத் தேர்வு செய்துள்ளது.
- ❖ ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின் அடிப்படையில் இந்திய அரசானது இந்த வங்கியின் தற்காலிக செயல்பாட்டுத் தடையை விதித்துள்ளது.
- ❖ ராணா கபூர் என்பவர் யெஸ் வங்கியின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார்.

## போட்டிச் சட்டத்தின் பொருளாதாரம் குறித்த தேசிய மாநாடு

- இந்தியப் போட்டி ஆணையமானது (Competition Commission of India - CCI) புது தில்லியில் போட்டிச் சட்டத்தின் பொருளாதாரம் குறித்த 5வது தேசிய மாநாட்டை நடத்தியது.
- நம்பிக்கையற்ற கொள்கைகளுக்கு சான்றுகள் அடிப்படையிலான அணுகுமுறையை எளிதாக்குவதற்கான சந்தை ஆய்வுகளின் முக்கியத்துவத்தை இந்த மாநாடு எடுத்துரைத்தது.

## பொதுத்துறை வங்கிகளின் மிகப்பெரிய ஒருங்கிணைப்பு

- மத்திய அமைச்சரவை தலைமையில் 10 பொதுத்துறை வங்கிகளின் மிகப்பெரிய ஒருங்கிணைப்புக்கு ஒப்புதல் அளித்தது.
- இம்மிகப்பெரிய இணைப்பு 2020 ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளது.
- யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் ஓரியண்டல் பாங்க் ஆப் இந்தியா ஆகியவற்றை பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் இணைப்பதும் இதில் அடங்கும்.
- இது அந்த முன்மொழியப்பட்ட நிறுவனத்தை இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியாக மாற்றும்.
- மேலும், சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடன் இணைக்கப்படும்.
- கார்ப்பரேஷன் வங்கி மற்றும் ஆந்திர வங்கியை யூனியன் பாங்க் ஆப் இந்தியாவுடன் இணைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- அலகாபாத் வங்கியை இந்தியன் வங்கியுடன் இணைக்கவும் அது ஒப்புதல் அளித்தது.




## குறைந்தபட்ச இருப்புத் தொகையைப் பராமரிக்க வேண்டியதில்லை – SBI சேமிப்பு வங்கிக் கணக்குகள்

- சேமிப்புக் கணக்குகளுக்கான சராசரி மாதாந்திர இருப்புத் தொகையை வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியுள்ளதாக இந்திய பாரத வங்கி (State Bank of India - SBI) அறிவித்துள்ளது.
- தற்போது பெரு நகரங்கள், நகர்ப்புறப் பகுதிகள் (நகரை ஒட்டிய பகுதிகள்) மற்றும் கிராமப் புறங்களில் SBI சேமிப்பு வங்கி கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் முறையே ரூ. 3,000, ரூ. 2,000 மற்றும் ரூ. 1,000 என்ற இருப்புத் தொகையைப் பராமரிக்க வேண்டும்.
- மேலும் இந்த வங்கியானது சேமிப்பு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் அனைவருக்குமான வட்டி விகிதத்தை ஆண்டுக்கு 3 சதவீதம் என்ற அளவில் சீரமைத்துள்ளது.

- முன்னதாக, ஒரு லட்சத்துக்கும் குறைவான இருப்புத் தொகையைக் கொண்ட சேமிப்பு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் ஆண்டுக்கு 3.25 சதவிகிதம் வட்டி விகிதத்தையும் ரூ. 1 லட்சத்துக்கு மேல் இருப்புத் தொகையைக் கொண்ட சேமிப்பு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் 3 சதவிகிதம் வட்டி விகிதத்தையும் பெற்று வந்தனர்.

## கிசான் ரயில் திட்டம்

- கிசான் ரயில் திட்டம் குறித்து சில பரிந்துரைகளை வழங்குவதற்காக இந்திய அரசு சமீபத்தில் ஒரு குழுவை அமைத்துள்ளது.
- இந்தத் திட்டமானது 2020-21 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டது.
- நாட்டில் குளிரூட்டப்பட்ட ஒரு தேசிய விநியோக சங்கிலித் தொடரை அமைப்பதற்காக கிசான் ரயில் தொடங்கப் படுகின்றது.
- இத்திட்டத்தின் கீழ் அழுகிப் போகக் கூடிய பொருட்கள் குளிரூட்டப்பட்ட பெட்டிகளைக் கொண்ட சரக்கு ரயில்கள் மூலம் கொண்டு செல்லப்பட உள்ளன.

## தாதுச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2020

- இந்த மசோதாவானது சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை (Mines and Minerals Development and Regulation - MMDR) சட்டம், 1957 மற்றும் நிலக்கரிச் சுரங்கங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 2015 (Coal Mines (Special Provisions) Act - CMSP Act) ஆகியவற்றைத் திருத்துகின்றது.
- MMDR சட்டமானது இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த சுரங்கத் துறையையும் ஒழுங்குபடுத்துகின்றது.
- இது திட்டங்களைச் செயல்படுத்துதல், எளிதாகத் தொழில் தொடங்குதல், நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றை விரைவுபடுத்துவதுடன் தாதுக்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்க இருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், திறந்தவெளி விற்பனைக்காக (ஏலம்) நிலக்கரிச் சுரங்கத் துறையில் நேரடி வழிமுறையின் கீழ் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை (foreign direct investment - FDI) மத்திய அரசு அறிவித்துள்ளது. அதோடு நிலக்கரியைத் தூய்மையாக்கல் போன்ற அதனோடு தொடர்புடைய உள்கட்டமைப்புகளையும் உருவாக்கியுள்ளது.
- இது எஃகு மற்றும் மின்சக்தி ஆகியவற்றிற்கு வெளியே பணியாற்றும் நிறுவனங்களுக்கும் இந்தத் துறையை அணுக அனுமதிக்கின்றது. அத்துடன் இது நுகர்வோர் கட்டுப்பாடுகளையும் நீக்குகின்றது.
- இது ஒரு திறனுள்ள எரிசக்திச் சந்தையை உருவாக்கி அதிக போட்டியைக் கொண்டு வருவதோடு நிலக்கரி இறக்குமதியையும் குறைக்க இருக்கின்றது.
- கடந்த ஆண்டு இந்தியா 235 மில்லியன் டன் நிலக்கரியை இறக்குமதி செய்தது. அதில் 171,000 கோடி ரூபாய் மதிப்பிலான 135 மெட்ரிக் டன் நிலக்கரியை உள்நாட்டு இருப்புக்களிலிருந்து பூர்த்தி செய்திருக்க முடியும்.
- இதன் மூலம் இந்தத் துறையில் ஆதிக்கம் செலுத்தும் கோல் இந்தியா நிறுவனத்தின் முற்றுரிமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

### *இந்த மசோதாவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள்*

- ❖ தற்போது, நிலக்கரி மற்றும் லிக்னைட் ஆகியவற்றின் வளவாய்ப்பு மற்றும் சுரங்கம் ஆகியவற்றிற்கு முறையே வளவாய்ப்பு உரிமம் மற்றும் சுரங்க குத்தகை என தனி உரிமங்கள் வழங்கப் படுகின்றன.
- ❖ இந்த மசோதாவானது ஒருங்கிணைந்த வளவாய்ப்பு உரிமம் மற்றும் சுரங்க குத்தகை ஆகியவற்றிற்கான நிலக்கரி / லிக்னைட் தொகுதிகளின் ஒதுக்கீட்டிற்காக ஒரு புதிய வகை உரிமத்தைச் சேர்க்கின்றது.
- ❖ மத்திய அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட படி, சொந்த நுகர்வு, விற்பனை அல்லது வேறு எந்த நோக்கங்களுக்காகவும் நிலக்கரி சுரங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள நிறுவனங்கள் அனுமதிக்கப் பட இருக்கின்றன.
- ❖ நிலக்கரி மற்றும் லிக்னைட் தொகுதிகளின் ஏலத்தில் பங்கேற்பதற்காக இந்தியாவில் எந்தவொரு நிலக்கரி சுரங்க அனுபவமும் நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டியது இல்லை என்று இந்த மசோதா தெளிவுபடுத்துகின்றது.
- ❖ முந்தைய குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட பல்வேறு ஒப்புதல்கள், உரிமங்கள் மற்றும் அனுமதிகள் ஆகியவை அடுத்து வரும் ஏலதாரருக்கு இரண்டு வருட காலத்திற்கு நீட்டிக்கப்படும் என்றும் இந்த மசோதா கூறுகின்றது.
- ❖ இந்தக் காலகட்டத்தில், புதிய குத்தகைதாரர் சுரங்க நடவடிக்கைகளைத் தொடர அனுமதிக்கப் படுவர்.
- ❖ MMDR சட்டத்தின் கீழ், குறிப்பிட்ட தாதுக்களுக்கான சுரங்க குத்தகைகள் (நிலக்கரி, லிக்னைட் மற்றும் அணுத் தாதுக்கள் தவிர மற்ற கனிமங்கள்) குத்தகை காலம் முடிவடையும் போது ஏலம் விடப்படுகின்றன.
- ❖ சுரங்க குத்தகை காலாவதியாகும் முன்னரே ஏலம் எடுக்க மாநில அரசுகள் முன்கூட்டியே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று இந்த மசோதா கூறுகின்றது.

## ஏற்றுமதிப் பொருட்கள் மீதான வரிகளை நீக்கும் திட்டம்

- ❖ இந்தியாவில் இருந்து சரக்கு ஏற்றுமதித் திட்டத்தை படிப்படியாகத் திரும்பப் பெற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இது ஏற்றுமதி பொருட்கள் மீதான வரிகளை நீக்கும் திட்டத்தினால் பின்னர் மாற்றப் படும்.
- ❖ கொரோனா வைரஸின் திடீர்ப் பெருக்கத்தினால் ஏற்றுமதிகள் மேலும் வீழ்ச்சியடையும் என்பதால் இச்சரக்கு ஏற்றுமதி திட்டமானது மாற்றப் படுகிறது.
- ❖ ஏற்றுமதிப் பொருட்கள் மீதான வரிகளை நீக்கும் திட்டமானது உலக வர்த்தக அமைப்பு விதிமுறைகளுக்கு இணங்குகிறது.
- ❖ ஏற்றுமதிப் பொருட்கள் மீதான வரிகளை நீக்கும் திட்டமானது ஏற்றுமதியாளர்கள் தாங்கள் செலுத்திய வரிப் பணத்தை திருப்பிப் பெருவதற்கான ஒரு திட்டமாகும்.
- ❖ இந்தியாவில் இருந்து சரக்கு ஏற்றுமதித் திட்டம் ஆனது 2% முதல் 5% வரை ஏற்றுமதி சலுகைகளை வழங்குகிறது.
- ❖ இது இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் (FTP 2015-20) கீழ் அறிமுகப் படுத்தப்பட்டது.
- ❖ இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் திட்டத்தின் நோக்கம் உலகளாவியத் தயாரிப்புகளோடு இந்தியத் தயாரிப்புகளைப் போட்டியிடச் செய்வது ஆகும்.

## நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் கடன் வழங்கும் வரம்புகள் திருத்தம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் கடன் வழங்கும் வரம்புகளை திருத்தி அமைத்துள்ளது.
- இதற்கு முன்பு இந்திய ரிசர்வ் வங்கியானது நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் மூலதன நிதியில் 15% நிதியை தனிநபருக்கும் 40% நிதியை குழுக்களுக்கும் என்ற அளவில் கடன் வழங்க அனுமதி வழங்கியுள்ளது.
- இது தற்பொழுது கடன் வாங்கும் குழுவின் நிதி வரம்பை அதன் நிதியில் 25% ஆக மாற்றியுள்ளது.
- கடன் வழங்கும் வரம்பு என்பது ஒரு வங்கி தன்னிடம் கடன் வாங்குபவர்களுக்காக வைத்துள்ள அதிகபட்ச கடன் அளவு வரம்பாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான முன்னுரிமைத் துறைகளுக்கான கடன் (priority sector lending - PSL) வழங்கும் இலக்கை 40% என்ற அளவிலிருந்து 75% ஆகத் திருத்தியுள்ளது.
- விவசாயம், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், குறைந்த வருமானம் கொண்ட குழுக்கள், ஏழை மக்களுக்கான வீட்டுவசதி, கல்விக் கடன்கள், நலிந்த பிரிவினருக்கான கடன்கள் ஆகியவை முன்னுரிமைத் துறைகளில் அடங்கும்.

## சரக்கு மற்றும் சேவைகள் வரி ஆணையத்தின் 39வது கூட்டம்

- சரக்கு மற்றும் சேவைகள் வரி (Goods and Services Tax – GST) ஆணையத்தின் 39வது கூட்டமானது சமீபத்தில் டெல்லியில் நிறைவடைந்தது. இந்தக் கூட்டத்தில் பல்வேறு பொருட்களுக்குப் பொருந்தக் கூடிய சரக்கு மற்றும் சேவைகள் வரி விகிதங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

### *முக்கிய முடிவுகள்*

- கைபேசிகள் மற்றும் அவற்றின் சில உதிரிப் பாகங்கள் மீதான GST வரி விகிதமானது 12%லிருந்து 18% ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
- விமானத்தின் எம்ஆர்ஓ (பராமரிப்பு பழுதுபார்ப்பு மாற்றியமைத்தல்) சேவைகள் மீதான GST வரி விகிதமானது 18 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.
- கையால் தயாரிக்கப்பட்ட மற்றும் இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட தீப்பெட்டிகள் மீதான GST வரி விகிதமானது 12% ஆகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

### *GST ஆணையம்*

- GST என்பது 101வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தால் 2016 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு அரசியலமைப்பு ரீதியிலான அமைப்பு ஆகும்.
- இது அரசியலமைப்பின் 279 ஏ என்ற சரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- இது மத்திய நிதியமைச்சர் அவர்களால் தலைமை தாங்கப் படுகின்றது.

## தங்க இறக்குமதி குறைவு

- ஏப்ரல் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை (2019 - 20) தங்கத்தின் இறக்குமதியானது முந்தைய ஆண்டை விட 8.86% அளவிற்கு குறைந்துள்ளதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- உலகிலேயே அதிக அளவு தங்கம் இறக்குமதி செய்யும் நாடு இந்தியா ஆகும்.

- தங்கம் மற்றும் எரிபொருள் இறக்குமதி காரணமாக இந்தியப் பொருளாதாரமானது அதிகரித்து வரும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.
- நடப்புக் கணக்குப் பற்றாக்குறை என்பது ஏற்றுமதியின் மூலம் பெறப்படும் பணத்திற்கும் இறக்குமதியின் மூலம் வெளியேறும் பணத்திற்கும் உள்ள வித்தியாசமாகும்.
- அதிகரித்து வரும் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை கொண்ட நாடு என்பது அந்த நாடு போட்டிச் சந்தையிலிருந்து வெளியேறுகின்றது என்பதைக் குறிக்கின்றது.
- முதலீட்டாளர்கள் முதலீடு செய்யத் தயாராக இல்லை என்பது இதன் பொருளாகும்.
- எனவே, தங்கம் மற்றும் எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கும் நடவடிக்கையானது நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைக்கும்.

## பணவழங்கீட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள்

- பணவழங்கீட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான (payment aggregators - PA) புதிய வழிகாட்டுதல்களை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.
- பணவழங்கீட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான மூலதனத் தேவைகளானது ஒருவர் உரிமத்திற்காக விண்ணப்பிக்கும் போது ரூ. 15 கோடியாகக் குறைக்கப்பட்டுள்து.
- பியூர் – ப்ளே எனப்படும் அசல் பணவழங்கீட்டு இடைமுக நிறுவனங்கள் ஒரு நிறுவனமாகப் பிரிக்கப்பட்டு வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிறுவனங்களுக்கான தொழில்நுட்பச் சேவை வழங்குநர்களாக அடையாளம் காணப்பட இருக்கின்றன.
- கடுமையான பாதுகாப்பு வழிகாட்டுதல்களைக் கடைபிடிக்கவும் அனைத்து KYC (Know Your Customer - உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்) மற்றும் AML (Anti Money Laundering- பணமோசடித் தடுப்பு) விதிகளையும் பின்பற்றவும் PAக்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.
- அங்கீகாரத்தின் இரண்டாவது காரணியாக ஏடிஎம் ரகசியக் குறியீடு மூலம் ஆன்லைன் (நிகழ்நேர) பரிவர்த்தனைகளை PAக்கள் அனுமதிப்பதை ரிசர்வ் வங்கி தடை செய்துள்ளது. இதை சில பணவழங்கீட்டு இடைமுக நிறுவனங்கள் ஒரு சேவையாக வழங்குகின்றன.

### *பணவழங்கீட்டு ஒருங்கிணைப்பாளர்கள்*

- இந்த நிறுவனங்கள் மின் வணிக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, அவற்றை வங்கிகளுடன் இணைக்கும் பணியை மேற்கொள்கின்றன.
- பணவழங்கீட்டு ஒருங்கிணைப்பாளர்கள் இந்த நிறுவனங்களின் சார்பாக பணம் பெறுகின்றார்கள். இவர்கள் பணத்தைத் தங்கள் கணக்குகளுக்கு மாற்றுகின்றார்கள்.



- பில்டெஸ்க், சி.சி. அவென்யூ, ஃபர்ஸ்ட்டேட்டா, ரேஸர்பே, கேஷ்ஃப்ரீ, பேடிஎம் பேமென்ட் கேட்வே மற்றும் பிற நிறுவனங்கள் போன்றவை மின்வணிக நிறுவனங்களுக்கு பணவழங்கீட்டுச் சேவைகளை வழங்குகின்றன.

## பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை

- பயிர்களைன் உற்பத்தி விலையின் 1.5 மடங்கு என்ற அளவிற்கு குறைந்தபட்ச ஆதார விலை (MSP – Minimum Support Price) நிர்ணயித்தலுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் நெல், கோதுமை மற்றும் பருப்பு வகைகள் உள்ளிட்ட 2019-20 ஆம் ஆண்டின் காரிப் மற்றும் ராபி காலப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு அதிகரித்துள்ளது.
- மத்திய அரசானது மாநில அரசுகள்/சம்பந்தப்பட்ட மத்திய அரசுத் துறைகள் மற்றும் இதரக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, விவசாயப் பொருட்களின் விலைகளுக்கான ஆணையத்தின் பரிந்துரைகளின் (CACP - Commission for Agricultural Costs & Prices) அடிப்படையில் கோதுமை, பருப்பு, எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட 22 பயிர் வகைகளுக்கு MSPஐ நிர்ணயித்துள்ளது.
- இது தவிர, டோரியா மற்றும் உறிக்கப்படாத தேங்காய் ஆகியவற்றிற்கான MSP ஆனது முறையே கடுகு, மற்றும் கொப்பரைத் தேங்காய் ஆகியவற்றின் MSPயின் அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகிறது.
- CACP ஆனது MSPஐப் பரிந்துரைக்கும் போது பின்வருவனவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது. அவையாவன உற்பத்தி விலை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பல்வேறு பயிர்களுக்கான ஒட்டுமொத்தத் தேவை மற்றும் விநியோக நிலை, உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு விலைகள், பயிர்களுக்கிடையேயான விலைச் சமநிலை, விவசாயம் மற்றும் விவசாயம் சாராத துறைகளுக்கிடையேயான வர்த்தக முறைகள், பொருளாதாரத்தின் விலைக் கொள்கையின் தாக்கம் (மற்ற துறைகளில்), நிலம், நீர் மற்றும் இதர உற்பத்தி வளங்களின் திறனுள்ள பயன்பாடு மற்றும் பயிரின் உற்பத்தி விலையை விட குறைந்தபட்சம் 50% அதிக வரம்பு ஆகியவையாகும்.
- டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான தேசிய விவசாயிகள் ஆணையமானது பயிரின் சராசரி உற்பத்தி விலையை விட MSP ஆனது 50 சதவிகிதம் அதிகமாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

**PRICE CHART**

Kharif MSP of major crops in 2019-20 (in ₹/quintal)

| Crop | 2018-19 | 2019-20 | % Increase |
|---|---|---|---|
| Paddy (common) | 1,750 | 1,815 | 3.71 |
| Jowar (Hybrid) | 2,430 | 2,550 | 4.9 |
| Bajra | 1,950 | 2,000 | 2.56 |
| Maize | 1,700 | 1,760 | 3.52 |
| Arhar (Tur) | 5,675 | 5,800 | 2.20 |
| Moong | 6,975 | 7,050 | 1.07 |
| Groundnut | 4,890 | 5,090 | 4.08 |
| Soybean (yellow) | 3,399 | 3,710 | 9.14 |
| Cotton (medium staple) | 5,150 | 5,255 | 2.03 |
| Cotton (long staple) | 5,450 | 5,550 | 1.83 |

Note: The kharif marketing season runs from July to June
Source: Government

**Proposed MSP for Rabi Crops**

(2019-20)

| Crops | Existing MSP (in Rs/quintal) | Proposed MSP (in Rs/quintal) | % Hike |
|---|---|---|---|
| Wheat | 1,840 | 1,925 | 4.61 |
| Barley | 1,440 | 1,525 | 5.9 |
| Mustard | 4,200 | 4,425 | 5.35 |
| Masur | 4,475 | 4,800 | 7.26 |
| Safflower | 4,945 | 5,215 | 5.4 |

## இன்வெஸ்ட் இந்தியா வணிக நோய் எதிர்ப்புத் தினம்

- இந்தியாவின் தேசிய முதலீடு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் ஆணையமான "இன்வெஸ்ட் இந்தியா" என்ற அமைப்பானது இன்வெஸ்ட் இந்தியா வணிக நோய் எதிர்ப்புத் தளத்தைத் தொடங்கியுள்ளது.

- இந்தத் தளமானது கொரானா வைரஸிற்கு எதிரான இந்தியாவின் எதிர்வினை மற்றும் நடவடிக்கைகள் குறித்த நிகழ் நேரத் தகவல்களை வழங்குகின்றது.
- இந்தத் தளமானது இந்திய சிறு தொழிற்துறை வளர்ச்சி வங்கியுடன் (SIDBI - Small Industries Development Bank of India) இணைந்துள்ளது.

## நிதிப் பரிமாற்றம்

- மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகமானது கோவிட் – 19 நோய் வெடிப்பின் பின்னணியின் காரணமாக கட்டுமானத் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நிதியினை மாற்றியுள்ளது.
- கட்டுமானத் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு ரூ.52,000 கோடி நிதியை மாற்றுமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை மத்தியத் தொழிலாளர் நலத் துறை அமைச்சகமானது அறிவுறுத்தியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது கட்டிடம் மற்றும் இதரக் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம், 1996ன் பிரிவு 60ன் படி இந்த அமைச்சகத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இச்சட்டத்தின் கீழ், செஸ் (cess) ஆனது அரசாங்கத்தின் கட்டுமானப் பணியில் பணியாற்றும் அல்லது இதர பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து முதலாளிகளிடமிருந்தும் வசூலிக்கப் படுகின்றது.
- இது மாநில அரசினால் வசூலிக்கப் படுகின்றது.

## பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகள்

- கொரானா வைரஸ் தொற்று நோயின் காரணமாக மத்திய நிதித் துறை அமைச்சரான நிர்மலா சீதா ராமன் பல்வேறு முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.

### *முக்கியமான நடவடிக்கைகள்*

- வங்கி ஏடிஎம்களில் பணம் எடுப்பதற்கு எந்தவொரு கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது.
- மேலும், வணிகப் பரிமாற்றங்கள் மீதான டிஜிட்டல் கட்டணங்கள் குறைக்கப் பட்டுள்ளன.
- பான் அட்டை மற்றும் ஆதார் அட்டை இணைப்பதற்கான கால வரம்பு ஜூன் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- விவாத் சே விஸ்வாஸ் என்ற திட்டமானது ஜூன் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- சொத்து வரிச் சட்டம், வருமான வரிச் சட்டம், கறுப்புப் பணச் சட்டம், பினாமி பரிவர்த்தனைகள் சட்டம் மற்றும் விவாத் சே விஸ்வாஸ் ஆகியவற்றின் வரம்பானது ஜூன் 30 ஆம் தேதிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ஜிஎஸ்டி வரித் தாக்கல், சப்கா விஸ்வாஸ் ஆகியவற்றுக்கான தாக்கல் தேதியானது மார்ச் 31ஆம் தேதிக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.

## மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணை, 2013

- மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணையானது (2013) ஆண்டுக்கு ரூபாய் 12,447 கோடி ரூபாய் பணத்தைச் சேமிக்க உதவியுள்ளது.

- மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணை என்பது இந்திய அரசாங்கத்தால் அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955 என்ற சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு உத்தரவாகும்.
- இந்த உத்தரவானது மருந்துகளின் விலையை நிர்ணயிப்பதற்கான விவரங்கள், விலையை அதிகரிக்க அல்லது குறைப்பதற்கான நடைமுறைகள், ஆணையை மீறினால் செலுத்த வேண்டிய அபராதம் முதலிய தகவல்களை வழங்குகிறது.
- இந்த உத்தரவானது மருந்துகளின் அதிகபட்ச விலையை நிர்ணயிக்க தேசிய மருந்து விலை ஆணையத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது.
- தேசிய அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள மருந்துகளின் விலைகளை மட்டுமே நிர்ணயிக்க தேசிய மருந்து விலை ஆணையத்திற்கு அனுமதி உள்ளது.
- இந்த பட்டியலை மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் 2011 ஆம் ஆண்டில் தயாரித்தது.

## விவசாயம் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்

- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது சிறு விவசாயிகள் வேளாண் - வர்த்தகக் கூட்டமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி மதிப்புச் சங்கிலியுடன் இணைப்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- 1985 ஆம் ஆண்டில் ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது நிறுவப் பட்டது.

## அணுகக் கூடிய இந்தியாவிற்கான புத்தாக்கம்

- மைக்ரோசாப்ட் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் தேசியச் சங்கமானது சமீபத்தில் "அணுகக் கூடிய இந்தியாவிற்கான புத்தாக்கம்" என்ற ஒரு பிரச்சாரத்தை அறிமுகப் படுத்தியது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளிக்கும் துறை ஆகியன இந்த முயற்சியில் உள்ள மற்ற பங்குதாரர்கள் ஆவர்.
- செயற்கை நுண்ணறிவு, மைக்ரோசாஃப்ட் கிளவுட் மற்றும் பிற தொழில்நுட்பங்களின் உதவியுடன் மாற்றுத் திறனாளிகளின் சிக்கல்களைத் தீர்ப்பதே இதன் நோக்கமாகும்.
- மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் தேசியச் சங்கத்தின் மேற்பார்வையில் தேசியத் திறன்மிகு அரசு நிறுவனம் மற்றும் இந்தியத் தரவு பாதுகாப்புக் குழுவானது இயங்குகிறது.

## உலகின் மீன் உற்பத்தி

- இந்தியா உலகில் மீன்வளர்ப்பு மூலம் மீன் உற்பத்தி செய்யும் ஒரு முக்கியமான நாடாகும்.
- மீன்களின் உலகளாவியப் பன்முகத் தன்மையில் 10 சதவீதத்திற்கும் அதிகமானவை இந்தியாவில் உள்ளன.
- ஓர் ஆண்டிற்கான மீன் உற்பத்தியானது சுமார் 9.06 மில்லியன் மெட்ரிக் டன்னுடன், உலகின் மொத்த மீன் உற்பத்தியில் தற்போது இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

- மீன்வளர்ப்பு உற்பத்தியில் இரண்டாவது பெரிய நாடான இந்தியாவின் உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு ஆகியவற்றின் பங்கு மொத்த மீன் உற்பத்தியில் 1980 ஆம் ஆண்டுகளில் 46 சதவீதத்திலிருந்து சமீபத்திய ஆண்டுகளில் 85 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் மீன்வளர்ப்பு உற்பத்தியை நன்னீர் மற்றும் உவர் நீர் உற்பத்தி என வகைப்படுத்தலாம்.
- நன்னீர் மீன் உற்பத்தியானது மொத்த மீன்வளர்ப்பு உற்பத்தியில் 95 சதவீதத்திற்குப் பங்களிக்கிறது.

**Top five fisheries States in India in 2017-18** *(in lakh tonnes)*

| States | Inland | Marine | Total |
|---|---|---|---|
| Andhra Pradesh | 28.45 | 6.05 | 34.5 |
| West Bengal | 15.57 | 1.85 | 17.42 |
| Gujarat | 1.34 | 7.01 | 8.35 |
| Kerala | 5.34 | 1.51 | 6.85 |
| Tamil Nadu | 1.85 | 4.97 | 6.82 |
| **All India production** | **89.02** | **35.88** | **125.9** |

**Trend in export of marine products** *(in ₹ cr)*

| | |
|---|---|
| 2011-12 | 16,597.23 |
| 2012-13 | 18,856.26 |
| 2013-14 | 30,213.26 |
| 2014-15 | 33,441.61 |
| 2015-16 | 30,420.83 |
| 2016-17 | 37,870.90 |
| 2017-18 | 45,106.89 |

## வட்டார கிராம வங்கிகளின் மறு மூலதனமாக்கம்

- பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையானது 2020 ஆம் ஆண்டு மார்ச் 25 அன்று மூலதனம் மற்றும் இடர் உண்டாக்கும் சொத்துக்களின் விகிதத்தை (CRAR - Capital to Risk weighted Assets Ratio) மேம்படுத்துவதற்காக வட்டார கிராம வங்கிகளின் (RRB - Regional Rural Banks) மறுமூலதனமாக்கத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மேம்படுத்தப்பட்ட CRAR ஆனது கிராமப் பகுதிகளில் RRBகளின் கடன் வழங்கும் திறனைப் பூர்த்தி செய்ய உதவும்.
- RRBகள் தனது கடன் வழங்குதலில் முன்னுரிமைத் துறைக் கடனுக்கு 75% நிதியை அளிக்க வேண்டும்.
- இந்த மறுமூலதன நிதியானது 9% என்ற குறைந்தபட்ச CRAR விகிதத்தை நிர்வகிக்காத வங்கிகளுக்கு அளிக்கப்பட இருக்கின்றது.
- ஒரு வங்கிக்கான CRAR ஆனது இந்திய ரிசர்வ் வங்கியினால் நிர்ணயிக்கப் படுகின்றது.
- RRBகளின் மறுமூலதனமாக்கல் என்ற திட்டமானது 2011 ஆம் ஆண்டில் டாக்டர்.கே.சி. சக்கரபர்த்தி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தொடங்கப் பட்டுள்ளது.

## உரங்களுக்கான மானியம்

- நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 1182.04 இலட்சம் மெட்ரிக் டன் உரங்கள் விற்கப் பட்டுள்ளதாக நாடாளுமன்ற நிலைக் குழு அறிக்கையானது கூறியுள்ளது.
- தற்பொழுது உரங்களை வாங்குபவர் அல்லது விவசாயிகளின் அடையாளமானது ஆதார் மூலம் அடையாளம் காணல், கிசான் கடன் அட்டை, உயிரித்தரவு அல்லது பயோமெட்ரிக் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றின் மூலம் உறுதி செய்யப் படுகின்றது.
- உர நிறுவனங்களின் இந்த மானியங்கள் பயனாளிகளுக்குச் சில்லறை விற்பனையாளர்களால் விற்பனை செய்யப்பட்ட இரசீதுகளின் அடிப்படையில்

அந்நிறுனங்களுக்கு வழங்கப் படுகின்றது.

- உரங்களுக்கான மானியங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5% எடுத்துக் கொள்கின்றது. உணவுப் பொருளுக்கு அடுத்து இரண்டாவது மிகப்பெரிய நுகர்வு இதுவாகும்.
- யூரியா, பொட்டாஷ் உரம் மற்றும் டை-அம்மோனியம் பாஸ்பேட் ஆகியவை உரங்களின் 3 முக்கியமான வகைகளாகும்.
- இந்த அனைத்து உரங்களிடையே, யூரியா 86% பங்கைக் கொண்டுள்ளது.
- தற்பொழுது, இந்திய அரசு யூரியாவின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி, என்பிகே (நைட்ரஜன், பாஸ்பரஸ், மற்றும் பொட்டாசியம்) வகை உரங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது.

## திருத்தியமைக்கப்பட்ட மின்னணு உற்பத்தித் தொகுப்புகள் திட்டம் (EMC 2.0)

- இந்தத் திட்டமானது மின்னணு உற்பத்தித் தொகுப்புகள் திட்டத்தின் மூலம் பொது வசதிகள் மற்றும் சேவைகளுடன் சேர்த்து ஒரு உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வளர்ச்சியை வழங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது EMCகள் (Electronics Manufacturing Clusters - EMC) மற்றும் பொதுச் சேவை மையங்கள் ஆகிய இரண்டையும் அமைப்பதற்கு உதவ இருக்கின்றது.
- EMCகளானது ESDM (Electronics System Development and Maintenance – மின்னணு அமைப்பு மேம்பாடு மற்றும் பராமரிப்பு) அலகுகளுக்காக அடிப்படைக் கட்டமைப்பு, சேவைகள் மற்றும் இதரப் பொது வசதிகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் வகையில் புவுயியல் ரீதியில் தொடர்ச்சியாக இருக்கும் நிலப்பரப்புப் பகுதிகளில் அமைக்கப்பட இருக்கின்றது.
- குறிப்பிட்ட சில பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான ESDM அலகுகள் உள்ளன. EMCகள், தொழிற்சாலைப் பகுதிகள்/பூங்காக்கள், தொழிற்சாலைப் பெருவழிப் பாதைகளில் அமைந்துள்ள அந்த சில ESDM அலகுகளுக்காக பொதுத் தொழில்நுட்பக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் பொதுச் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றின் மீது பொதுச் சேவை மையங்கள் கவனம் செலுத்த இருக்கின்றன.

## கோவிட் – 19 மறுவாழ்வு மற்றும் நிவாரண நிதி

- இந்தியத் தொழில் துறைக் கூட்டமைப்பானது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புனர் வாழ்விற்கு உதவுவதற்காக ஒரு நிதியினை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த நிதியானது அதன் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களிடமிருந்துப் பெறப்பட இருக்கின்றது.

## மாற்றியமைக்கப்பட்ட புதிய விலை திட்டம் - III

- மாற்றியமைக்கப்பட்ட புதிய விலை திட்டம் - III எனும் திட்டத்தில் உள்ள தெளிவின்மைகளை அகற்ற மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது.
- இது யூரியா உற்பத்தி அலகுகளின் விலையைத் தீர்மானிக்க முன்னெடுக்கப் பட்டுள்ளது.
- மாற்றியமைக்கப்பட்ட புதிய விலை திட்டம் - III, 2014 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- மாற்றியமைக்கப்பட்ட திட்டமானது உள்நாட்டு யூரியா உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்கியது, யூரியா உற்பத்தித் துறையில் முதலீட்டை

ஊக்குவித்தது, யூரியா இறக்குமதியைக் குறைத்தது.

- இது யூரியா உற்பத்தியில் தன்னிறைவை அடைவதை முக்கியமான நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மாவட்ட கனிம அறக்கட்டளை

- உலகளாவிய தொற்றுநோயான புதிய வகை கொரானா வைரஸ் நோய்க்கான (COVID-19) பதிலடி மற்றும் ஆயத்த நிலையை ஏற்படுத்தவும் அந்நோயை எதிர்க்கவும் மாநில அரசுகள் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியைப் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் கூறியுள்ளார்.
- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம் 2015 எனும் சட்டத்தின் கீழ் மாவட்ட கனிம அறக்கட்டளைகள் நிறுவப் பட்டன.
- ஒவ்வொரு சுரங்க உரிமையாளரும் இந்நிதிக்கு தங்கள் லாபத் தொகையில் 10% அளவிற்குப் பங்களிக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் கூறுகிறது.
- இது சுரங்கத் தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நலனுக்காகப் பணியாற்றும் இலாப நோக்கற்ற அறக்கட்டளைகள் ஆகும்.
- சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இது அமைக்கப் பட்டுள்ளது.
- இதன் செயல்பாட்டு முறையானது அந்த அறக்கட்டளை தொடர்புடைய மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் வருகிறது.
- இந்த நிதி மாவட்ட அளவில் சேகரிக்கப்படுகிறது.

### *பிரதான் மந்திரி கானிஜ் சேத்ரா கல்யாண் யோஜனா*

- மாவட்ட கனிம அறக்கட்டளைகளால் உருவாக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி சுரங்கம் தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக இந்த திட்டம் பயன்படுத்தப் படுகிறது.
- பின்வரும் விவகாரங்களுக்கு "அதிக முன்னுரிமை" கொடுத்து இந்த நிதி பயன்படுத்தப் படும்.
    - குடிநீர்
    - உடல்நலம்
    - பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்
    - கல்வி
    - வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாடு
    - வயதான மற்றும் ஊனமுற்றோரின் நலன்
    - துப்புரவு



## ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள்

- கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக மத்திய வங்கி தனது நிதிக் கொள்கைக் குழு கூட்டத்தை திட்டமிட்ட தேதிக்கு முன்பாகவே நடத்தியுள்ளது.
- இது 2019-20 நிதியாண்டிற்கான ரிசர்வ் வங்கியின் இரு மாதத்திற்கு ஒருமுறை வெளியிடப்படும் 7வது நிதிக் கொள்கை அறிக்கையாகும்.
- ரிசர்வ் வங்கி இந்தியப் பொருளாதாரத்தில் ரூ.3.74 லட்சம் கோடியைச் செலுத்த உள்ளது.
- ரெப்போ விகிதம் 75 அடிப்படைப் புள்ளிகள் (Basis points) குறைக்கப் பட்டு 4.4% ஆகவும், ரிவர்ஸ் ரெப்போ விகிதம் 90 அடிப்படை புள்ளிகள் குறைக்கப் பட்டு 4% ஆகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- அனைத்துக் கடன்களுக்கும் மூன்று மாத கால அவகாசம் வழங்க ரிசர்வ் வங்கியானது வங்கிகளுக்கும், வங்கி அல்லாத நிதி நிறுவனங்களுக்கும் (வீட்டுக் கடன் வழங்குனர்களும் பிற நிதி நிறுவனங்களும் இதில் அடங்கும்) உத்தரவு இட்டுள்ளது.
- ரொக்க இருப்பு விகிதம் 100 அடிப்படைப் புள்ளிகள் குறைக்கப்பட்டு நிகர நேர மற்றும் தேவைப் பொறுப்புகளில் 3% ஆக குறைக்கப் பட்டுள்ளது.
- இது வங்கிகளுக்குள் ரூ.1,37,000 கோடி மதிப்புள்ள நிதியை வெளியிடும்.
- மத்திய வங்கியின் ஒட்டுமொத்த நிதி உட்செலுத்துதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.2 சதவீதமாக உள்ளது.
- ரிசர்வ் வங்கி 2020 ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு இடையில் நிகர நிலையான நிதி விகிதத்தை (Net Stable Funding Ratio) அறிமுகப்படுத்த உள்ளது.
- இது கிடைக்கப் பெறும் நிலையான நிதியுதவியின் அளவுக்கும் தேவைப்படும் நிலையான நிதியுதவியின் அளவுக்கும் இடையிலான ஒரு விகிதமாகும்.
- 21 நாட்கள் நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நிலையில், இவை செயல்படாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட வேண்டும் என்று கவலைப் படாமல், நிறுவனங்களுக்கானச் செயல்பாட்டு மூலதனச் சுழற்சியை மறுசீரமைக்க ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ளது.
- விளிம்பு நிலை வசதி என்று அழைக்கப்படும் ஒரு அவசர கடன் வழங்கு முறையின் கீழ் 1.37 லட்சம் கோடி ரூபாய் கிடைக்கச் செய்யப் படும்.
- இதன் மூலம் வங்கிகள் தங்களது வைப்பு நிதிகளின் மேல் தற்போது உள்ள 2 சதவிகிதம் என்ற நிலையிலிருந்து 3 சதவிகிதம் என்ற அளவிற்கு கடன் வாங்க இயலும்.

## திட்டங்களை நிறுத்தி வைத்தல்

- கொரானா வைரஸ் தொற்றானது வருவாய் வசூலைப் பாதித்துள்ள நிலையில் இந்திய அரசானது மூன்று முக்கியமான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதை நிறுத்தி வைத்துள்ளது.
- 2019-20ஆம் நிதியாண்டிற்கான வருவாய் வசூலானது முதல் 11 மாதங்களில் 3.5 சதவிகிதம் என்ற அளவில் குறைந்துள்ளது.
- மத்திய உணவுத் துறை அமைச்சகமானது முன்பு மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய் அகிய்வற்றின் மீது வரிகள் விதிக்க முன்மொழிவு செய்து இருந்தது.
- மத்திய உணவுத் துறை அமைச்சகமானது மானிய விலையில் அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றை மில்லியன் கணக்கிலான மக்களுக்கு வழங்கவும் பரிந்துரைத்திருந்தது.

- மேலும் உணவுத் துறை அமைச்சகமானது 5 டிரில்லியன் ரூபாய் செலவிலான வைட்டமின் செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்கும் திட்டத்திற்கும் பரிந்துரைத்திருந்தது.

## பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதி (PMNRF)

- இது அப்போதைய பிரதமரான ஜவஹர்லால் நேரு அவர்களால் ஏற்படுத்தப் பட்டது.
- இந்த நிதியின் தலைவர் பிரதமர் ஆவார்.
- இது பாராளுமன்றத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டது அல்ல.
- PMNRF (Prime Minister's National Relief Fund) ஆனது இயற்கைப் பேரிடர் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடர்கள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.
- இதில் அமில வீச்சு, விபத்துகள் மற்றும் கலவரங்கள் ஆகியவையும் உள்ளடங்கும்.
- மேலும் இது சிறுநீரக மாற்று, வெப்பம் சார்ந்த சிகிச்சை மற்றும் அறுவை ச்சிகிச்சைகளுக்காகவும் வேண்டி மக்களுக்கு ஒதுக்கப் படுகின்றது.
- இது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் தன்னார்வமாக வழங்கப்படும் நிதியை மட்டும் ஏற்றுக் கொள்கின்றது.
- அரசின் பட்ஜெட்டில் இருந்து வரும் நிதி அல்லது பொதுத் துறை நிறுவனங்களின் மீதித் தொகை ஆகியவை இதில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

## PM – CARES நிதி

- பிரதமர் மோடி PM – CARES என்ற நிதியினை அறிவித்துள்ளார்.
- PM – CARES (Prime Minister's Citizen Assistance and Relief in Emergency Situations) என்பது அவசரக் காலங்களில் பிரதம மந்திரியின் குடிமக்கள் உதவிக்கான நிதி என்பதாகும்.
- இந்த நிதியானது கோவிட் – 19 தொற்றைப் போன்ற நெருக்கடியான அல்லது அவசர கால சூழ்நிலைகளைக் கையாளுவதற்காக ஏற்படுத்தப்படுகின்றது.

### *இது பற்றி*

- இந்த அமைப்பின் தலைவர் பிரதமர் ஆவார்.
- மத்திய நிதியமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகியோர் இந்த அமைப்பில் உள்ள பிற உறுப்பினர்கள் ஆவர்.
- PM-CARES அமைப்பிற்கு நன்கொடையாக வழங்கப்படும் நிதியானது வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80 (G)ன் கீழ் வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.
- இந்த நிதியின் வங்கிக் கணக்கானது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிடம் உள்ளது.

## பெரிய வங்கிகள் ஒருங்கிணைப்புத் திட்டம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அரசிற்குச் சொந்தமான 10 வங்கிகளை 4 வங்கிகளாக ஒருங்கிணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கின்றது.
- மத்திய ரிசர்வ் வங்கிச் சட்டமானது பொது நலன் தொடர்பாக இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகளில் திருத்தங்களை மேற்கொள்ள இந்திய அரசிற்கு அனுமதி வழங்கியுள்ளது.

- இந்த அதிகாரத்தின் மூலம், மத்திய நிதித் துறை அமைச்சர் இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தை முன்மொழிவார். இந்தத் திட்டமானது மத்திய ரிசர்வ் வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்படும்.

**NEXT-GEN BANKS** Figures in ₹ trillion

| Merged entity | Total assets | Gross NPA | No. of branches | M-cap (Aug 30) |
|---|---|---|---|---|
| PNB+OBC+United Bank | 12.0 | 1.1 | 11437 | 0.5 |
| Canara+Syndicate Bank | 10.0 | 0.6 | 10342 | 0.2 |
| Union+Corporation+Andhra Bank | 9.6 | 1.0 | 9609 | 0.3 |
| Indian Bank+Allahabad Bank | 5.3 | 0.4 | 6104 | 0.2 |

All figures, except market cap, are as of March 31, 2019. Figures have been rounded off to the nearest decimal
Source: Capitaline Compiled by BS Research Bureau

*இது பற்றி*

- இந்தத் திட்டத்தின் படி, இந்திய யுனைடெட் வங்கி மற்றும் ஒரியண்டல் வணிக வங்கி ஆகியவை பஞ்சாப் தேசிய வங்கியுடன் இணைக்கப்பட இருக்கின்றது.
- சிண்டிகேட் வங்கியானது கனரா வங்கியுடன் ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றது.
- அலகாபாத் வங்கியானது இந்திய வங்கியுடன் ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றது.
- மேலும், ஆந்திரா வங்கி மற்றும் கார்ப்பரேசன் வங்கியானது இந்திய யூனியன் வங்கியுடன் இணைக்கப்பட இருக்கின்றது.

## தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதி

- ஆசிய வளர்ச்சி வங்கியானது தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதியில் (National Investment and Infrastructure Fund – NIIF) 100 மில்லியன் அமெரிக்க டாலரை முதலீடு செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது.
- NIIF நிதியானது 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இந்த நிதியின் முக்கிய நோக்கம் நாட்டில் புதிதாக ஏற்படுத்தப்பட இருக்கும் பசுமைவழித் திட்டங்கள் மற்றும் நடைமுறையில் ஏற்கனவே உள்ள (பழுப்புவழி) திட்டங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளித்தலாகும்.
- NIIF ஆனது இந்த நிதியைப் போக்குவரத்து, ஆற்றல், நீர், வீட்டு வசதி, நீர் மேலாண்மை ஆகியவற்றில் முதலீடு செய்வதைக் கட்டாயமாக்கியுள்ளது.
- NIIFன் கீழ் முக்கியமான 3 நிதிகள் உள்ளன.
- மாஸ்டர் நிதி, நிதிகளின் நிதி மற்றும் உத்திசார் முதலீட்டு நிதி ஆகியவை இதில் அடங்கும்.

NIIF
National Investment & Infrastructure Fund

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பிரபஞ்சத்தில் (பேரண்டத்தில்) மிகப்பெரிய வெடிப்பு

- எக்ஸ் கதிர் மற்றும் ரேடியோ தொலைநோக்கிகளைப் பயன்படுத்திப் பெரு வெடிப்பிற்குப் பிறகு பிரபஞ்சத்தில் காணப்பட்ட மிகப்பெரிய வெடிப்பை வானியலாளர்களைக் கொண்ட சர்வதேச குழுவானது கண்டுபிடித்துள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பிற்காக 3 தொலைநோக்கிகள் பயன்படுத்தப் பட்டன.
- அவையாவன:
    - NASAவின் (தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகம் - National Aeronautics and Space Administration) சந்திரா எக்ஸ்ரே ஆய்வகம்
    - ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் (ESA - European Space Agency) எக்ஸ்எம்எம் - நியூட்டன் மற்றும்
    - மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள முர்ச்சீசன் வைட்ஃபீல்ட் அரே (MWA - Murchison Widefield Array) ஆய்வகம்.
- பூமியிலிருந்து 390 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஓபியுச்சஸ் விண்மீன்த் திரள் குழுவில் (Ophiuchus galaxy cluster) இந்த வெடிப்பு நிகழ்ந்தது.
- இந்த வெடிப்பின் ஆற்றலானது விண்மீன் தொகுப்பில் உள்ள வெப்பமான வாயுக்களைக் கொண்ட பிளாஸ்மாவில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியது.

## பூமியின் 2வது சந்திரன்

- சிறிய சந்திரன் (நிலவு) அல்லது பூமியின் 2வது சந்திரன் என அழைக்கப்படும் "2020 சிடி 3" ஆனது அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள நாசாவினால் நிதியுதவி அளிக்கப்படும் கேட்டலினா வான் ஆய்வகத்தின் மூலம் கண்டுபிடிக்கப் பட்டது.
- இது மகிழுந்தின் அளவைப் போன்ற ஒரு சிறுகோள் ஆகும். இதன் விட்டம் சுமார் 1.9-3.5 மீட்டர் ஆகும்.
- இந்த சிறிய சந்திரன் ஆனது நமது நிரந்தர நிலவைப் போல் அல்லாமல் பூமியின் சுற்றுப்பாதையில் இருந்து விடுபட்டு அதன் சொந்த வழியில் செல்லும் ஒரு தற்காலிக நிலவாகும்.
- இந்த சிறுகோள் பூமியின் சுற்றுப்பாதையை கடக்கின்றது. நமது நிரந்தரமான சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசைக்கு உட்படும் போது அது சில ஆண்டுகளாக பூமியின் சுற்றுப்பாதையில் பயணித்து, அதன் பின்னர் இதிலிருந்து விடுபட்டு சூரியனைச் சுற்றியுள்ள சுற்றுப்பாதையில் செல்லும்.
- இந்த வகை சிறுகோள் "தற்காலிகமாகப் பிடிக்கப்பட்ட பொருள்" என்று அழைக்கப் படுகின்றது.
- இந்த 2வது சந்திரன் ஆனது 3 ஆண்டுகளாக பூமியின் சுற்றுப்பாதையில் பயணிக்கின்றது.
- முன்னதாக RH120 ஆனது 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று 27 அங்குல அளவுடன் கண்டுபிடிக்கப் பட்டது.



## சிவப்புப் பாண்டா

- சீன அறிவியல் நிறுவனமானது சிவப்புப் பாண்டா இனங்கள் அவற்றின் மரபணு ஆய்வின் அடிப்படையில் இரண்டு தனித்தனி இனங்கள் என்று கண்டுபிடித்துள்ளது.
- டிஎன்ஏ பகுப்பாய்வில் மூன்று மரபணு குறிப்பான்களில் சீன சிவப்புப் பாண்டாக்கள் மற்றும் இமயமலை சிவப்புப் பாண்டாக்கள் ஆகிய இரண்டு இனங்களுக்கு இடையில் வேறுபாட்டை இவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த அங்கீகாரமானது ஆபத்து நிலையில் உள்ள பாலூட்டிகளின் பாதுகாப்பிற்காக நமக்கு உதவ இருக்கின்றது.



## சூப்பர் எர்த் (வெளிக்கோள்)

- K2-18 b என்பது ஒரு எம் வகை நட்சத்திரத்தைச் சுற்றி வரும் ஒரு வெளிக்கோள் (சூப்பர் எர்த்) ஆகும்.
- கே 2-18 பி திரவ நீர் மற்றும் உயிர் வாழக்கூடிய நிலைமைகளைக் கொண்டிருக்கக் கூடும் என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குழு அறிவித்துள்ளது.
- K2-18b என்பது பூமியை விட இரு மடங்கு பெரிய அளவிலான ஒரு வெளிக்கோள் ஆகும்.

## 2020 ஏவி 2 சிறுகோள்

- வானியல் இயற்பியலாளரான ஜியான்லூகா மாசி என்பவர் 2020 ஏ.வி 2 என்ற சிறுகோளை வெள்ளிக் கோளின் சுற்றுப் பாதையிலேயே முழுமையாக சுற்றும் முதலாவது சிறுகோள் என உறுதிப் படுத்தியுள்ளார்.
- 2020 ஏவி 2 ஆனது ஸ்விக்கி டிரான்சிண்ட் ஆய்வு அமைப்பால் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் தேதியன்று கண்டுபிடிக்கப் பட்டது.

## தில்லியில் இரண்டாவது மேகக் கணினி (cloud) பகுதி

- கூகுள் நிறுவனமானது தனது 2வது இந்திய மேகக் கணினிப் பிராந்தியத்தை 2021 ஆம் ஆண்டில் தில்லியில் திறக்க இருக்கின்றது.
- தில்லி கிளவுட் பிராந்தியமானது சேவைத்துறை பிரச்சினைகளிலிருந்துப் பாதுகாப்பு அளிப்பதற்காக மூன்று மண்டலங்களைக் கொண்டிருக்கும்.
- முதலாவது இந்திய மேகக் கணினிப் பகுதியானது மும்பையில் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இது சுகாதார மற்றும் நிதிச் சேவைகளுக்கும் நாடு முழுவதும் உள்ள பொதுத் துறை நிறுவனங்களுக்கும் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில், கூகுள் நிறுவனமானது 22 கிளவுட் தரவு மையங்களைக் கொண்டுள்ளது. கூகுள் கிளவுட் மையங்கள் பிற நிறுவனங்களின் தரவை அந்தப் பிராந்தியத்திற்குள்ளேயே சேமிக்க உதவுகின்றன.

### *கிளவுட் (cloud) பகுதி*

- கிளவுட் பகுதி என்பது தங்களது தரவுகளைச் சேமித்து வைக்கக் கூடிய ஒரு குறிப்பிட்ட புவியியல் இருப்பிடமாகும்.
- இதற்காக பெரும்பாலான பகுதிகளில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மண்டலங்கள் உள்ளன.

## மரபணு மாற்றக் கருவி - பார்வையின்மைக்குச் சிகிச்சையளிக்க முதன்முறையாகப் பயன்படுத்தப்படல்

- அமெரிக்காவின் போர்ட்லேண்டில் உள்ள ஓரிகான் பல்கலைக்கழகத்தில் பார்வையின்மைக்குச் சிகிச்சையளிக்க CRISPR எனப்படும் மரபணு மாற்றக் கருவியானது முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டது.
- இருப்பினும், நோயாளியின் பார்வை மீட்கப்பட்டுள்ளதா எனச் சோதிக்க ஒரு மாதம் ஆகும் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.
- இந்த மரபணு மாற்ற நுட்பமானது டி.என்.ஏ ஒரு நபரின் உடலுக்குள் இருக்கும் போதே மரபணுவைத் திருத்த முயற்சிக்கின்றது.

## ஜீனோம் (மரபணு) இந்தியா திட்டம்

- சமீபத்தில் ஜீனோம் இந்தியா திட்டம் (Genome India Project - GIP) என்ற ஒரு மரபணு குறியாக்கத் திட்டத்திற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது ஒப்புதல் அளித்துள்ளது.
- ஜீனோம் இந்தியா திட்டம் என்பது மருத்துவம், விவசாயம் மற்றும் வாழ்க்கை அறிவியலில் புதிய செயல்திறனை செயல்படுத்த உதவும் 20 நிறுவனங்களின் ஒத்துழைப்பாகும்.
- இது இந்திய மக்களைப் பாதிக்கும் நோய்கள் மற்றும் குணாதிசயங்களின் வகை மற்றும் தன்மையை முழுமையாக புரிந்து கொள்வதற்காக இந்திய “குறிப்பு மரபணுவின்” தொடரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *ஜீனோம் (மரபணு)*

- ஒரு மரபணுத் தொகுதி என்பது ஒரு உயிரினத்தின் அனைத்து மரபணுக்களையும் கொண்ட ஒரு கூறாகும்.

- இது ஒரு உயிரினத்தின் முழுமையான டி.என்.ஏ தொகுப்பாகும். இது அந்த உயிரினத்தின் அனைத்து மரபணுக்களையும் உள்ளடக்கியுள்ளது.
- ஒவ்வொரு மரபணுவும் அந்த உயிரினத்தை உருவாக்குவதற்கு மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் கொண்டுள்ளது.

## ஆயுஷ் தொடர்

- மத்திய ஆயுஷ் அமைச்சகமானது ஆயுஷ் தொடர் என்ற டிஜிட்டல் தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தத் தொடரானது ஆயுஷ் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களுடன் தொடர்புடைய சேவைகளை வழங்குகின்றது. இது பாரம்பரிய சுகாதாரச் சேவையை மேம்படுத்துகின்றது.
- "ஆயுஷ் தொடர்" என்ற தளமானது முழு ஆயுஷ் துறையையும் டிஜிட்டல் மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய ஆயுஷ் அமைச்சகமானது தேசிய ஆயுர்வேத நோய் பாதிப்புக் குறியீடுகளை உருவாக்கியுள்ளது.
- இந்த குறியீடுகள் ஆயுர்வேதத்தில் விவரிக்கப்பட்டுள்ள நோய்களை வகைப் படுத்துகின்றன.
- இந்த முன்முயற்சியின் முதலாவது நிலையில் காசா (KAsa), குஸ்தா (Kushtha), ஜூவாரா (Jwara) மற்றும் சுவாசா (Shwasa) என 4 நோய் நிலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- மத்திய ஆயுஷ் அமைச்சகமானது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றது.

## பாலிமர் மின்பகுளி சவ்வு எரிபொருள் மின்கலம்

- ஹைதராபாத்தில் உள்ள தூள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்பட்ட ஆராய்ச்சி (Advanced Research for Powder Metallurgy & New Materials - ARCI) நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 1 கிலோவாட் முதல் 20 கிலோவாட் வரை மின்சாரம் கொண்ட பாலிமர் மின்பகுளி சவ்வு எரிபொருள் மின்கல (polymer electrolyte membrane fuel cell - PEMFC) அமைப்புகளை உருவாக்கியுள்ளனர்.
- ARCI என்பது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சித் தன்மை கொண்ட வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமாகும்.
- PEMFCகள் புரோட்டான் - பரிமாற்ற சவ்வு எரிபொருள் மின்கலங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன.
- இவை குறைந்த வெப்பநிலையில் இயங்குகின்றன.
- வழக்கமான மின்கல காப்பு அமைப்புகளால் பயன்படுத்தப்படும் தொடர் ஆற்றலின் தேவையின்றி எரிபொருள் செல் அமைப்புகள் ஹைட்ரஜன் வாயுவைப் பயன்படுத்தி நிலையான மின்சாரத்தை வழங்குகின்றன.
- அவசரகாலச் சூழ்நிலைகளில் உடனடியாகச் செயலாற்றும் அவசரகாலச் செயல்பாட்டு மையங்கள் போன்ற பயன்பாடுகளுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## சஹ்யாத்ரி மேகா

- நெல் சாகுபடி குறைவதைத் தடுக்கும் பொருட்டு, கர்நாடகாவின் சிவமொகாவில் உள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலை அறிவியல் பல்கலைக் கழகமானது (University

of Agricultural and Horticultural Sciences - UAHS) 'சஹ்யாத்ரி மேகா' என்ற ஒரு புதிய சிவப்பு வகை நெல் வகையை உருவாக்கியுள்ளது.

- இந்த வகையானது வெடிப்பு நோயை எதிர்க்கும் தன்மை உடையதாகவும் ஊட்டச் சத்துக்கள் நிறைந்ததாகவும் உள்ளது.
- இந்தப் புதிய வகையானது மாநில அளவிலான துணை விதைக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. மேலும் இது வரும் காரீப் பருவத்திலிருந்து விவசாயிகளுக்கு கிடைக்கும்.
- புதிய வகையை மேம்படுத்துவதற்கான மற்றொரு நோக்கம் நகர்ப்புறங்களில் உள்ள சுகாதார ஆர்வமுள்ள நுகர்வோரால் நுகரப்படும் நார் மற்றும் புரதம் நிறைந்த சிவப்பு அரிசியின் தேவையைப் பூர்த்தி செய்வதாகும்.

## சூரியப் புள்ளிகள்

- கொல்கத்தாவில் உள்ள IISER நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களால் அடையாளம் காணப்பட்ட சூரியப் புள்ளிகள் ஒரு புதிய சூரிய சுழற்சியின் தொடக்கத்தைக் குறிப்பிடுகின்றன.
- 25வது சுழற்சி தற்பொழுது தொடங்கியதற்கான அறிகுறிகள் காணப் படுகின்றன.
- சூரியப் புள்ளிகள் சூரியனின் மேற்பரப்பில் ஒப்பீட்டளவில் குளிரான இடங்களாக உள்ளன.
- ஏறக்குறைய 11 ஆண்டுகள் நீடிக்கும் சுழற்சிகளில் அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது மற்றும் குறைகின்றது.
- சூரியப் புள்ளிகள் ஒரு தலைமைப் புள்ளி மற்றும் பின்தொடரும் புள்ளி என்றவாறு ஜோடிகளாக நிகழ்கின்றன.
- இவை சூரியனுக்குள் ஆழ்ந்த பகுதியில் தோன்றுகின்றன. இவை சூரியனை விட்டு வெளியேறும் போது புலப்படுகின்றன.
- இவற்றின் எண்ணிக்கை நிலையானது அல்ல. ஆனால் குறைந்தபட்சமாக உருவாகி, பின்னர் அதிகபட்சம் வரை உயர்ந்து பின்னர் மீண்டும் குறைகின்றது. இது சூரிய சுழற்சி என்று அழைக்கப் படுகின்றது.
- இதுவரை, வானியலாளர்கள் இது போன்ற 24 சுழற்சிகளைக் கண்டறிந்துள்ளனர். கடைசியாக 2019 ஆம் ஆண்டில் இந்த சுழற்சி நிறைவடைந்தது.
- சுமார் 148 மில்லியன் கி.மீ தூரத்தில் இருந்து, சூரியன் அசைவின்றி நிலையானதாகத் தோன்றுகின்றது.



## பெர்சிவியரன்ஸ் - நாசாவின் அடுத்த செவ்வாய் ஆய்வு வாகனம்

- நாசாவின் அடுத்த செவ்வாய் ஆய்வு வாகனமானது பெர்சிவியரன்ஸ் (Perseverance) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- ஆறு சக்கரம் கொண்ட இந்த இயந்திர மனித ஆய்வு வாகனமானது பூமிக்குத் திரும்பும் போது செவ்வாய் கிரகத்தில் மாதிரிகளை சேகரித்துக் கொண்டு வரும்.
- அமெரிக்கப் பள்ளி மாணவர்களுக்கான பெயரிடும் போட்டியின் ஒரு பகுதியாக ஏழாம் வகுப்பு மாணவரான அலெக்ஸ் மாதர் என்பவர் இந்தப் பெயரை பரிந்துரைத்தார்.



## யுவ விக்யானி காரியக்கரம்

- இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- இது அரசாங்கத்தின் தொலைநோக்குத் திட்டமான "ஜெய் விக்யான், ஜெய் அனுசந்தன்" என்பதுடன் ஒத்துப் போகும் வகையில் தொடங்கப்பட்ட பள்ளி குழந்தைகளுக்கான ஒரு சிறப்புத் திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது முதன்மையாக விண்வெளித் தொழில்நுட்பங்கள், விண்வெளி அறிவியல் மற்றும் விண்வெளிப் பயன்பாடுகள் குறித்த அடிப்படை அறிவை இளையவர்களுக்கு விண்வெளி நடவடிக்கைகளின் வளர்ந்து வரும் பகுதிகளில் ஆர்வத்தைத் தூண்டும் நோக்கத்துடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கொரோனா வைரஸ் – தொற்றுநோய்

- உலக சுகாதார நிறுவனமானது (World Health Organization – WHO) பரவி வரும் கொரோனா வைரஸ் பாதிப்பை 'தொற்றுநோய்' என்று அறிவித்துள்ளது.
- முன்னதாக, ஜனவரி 30 ஆம் தேதியன்று WHO ஆனது இந்த வைரஸ் பாதிப்பை "சர்வதேச அளவிலான பொதுச் சுகாதார அவசரநிலை" என்று அறிவித்தது.
- கோவிட் - 19 என்பது ஒரு சுவாச நோய்த் தொற்று நோயாகும்.
- கோவிட் - 19 என்பது உலக சுகாதார அமைப்பால் இந்த வைரஸுக்கு வழங்கப்பட்ட ஒரு அதிகாரப் பூர்வப் பெயராகும்.
- WHO அதிகாரப் பூர்வமாக இந்த வைரஸுக்குப் பெயரிடுவதற்கு முன்பு, இது கொரோனா வைரஸ், புதிய வகை கொரோனா வைரஸ் மற்றும் 2019 - nCOV (வைரஸ் முதன்முதலில் கண்டறியப்பட்ட ஆண்டைக் குறித்தல்) என்றும் குறிப்பிடப் பட்டது.

### *நோய் வெடிப்பு, கொள்ளை நோய் மற்றும் தொற்று நோய்*

- நோய் வெடிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நோய் பாதிப்பானது திடீரென உயரும் நிகழ்வு என்று புரிந்து கொள்ளப் படுகின்றது.
- வட்டார நோய் என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையினரிடையே அல்லது பிராந்தியத்தில் எப்போதும் இருக்கும் ஒரு நோயாகும்.
- கொள்ளை நோய் என்பது ஒரு மிகப்பெரிய நோய் வெடிப்பாகும். இது அதிக எண்ணிக்கையிலான மக்களை ஒரே நேரத்தில் தாக்குகின்றது மற்றும் ஒன்று அல்லது பல சமூகங்கள் வழியாகப் பரவும் தன்மை கொண்டது.
- ஒரு தொற்றுநோய் என்பது "ஒரு புதிய நோயின் உலகளாவிய பரவல்" ஆகும்.
- ஒரு நோயைத் தொற்றுநோய் என வகைப்படுத்துவதற்கு அந்த நோய் பரவிய நாடுகளின் குறிப்பிட்ட எண்ணிக்கை என்ற எந்த வரையறையும் WHO அமைப்பிற்கு இல்லை.

## சூரிய ஒளியைப் பெறும் குழாய்த் தொழில்நுட்பம்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் தூள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்பட்ட ஆராய்ச்சி மையமான ARCI அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செலவு குறைந்த சூரிய ஒளியைப் பெறும் குழாய்த் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- உருவாக்கப்பட்டுள்ள இந்தக் குழாய்கள் சூரிய சக்தியை உறிஞ்சி, அந்த வெப்பத்தைத் தேவையான பயன்பாட்டிற்குத் தக்கவாறு மாற்றுகின்றன.
- இவை குறிப்பாக இந்திய வானிலை நிலைமைகளான அரிப்பிற்காக அதிக எதிர்ப்புத் தன்மையை வழங்குகின்றன.
- இந்தத் தொழில்நுட்பமானது ஈரத் தன்மை கொண்ட ஒரு இரசாயன செயல்முறையாகும். இந்தத் தொழில்நுட்பம் தொழில்துறை வெப்பப் பயன்பாடுகளில் பயன்படுத்தப்படும் துரு ஏறாத எஃகு குழாய்களுக்கு இரசாயனம் பூசப் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்தத் தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்படும் குழாய்கள் 93% கதிரியக்க ஆற்றலையும் 14% உமிழ்வையும் உறிஞ்சுகின்றன.
- உமிழ்வு என்பது ஒரு கதிர்வீச்சு மேற்பரப்பின் ஒரு பகுதியில் வெளிப்படும் ஒளியின் அளவாகும்.

## கைகாயா காகா

- லேடி காகா என்ற நடிகையின் நினைவாக புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கொம்புப் பூச்சி இனத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இந்தப் பூச்சி இனங்கள் கைகாயா காகா என்று பெயரிடப் பட்டுள்ளன.
- இது கைகாயா காகா மெம்பிராசிடே என்ற குடும்பத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்த இனமானது சுமார் 40 மில்லியன் ஆண்டுகள் பழமையானது. கே. காகா கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்பு நிகரகுவாவின் பசிபிக் கடற்கரைக்கு அருகிலுள்ள வெப்பமண்டலக் காடுகளில் காணப் பட்டது.
- இந்த இனங்கள் அவற்றின் பிரகாசமான வண்ணத்திற்காகவும் அவற்றின் தனித்துவமான தோற்றத்திற்காகவும் அறியப் படுகின்றன.

- இது தாவரத் தண்டுகளை அதிரச் செய்வதன் மூலம் ஒன்றுக்கொன்று தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றது.
- அமெரிக்கப் பாடகர் - பாடலாசிரியர் மற்றும் செயல்திறன் கலைஞரான இவர் அவரது ஆடம்பரமான ஆடைகளுக்காக பெயர் பெற்றவராவார்.



## மெத்தனோட்ரோபிக் பாக்டீரியா கலாச்சாரம்

- புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனமானது மெத்தனோட்ரோபிக் பாக்டீரியாவின் 45 மரபணுக் கூறுகளைப் பிரித்தெடுத்துள்ளது.
- இந்த பாக்டீரியாக்கள் அரிசி ஆலைகளில் மீத்தேன் உமிழ்வைக் குறைக்கும் திறன் கொண்டவையாகும்.
- இந்த மரபணுக் கூறு பிரித்தெடுப்பைத் தவிர, விஞ்ஞானிகள் மெத்தனோட்ரோபிக் கலாச்சாரத்தையும் உருவாக்கியுள்ளனர்.
- பிரித்தெடுக்கப்பட்ட இந்த பாக்டீரியாக்கள் தெற்கு மற்றும் மேற்கு இந்தியாவைச் சேர்ந்தவையாகும்.
- மெத்தனோட்ரோப்கள் உயிர் – தடுப்பு மருந்துகளாகவும் பயன்படுத்தப் படுகின்றன.
- உயிர் – தடுப்பு மருந்து என்பது பாக்டீரியா, ஆல்கா அல்லது பூஞ்சைகளின் மரபணுக் கூறாகும். இந்த பாக்டீரியாக்கள் வளிமண்டலத்திலிருந்து நைட்ரஜனை எடுத்து தாவரங்களுக்குத் தேவையான நைட்ரேட்டுகளைத் தயாரிக்கின்றன.
- கார்பன்-டை ஆக்சைடு வாயுவிற்குப் பிறகு, மீத்தேன் வாயு இரண்டாவது மிகப்பெரிய பசுமை இல்ல வாயு பங்களிப்பாளராகும்.
- விவசாயத்தில் மெத்தனோட்ரோபிக் பாக்டீரியாக்களின் பயன்பாட்டின் மூலம், மீத்தேன் வாயுவின் வெளியேற்றமானது வெகுவாகக் குறைக்கப்பட இருக்கின்றது.

## எக்ஸோமார்ஸ் திட்டம்

- எக்ஸோமார்ஸ் திட்டமானது மென்பொருள் பிரச்சினைகளால் 2 ஆண்டுகள் தாமதமாகத் செலுத்தப்பட இருக்கின்றது.
- இப்போது ஐரோப்பிய விண்வெளி அமைப்பின் திட்டமானது (European Space Agency mission - ESA) 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- செவ்வாய்க் கிரகத்தின் மீதான எக்ஸோபயாலஜி அல்லது எக்ஸோமார்ஸ் என்பது ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் ரோஸ்கோஸ்மோஸ் (ரஷ்ய விண்வெளி நிறுவனம்) ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டுத் திட்டமாகும்.

- செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும் நீர் குறித்த வரலாறு, அதன் புவி வேதியியல், வளிமண்டலக் கலவைகள் போன்றவற்றின் ஆய்வைத் தவிர, செவ்வாய்க் கிரகத்தில் உயிர் வாழ்வதற்கான சாத்தியக் கூறை ஆய்வு செய்வதும் இதன் நோக்கமாகும்.
- ரோசாலிண்ட் பிராங்க்ளின் என்பது எக்ஸோமார்ஸ் திட்டத்தில் பயன்படுத்தப்படும் ஒரு ஆய்வு வாகனமாகும்.



## இரசாயனங்களைப் பயன்படுத்தாமல் ஒரு புதிய கை காப்பான் திரவம்

- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் கீழ் வரும் இமாலய உயிரிவளத் தொழில்நுட்ப மையத்தை (Council of Scientific and Industrial Research-Institute of Himalayan Bioresource Technology – CSIR-IHBT) சேர்ந்த விஞ்ஞானிகள் இரசாயனங்களைப் பயன்படுத்தாமல் ஒரு புதிய கை காப்பான் திரவத்தை உருவாக்கியுள்ளனர்.
- விஞ்ஞானிகள் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வரும் தேயிலைக் கூறுகள் மற்றும் ஆல்கஹால் ஆகியவற்றைப் பயன்படுத்தி, உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களின் படி ஒரு புதிய கை காப்பான் திரவத்தை உருவாக்கியுள்ளனர்.
- ட்ரைக்ளோசன், பாராபென்ஸ், பித்தலேட்டுகள் மற்றும் செயற்கை வாசனையூட்டும் பொருள் போன்ற இரசாயனங்கள் கை காப்பான் திரவத்தின் உற்பத்தியில் பொதுவாகப் பயன்படுத்தப் படுகின்றன.
- இந்த வேதிப்பொருட்கள் எதுவும் CSIR அமைப்பால் உற்பத்தி செய்யப்படும் புதிய கை காப்பான் திரவத்தின் உற்பத்தியில் பயன்படுத்தப் படுவதில்லை.

## COVID-19 நோய்க்கான முதலாவது தடுப்பூசிச் சோதனை

- COVID-19 நோய்க்கான தடுப்பூசியை மதிப்பிடும் முதலாவது மனிதப் பரிசோதனையை அமெரிக்கா தொடங்கியுள்ளது.
- இந்தத் தடுப்பூசியானது மாடர்னா என்ற தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தச் சோதனைக் கட்டத்தின் போது, இந்தத் தடுப்பூசிகள் பாதுகாப்பானதா என்பதையும் இவை COVID - 19ஐத் தடுக்க நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குவதற்காக மனிதர்களின் நோயெதிர்ப்பைத் தூண்டுகின்றனவா என்பதையும் இந்த சோதனை ஆய்வு செய்ய இருக்கின்றது.
- நானோ கொழுப்பு (லிப்பிட்) துகள்களில் பதிக்கப்பட்ட ஆர்என்ஏவின் நீட்சியிலிருந்து இந்தத் தடுப்பூசியானது தொகுக்கப் பட்டுள்ளது.
- உலகளாவிய மருத்துவப் பரிசோதனைகளில் இந்தியாவின் பங்கு 2.7% மட்டுமேயாகும்.

- அதேசமயம், மருத்துவப் பரிசோதனைகளில் அமெரிக்கா 47% பங்களிப்பையும் அதற்கு அடுத்து ஐரோப்பிய ஒன்றியம் 18% பங்களிப்பையும் ஜப்பான் 11% பங்களிப்பையும் கொண்டுள்ளன.
- இந்த நிலைமையை மேம்படுத்த, உலக சுகாதார அமைப்பின் ICTRP போன்ற தளங்களில் இந்தியா தீவிரமாகப் பங்கேற்க வேண்டும்.
- உலக சுகாதார அமைப்பின் சர்வதேச மருத்துவப் பரிசோதனைப் பதிவுத் தளம் (International Clinical Trials Registry Platform - ICTRP) என்பது சுகாதாரப் பரிசோதனைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆராய்ச்சியின் முழுமையான பார்வையானது அணுகக் கூடியதாக உள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்கமுடைய ஒரு திட்டமாகும்.



## தனியார் நிறுவனங்களால் கொரோனா வைரஸை பரிசோதித்தல்

- கொரோனா வைரஸ் பரிசோதனையை தனியார் துறை நிறுவனங்களும் மேற்கொள்ள இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்தச் சோதனையின் கட்டணம் ரூ. 9,000 முதல் ரூ. 12,000 வரை இருக்கும்.
- தனியார் துறையால் செயல்படுத்தப்படும் மையங்களைத் தவிர இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றமானது (Indian Council of Medical Research - ICMR) 51 சோதனை மையங்களை நிறுவ இருக்கின்றது.
- இந்த மையங்களானது சோதனை மற்றும் அளவீட்டு ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தினால் (National Accreditation Board for Testing and Calibration Laboratories - NABL) அங்கீகரிக்கப்பட இருக்கின்றது.

## NAVIC தகவல் அனுப்பும் அமைப்பு

- நாவிக் செய்தியிடல் அமைப்பு மற்றும் செய்தி பெறும் அமைப்பு ஆகியவற்றை இஸ்ரோ வடிவமைத்துள்ளதாக விண்வெளித் துறை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- இந்த அமைப்பானது தற்போது இந்தியத் தேசியக் கடல்சார் தகவல் மையத்தினால் (Indian National Centre for Ocean Information system - INCOIS) பயன்படுத்தப் படுகின்றது.
- சுனாமி, சூறாவளி, ஆழிப் பேரலைகள் போன்ற சூழ்நிலைகளில் அவசரகால எச்சரிக்கைத் தகவல்களை ஒளிபரப்ப இந்த அமைப்பானது பயன்படுத்தப் படுகின்றது.
- NAVIC என்பது ஒரு இந்தியச் செயற்கைக்கோள் தொகுப்பாகும்.

- இது இஸ்ரோ அமைப்பால் உருவாக்கப்பட்ட இந்தியப் பிராந்தியக் கண்காணிப்பு செயற்கைக்கோள் அமைப்பு (Indian Regional Navigation Satellite System - IRNSS) ஆகும்.
- இந்தச் செயற்கைக்கோள் தொகுப்பில் 8 செயற்கைக்கோள்கள் உள்ளன.
- இந்தியத் துணைக் கண்டத்தில் தொடர் கண்காணிப்பை வழங்குவதே இந்த NAVICன் முக்கிய நோக்கமாகும்.




## ஹீமோஸ்டாட்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் INST (Institute of Nano Science and Technology – நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்) மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஸ்டார்ச்சை அடிப்படையாகக் கொண்ட 'ஹீமோஸ்டாட்' என்ற ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
- விபத்துக்களின் போது விரைவான இரத்த இழப்பைத் தடுப்பதற்காக ஸ்டார்ச் அடிப்படையிலான 'ஹீமோஸ்டாட்' ஆனது உருவாக்கப் பட்டுள்ளது. இது அதிகப் படியான திரவத்தை உடலிலிருந்து உறிஞ்சி, இரத்தத்தில் இயற்கையான உறைதலுக்கான தேவையான காரணிகளைக் குவிக்கின்றது.
- இந்தப் பொருளானது உறிஞ்சுதல் திறன் அதிகரிப்பு, மேம்பட்ட உறிஞ்சுதல், விலை குறைவான மற்றும் மக்கும் தன்மை ஆகியவற்றைக் கொண்டது.
- ஹீமோஸ்டாட்கள் இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் அறுவைச் சிகிச்சைக் கருவிகளாகும்.
- நானோ அறிவியல் நிறுவனம் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படுகின்றது.
- இது தேசிய நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டம் அல்லது நானோ திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

## நானோகாம்போசிட் மேல்பூச்சுகள்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒரு தன்னாட்சி பெற்ற ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையமான தூள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மையமானது (ARCI - Advanced Research Centre for Powder Metallurgy & New Materials) நானோகாம்போசிட் பூச்சுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவு கொண்ட படிவுகளுக்கான செயல்முறையை உருவாக்கியுள்ளது.
- புதிய பொருட்களின் இயற்பியல், வேதியியல் மற்றும் இயற்பியல் - வேதியியல் பண்புகளை மேம்படுத்துவதற்காக நானோ அளவிலான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேறுபட்ட பொருட்களைக் கலப்பதன் மூலம் நானோகாம்போசிட் பூச்சுகள் உருவாக்கப் படுகின்றன.
- மின்னாற் பூசும் முறையைப் பயன்படுத்தி குறிப்பிட்ட அளவிலான சிலிக்கான் கார்பைடு (sized Silicon Carbide - SiC) துகள்களின் உட்செலுத்தலின் மூலம் உருவாக்கப்பட்ட நிக்கல் டங்ஸ்டனை அடிப்படையாகக் கொண்ட பூச்சுகளால் தேய்வு மற்றும் அரிப்பு எதிர்ப்புத் தன்மை கொண்ட சிறந்த கலவையை வழங்க முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் கூறுகளின் செயல்படும் காலத்தை மேம்படுத்துவதற்காக பல விண்வெளி, பாதுகாப்பு, தானியங்கி, விண்வெளி சாதனங்கள் உராய்வு, தேய்மானம் ஆகியவற்றைக் குறைக்க வேண்டும்.

## சாத்தியமுள்ள மீன்பிடி மண்டலம்

- சாத்தியமுள்ள மீன்பிடிப் பகுதிகள் குறித்த சாத்தியமுள்ள மீன்பிடி மண்டல ஆலோசனை அடங்கிய தொகுப்பை உருவாக்குவதற்காக Oceansat செயற்கைக்கோள் தரவு பயன்படுத்தப்படும் என்று கடல்சார் தகவல் சேவைகளுக்கான இந்தியத் தேசிய மையம் அறிவித்துள்ளது. இந்த ஆலோசனையானது அனைத்து மாநிலங்களிலும் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- இந்த முறையானது இஸ்ரோவின் Oceansat-2 செயற்கைக் கோளிலிருந்து பெறப்படும் பச்சையத்தின் செறிவு குறித்த தரவையும் தேசியக் கடல்சார் வளிமண்டல நிர்வாகத்திடமிருந்து (NOAA/அமெரிக்க செயற்கைக்கோள்) பெறப்படும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை குறித்த தரவையும் பயன்படுத்துகின்றது.
- பேரிடர் முன்னெச்சரிக்கை குறித்த அவசரக் காலத் தகவல்களைத் தடையற்ற, திறனுள்ள முறையில் பரப்புதல், சாத்தியமுள்ள மீன்பிடி மண்டலங்கள் மற்றும் கடலின் நிலை குறித்து மீனவர்களுக்கு அறிவித்தல் ஆகியவற்றிற்காக மத்திய அரசு, ககன் செயற்கைக்கோளால் செயல்படுத்தப்படும் மாலுமிகளின் கண்காணிப்பு மற்றும் தகவல் சாதனம் என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.

## எச்ஐவி எதிர்ப்பு மருந்துகள் – கோவிட் 19

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது கோவிட் – 19 என்ற தொற்றுநோய்க்கான மருந்துகள் மேலாண்மை மீதான திருத்தப்பட்ட அறிவுரைகளை வெளியிட்டுள்ளது.
- கரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டுள்ள நபரின் நிலையை (கடுமையான நிலை) பொறுத்து லோபினாவிர் மற்றும் ரிட்டோனாவிர் (கலேத்ரா என்ற குறியீட்டுப் பெயரின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றது) ஆகிய கலப்பு மருந்துகளைப் பயன்படுத்த இந்த அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

- இந்தக் கலப்பு மருந்தின் பயன்பாடானது அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர்கள், தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் மற்றும் உலகச் சுகாதார அமைப்பைச் சேர்ந்த வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்ட வல்லுநர் குழுவினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- லோபினாவிர் – ரிட்டோனாவிர் மருந்துகள் நீரிழிவு நோய், சிறுநீரகச் செயலிழப்பு, நாள்பட்ட நுரையீரல் நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள 60 வயதிற்கும் மேற்பட்ட அதிக ஆபத்தை எதிர்நோக்கியுள்ள நோயாளிகள் மற்றும் அதிக நோய் எதிர்ப்புச் சக்தி தேவைப்படும் நோயாளிகளுக்குப் பரிந்துரைக்கப் படுகின்றது.
- லோபினாவிர் – ரிட்டோனாவிர் ஆனது பெரும்பாலும் எச்ஐவி தொற்றைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப் படுகின்றது.

## ஹண்டிங்டின் நோய்

- புனேவில் உள்ள தேசிய உயிரணு அறிவியல் மையத்தைச் சேர்ந்த ஆராயச்சியாளர்கள் நோயுண்டாக்கும் ஹண்டிங்டின் புரதமானது உயிரணுக்களின் ஒட்டு மொத்த புரத உற்பத்தியைக் குறைக்கின்றது என்பதைக் கண்டறிந்துள்ளனர்.
- ஹண்டிங்டின் நோய் என்பது ஒரு அதிகரிக்கும் மரபணுப் பிரச்சினையாகும்.
- இது மூளையைப் பாதித்து, பின்வருவனவற்றை ஏற்படுத்துகின்றது.
    - கட்டுப்பாடற்ற இயக்கங்கள்,
    - சமநிலை மற்றும் இயக்கத்தின் பலவீனமான ஒத்துழைப்பு
    - அறிவுத் திறன் குறைதல்
    - கவனம் செலுத்துதலில் கடினத் தன்மை மற்றும் நினைவு இழப்பு
    - கட்டுப்பாடற்ற மனநிலை
    - ஆளுமை மாற்றம்
- இது HTT மரபணு (ஹண்டிங்டின் மரபணு) என்று அழைக்கப்படும் மரபணுவில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக ஏற்படுகின்றது.
- HTT மரபணுக்கள் ஹண்டிங்டின் என்று அழைக்கப்படும் புரதத்தின் உற்பத்தியில் பங்கு கொள்கின்றன.
- இவை புரதத்தை உருவாக்குவதற்கான அறிவுரைகளை வழங்குகின்றன.
- இந்த மரபணுக்கள் மாற்றம் பெற்றால், இவை தவறான அறிவுரைகளை வழங்கி அசாதாரண ஹண்டிங்டின் புரத உற்பத்திக்கு வழி வகுக்கும். பின்னர் இவை உருவமற்றவைகளாக மாறுகின்றன.
- இந்த உருவமற்ற அமைப்புகள் மூளை உயிரணுக்களின் வழக்கமானச் செயல்பாடுகளைப் பாதிக்கின்றன. இவை மூளையில் உள்ள நரம்புகளின் செயலிழப்பிற்கு வழி வகுக்கும். இதன் காரணமாக ஹண்டிங்டின் நோய் ஏற்படுகின்றது.

## ஹைட்ராக்ஸி குளோரோ குயின்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது கோவிட்-19 வைரஸ் பாதிப்பை எதிர்த்துப் போராடுவதற்காக ஒரு தேசியப் பணிக் குழுவை அமைத்துள்ளது.
- இந்தப் பணிக் குழுவானது கொரானா வைரஸிற்குச் சிகிச்சையளிப்பதற்காக ஹைட்ராக்ஸி குளோரோ குயின் என்ற மருந்தைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்துள்ளது.

- இந்த மருந்தானது பெரும்பாலும் மலேரியா நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது.
- தென் கொரியா மற்றும் இத்தாலி ஆகிய இரு நாடுகளும் கோவிட் – 19ன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த மருந்தைப் பயன்படுத்துகின்றன.
- இந்த நோயின் ஆரம்ப நிலையிலேயே இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த மருந்து சிறப்பாகச் செயல்படுகின்றது என்பதை அமெரிக்கா உறுதி செய்துள்ளது.

## எல்பிஸ்டோஸ்டேஜ் என்பதின் புதைபடிவம் - ஆராய்ச்சி

- கனடாவைச் சேர்ந்த தொல்லுயிரியல் வல்லுநர்கள் மனிதனின் கைகளை மீனின் துடுப்புகளுடன் தொடர்புபடுத்தியுள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியாளர்கள் "எல்பிஸ்டோஸ்டேஜ்" என்பதின் புதை படிவத்தை ஆய்வு செய்தனர்.
- "எல்பிஸ்டோஸ்டேஜ்" ஆனது மீனிலிருந்து நிலவாழ் முதுகெலும்புள்ளவையாக மாற்றமடைந்ததின் முக்கியமான நிலையைக் குறிக்கின்றது.
- "எல்பிஸ்டோஸ்டேஜ்" ஆனது முற்றிலும் நீர் சார்ந்தவையாக இருந்தது.
- இது முதலை போன்ற உடலமைப்பு, தட்டையான முக்கோண வடிவத் தலை, தாடையைச் சுற்றிலும் பற்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன.
- இந்த "எல்பிஸ்டோஸ்டேஜ்"லிருந்து தோன்றிய 4 கால்கள் கொண்ட விலங்குகள் "டெட்ராபோடுகள்" என்று அழைக்கப் படுகின்றன.
- இந்த "எல்பிஸ்டோஸ்டேஜ்" உயிரினங்கள் மீன் ஊழிக் கால கட்டத்தில் வாழ்ந்துள்ளன.
- மீன் ஊழிக் காலமானது 60 மில்லியன் ஆண்டுகளைக் கொண்டதாகவும் ஏறத்தாழ 419 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவும் உள்ளது.
- பாறைக் கற்கள் காலகட்டம் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடமான இங்கிலாந்தில் உள்ள டேவோன் என்ற இடத்தின் நினைவாக இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.



## தேசிய மீத்திறன் கணினித் திட்டம்

- தேசிய மீத்திறன் கணினித் திட்டமானது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், ஹைதராபாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்கான JN மையம் ஆகியவற்றில் மேலும் 3 மீத்திறன் கணினிகள் அமைக்கப்பட இருக்கின்றன.

### *இதுபற்றி*

- இந்தத் திட்டமானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், மேம்படுத்தப்பட்ட கணினியின் வளர்ச்சிக்கான மையம், மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் ஆகியவற்றினால் இணைந்து செயல்படுத்தப் படுகின்றது.
- தற்பொழுது இந்தியா 5 மீத்திறன் கணினிகளைக் கொண்டுள்ளது. இந்தக் கணினிகள் உலகில் முன்னிலையில் உள்ள மீத்திறன் கணிகளைக் கொண்ட பட்டியலில் முதல் 500 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன.
- இந்திய வெப்ப மண்டல வானிலையில் நிறுவனத்தில் உள்ள மீத்திறன் கணினியானது (பிரத்யூஷ்) உலகில் 39வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் இது வரை, "பரம் சிவா" ஆனது புவனேஷ்வர் IITயிலும் பரம் பிரம்மா ஆனது புனேயில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திலும் பரம் சக்தி கரக்பூரில் உள்ள IITயிலும் அமைக்கப் பட்டுள்ளன.

## மைலேப் (Mylab)

- புனேவில் உள்ள "மைலேப்" (Mylab) என்ற மருத்துவச் சோதனைகளுக்கான உற்பத்தி நிறுவனமானது கோவிட் – 19 சோதனைக்கான உபகரணங்களின் விற்பனைக்காக மத்திய மருந்துத் தரநிர்ணயக் கட்டுப்பாட்டு நிறுவனத்தால் (CDSCO - Central Drugs Standard Control Organization) வணிக ரீதியிலான ஒப்புதலைப் பெற்ற முதலாவது இந்திய நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தச் சோதனை முறையானது புனேவில் உள்ள தேசிய நச்சுயிரியியல் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டத் முதல் சோதனைக் கருவி ஆகும். இதற்கு மத்திய மருந்துத் தரநிர்ணயக் கட்டுப்பாட்டு நிறுவனத்தால் வர்த்தக ரீதியாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இந்த உபகரணங்கள் தலைகீழ் குறிமுறை பதிப்பு பல்பழம்நொதித் தொடர் வினையை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- ஒரு ஒற்றை உபகரணமானது 100 மாதிரிகளைச் சோதனை செய்யும் திறன் கொண்டதாகும்.
- தற்பொழுதுள்ள ஆய்வகச் சோதனை முறையில் கோவிட் – 19க்கான சோதனை நேரமானது 4 மணி நேரமாகும்.




- இருப்பினும், மைலேப்பின் சோதனை நேரமானது இரண்டரை மணி நேரமாகும்.

- இந்த ஆய்வகமானது இந்த உபகரணங்களை ஒவ்வொரு சோதனைக்கும் ரூ.1200 முதல் ரூ.1500 வரையிலான வரம்பு நிலையில் விற்பனை செய்ய இருக்கின்றது.
- தற்பொழுது, இந்திய அரசானது கோவிட் – 19 சோதனைக்கான விலையை ரூ.4500 ஆக நிர்ணயித்துள்ளது.

## ஹண்டா வைரஸ்

- சீனாவின் யுனான் மாகாணத்தில் ஒருவருக்கு ஹண்டா வைரஸிற்கான அறிகுறி தென்பட்டுள்ளது.
- ஹண்டா வைரஸிற்கான அறிகுறியானது கொரானா வைரஸைப் போன்றதேயாகும்.
- ஆர்த்தோஹண்டா வைரஸ் என்றழைக்கப்படும் ஹண்டா வைரஸ் ஆனது எலிகளின் மூலம் பரவுகின்றது.
- இது கொறித் துண்ணிகளின் சிறுநீர், கழிச்சல் மற்றும் எச்சில் ஆகியவற்றின் மூலம் பரவுகின்றது.
- இந்த வைரசானது மனிதர்களின் மூக்கு, வாய் மற்றும் கண் ஆகியவற்றின் மூலம் மனிதர்களுக்குள்ளே செல்கின்றது.
- இந்த வைரசானது மனிதர்களுக்கிடையே பரவுவதில்லை.

## உயிரிப் பாதுகாப்பு நிலைகள்

- தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையமானது இந்தியாவில் பின்பற்றப்படும் 4 உயிரிப் பாதுகாப்பு நிலைகளை (BSL - Bio-Safety Levels) வழங்கியுள்ளது.
- உயிரிப் பாதுகாப்பு என்பது நோய்க் கிருமிகள் மற்றும் நச்சுகள் ஆகியவற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும்.
- உலக சுகாதார அமைப்பினால் குறிப்பிடப்பட்டுள்ள உயிரிப் பாதுகாப்பு நிலைகளை இந்தியா பின்பற்றுகின்றது.

| Biosafety Level | BSL-1 | BSL-2 | BSL-3 | BSL-4 |
|---|---|---|---|---|
| Description | · No Containment<br>· Defined organisms<br>· Unlikely to cause disease | · Containment<br>· Moderate Risk<br>· Disease of varying severity | · High Containment<br>· Aerosol Transmission<br>· Serious/Potentially lethal disease | · Max Containment<br>· "Exotic," High-Risk Agents<br>· Life-threatening disease |
| Sample Organisms | E.Coli | Influenza, HIV, Lyme Disease | Tuberculosis | Ebola Virus |
| Pathogen Type | Agents that present minimal potential hazard to personnel & the environment. | Agents associated with human disease & pose moderate hazards to personnel & the environment. | Indigenous or exotic agents, agents that present a potential for aerosol transmission, & agents causing serious or potentially lethal disease. | Dangerous & exotic agents that pose a high risk of aerosol-transmitted laboratory infections & life-threatening disease. |
| Autoclave Requirements | None | None | Pass-thru autoclave with Bioseal required in laboratory room. | Pass-thru autoclave with Bioseal required in laboratory room. |

- 4 உயிரிப் பாதுகாப்பு நிலைகள் உள்ளன.

- அவையாவன
  - BSL – 1 அடிப்படைச் சோதனை ஆய்வகங்கள்
  - BSL – 2 நோய்க் கண்டறிதல் சேவைகள்
  - BSL – 3 உயர் திறன் கொண்ட சிறப்பு நோய்க் கண்டறியும் சேவைகள்
  - BSL – 4 கொடிய நோய்க் கிருமிகளைக் கையாளும் ஆய்வகங்கள்
- கோவிட் – 19 ஆனது BSL – 4 நிலையின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

## உயிரி – செறிவூட்டப்பட்ட உயர் புரத கோதுமை வகை

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் அகர்கர் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உயிரி-செறிவூட்டப் பட்ட ஒரு உயர் புரத கோதுமை வகையை உருவாக்கியுள்ளனர்.
- இந்தப் புதிய வகையானது MACS 4028 என்று அழைக்கப் படுகின்றது.
- இந்தப் புதிய கோதுமை வகையானது 14% சிறந்த ஊட்டச்சத்துத் தரத்தினையும் 40.3 பிபிஎம் இரும்புச் சத்தையும் அதிக துருவல் தரத்தையும் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய வகையானது பகுதியளவு குள்ளமானதாக உள்ளது. இது 102 நாட்களில் முதிர்ச்சி அடைகின்றது.

## 2020 CD3

- சமீபத்தில் வானியலாளர்கள் "2020 CD3" என்ற பெயர் கொண்ட பூமியைச் சுற்றி வரும் ஒரு சிறிய வகை நிலவைக் கண்டறிந்துள்ளனர். இதன் மூலம் நமது புவிக்கு இரண்டு நிலவுகள் உள்ளன என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- இருப்பினும், இது ஒரு குறுகிய கால நிகழ்வாக அறியப் பட்டது. ஏனெனில், இந்தச் சிறிய வகை நிலவானது பூமியின் சுற்றுவட்டப் பாதையை விட்டு விலகியது.
- 2020 CD3 ஆனது முதன்முதலில் நாசாவினால் நிதியுதவி அளிக்கப்படும் அரிசோனாவில் உள்ள கேட்டலீனா வான் ஆய்வு ஆய்வகத்தினால் கண்டுபிடிக்கப் பட்டது.
- தற்பொழுது, இது சூரியனைச் சுற்றிவரும் தனது வழக்கமான சுற்று வட்டப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது.

## 83 தேஜாஸ் போர் விமானங்கள் - கொள்முதல்

- பாதுகாப்புத் துறைக் கொள்முதல் ஆணையமானது (DAC - Defense Acquisition Council) இந்திய வான் படைக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 83 தேஜாஸ் வகை போர் விமானங்களை வாங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இலகு ரகப் போர் விமானமான (LCA - Light Combat Aircraft) தேஜாஸ் ஆனது விமான வளர்ச்சி ஆணையத்தினால் (ADA - Aircraft Development Agency) வடிவமைக்கப் பட்டுள்ளது.
- ADA ஆனது பாதுகாப்பு ஆராய்ச்சி வளர்ச்சி அமைப்பின் கீழ் செயல்படுகின்றது.
- இது இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.
- DAC ஆனது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது. இது ஒரு உயரிய முடிவு எடுக்கும் அமைப்பாகும்.

- ❖ இது 1999 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கார்கில் போரிற்குப் பின்பு 2001 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.



## நோய் எதிர்ப்பொருள் சோதனை (Antibody test)

- ❖ ஒரு நபர் முன்பு வைரஸால் பாதிக்கப்பட்டாரா என்பதை உறுதிப்படுத்த நோய் எதிர்ப்பொருள் சோதனைகளைத் தொடங்க இந்தியா தயாராக உள்ளது.
- ❖ இது கோவிட்-19 இன் தொற்றுநோயியலைப் புரிந்து கொள்ள உதவும்.
- ❖ உலகளவில் முதன்முறையாக இந்தியாவில் இந்த வழிமுறையானது ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.
- ❖ இது இரத்தத்தில் உள்ள நோய் எதிர்ப்பொருள்களைத் தேடும் ஒரு செரோலாஜிக்கல் (serological) அல்லது நிணநீரியச் சோதனையாகும்.
- ❖ இச்சோதனை முறையானது தற்போதையத் தொற்றுநோயைத் தீர்மானிக்க உதவும் சோதனை முறைகளிலிருந்து வேறுபட்டது.
- ❖ இந்த நோய் எதிர்ப்பொருள்ச் சோதனையானது நோயை உறுதிப்படுத்தும் ஒரு சோதனை அல்ல.
- ❖ இருப்பினும், இது கண்காணிப்பு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சோதனை ஆகும்.



## எச் 1 மருந்து

- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது ஹைட்ராக்ஸி குளோரோ குயினை அட்டவணை எச் 1(Schedule H1 drug) என்ற வகை மருந்தாக அறிவித்துள்ளது.
- இந்த உத்தரவு 1940 ஆம் ஆண்டின் மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப் பட்டது.
- இதன் மூலம் இந்த மருந்தின் மீதான விற்பனை மற்றும் விநியோகம் குறித்த கட்டுப்பாடுகளை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது.
- அட்டவணை H1 இன் கீழ் பட்டியலிடப்பட்ட மருந்துகள் சிவப்பு நிறத்தில் "Rx" என்று பெயரிடப்பட வேண்டும்.
- முகப்புச் சீட்டில் (Label) முன்னெச்சரிக்கைகளையும் கொண்டிருக்க வேண்டும்.
- எச் 1 மருந்துகள் வழங்கப்படுவது தனிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட உள்ளது.

**SCHEDULE H1 DRUG – WARNING:**

- It is dangerous to take this preparation except in accordance with the medical advice.
- Not to be sold by retail without the prescription of a Registered Medical Practitioner.

## ஐசக் திட்டம்

- கொரானா வைரஸ் காரணமாக தங்கள் வீடுகளில் அடைந்து கிடைக்கும் மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக, அவர்களைப் புதுமையான படைப்புத் திட்டங்களில் ஈடுபடுத்துவதற்காக காந்திநகர் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் ஐசக் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- 1665 ஆம் ஆண்டில் லண்டனில் ஏற்பட்ட பெரும் பிளேக் நோயின் காரணமாக கேம்பிரிட்ஜின் டிரினிட்டி கல்லூரியால் சர் ஐசக் நியூட்டன், இப்போது ஏற்பட்டது போல், வீட்டிற்கு அனுப்பப் பட்டார். இதனாலேயே இத்திட்டம் அவரது பெயருடன் துவங்கப் பட்டுள்ளது.
- உலகளாவிய அளவில் ஒரு தொற்றுநோய் பரவியுள்ள இந்நேரத்தில் மாணவர்களை திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கான வழிகளை ஆராய உலகளாவிய கல்வி நிறுவனங்களுக்கு ஐசக் திட்டமானது ஒரு முன்மாதிரியாக விளங்கும்.

## CONTec

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது CONTec என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளது.
- CONTec (COVID-19 Telecommunication Centre) என்பது கோவிட் – 19க்கான ஒரு தொலைத் தொடர்பு மையமாகும்.
- இந்தத் தளமானது எய்ம்ஸ் மருத்துவமனையுடன் நாட்டில் உள்ள மருத்துவர்களை இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் CONTec ஆனது தேசிய மருத்துவக் கல்லூரி வலைதள அமைப்புடன் முழுவதுமாக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது எய்ம்ஸினால் செயல்படுத்தப்பட்டு, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தினால் கண்காணிக்கப் படுகின்றது.

## WHOன் சோதனைகள்

- உலக சுகாதார அமைப்பின் சோதனைகளில் இந்தியா பங்கேற்கும் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR - Indian Council of Medical Research) அறிவித்துள்ளது.
- கோவிட் – 19 தொற்றுநோய் வெடிப்பைச் சரி செய்வதற்கான சாத்தியக் கூறிற்காக இந்தச் சோதனையானது மேற்கொள்ளப்படுகின்றது.
- இந்தத் தொற்றுநோய்ப் பாதிப்பு 940 ஆக அதிகரித்திருக்கும் நிலையில், WHOன் இந்தக் கூட்டு முயற்சி சோதனையில் இந்தியா பங்கேற்கத் தகுதி பெற்று உள்ளது.

## கோவிட் – 19ற்காக இந்திய ஆராய்ச்சியாளர்களின் எதிர்வினை (ISRC - Indian Scientists' Response to CoViD-19)

- இது தேசிய உயிரியல் அறிவியல் மையம், இந்திய அறிவியல் நிறுவனம், டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு தன்னார்வக் குழு ஆகும்.
- இது அறிவியல் தகவல் தொடர்பில் தனது திறமையான பங்களிப்பிற்காக தினத்தோறும் நிகழ்ந்து வரும் சூழ்நிலைகள் குறித்து விவாதிக்க இருக்கின்றது.
- இது ஆய்வு முடிவுகளை வெளிக்கொண்டு வருவதற்காக தற்பொழுதுள்ள மற்றும் கிடைக்கக் கூடிய தரவுகளை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மத்திய, மாநில மற்றும் உள்ளூர் அரசாங்கங்களின் பணிகளை மேலும் மேம்படுத்துவதற்கு உதவ இருக்கின்றது.
- இந்தத் தளமானது இரண்டு முறைகளின் மூலம் செயல்படுகின்றது. இது உதவியை வழங்கக் கூடியவர்களை உதவியை எதிர்பார்க்கும் மக்களுடன் இணைப்பதற்காக கைபேசி மற்றும் கட்செவி ஆகிய இரண்டு முறைகளில் செயல்படுகின்றது.

## கோவிட் – 19ன் மூலம் அல்லது ஆதாரம்

- "பாத்தோஜென்" என்ற இதழில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சியின் படி, இந்த வைரஸானது எறும்புத் திண்ணிகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவியுள்ளது.
- மேலும், இந்த வைரஸ்கள் மனித உயிரணுக்களை இலக்காகக் கொள்வதற்கு சடுதி மாற்றம் ஒரு முக்கியக் காரணமாகும். எனவே இதன் காரணமாக மனித உயிரணுக்களில் இந்த வைரஸ்கள் எளிதாகப் பரவுகின்றன.
- எறும்புத் திண்ணிகள் சீனாவில் மிகவும் கடத்தப்படும் உயிரினங்களில் ஒன்றாகும்.
- கோவிட் – 19 வைரஸானது ஒரு பெரிய ஆணி போன்ற தோற்றம் கொண்ட புரதத்தைக் கொண்டிருக்கும்.
- இந்தப் புரதங்கள் வைரஸ்களின் நுழைவிற்கு வழி வகுக்கும் ஏற்பி பிணைப்பு அமைப்பை (RBD - Receptor Binding Domain) கொண்டுள்ளது.
- RBD ஆனது ஆஞ்ஜியோடென்சின் நொதி – 2 ஆக மாற்றம் பெறுவதுடன் பிணைந்துள்ளது. இந்த நொதி நுரையீரல், இதயம், சிறுநீரகம் மற்றும் இரைப்பைப் பாதையில் காணப்படுகின்றது.
- கோவிட் – 19 ஆனது 2002-03 ஆம் ஆண்டில் தொற்று நோயாக உருவான சார்ஸ் வைரஸின் மாற்றம் பெற்ற ஒரு வடிவம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

## நோயினின்று நீக்கும் பிளாஸ்மா

- மிகவும் கொடிய கோவிட் – 19 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு வேண்டி கோவிட் – 19 நோயிலிருந்து மீண்ட நோயாளிகளிடமிருந்துச் சேகரிக்கப்பட்ட நோயினின்று நீக்கும் பிளாஸ்மாவைப் பயன்படுத்த அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது.
- நோயினின்று நீக்கும் பிளாஸ்மா சிகிச்சையானது ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சார்ஸ் – Cov – 1 தொற்று நோய், 2009 – 10 ஆம் ஆண்டில் ஏற்பட்ட HINI இன்புளுயன்சா வைரஸ் மற்றும் 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மெர்ஸ் - COV தொற்றின் போது பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.
- இந்தச் சிகிச்சையானது கோவிட் – 19னிலிருந்து மீண்ட நோயாளியிடமிருந்துப் பிளாஸ்மாவைச் சேகரித்து, கோவிட் – 19ஆல் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நோயாளிக்குச் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹார்மோன்கள், ஊட்டச்சத்துகள் மற்றும் புரதங்களை உடலில் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதே பிளாஸ்மாவின் முக்கியமான ஒரு பணியாகும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## 17 புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன

- பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக வானியல் மாணவர் மைக்கேல் குனிமோட்டோ 17 புதிய கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளார்.
- நாசாவின் கெப்லர் விண்கலம் சேகரித்த தரவுகளின் மூலம் இப்புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- கண்டுபிடிக்கப்பட்ட 17 கிரகங்களில், பூமியை ஒத்திருக்கும் கிரகம் 'KIC-7340288 பி' என அதிகாரப் பூர்வமாக பெயரிடப்பட்டுள்ளது.
- இது பூமியை விடவும் 1½ மடங்கு பெரிய கிரகமாகும்.

### *கெப்லர் விண்கலத் திட்டம்*

- நாசாவின் வானியலாளர் ஜோஹன்னஸ் கெப்லரின் பெயரால் இத் திட்டம் இப்பெயர் பெற்றது.
- இந்த விண்கலம் 2009 இல் ஏவப்பட்டு, 2018 இல் ஓய்வு பெற்றது.

## இந்தியாவில் வெப்ப அலைகள் (அனல் காற்று)

- மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் இயல்பை விட அதிக வெப்பமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
- மத்திய இந்தியாவில் இருக்கும் பெரும்பாலான வானிலை துணைப் பிரிவுகள் மற்றும் வடமேற்கு இந்தியாவிலிருக்கும் சில துணைப் பிரிவுகள் ஆகியவற்றில் நிலவும் வெப்பநிலையை விட சராசரி அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட 0.5 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கும்.

### *வெப்ப அலைகள்*

- உலக வானிலை அமைப்பின் கூற்றுப்படி, தொடர்ந்து 5 நாட்களின் தினசரி அதிகபட்ச வெப்பநிலையானது சராசரி அதிகபட்ச வெப்பநிலையான 5 டிகிரி செல்சியஸ் அளவைத் தாண்டும் போது வெப்ப அலை ஏற்படுகின்றது.
- வெப்ப அலைகளின் போது, வானிலையானது அதிக வெப்பமுடனும் அதிக ஈரப் பதத்துடன் இருக்கும்.
- வெப்ப அலைகள் பொதுவாக கடல்சார் (கடலை ஒட்டிய) நாடுகளில் நிகழ்கின்றன.




## சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலம்

- மத்திய அரசானது மத்திய பிரதேசத்தில் உள்ள தேசிய சம்பல் சரணாலயத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக (ESZ - eco-sensitive zone) அறிவித்துள்ளது.
- இந்த சரணாலயமானது கங்கை டால்பின்களின் வாழ்விடமாகவும் மிக அருகி விட்ட இனமான கரியால்களின் (எண்ணிகையில் 75 சதவீதம்) வாழ்விடமாகவும் திகழ்கின்றது.

### *ESZ*

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலங்கள் ஆனது "சூழலியல் அதிர்வு தாங்கு மண்டலங்களாக" செயல்படும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகும்.
- இவை மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் நிர்வகிக்கப் படுகின்றன.




## ஒடிசாவில் யுரேசிய நீர்நாய்கள்

- ஒடிசாவில் உள்ள சிலிக்கா ஏரியில் முதன்முறையாக யுரேசிய நீர்நாய்கள் காணப் பட்டன.
- ஒடிசாவின் சிலிக்கா ஏரியில் ஓர் ஆய்வை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் உவர் நீர் உப்பங்கழியில் வாழக்கூடிய ஒரு மீன்பிடிப் பூனையின் இனப்பெருக்கக் கூட்டம் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.
- இது உலகளவில் ஆபத்து நிலையில் உள்ள ஒரு உயிரினமாகும். இது குறைந்த இடங்களில் மட்டுமே காணப்படுகின்றது. இது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் மிகக் குறைந்த இடங்களில் காணப்படுகிறது.



## கரிநுண்துள் செறிவு

- கங்கோத்ரிப் பனிப் பாறைக்கு அருகில் கரிநுண்துள் (Black carbon) செறிவானது கோடையில் காட்டுத் தீ மற்றும் விவசாயக் கழிவுகளை எரிக்கும் முறையான "பயிர்த்தாள் எரிப்பு" ஆகியவற்றின் காரணமாக 400 மடங்கு உயர்ந்துள்ளது.
- வாடியா இமயமலை புவியியல் நிறுவனத்தைச் சேர்ந்த (WIHG - Wadia Institute of Himalayan Geology) விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் இந்த முடிவானது வெளியிடப் பட்டுள்ளது.
- உலகில் கறுப்பு கரி நுண்துள்களை அதிக அளவில் வெளியிடும் நாடுகளில் இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.
- அடுத்து வரவிருக்கும் ஆண்டுகளில் இந்த உமிழ்வானது வியத்தகு அளவில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது என்று 'வளிமண்டல ஆராய்ச்சி' இதழ் கூறுகின்றது.
- இந்திய - கங்கைச் சமவெளியானது இதற்கு மிகப்பெரிய பங்களிப்பாக இருக்கும் என்றும் இது கூறுகின்றது.

### *கரிநுண்துள்*

- கரிநுண்துள் ஆனது புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் உயிர்வளங்கள் ஆகியவற்றின் முழுமையற்ற எரிப்பின் மூலம் ஏற்படுகின்றது.
- $CO_2$ வாயுவிற்குப் பிறகு காலநிலை மாற்றத்திற்கு இது இரண்டாவது பெரிய பங்களிப்பாக இருக்கும் என்று கூறப்படுகிறது.




## பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான உலகளாவிய கூட்டிணைவு

- ஐரோப்பிய ஆணையமானது மொனாக்கோவில் ஒரு புதிய உலகளாவிய கூட்டிணைவைத் தொடங்கியுள்ளது.
- பல்லுயிர்ப் பாதுகாப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒரு வலுவான கூட்டிணைவிற்கு இந்த ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற இருக்கும் உயிரியல் பன்முகத் தன்மை ஒப்பந்தம் தொடர்பான பங்காளர்கள் மாநாட்டின் 15வது அமர்விற்கு முன்னதாக, இந்த ஆணையக் குழுவானது இயற்கைப் பிரச்சினைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- CoP 15ன் போது, உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தில் உள்ள 196 உறுப்பு நாடுகள் இயற்கையைப் பாதுகாக்கவும் மீட்டெடுக்கவும் ஒரு புதிய உலகளாவியக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.




## சுக்னா ஏரி

- சுக்னா ஏரியானது, அதன் உயிர்வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்காக ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக அறிவிக்கப்பட வேண்டியது அவசியம் என்று ஹரியானா மற்றும் பஞ்சாப் மாநில உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- மூன்று மாத காலத்திற்குள் சுக்னா ஏரியை ஈரநிலமாக அறிவிக்க வேண்டும் என்று சண்டிகர் நிர்வாகத்திற்கு அந்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- ஹரியானா, பஞ்சாப், சண்டிகர் ஆகியவற்றின் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள கட்டிடங்களை இடிக்கவும் அந்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தூய்மை இந்தியத் திட்டத்தின் இரண்டாவது கட்டம்

- தூய்மை இந்தியத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.
- இந்த இரண்டாவது கட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்கிய திறந்தவெளிக் கழிப்பிடமற்ற - பிளஸ் (ODF Plus - Open Defecation Free Plus) என்பதின் மீது கவனம் செலுத்தும்.
    - ODF நிலைத் தன்மை மற்றும்
    - திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை (SLWM - Solid and liquid waste management)
- இந்த இரண்டாவது கட்டமானது 2020-21 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில் ஒரு திட்ட முறையில் செயல்படுத்தப்படும்.

## சதுப்புநில மான்

- சதுப்புநில மான் இனமானது கான்ஹா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் (Kanha National Park and Tiger Reserve - KNPTR) அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றது.
- KNPTR ஆனது மத்தியப் பிரதேசத்தின் மாண்ட்லா மற்றும் பாலகாட் மாவட்டங்களுக்கு இடையில் சாத்புரா மலைகளின் மைக்கால் பகுதியில் அமைந்துள்ளது.
- சதுப்புநில மான் ஆனது KNPTRல் மட்டுமே வாழ்கின்றது.

### *சதுப்புநில மான்*

- சதுப்பு மானின் மூன்று துணை இனங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் காணப் படுகின்றன.

| பெயர் | காணப்படும் பகுதி | வாழ்விடம் |
|---|---|---|
| மேற்கு சதுப்புநில மான் | நேபாளம் | சதுப்பு நிலப் பகுதி |
| கிழக்கு சதுப்புநில மான் | காசிரங்கா மற்றும் துத்வா தேசியப் பூங்காக்கள் | சதுப்பு நிலப் பகுதி |
| தெற்கு சதுப்புநில மான் | மத்திய மற்றும் வட இந்தியா | நிலப் பகுதி |



## சுற்றுச்சூழல் தொடர்பான குற்றங்கள்

- 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 (2017-18) அன்று நிறைவடைந்த நிதியாண்டிற்கான அறிக்கையை இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் தாக்கல் செய்தார்.
- இந்த அறிக்கையின் படி, 2014 முதல் 2016 வரை, இந்தியாவில் சுற்றுச்சூழல் தொடர்பான குற்றங்களில் 40% குற்றங்கள் ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து பதிவாகியுள்ளன.
- வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் இந்த மாநிலத்தில் நிறுவப்பட வில்லை என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.
- உள்ளூர் ஆலோசனைக் குழு இல்லாத காரணத்தினால் ரந்தம்போர் புலிகள் காப்பகம் மற்றும் சரிஸ்கா புலிகள் காப்பகம் ஆகியவை சரியாக கட்டுப்படுத்தப் படவில்லை என்று இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## அழிவின் விளிம்பில் நீலகிரி வரையாடு

- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு மையமானது, உலக அளவில் சுமார் 30 ஆயிரம் வன விலங்குகள் அழிவின் விளிம்பிலும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி இருப்பதாக அறிவித்துள்ளது.
- தமிழகத்தைப் பொருத்தவரை நீலகிரி வரையாடு அழியும் நிலையில் உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.
- நீலகிரி வரையாடு என்பது தமிழகத்தின் மாநில விலங்கு ஆகும்.



## பவளப் பாறைகள் வெளுத்தல்

- கிரேட் பேரியர் ரீஃப் (Great Barrier Reef) வரவிருக்கும் வாரங்களில் வெப்ப அழுத்தத்தின் காரணமாக மிகக் கடுமையான காலத்தை எதிர்கொள்ளும்.
- கிரேட் பேரியர் ரீஃப் மரைன் பார்க் ஆனது உலகின் மிகப்பெரிய பவளப்பாறை அமைப்பாகும்.
- இது தோராயமாக இத்தாலி நாட்டின் அளவை ஒத்தது.
- ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து கடற்கரையில் பவளக் கடலில் இந்தப் பவளப் பாறை அமைந்துள்ளது.
- கிரேட் பேரியர் ரீஃப் ஆனது விண்வெளியில் இருந்தும் காணப்படக் கூடியதாகும். மேலும் இது உயிரினங்களால் உருவாக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய ஒரு ஒற்றைக் கட்டமைப்பாகும்.



- இது 1981 இல் உலக பாரம்பரியத் தளமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- பவளப்பாறைகள் கடலில் உள்ள பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியமான இடங்களாகும்.
- கடல் வெப்பநிலையிலிருந்து வெப்ப அழுத்தம் மற்றும் அந்த வெப்பத்தின் காலம் ஆகியவற்றால் பவளப்பாறை வெளுக்க நேரிடுகிறது.
- பவளங்களை வெளுத்தல் என்று பெரும்பாலும் அழைக்கப்படுவது உண்மையில் பவளத்தின் மீது வாழும் பாசிகளின் இழப்பாகும்.
- பவளப் பாறைகள் வெப்பமண்டல நீர் பகுதிகளில் பொதுவாக 70 முதல் இருந்து 80 வரையிலான பாரன்ஹீட்டுகளில் வளர்கிறது.




## சிவப்புப் பாண்டாவின் நிலை – Traffic

- "இந்தியா மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அண்டை நாடுகளில் சிவப்புப் பாண்டாவின் சட்டவிரோத வர்த்தகம் தொடர்பான அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்தல்" என்ற தலைப்பைக் கொண்ட TRAFFIC அமைப்பின் அறிக்கையானது ஜூலை 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான பத்து ஆண்டுக் காலத்தில் சிவப்புப் பாண்டாவின் வேட்டையாடுதல் மற்றும் சட்டவிரோத வர்த்தகத்தை ஆய்வு செய்துள்ளது.
- சிவப்புப் பாண்டா ஆனது இந்தியா, நேபாளம், பூடான், மியான்மரில் உள்ள வடக்கு மலைகள் மற்றும் தெற்கு சீனா ஆகியவற்றில் மரங்களில் வாழும் ஒரு சிறிய வகைப் பாலூட்டியாகும்.
- இது இந்தியாவில் சிக்கிம், மேற்கு அருணாச்சலப் பிரதேசம், மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் மாவட்டம் மற்றும் மேகாலயாவின் சில பகுதிகளில் காணப் படுகின்றது.
- இது சிக்கிம் மாநிலத்தின் மாநில விலங்காகவும் விளங்குகின்றது.

### *TRAFFIC*

- வனவிலங்கு வர்த்தகக் கண்காணிப்பு அமைப்பான TRAFFIC ஆனது பல்லுயிர் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய இரண்டின் நிலையிலும் வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றின் வர்த்தகத்தில் உலகளவில் செயல்படும் ஒரு முன்னணி அரசு சாரா அமைப்பாகும்.



- இது இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (WWF - World Wide Fund for Nature WWF) மற்றும் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றம் (IUCN – International Union for the Conservation of Nature - IUCN) ஆகியவற்றின் ஒரு உத்திசார் கூட்டிணைவாக 1976 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- TRAFFIC அமைப்பின் தலைமையகமானது ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள கேம்பிரிட்ஜில் அமைந்துள்ளது.

## வால்மீகி காப்பகத்தில் மீண்டும் இந்தியக் காட்டெருமை

- உலகின் மிகப்பெரிய காட்டெருமை இனமான இந்தியக் காட்டெருமையானது (போஸ் கௌரஸ்) பீகாரின் வால்மீகி புலிகள் காப்பகத்திற்கு (Valmiki Tiger Reserve - VTR) மீண்டும் திரும்பியதோடு மட்டுமல்லாமல், புல்வெளிப் பரப்பளவு அதிகரிப்பின் காரணமாக அங்கு இனப்பெருக்கம் செய்யவும் தொடங்கியுள்ளன.
- VTR ஆனது 1990 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டது.
- இது பீகாரின் மேற்கு சம்பரான் மாவட்டத்தில் 899 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது. இது வடக்கே நேபாளத்தின் சிட்வான் தேசியப் பூங்காவையும் மேற்கே உத்தரப் பிரதேசத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது.
- 1986 ஆம் ஆண்டு முதல் இந்தியக் காட்டெருமை இனங்கள் இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தின் சிவப்பு பட்டியலில் 'பாதிக்கப்படக்கூடிய' இனங்களாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.



## பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான கூட்டிணைவு

- பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான உலகளாவிய கூட்டிணைவானது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த முன்முயற்சியானது ஐரோப்பிய ஆணையத்தால் தொடங்கப் பட்டது.



- இந்தக் கூட்டிணைவிற்கு "பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான கூட்டிணைவு" என்று பெயரிடப் பட்டுள்ளது.

## பனிப் போர்வையில் மாற்றங்கள்

- நாசா மற்றும் ஜாக்ஸா அமைப்புகளது கண்டுபிடிப்புகளின் படி, குளிர்காலப் பனிப் போர்வையானது இப்போது 110 நாட்களுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. இது 1982 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் நிகழ்ந்த 126 நாட்களுடன் ஒப்பிடும் பொழுது, தற்பொழுது குறைந்த நாட்கள் மட்டுமே நிகழ இருக்கின்றது.
- 2071 மற்றும் 2100 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஏற்படும் குளிர்காலப் பனிப் போர்வைக் கால மாற்றங்களைக் காட்டும் வரைபடங்களில் தற்போதைய மாற்றத்தின் வடிவங்கள் தெரிந்தன.
- இது 1982-2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடப்பட்டது.
- வட அமெரிக்கா மற்றும் ஆசியா முழுவதும் 40 முதல் 50 டிகிரி அட்சரேகை வரை அதிக அளவிலான பனிப் போர்வைச் சரிவானது எதிர்பார்க்கப் படுகின்றது.

## அபாயகரமான மாசுபாடு

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (Central Pollution Control Board - CPCB) சமீபத்திய தரவுப் புதுப்பிப்பின் படி, இந்தியாவில் 128 தளங்கள் நச்சு மற்றும் அபாயகரமான பொருட்களால் மாசுபட்டுள்ளன.
- இதில் மேற்கு வங்கம் 27 தளங்களுடன் முதலிடத்திலும் ஒடிசா 23 தளங்களுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளன.

### *CPCB*

- இந்தியாவின் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சட்ட ரீதியான அமைப்பாகும்.
- இது 1974 ஆம் ஆண்டில் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் நிறுவப் பட்டது.
- CPCBக்கு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981ன் கீழ் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் வழங்கப் பட்டுள்ளன.
- ஏழு மண்டல அலுவலகங்கள் மற்றும் 5 ஆய்வகங்கள் ஆகியவற்றுடன் CPCBன் தலைமை அலுவலகம் புது தில்லியில் உள்ளது.
- இது நீர் மற்றும் காற்று மாசுபாட்டைத் தடுக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் மத்திய அரசிற்கு அறிவுரை வழங்குகின்றது.

## வெள்ளை ஒட்டகச் சிவிங்கி

- விலங்குகளை வேட்டையாடுபவர்கள் வடகிழக்கு கென்யாவில் மிகவும் அரிதான இரண்டு வெள்ளை ஒட்டகச் சிவிங்கிகளைக் கொன்றுள்ளனர். உலகில் தற்பொழுது ஒரு வெள்ளை ஒட்டகச் சிவிங்கி மட்டுமே உயிரோடு உள்ளது.
- தோல் செல்கள் நிறமி இல்லாமல் இருப்பதற்குக் காரணமான ஒரு மரபணு நிலையான இலூசிய மாற்றமானது ஒட்டகச் சிவிங்கியின் வெள்ளைத் நிறத் தோற்றத்திற்கு காரணமாக விளங்குகின்றது.

- இலூசிய மாற்றமானது அல்பினிசத்திலிருந்து வேறுபட்டதாக உள்ளது. இங்கு மெலனின் உற்பத்தி செய்யப் படுவதில்லை.
- 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியமானது (International Union for Conservation of Nature - IUCN) ஒட்டகச் சிவிங்கிகளை தனது சிவப்புப் பட்டியலில் "பாதிக்கப்படக்கூடிய" இனங்களாக வகைப்படுத்தி உள்ளது.
- IUCNன் கூற்றுப்படி, வாழ்விட இழப்பு, உள்நாட்டு அமைதியின்மை, வேட்டையாடுதல் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஆகியவை ஒட்டகச் சிவிங்கிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்ததற்கு வழிவகுத்த நான்கு முக்கிய காரணிகளாகும்.



## ஒக்குளுடெண்டாவிஸ் கௌங்கரே (Oculudentavis khaungraae)

- இது இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மிகச்சிறிய டைனோசர் ஆகும்.
- வடக்கு மியான்மரில் 99 மில்லியன் ஆண்டுகள் பழமையான அம்பர் பிசின் ஒன்றில் சிக்கிய டைனோசரின் புதைபடிவ மண்டை ஓட்டை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.
- இது ஒரு நவீன ஹம்மிங் பறவையின் அளவைக் கொண்டுள்ளது.
- இந்தப் புதைபடிவமானது சுமார் 250 மில்லியன் முதல் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, இடையூழிக் காலத்திலிருந்த மிகச்சிறிய டைனோசரைக் குறிக்கிறது.



## தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டம்

- காற்று மாசுபாடு தொடர்பான பிரச்சினைகளை உள்ளூர் நிலையில் கையாள வேண்டியிருப்பதால் தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டத்திற்காக (National Clean Air Programme - NCAP) நகர அளவிலான திட்டங்களை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.
- இந்திய அரசானது 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டத்தை தொடங்கியுள்ளது.

## டனுபே-ஒடர்-எல்பி கால்வாய்

- டனுபே-ஒடர்-எல்பி கால்வாயானது டனுபே, ஒடா மற்றும் எல்பி ஆகிய 3 நதிகளை இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கருப்புக் கடலிலிருந்து பால்டிக் மற்றும் வடக்குக் கடல் வரையிலான பயணத்திற்கான மாற்றுக் கடல்வழிப் பாதையை அளிக்கின்றது.
- இருப்பினும் இந்தக் கால்வாயின் கட்டுமானத்திற்கு எதிராக பல்வேறு கருத்துக்கள் சுற்றுச்சூழல் அமைப்புகளால் எழுப்பப்பட்டு வருகின்றன.

## பெங்களுருவின் நீர்ப் பாதுகாப்பு மதிப்பீடு

- கர்நாடகாவின் தலைநகரான பெங்களுரு நகரமானது இந்தியாவின் நீர்ப் பற்றாக்குறையுள்ள மாவட்டங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- இது மத்திய அரசின் ஜல் சக்தி அபியான் (Jal Shakti Abhiyaan - JSA) முன்னெடுப்பிற்கான ஒரு சவாலாக விளங்குகின்றது.
- இந்த முன்னெடுப்பானது நாடு முழுவதிலும் உள்ள 255 நீர்ப் பற்றாக்குறையுள்ள மாவட்டங்களின் நீர் மற்றும் நீர்ப்பாசனத் தேவைகளைக் களைய இருக்கின்றது.
- பெங்களுரு நகரமானது JSAன் கீழ் நீர்ப் பாதுகாப்புப் பணிகளின் அடிப்படையில் மிகவும் மோசமாக 200வது இடத்தில் உள்ளது. இதன் மதிப்பீடு 11 சதவிகிதமாகும்.
- 2008 ஆம் ஆண்டு முதல் இதற்கான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இச்சட்டங்கள் அனைத்துப் பொது இடங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டாயமாக்கியுள்ளன.
- தற்பொழுது வரை பெங்களுரு நகரமானது குறைந்து வரும் நீர் ஆதாரங்கள் மற்றும் பல்வேறு ஏரிகளில் ஏற்பட்டுள்ள அதிக அளவிலான மாசுபாடு ஆகிய பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளது.
- மேலும், கர்நாடகாவின் 2017ஆம் ஆண்டு கழிவுநீர்க் கொள்கையானது JSAன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடையீடுகளைப் போன்றே இடையீடுகளை வலியுறுத்துகின்றது. இது "20 சதவிகிதம்" என்ற மறு பயன்பாட்டு இலக்கை நிர்ணயித்துள்ளது.
- மேற்குறிப்பிட்டவைகள் அனைத்தும் பெங்களுரு நகரின் மதிப்பீட்டுப் பட்டியலில் பிரதிபலிக்கவில்லை. 5 பாதுகாப்புத் தளங்கள் குறித்து பதிவேற்றப்படும் தகவல்களைத் தவிர அனைத்துத் துறைகளிலும் சுழிய மதிப்பை இந்நகரம் பெற்றுள்ளது.

## வழக்கமான பருவகால மழை - இந்தியா

- இந்த ஆண்டின் மே மற்றும் ஜூலை ஆகிய மாதங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் எல்நினோ கால நிலையானது சமநிலையாக இருக்கும் என்று இந்திய வானிலைத் துறையானது அறிவித்துள்ளது.
- இது தென் மேற்குப் பருவ மழைக் காலத்தின் போது இந்தியாவிற்கு வழக்கமான மழைப் பொழிவைத் தர இருக்கின்றது.
- இந்தியக் கால நிலையானது பெரும்பாலும் எல்நினோ மற்றும் லா நினோவால் பாதிக்கப் படுகின்றது.
- இந்தக் காலநிலையின் சமநிலை நிகழ்வானது எல்நினோ தெற்கத்திய அலைவு என்று குறிப்பிடப் படுகின்றது (ENSU).
- எல்நினோ தெற்கத்திய அலைவானது வியாபாரக் காற்றுகளை வலுப் பெறச்

செய்கின்றது. இந்தக் காற்று பருவ காலத்தின் போது இந்தியாவிற்கு நல்ல மழைப் பொழிவைத் தருகின்றது.

- ❖ எனவே ENSO சமநிலையாக இருக்கும் போது இந்தியா நல்ல மழைப் பொழிவைப் பெறுகின்றது.

## பசுபிக்கில் நிலநடுக்கம்

- ❖ 2020 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதியன்று 7.5 ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கமானது வடக்கு பசிபிக்கைத் தாக்கியது.
- ❖ இந்த நிலநடுக்கமானது கடலுக்கடியில் 37 மைல்கள் ஆழத்தில் ஏற்பட்டு, ரஷ்யாவின் குரில் தீவுகளைத் தாக்கியது.
- ❖ இது பசிபிக் பெருங்கடலில் இருந்து ஒகோட்ச்க் என்ற கடலைப் பிரிக்கின்ற ஒரு எரிமலைத் தீவுக் கூட்டங்களைச் சேர்ந்ததாகும்
- ❖ இந்தத் தீவுகள் தற்பொழுது ரஷ்யாவினால் நிர்வகிக்கப் படுகின்றன.
- ❖ இருப்பினும், இந்தத் தீவுக் கூட்டங்களின் தெற்கில் உள்ள 4 தீவுகளின் மீதான ஜப்பானின் உரிமைக் கோருதலானது தற்பொழுது நடைபெற்று வரும் குரில் தீவுகள் பிரச்சினைக்கு இட்டுச் சென்றுள்ளது.
- ❖ இந்தத் தீவுகள் மேலோட்டு இயக்க நிலைப்புத் தன்மையற்ற பகுதியான "நெருப்பு வளையத்தில்" அமைந்துள்ளது.
- ❖ நெருப்பு வளையம் என்பது பல்வேறு எரிமலை வெடிப்புகள் மற்றும் நிலநடுக்கங்கள் நிகழும் பசிபிக்கில் உள்ள ஒரு பகுதியாகும்.




## மரபணு மாற்றப்பட்ட பயிர் வகையின் கள ஆய்வு

- ❖ தேசியத் தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனமானது பூச்சி எதிர்ப்பு வகை கொண்ட பருத்திப் பயிர் வகையை உருவாக்கியுள்ளது.
- ❖ லூதியானாவின் பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழக மையத்தில் இந்தப் பருத்தி வகையானது கள ஆய்வு செய்யப்பட உள்ளது.
- ❖ 2015 ஆம் ஆண்டில், பஞ்சாபில் மூன்றில் இரண்டு பங்கு பருத்திப் பயிர்களை வெள்ளை ஈக்கள் அழித்தன.
- ❖ தாவர இலைகளின் அடிப்பகுதியில் வெள்ளை ஈக்கள் அதன் உணவைப் பெறுகின்றன.
- ❖ சூடான வெப்பமண்டலக் காலநிலைகளில் இவை பொதுவாக காணப் படுகின்றன.
- ❖ இவை பசுமைப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன.



## அக்ஷய் உர்ஜா இணைய வாயில்

- அக்ஷய் உர்ஜா இணைய வாயிலானது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் தொடங்கப் பட்டது.
- அக்ஷய் உர்ஜா அல்லது புதுப்பிக்கத்தக்க ஆற்றலை மிகவும் திறமையாக பயன்படுத்துவதற்கான வழிகளை உருவாக்குவதை இந்த இணைய வாயில் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மின்சாரக் கட்டங்களுக்கும் தனித்து இயங்கும் பயன்பாட்டிற்கும் மற்றும் பரவலாக்கப்பட்ட மின் உற்பத்திக்கும், மின்சாரம் தயாரிக்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை பின்பற்றுவதற்கான கண்டுபிடிப்புகளை இது ஊக்குவிக்கிறது.

## சிக்கிம் பனிப்பாறைகள்

- டேராடூனில் உள்ள வாடியா இமாலயப் புவியியல் மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒரு ஆய்வை மேற்கொண்டு, சிக்கிமில் உள்ள பனிப்பாறைகள் மிக வேகமாக உருகி வருகின்றன என்பதைக் கண்டறிந்து உள்ளனர்.
- 2000 ஆம் ஆண்டு முதல், மேற்கு மற்றும் மத்திய இமாலயப் பனிப்பாறைகள் குறைவான உருகுதலைக் கொண்டுள்ளதாக காட்டின.
- ஆனால் சிக்கிம் பனிப் பாறைகளைப் பொறுத்த வரையில், உருகும் விகிதமானது அதிகரித்துள்ளது.
- கோடைக் கால வெப்பநிலை அதிகரிப்பானது பனிப் பாறைகள் உருகுதலுக்கு முக்கியக் காரணமாகும்.
- பனிப்பாறைகளின் நீளம், கழிவுகள் உள்ள பகுதிகள், பரப்பு, பனிப்பாறை ஏரிகள், பனி உயரம் ஆகிய பல்வேறு கூறுகளைப் பற்றி இந்தியாவில் மேற்கொள்ளப்படும் முதலாவது ஆய்வு இதுவாகும்.



## கரி நிலங்கள்

- ஐக்கிய நாடுகளின் கீழ் செயல்படும் உணவு மற்றும் வேளாண் அமைப்பானது சமீபத்தில் கரி நிலங்கள் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- புவியின் மேற்பரப்பில் 3% நிலப்பரப்பை மட்டுமே இந்த கரி நிலங்கள் கொண்டிருந்தாலும் பல நூற்றாண்டுகளாக பூமிக்கடியில் புதைந்துள்ள கார்பனை வெளிவரத் தூண்டுகின்றன என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- எப்போது கார்பன் வெளியேறுகின்றதோ, அப்போது அவை பசுமை இல்ல வாயுக்களை உமிழும்.
- இவை 1 ஜிகா டன் அளவுள்ள கார்பனை வெளியேற்றும் திறன் கொண்டது.
- உலக மண்வள கார்பனின் மொத்த அளவில் 30 சதவிகிதத்தைக் கரி நிலங்கள் கொண்டுள்ளன என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்தோனேசியாவானது 40% வெப்ப மண்டல கரி நிலங்களைக் கொண்டு உள்ளது.

## உள்ளக எரிப்பு இயந்திரங்களின் எரிபொருள் திறன்

- இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் துகள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்படுத்தப்பட்ட மையமானது (International Advanced Centre for Powder Metallurgy and New Materials - ARCI) உள்ளக எரிப்பு இயந்திரங்களின் எரிபொருள் திறனை மேம்படுத்துவதற்காக ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- இந்தத் தொழில்நுட்பமானது என்ஜின்களில் உராய்வைக் குறைப்பதன் மூலம் எரிபொருள் திறனை மேம்படுத்துகின்றது.
- இது லேசர் மேற்பரப்பு நுண் கலப்பின் (texturing) மூலம் அடையப் படுகின்றது.
- இந்தத் தொழில்நுட்பத்தில், நுண் மேற்பரப்பு கலவையின் அளவு, அடர்த்தி மற்றும் வடிவத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உராய்வு கட்டுப்படுத்தப் படுகின்றது.
- இந்தக் கலப்பானது ஒரு துடிப்பு லேசர் கற்றையின் மூலம் உருவாக்கப் படுகின்றது.




## பிஎஸ் IVலிருந்து பிஎஸ் VI

- கொரானா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுப்பதற்காக நாடு முழுவதும் முடக்கம் அல்லது ஊரடங்கு மேற்கொள்ளப் பட்டிருக்கும் நிலையில், இந்திய உச்ச நீதிமன்றமானது பாரத் நிலை IVலிருந்து (Bharat Stage/BS – பாரத் நிலை/ பிஎஸ்) பாரத் நிலை IVற்கு மாறுவதற்கு மேலும் 10 நாட்கள் கால அவகாசம் வழங்கியுள்ளது.

- பிஎஸ் VI தரமானது பிஎஸ் VI தரத்தை விட 5 மடங்கு குறைவாக உமிழ்வை மேற்கொள்கின்றது.
- பிஎஸ் VI-ல் கொண்டு வரப்பட்டுள்ள ஒரு மிக முக்கியமான மேம்படுத்துதல் எரிபொருள் மேம்பாடு ஆகும்.
- ஒரு பிஎஸ் VI வாகனமானது பிஎஸ் VI எரிபொருளைப் பயன்படுத்த வேண்டும்.
- பிஎஸ் VI எரிபொருளானது 5 மடங்கு குறைவான சல்பரைக் கொண்டுள்ளது.
- மேலும் பி.எஸ்.VI பெட்ரோல் மற்றும் டீசல் என்ஜின்களுக்கான நைட்ரஜன் ஆக்சைடின் உமிழ்வு அளவானது முறையே 70% மற்றும் 25% என்ற அளவில் குறைக்கப் பட்டுள்ளது.
- பாரத் நிலை உமிழ்வானது ஐரோப்பிய உமிழ்வுத் தரங்களின் அடிப்படையில் 2000 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது.
- இந்தத் தரங்கள் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் நிர்ணயிக்கப் படுகின்றன.




## புவி நேரம்

- 2020 ஆம் ஆண்டின் புவி நேரமானது மார்ச் 28 ஆம் தேதியன்று இரவு 8.30 மணியிலிருந்து 9.30 மணி வரை அனுசரிக்கப்பட்டது.
- புவி நேரம் என்பது சர்வதேச இயற்கை நிதியத்தினால் (WWF - World Wide Fund for Nature) ஒருங்கிணைக்கப்படும் ஒரு உலகளாவிய நிகழ்வாகும்.
- புவி நேரமானது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் கடைசி சனிக் கிழமையன்று நிகழ்கின்றது.
- இது இரவு 8.30 மணியிலிருந்து 9.30 மணி வரை அனுசரிக்கப்படுகின்றது.
- இது 2007 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் "விளக்குகளை அணைத்தல்" என்ற ஒரு நிகழ்வாகத் தொடங்கப்பட்டது.
- இந்த நிகழ்வானது அத்தியாவசியமற்ற மின் விளக்குகளை அணைப்பதற்காக தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் வணிகர்களை ஊக்குவிப்பதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தப் புவி நேரத்தின் முக்கியமான நோக்கம் புவி வெப்பமயமாதல், பல்லுயிர்ப் பெருக்க இழப்பு மற்றும் காலநிலை மாற்றம் குறித்துப் பிரச்சாரம் மேற்கொள்வதாகும்.




## இமாலய மலையாடு

- ❖ இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வானது இமாலய மலையாடானது சைபீரிய மலையாட்டிலிருந்து வேறுபட்டுள்ளது என்பதை உறுதிபடுத்தியுள்ளது.
- ❖ இது ஜம்மு காஷ்மீர், லடாக் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவற்றின் இமயமலைப் பகுதிகளில் பரவியுள்ளது.
- ❖ இந்த ஆய்வானது தேசிய இமயமலை ஆய்வுத் திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ இந்தத் திட்டமானது மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.
- ❖ இமயமலை மலையாடானது மரபணு ரீதியாக சைபீரிய மலையாடுகளிலிருந்து வேறுபட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையிலான முதலாவது ஆதாரமாகத் திகழ்வது சமீபத்தில் மேற்கொள்ளப் பட்ட மரபணு ஆய்வாகும்.



# மாநிலச் செய்திகள்

## 1000 நீரூற்றுகள் திட்டம்

- மத்தியப் பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா ஒடிசாவின் புவனேஸ்வரில் "உள்ளூர் அரசாங்கங்களில் பட்டியலிடப்பட்ட பழங்குடிப் பிரதிநிதிகளின் திறனை வளர்ப்பதற்கான திட்டத்தை" தொடங்கி வைத்தார்.
- இந்த நிகழ்வில் நீரியியல் மற்றும் வேதியியல் பண்புகளுடன் புவியியல் தகவல் அமைப்போடு இணைந்து இயங்கும் ஸ்பிரிங் அட்லஸ் என்ற இணைய தளத்தையும், 1000 நீரூற்றுத் திட்டதத்தையும் அவர் துவங்கி வைத்தார்.
- 1000 நீரூற்றுத் திட்டம் நாட்டின் கிராமப்புறங்களில் கடினமான மற்றும் அணுக முடியாத பகுதியில் வாழும் பழங்குடிச் சமூகங்களுக்குப் பாதுகாப்பான மற்றும் போதுமான தண்ணீருக்கான அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இணையத்திலிருந்து எளிதில் தரவுகளை எடுக்கக் கூடிய வகையில் புவியியல் தகவல் அமைப்போடு இணைந்து இயங்கும் ஸ்பிரிங் அட்லஸ் என்ற இணைய தளம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

## நிமத் மிளகாய்த் திருவிழா - 2020

- மத்தியப் பிரதேச அரசால் ஏற்பாடு செய்யப்படும் ஒரு தனித்துவமான திருவிழாவான "நிமத் மிளகாய்த் திருவிழா - 2020" ஆனது மத்தியப் பிரதேசத்தின் கார்கோன் மாவட்டத்தில் தொடங்குகின்றது.
- இந்தத் திருவிழாவின் நோக்கம் அம்மாநிலத்தில் மிளகாய் உற்பத்தி மற்றும் மிளகாய் சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதும் குறிப்பாக இந்தியா & வெளிநாடுகளில் நிமாரி வகை மிளகாயை ஊக்குவிப்பதும் ஆகும்.
- இந்தத் திருவிழாவானது உள்ளூரில் 'மிர்ச் மஹோா உட்சவ்' என்று அழைக்கப் படுகின்றது.

## சோன்பத்ரா தங்கச் சுரங்கங்கள்

- உத்தரப் பிரதேசத்தின் சோன்பத்ரா மாவட்டத்தில் உள்ள ஒரு தளத்திலிருந்து எடுக்கப்பட இருக்கும் தங்கத்தின் அளவு மதிப்பீட்டை இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (Geographical Survey of India - GSI) வழங்கியுள்ளது.
- சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட வேண்டிய மொத்த தங்கத்தின் அளவு 160 கிலோவாக இருக்கலாம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- கீழ்க்கண்ட இரண்டு அடிப்படைச் செயல்முறைகளின் மூலம் இந்த மதிப்பீட்டை GSI மேற்கொண்டுள்ளது. அவையாவன:
    - பாறைகள் பற்றிய ஆய்வு மற்றும் தரையில் துளையிடுதல். பாறைகளின் ஆய்வகப் பகுப்பாய்வு ஒரு குறிப்பிட்ட கனிமத்தைக் கொண்டிருப்பதற்கான சாத்தியத்தைக் குறிக்கின்றது.
    - மற்றொரு குறிகாட்டி பாறைகளின் வயது ஆகும். இது ரேடியோ மெட்ரிக் காலக் கணிப்புச் செயல்முறைகளால் தீர்மானிக்கப் படுகின்றது.

## பழங்குடி அமைப்புகள் நுழைவு அனுமதிப் படிவ முறையைக் கோருதல்

- மேகாலயாவில் உள்ள பழங்குடியின அமைப்புகள் வெளிஆட்கள் மேகாலயா மாநிலத்திற்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தக்கூடிய நுழைவு அனுமதிப் படிவ முறையைக் கோருகின்றன.
- இது அனுமதிப் படிவ முறையின் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் ஒரு மாநிலத்திற்குச் செல்ல அல்லது அந்த மாநிலத்தில் தங்குவதற்கு வெளியாட்களால் சமர்ப்பிக்கப்படும் ஒரு ஆவணமாகும்.
- இந்த இடத்தின் உள்ளூர் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கு நுழைவு அனுமதிப் படிவ முறை உதவுகின்றது. மேலும் அங்கு சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களையும் வெளியாட்களின் அத்துமீறலையும் இது தடுக்கின்றது.
- தற்போது, அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகிய நான்கு வடகிழக்கு மாநிலங்கள் ஏற்கனவே இந்த முறையின் கீழ் உள்ளன.
- நுழைவு அனுமதிப் படிவமானது அந்தந்த மாநில அரசால் வழங்கப் படுகின்றது.
- அனுமதிப் படிவம் என்பது வங்காள கிழக்கு எல்லை ஒழுங்குமுறைச் சட்டம் 1873ன் நீட்டிப்பாகும்.




## பாதுகாப்பு இல்லங்கள் - கேரளா

- கேரள சமூக நீதித் துறையானது சாதிக் கலப்புத் திருமணம் மற்றும் மதக் கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்காக 'பாதுகாப்பு இல்லங்களை' அமைப்பதற்காக ஒரு தனித்துவமான முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- அத்தகைய தம்பதிகள் திருமணம் முடிந்து ஒரு வருடம் வரை இந்தப் பாதுகாப்பு இல்லங்களில் தங்கலாம்.

## பாகீரதா திட்டம்

- பாகீரதா திட்டம் என்பது தெலுங்கானா மாநிலத்திற்காகத் தொடங்கப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்கும் ஒரு திட்டமாகும்.
- இது ஒவ்வொரு கிராமத்துக்கும் நகரத்துக்கும் குடிநீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகளில் இருந்து தூய்மையான குடிநீரை வழங்க இருக்கின்றது.
- இந்துக் கலாச்சாரத்தின் படி பாகீரதா என்பது புனித கங்கை நதியைப் பூமிக்கு கொண்டு வந்த ஒரு இந்திய மன்னரைக் குறிக்கின்றது.
- பாகீரதி நதியானது தெலுங்கானாவில் பாயவில்லை.
- இது உத்தரகாண்ட் மாநிலம் வழியாகப் பாய்கின்றது.

## நில வழியாக இடப்பெயர்விற்கான சோதனைச் சாவடிகள்

- மேற்கு வங்கத்தின் கோஜடங்கா மற்றும் திரிபுராவின் அகர்தலா ஆகிய நகரங்கள் நில வழியாக இடப்பெயர்விற்கான சோதனைச் சாவடிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- இவை இந்திய - வங்கதேச எல்லையில் அமைந்துள்ளன.
- வங்கதேச எல்லையில் தனது எல்லையைப் பாதுகாப்பதற்காக இந்தியா "பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பு அளித்தல்" என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளது.
- வங்க தேசத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தால் வழங்கப்படும் நுழைவு இசைவுகள் உலகில் உள்ள இந்தியத் தூதரகங்கள் அனைத்திலும் மிக உயர்ந்தவையாகக் கருதப் படுகின்றது.

## தமிழகத்தைச் சேர்ந்த கேரள அஞ்சல் துறைத் தலைவர்

- கேரள அஞ்சல்துறைத் தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த சாரதா சம்பத் நியமனம்.
- இவர் மகளிர் மட்டுமே பணிபுரியும் 23 தபால் நிலையங்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

## சிறப்பு கிராம சபைகள்

- சர்வதேச மகளிர் தினத்தைக் குறிக்கும் வகையில், சத்தீஸ்கரில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் சிறப்பு கிராம சபைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- பெண்களின் ஊட்டச்சத்து, கல்வி, சுகாதாரம், சமத்துவம், பாதுகாப்பு போன்ற தலைப்புகளில் கிராம சபைகள் கலந்துரையாடின.

## கிஷோரி சக்தி காரியகிரம்

- ஒடிசாவின் பெர்ஹாம்பூரைச் சேர்ந்த பதினான்கு பதின்ம வயதுப் பெண்கள் சர்வதேச மகளிர் தினத்தன்று 'கிஷோரி சக்தி காரியகிரம்' என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கினர்.
- இது நகரின் சேரிப் பகுதிகளில் வாழும் இளம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆர்வலர்கள் 14 வயது முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.
- இந்தப் பிரச்சாரமானது இளம் பருவத்தினருக்கும் சமூகத்திற்கும் மாதவிடாய், திருமணத்திற்கான சரியான வயது, பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்புகளில் இடைநின்ற பெண்களை மீண்டும் அவற்றைத் தொடர ஊக்குவித்தல், பாலினச் சமத்துவத்தை ஊக்குவித்தல், திறன் மேம்பாடு மற்றும் இளம் பருவக் குழுக்களை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆற்றுக்கால் பொங்கல் திருவிழா

- ஆற்றுக்கால் பொங்கல் திருவிழா என்பது திருவனந்தபுரத்தின் ஆற்றுக்கால் கோயிலில் கொண்டாடப்படும் 10 நாட்கள் கால அளவுள்ள ஒரு திருவிழாவாகும்.
- இந்தக் கோவிலில் இந்தத் திருவிழாவின் ஒன்பதாம் நாளில் லட்சக்கணக்கான பெண்கள் ஒரு பெரிய கூட்டமாகத் திரள்வர்.
- இந்தப் பெண்கள் மண் தொட்டிகளில் அரிசியால் செய்யப்பட்ட தெய்வீக உணவைத் தயார் செய்து, அதனை கடவுளுக்கு வழங்குகின்றார்கள்.
- இந்தக் கோயிலானது பெண்களின் சபரிமலை என்றும் அழைக்கப்படுகின்றது.



## 'பெயர் மற்றும் அவமானம்' குறித்த அறிவிப்புகளை நீக்க நீதிமன்ற உத்தரவு

- சர்ச்சைக்குரிய 'பெயர் மற்றும் அவமானம்' குறித்த அறிவிப்புகளை உடனடியாக அகற்றுமாறு அலகாபாத் உயர் நீதிமன்றம் லக்னோ நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.
- இந்த அறிவிப்புகளில் குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு எதிரான போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.
- குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு எதிரான போராட்டங்களின் போது ஏற்பட்ட வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களை அடையாளம் காணும் வகையில் லக்னோ நகர் முழுவதும் காவல்துறையினர் பல அறிவிப்புகளை வைத்துள்ளனர்.
- அலகாபாத் உயர்நீதிமன்றம் தானாகவே முன்வந்து இந்தச் செயல் குறித்து விசாரித்தது.
- இது இந்திய அரசியலமைப்பின் 21வது சரத்தையும் மீறுவதாக அமைந்துள்ளது.
- மேலும், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973ன் படி, ஒரு நபரின் தனிப்பட்ட பதிவுகளை பொதுவெளியில் காண்பிப்பதற்கான எந்தவொரு அதிகாரமும் காவல்துறை அல்லது நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்கப் படவில்லை.



## மேற்கூரையில் சூரிய ஒளித் தகடுகள் நிறுவல்கள்

- நாடு முழுவதும் உள்ள மேற்கூரை சூரிய ஒளித் தகடு நிறுவல்களில் குஜராத் மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- மாநில அளவில் சூரிய ஆற்றலின் பயன்பாட்டை அதிகரிக்கும் பொருட்டு "சூர்ய குஜராத்" என்ற ஒரு திட்டத்தை அம்மாநில அரசு செயல்படுத்தி வருகின்றது.
- இந்தத் திட்டமானது 2022 ஆம் ஆண்டிற்குள் குஜராத் மாநிலத்தில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட நுகர்வோரை உள்ளடக்க இருக்கின்றது.
- மேலும் குஜராத் மாநிலம் 3 KWhr மற்றும் 10 KWhrக்கு இடைப்பட்ட திறன் கொண்ட திட்டங்களுக்கு 40% மானியத்தையும் வழங்கியுள்ளது.

## காலநிலை நெகிழ்திறன் மழை சார்ந்த விவசாயத்திற்கான ஒப்பந்தம்

- நீர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு, இமாச்சலப் பிரதேச அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை கடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இது இமாச்சலப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் (கிராம சபைகளில்) விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்க இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது காடுகள், மேய்ச்சல் நிலங்கள் மற்றும் புல்வெளிகளில் உள்ள நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துவதோடு, இமாச்சலப் பிரதேசத்திலும் அதற்குக் கீழ்நிலையில் உள்ள மாநிலங்களிலும் நிலையான விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைப்பதை உறுதி செய்ய இருக்கின்றது.

## பாசுமதி புவிசார் குறியீடு

- புகழ்பெற்ற 'பாசுமதி' புவிசார் குறியீடு கொண்ட மாநிலங்களின் பட்டியலில் சேருவதற்கான மத்தியப் பிரதேச அரசின் முயற்சியானது மீண்டும் தோல்வி அடைந்துள்ளது.
- தன்னுடைய மாநிலத்தின் சில பகுதிகளில் பயிரிடப்படும் பாசுமதி நெல்லுக்குப் புவிசார் குறியீடு (geographical indication - GI) வழங்கக் கோரிய மத்தியப் பிரதேச மாநிலத்தின் மனுவை மதராஸ் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- ஒரே பொருளுக்கு இரண்டு GI சான்றிதழ் பதிவுகளை வழங்க முடியாது என்று இந்த நீதிமன்றம் கூறியுள்ளது.

***பின்னணி***

- 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில் பஞ்சாப், ஹரியானா, தில்லி, இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், மேற்கு உத்தரப் பிரதேசம் மற்றும் ஜம்மு & காஷ்மீரின் சில பகுதிகளில் மட்டுமே வளர்க்கப்படும் பாசுமதிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ஆனால் மத்தியப் பிரதேசம் தனது மாநிலப் பகுதியின் கீழ் உள்ள 13 மாவட்டங்களைப் பாரம்பரிய பாசுமதி வளரும் பகுதிகளாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியது.
- தொழில்துறை சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள அறிவுசார் சொத்துரிமைகளின் (intellectual property rights - IPRs) ஒரு அங்கமாக புவியியல் குறியீடுகள் உள்ளன.
- GI ஆனது உலக வர்த்தக அமைப்பின் (WTO - World Trade Organisation) அறிவுசார் சொத்துரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்கள் (TRIPS - Trade-Related Aspects of Intellectual Property Rights) மீதான ஒப்பந்தத்தால் நிர்வகிக்கப் படுகின்றது.

- இந்தியாவில், புவிசார் குறியீட்டுப் பதிவு ஆனது பொருட்களின் புவிசார் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999 ஆல் நிர்வகிக்கப் படுகின்றது. இது 2003 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
- புவிசார் குறியீடு வழங்கப்பட்ட முதலாவது இந்தியப் பொருள் டார்ஜிலிங் தேநீர் ஆகும். இதற்கு 2004-05 ஆம் ஆண்டில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.


**What is a Geographical Indication?**
A 'geographical indication' (GI) is a place name used to identify the origin and quality, reputation or other characteristics of products. For instance, Champagne.

**Why is it important?**
Article 22 of the Trade-Related Aspects of Intellectual Property Rights agreement says unless a geographical indication is protected in the country of its origin, there is no obligation under the agreement for other countries to extend reciprocal protection.

**India's Basmati credentials...** India is the largest producer and exporter of Basmati rice in the world. Exports totalled Rs. 27,597 crore in 2014-15.

**Some popular registered GIs in India**
Darjeeling Tea, Mysore Silk, Mysore Pak (sweet), Thanjavur Veena

Pusa Basmati 1, a high-yielding Variety of scented Basmati rice.
— FILE PHOTO

Sources: WTO and APEDA

## மாநில சுகாதார அவசரநிலை

- ஒடிசாவின் முதல்வரான நவீன் கொரோனா வைரஸின் திடீர்ப் பெருக்கத்தை "மாநிலப் பேராபத்து" அல்லது மாநிலப் பேரிடர் என்று அறிவித்துள்ளார்.
- முன்னதாக, கேரள மாநிலம் தனது நான்கு மாவட்டங்களில் சுகாதார அவசரநிலையை அறிவித்துள்ளது.

## பூல் டெய் திருவிழா

- உத்தராகண்ட்டில் பாரம்பரிய அறுவடைத் திருவிழாவான "பூல் டெய்" திருவிழா கொண்டாடப் பட்டது.
- மலையகத்தில் வசிக்கும் சமூகங்களுக்கிடையேயான பிணைப்பை இந்தத் திருவிழா வெளிப்படுத்துகிறது.
- இந்தப் பாரம்பரியத் திருவிழாவில் இளம் பெண்கள் இந்தப் பருவ காலத்தில் பூத்த முதல் பூக்களைப் பறித்து தங்கள் வீடுகளை பூக்களால் அலங்கரிப்பார்கள்.
- 'டெய்' என்பது வெல்லம், வெள்ளை மாவு, தயிர் ஆகியவற்றால் ஆன திருவிழாவின் ஒரு முக்கிய உணவாகும். திருவிழாச் சடங்கிற்காக செய்யப்படும் இந்தப் புட்டு உணவானது அனைவருக்கும் வழங்கப் படுகிறது.

## உத்தரன் திட்டத்தின் கீழ் அரங்கங்கள்

- உத்தரன் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 33 அரங்கங்களை அமைக்க அசாம் அரசு திட்டமிட்டுள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் நோக்கங்களுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கவும், உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ற புதுமையான திட்டங்களைச் செயல்படுத்தவும் அஸ்ஸாம் அரசாங்கத்தால் உத்தரன் திட்டம் ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

## உள்ளூர் மக்களுக்கான ஒதுக்கீடு – கர்நாடகா

- அனைத்துப் பிரிவுகளிலும் உள்ளூர் மக்களுக்கு (கன்னட மொழி பேசும்) வேலைவாய்ப்புகளில் 80% இடஒதுக்கீடு வழங்குமாறு கர்நாடக அரசு தனியார் நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.
- தனியார் துறையில் தொகுதி 'சி' மற்றும் தொகுதி 'டி' ஆகிய பணிகளில் உள்ளூர் மக்களுக்கு 100% ஒதுக்கீடு வழங்குவதற்காக 1961 ஆம் ஆண்டு கர்நாடகத் தொழில்துறை வேலைவாய்ப்பு (நிலையான ஆணைகள்) விதிகளை அம்மாநில அரசு ஏற்கனவே திருத்தியுள்ளது.

## கோழிகளைக் கொல்ல கேரள அரசு உத்தரவு

- பறவைக் காய்ச்சலின் காரணமாக பரப்பன அங்காடியில் கோழிகளைக் கொல்லுவதற்கு கேரள மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.
- அந்த நகரின் மையப்பகுதியில் (முக்கியமான பகுதியில்) ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் அனைத்துக் கோழிகளையும் கொல்லச் சிறப்புக் குழுக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.



## பொதுச் சொத்துக்களைச் சேதத்திலிருந்து மீட்பதற்கான அவசரச் சட்டம், 2020

- சமீபத்தில் வன்முறைப் போராட்டங்களின் போது பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மீட்பதற்காக உத்தரப் பிரதேச மாநில அமைச்சரவையானது 'பொதுச் சொத்துக்களைச் சேதத்திலிருந்து மீட்பதற்கான அவசரச் சட்டம் 2020' என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
- இது அம்மாநிலத்தில் பொது சொத்துக்களின் இழப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ரோபேக்ஸ் (ROPAX)

- மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது மும்பை மற்றும் மண்டாவா (மகாராஷ்டிரா) ஆகியவற்றிற்கு இடையே "ரோபேக்ஸ்" என்று அழைக்கப்படும் "ரோல் ஆன் – ரோல் ஆப்" எனப்படும் கப்பற் பயணச் சேவையைத் தொடங்கியுள்ளது.
- மும்பை மற்றும் மண்டாவா ஆகியவற்றிற்கு இடையேயான சாலைத் தொலைவானது 110 கிலோ மீட்டர்களாகும். இதைக் கடக்க எடுத்துக் கொள்ளும் நேரம் 3 முதல் 4 மணி

நேரமாகும். கடல்வழியின் மூலம் இதன் தொலைவு 18 கிலோ மீட்டர்களாகும். இதன் பயண நேரம் 1 மணி நேரமாகும்.

- குறைவான பயண நேரம், வாகனப் போக்குவரத்து நெரிசல் குறைவு மற்றும் வாகன உமிழ்வுக் குறைவு ஆகியவை இச்சேவையின் பயன்பாடுகளாகும்.

## பொதுப் பாதுகாப்புச் சட்டம்

- ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வரான ஓமர் அப்துல்லா என்பது 7 மாதத் தடுப்புக் காவலுக்குப் பின்னர், தற்பொழுது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
- இவர் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருந்தார்.
- பொதுப் பாதுகாப்புச் சட்டம், 1978 என்பது ஒரு தடுப்புக் காவல் சட்டமாகும்.
- இந்தச் சட்டத்தின் கீழ், மாநிலப் பாதுகாப்பிற்கு எதிராகச் செயலாற்றுவதிலிருந்து தடுப்பதற்காக ஒருவரைத் தடுப்புக் காவலில் வைக்கலாம்.
- இந்தச் சட்டமானது ஜம்மு காஷ்மீருக்கு மட்டுமே பொருந்தும்.

## அர் – ரினாம்

- இது அருணாச்சலப் பிரதேசத்தில் அனுசரிக்கப்படும் ஒரு பழங்குடியின முடக்கச் சடங்காகும்.
- இது கோவிட் – 19ன் பரவலின் காரணமாக தற்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
- கேலோஸ் என்ற பழங்குடி இனமானது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள முக்கியமான 26 பழங்குடியினங்களில் ஒன்றாகும். இவர்கள் மேற்கு சியாங் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.
- இந்த மாவட்டமானது அர் - ரினாம் என்ற சடங்கை அனுசரிக்கின்றது.

## அருணான்க் திட்டம்

- இது எல்லைச் சாலைகள் அமைப்பால் (BRO - Border Road Organization) அருணாச்சலப் பிரதேசத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.
- டபோரிஜோ பாலத்திற்கு மாற்றாக மற்றொரு பாலத்தை அமைப்பதற்காக BRO ஆனது முழு வீச்சில் செயல்பட்டு வருகின்றது.
- சீன எல்லையில் அமைந்துள்ள 451 கிராமங்களுக்கான ஒரே தகவல் தொடர்வு இந்தப் பாலம் மட்டுமே ஆகும்.
- டபோரிஜோ பாலமானது சுபன்ஸ்ரீ நதியின் குறுக்கேக் கட்டப்பட்டு வருகின்றது.
- சுபன்ஸ்ரீ நதியானது அஸ்ஸாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பாய்கின்றது.
- இது பிரம்மபுத்திரா ஆற்றின் ஒரு மிகப்பெரிய துணை ஆறாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## 6வது சுவாமி விவேகானந்தா கர்மயோகி விருது 2020

- இந்திய வன மனிதன் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலரான ஜாதவ் பாயெங் 2020 ஆம் ஆண்டில் 6வது வருடாந்திர சுவாமி விவேகானந்தா கர்மயோகி விருது வழங்கப் பெற இருக்கின்றார்.
- காடு வளர்ப்பின் மூலம் மனிதனால் உருவாக்கப்படும் காடுகளை உருவாக்குவதில் அவர் மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளுக்காக அவர் கௌரவிக்கப் படுகின்றார்.
- 2015 ஆம் ஆண்டில், இந்தியாவின் நான்காவது மிக உயரிய குடிமக்கள் விருதான பத்மஸ்ரீ விருதானது இவருக்கு வழங்கப்பட்டது.
- இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்தின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் தனித்துவமான சாதனைகளை அங்கீகரிப்பதற்காக கர்மயோகி விருதானது அவருக்கு வழங்கப் படுகின்றது.




## உலக உற்பத்தித்திறன் மாநாடு - 2020ன் 19வது பதிப்பு

- உலக உற்பத்தித்திறன் மாநாட்டின் (World Productivity Congress – WPC) 19வது பதிப்பானது பெங்களூரில் நடைபெற இருக்கின்றது.
- WPC என்பது உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்கான உலகின் மிகப்பெரிய மாநாடு ஆகும். இது எதிர்கால உற்பத்தி வளர்ச்சியை வடிவமைக்கும் புதுமையான மற்றும் உலகத் தரம் வாய்ந்த நடைமுறைகளை ஊக்குவிக்கின்றது.
- முந்தைய WPC ஆனது இந்தியாவில் 1974 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதன் பிறகு இது தற்பொழுது 45 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நடைபெற உள்ளது.
- 19வது உற்பத்தித்திறன் மாநாடு - 2020ன் கருப்பொருள்: "தொழில் துறை 4.0 - புதுமை மற்றும் உற்பத்தித்திறன்" என்பதாகும்.
- கனடாவின் மாண்ட்ரீயலைத் தலைமையிடமாகக் கொண்ட உலக உற்பத்தித் திறன் கூட்டமைப்பானது 1969 ஆம் ஆண்டு முதல் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்து வருகின்றது.

## உ.வே.சா. உலகத் தமிழ் விருது

- வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியின் தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் தி.மு.அப்துல் காதர் என்பவருக்கு உ.வே.சா. உலகத் தமிழ் விருது வழங்கப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான இந்தப் போட்டிக்கு வழங்கப்பட்ட தலைப்பு, 'சிலப்பதிகாரத்தில் அறக்கோட்பாடு' என்பதாகும்.

## "இஸ்லாமிகா 500" விருது

- சிங்கப்பூரைச் சேர்ந்த முகமது ஜின்னா என்பவர் இஸ்லாமியப் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கியதற்காக இஸ்லாமிய 500 என்ற இதழிடமிருந்து விருது பெறுகின்றார்.
- இவர் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார்.
- இஸ்லாமிகா 500 என்பது இஸ்லாமிய உலகம் மற்றும் பொருளாதாரத்தில் உலகின் மிக முக்கியமான மற்றும் செல்வாக்கு மிக்க கிடைப்பதற்கரிய 500 நபர்களின் வாழ்க்கை வரலாற்று விவரங்களை வழங்கும் குறிப்பு ஆகும்.

## லலித் கலா அகாடமி விருதுகள்

- இந்தியக் குடியரசுத் தலைவரான ராம்நாத் கோவிந்த் தேசிய லலித் கலா அகாடமியின் 61வது வருடாந்திர விருதுகளை புது தில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் வழங்கினார்.
- தேசிய லலித் கலா அகாடமி விருதுகளானது கலைத் துறையில் சிறப்பாகப் பணியாற்றிய தனிநபர்களை அங்கீகரிப்பதற்காக வழங்கப் படுகின்றது.

## உலக வரலாற்றில் மிகச் சிறந்த தலைவர்

- பிபிசி உலக வரலாற்று இதழால் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், மகாராஜா ரஞ்சித் சிங் என்பவர் உலகின் 'மிகச் சிறந்த தலைவர்' என்று பெயரிடப்பட்டுள்ளார்.
- மகாராஜா ரஞ்சித் சிங் என்பவர் 19 ஆம் நூற்றாண்டில் சீக்கியப் பேரரசின் இந்திய ஆட்சியாளராக விளங்கினார்.
- மேலும் இவர் இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் மீது விதிக்கப்படும் ஜிசியா வரியைத் தடை செய்தார்.



## இந்திரா காந்தி மற்றும் அமிர்த கவுர்

- டைம் இதழ் ஆனது இந்த ஆண்டின் 100 சிறந்த பெண்களில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் சுதந்திரப் போராளியான அமிர்த கவுர் ஆகியோரை தேர்ந்தெடுத்துள்ளது.
- 1920 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 100 பெண்களுக்கு 100 இடங்களை டைம் இதழ் உருவாக்கியுள்ளது.
- டைம் இதழானது 1947 ஆம் ஆண்டிற்கான பெண்மணியாக அம்ரித் கவுர் என்பவரையும் 1976 ஆம் ஆண்டிற்கான பெண்மணியாக இந்திரா காந்தி என்பவரையும் தேர்ந்தெடுத்துள்ளது.




## இந்த ஆண்டின் இந்திய விளையாட்டுப் பெண்கள் விருது

- உலக சாம்பியன் இறகுப் பந்தாட்ட வீராங்கனையான பி.வி. சிந்து என்பவர் இந்த ஆண்டின் பிபிசி இந்திய விளையாட்டு வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- குத்துச்சண்டை வீராங்கனையான மேரி கோம், மாற்றுத் திறனாளி இறகுப் பந்தாட்ட வீரரான மானசி ஜோஷி, தடகள வீராங்கனையான டூட்டி சந்த் மற்றும் மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகாட் ஆகியோரை விட இவர் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்றார்.
- அதே விழாவில், புகழ்பெற்ற தடகள வீராங்கனையான பி.டி. உஷாவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டது.



## அவ்வையார் விருது

- முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி திருவண்ணாமலையைச் சேர்ந்த ஆர்.கண்ணகி என்பவருக்கு நடப்பு ஆண்டிற்கான தமிழக அரசின் அவ்வையார் விருது வழங்கி கௌரவித்தார்.
- 18 ஆண்டுகளுக்கும் மேலாக கிராமப்புற பெண்களின் முன்னேற்றத்திற்காக இவர் ஆற்றிய பணிகளை அங்கீகரித்து இந்த விருதானது இவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இடுகாட்டு உதவியாளரான கண்ணகி என்பவர் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பெண்களின் சுய உதவிக் குழுக்களினரிடையே (Self-Help groups - SHGs) சிறப்பாக அறியப் படுகின்றார்.

## பாவ்னா தேஹாரியா

- இந்திய மலையேற்ற வீராங்கனையான பாவனா தெஹாரியா என்பவர் ஆஸ்திரேலியாவின் மிக உயரமான மலைச் சிகரமான கோசியஸ்ஸ்கோ என்ற மலையின் உச்சியை அடைந்து சாதனை படைத்துள்ளார்.
- இவர் 2019 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரம் மற்றும் கிளிமஞ்சாரோ ஆகிய மலைகளின் உச்சியை அடைந்து சாதனை படைத்தார்.
- மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் மலையேறுவதற்குத் தன்னை ஆதரித்து ஊக்கப்படுத்திய அம்மாநில முதல்வரான கமல்நாத் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

## பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான்

- 2020 ஆம் ஆண்டு மார்ச் 17 அன்று வங்கதேசமானது "ஜதீர் பிதா" பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மானின் 100வது பிறந்த தினத்தைக் கொண்டாடியது.
- பிரதமர் மோடி காணொளியின் மூலம் இந்தக் கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.

### *இவர் பற்றி*

- ஷேக் முஜ்புர் ரஹ்மான் வங்கதேசத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி ஆவார்.
- இவர் வங்கதேசத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார்.
- இவர் வங்கதேசத்தின் முதல் அதிபராகப் பணியாற்றினார்.
- பின்னர் 1971 மற்றும் 1975க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் வங்கதேசத்தின் பிரதமராகப் பணியாற்றினார்.
- இவர் 1975 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டார்.



- இவர் 1949 ஆம் ஆண்டில் அவாமி லீக்கை நிறுவினார்.
- இவரது மகளான ஷேக் ஹசீனா என்பவர் அவாமி லீக்கின் தற்போதையத் தலைவராகவும் வங்கதேசத்தின் பிரதமராகவும் உள்ளார்.

## டாக்டர் கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருது

- 2020 ஆம் ஆண்டிற்கான டாக்டர். கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கும் எழுத்தாளர்களின் பட்டியலை தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சங்கமானது அறிவித்துள்ளது.
- வெற்றி பெற்றவர்கள் பின்வருமாறு :

| வெற்றி பெற்றவர்கள் | துறை |
|---|---|
| **N.முருகேச பாண்டியன்** | உரைநடை |
| **A.மங்கை** | நாடகம் |
| **அறிவுமதி** | கவிதை |
| **பொன்னீலன்** | நாவல் |
| **சித்தலிங்கையா** | கன்னட மொழி |
| **R.பாலகிருஷ்ணன்** | ஆங்கில மொழி |

## அபெல் விருது

- நார்வே அறிவியல் நிறுவனமானது 2020 ஆம் ஆண்டிற்கான அபெல் விருதினை 2 சிறந்த கணிதவியலாளர்களான ஹிலெல் ப்ரூண்டன் – பெர்க் மற்றும் கிரிகோரி மர்குலிஸ் ஆகியோருக்கு வழங்க இருக்கின்றது.
- எண் கோட்பாடு, சேர்வியல் மற்றும் குழுக் கோட்பாடு ஆகியவற்றில் நிகழ்தகவு மற்றும் இயக்கவியல் குறித்த சிறந்த பணிகளுக்காக இவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட இருக்கின்றது.
- அபெல் விருது என்பது நார்வே அரசரால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் நார்வே நாட்டுப் பரிசாகும்.




## சத்யருப் சித்தாந்தா

- இந்திய மலையேற்ற வீரரான "சத்யருப் சித்தாந்தா" என்பவர் "லிம்கா சாதனை புத்தகத்தில்" நுழைந்துள்ளார்.
- இவர் உலகில் உள்ள ஏழு கண்டங்களில் உள்ள உயரமான எரிமலைகளில் ஏறிய முதலாவது இந்தியராக உருவெடுத்துச் சாதனை படைத்துள்ளார்.

- லிம்கா சாதனை புத்தகமானது உலக சாதனைப் புத்தகத்திற்கு அடுத்த இரண்டாவது உயரிய புத்தகமாகக் கருதப்படுகின்றது.
- இது இந்தியாவில் மற்றும் இந்தியாவிற்கு வெளியே மற்ற நாடுகளில் இந்தியர்களால் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளைக் கொண்டுள்ளது.
- இவரது சாதனைகள் பின்வருமாறு
    - கிளிமஞ்சாரோ மலை, ஆப்பிரிக்கா (5895 மீ)
    - எல்பரஸ் மலை, ஐரோப்பா (5642 மீ)
    - பிக்கோ டி ஒரிசாபா மலை, வடக்கு அமெரிக்கா (5636 மீ)
    - கிலுவி மலை, ஆஸ்திரேலியா (4367 மீ)
    - சிட்லே மலை, அண்டார்டிகா (4285 மீ)
    - ஒஜோஸ் டெல் சலேடோ மலை, தென் அமெரிக்கா (6893 மீ)
    - டமாவந்த் மலை, ஆசியா (5680 மீ)

# விளையாட்டுச் செய்திகள்

## மரியா ஷரபோவா ஓய்வு பெறுகிறார்

- ஐந்து முறை கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்ற ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா டென்னிஸிலிருந்து ஓய்வு பெறுகிறார்.
- ஷரபோவா 2004 ஆம் ஆண்டில் தந்து 17ஆம் வயதில் விம்பிள்டனில் வென்றதன் மூலம் உலக நட்சத்திரமாகத் திகழ்ந்தார்.

| 5 Grand Slam titles | 2004 | 2006 | 2008 | 2012 | 2014 |
|---|---|---|---|---|---|
| | Wimbledon | US Open | Aus Open | French Open | French Open |

## ஆசிய ஸ்குவாஷ் கூட்டமைப்புச் செயல்திறன் விருது பட்டியல்

- 2019 ஆம் ஆண்டிற்கான ஆசிய ஸ்குவாஷ் கூட்டமைப்பின் செயல்திறன் விருதுப் பட்டியலில், இந்தியாவின் சவுரவ் கோசல் மற்றும் வீர் சோத்ரானி தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- சீனியர் பிரிவில் 'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான' பிரிவில் டத்தோ அலெக்ஸ் விருதுக்கு கோசல் பரிந்துரைக்கப் பட்டுள்ளார்.
- ஜூனியர் பிரிவில் 'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான' பிரிவில் ஹாசன் மூசா விருதுக்கு சோத்ரானி தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- கோலாலம்பூரில் மார்ச் 25 முதல் 29 வரை நடைபெறவிருக்கும் ஆசிய அணி சாம்பியன்ஷிப்பில் இந்த விருதுகள் வழங்கப் படும்.

## கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுகள்

- முதலாவது குளிர்கால விளையாட்டுப் போட்டியானது மார்ச் 7 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை ஜம்மு காஷ்மீரில் உள்ள குல்மார்க் நகரில் நடைபெற இருக்கின்றது.

- லடாக் ஒன்றியப் பிரதேசமும் கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகளை மார்ச் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் நடத்த இருக்கின்றது.
- இரண்டு இடங்களில் நடத்தப்படும் இந்த விளையாட்டுகளுக்கும் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தால் நிதியளிக்கப்பட இருக்கின்றது.




## மகளிர் டி20 - 2020

- மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான மகளிர் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியில், நடப்பு சாம்பியனான ஆஸ்திரேலியா தனது ஐந்தாவது உலகக் கோப்பை பட்டத்தை வென்றது.
- இந்த வெற்றியின் மூலம், ஆஸ்திரேலியா தங்கள் ஆறாவது இறுதிப் போட்டியில் ஐந்தாவது இருபது ஓவர் உலகக் கோப்பையை வென்றது.

*குறிப்பு*

- இப்போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.
- இது ஏழாவது ஐசிசி மகளிர் இருபது ஓவர் உலகக் கோப்பை போட்டியாகும்.
- மகளிர் இருபது ஓவர் உலகக் கோப்பை இறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியது இதுவே முதல் முறை ஆகும்.
- இந்த போட்டியில் ஆஸ்திரேலியாவின் பெத் மூனி 259 ரன்களுடன் முன்னிலை வகித்தார். அவரே இத்தொடரின் சிறந்த வீரரும் ஆவார்.



## ஒலிம்பிக் சுடர் 2020

- கிரீக் நாட்டில் உள்ள பண்டைய ஒலிம்பியாவில் 2020 ஆம் ஆண்டின் டோக்கியோ விளையாட்டுக்கான ஒலிம்பிக் சுடரானது ஏற்றப்பட்டது.
- கிரேக்க ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல் வீராங்கனையான அன்னா கோரகாக்கி என்பவர் ஆரம்பத்தில் இந்தச் சுடரைத் தாங்கிச் சென்றார். ஒரு பெண் இந்தச் சுடரைத் தாங்கிச் செல்வதற்காக தேர்வு செய்யப்பட்டது இதுவே முதல்முறையாகும்.




- ஜப்பான், அதிலும் குறிப்பாக டோக்கியோ நகரம் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவது இரண்டாவது முறையாகும்.
- இந்த நாடு (டோக்கியோ) இதற்கு முன்பு முதல்முறையாக 1964 ஆம் ஆண்டில் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியது.
- கோடைக்கால விளையாட்டுகளை இரண்டு முறை நடத்தும் ஆசியாவின் முதலாவது நகரமாக டோக்கியோ உருவெடுத்துள்ளது.
- ஒட்டுமொத்தமாக, இது ஜப்பானில் நடைபெறும் நான்காவது ஒலிம்பிக் போட்டியாகும். இது 1972 (சப்போரோ) மற்றும் 1998 (நாகானோ) ஆகிய ஆண்டுகளில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியது.



## ரஞ்சிக் கோப்பை 2019-20

- 2019–20 ரஞ்சிக் கோப்பையானது, ரஞ்சிக் கோப்பையின் 86வது பதிப்பாகும்.
- ராஜ்கோட்டில் வங்காள அணியைத் தோற்கடித்து சவுராஷ்டிரா அணி முதல்முறையாக ரஞ்சிப் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.
- ரஞ்சிக் கோப்பை என்பது பிராந்திய மற்றும் மாநில கிரிக்கெட் சங்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பல அணிகளுக்கு இடையே இந்தியாவில் விளையாடப் படும் ஒரு உள்நாட்டு முதல்தர கிரிக்கெட் போட்டியாகும்.
- சர்வதேசக் கிரிக்கெட்டில் விளையாடிய முதல் இந்தியக் கிரிக்கெட் வீரரான ரஞ்சித் சிங்ஜி என்பவரின் பெயரிலேயே இந்தப் போட்டிக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## டோக்கியோ 2020 ஒலிம்பிக்ஸ்

- அதிகாரப்பூர்வமாக XXXII ஒலிம்பியாட் மற்றும் பொதுவாக டோக்கியோ 2020 என அழைக்கப்படும் 2020 கோடைக்கால ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கள் 2021 ஆம் ஆண்டிற்கு ஒத்தி வைக்கப் படுகின்றன.
- இதைச் சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஜப்பானின் டோக்கியோ விளையாட்டு ஏற்பாட்டுக் குழு இணைந்து அறிவித்தன.
- இந்த விளையாட்டுகள் ஒத்தி வைக்கப் பட்டிருந்தாலும் அவை இன்னும் டோக்கியோ 2020 என்றே அடையாளப் படுத்தப்பட்டு மற்றும் சந்தைப் படுத்தப்படும்.

### *ஒத்தி வைக்கப்பட்ட போட்டிகளின் வரலாறு*

- இதுவரை திட்டமிடப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள் முதலாம் உலகப் போர் (1916 பெர்லினில்) அல்லது இரண்டாம் உலகப் போர் (1940 டோக்கியோவில் மற்றும் 1944 லண்டனில்) காரணமாகவே ரத்து செய்யப் பட்டுள்ளன.
- குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் (ஜப்பானில் 1940 மற்றும் இத்தாலியில் 1944) இரண்டாம் உலகப் போரின் காரணமாக ரத்து செய்யப் பட்டன.

## திருநம்பிகளைக் கொண்ட நாட்டின் முதலாவது அணி

- வட கிழக்கு மாநிலமான மணிப்பூர் ஆனது திருநம்பிகளைக் கொண்ட நாட்டின் முதலாவது அணியை ஏற்படுத்தியுள்ளது.
- இவர்கள் அணித் தலைவர், கோல் கீப்பர், தடுப்பு வீரர்கள் ஆகியோரைக் கொண்ட நாட்டின் முதலாவது திருநர் கால்பந்து அணியை ஏற்படுத்தி சாதனை படைத்துள்ளனர்.

## FIFAன் கோவிட் – 19 பிரச்சாரம்

- உலக நிர்வாக அமைப்பான FIFA ஆனது (International Federation of Association Football - சர்வதேசக் கால்பந்துக் கூட்டமைப்பு மன்றம்) தனது பிரச்சாரத்திற்காக இந்தியக் கால்பந்து அணித் தலைவரான சுனில் சேத்ரி மற்றும் பிற 28 வீரர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- சுனிலைத் தவிர, உலகெங்கிலும் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களான அர்ஜென்டினாவைச் சேர்ந்த லியோனல் மெஸ்ஸி மற்றும் இதர உலகக் கோப்பை வெற்றியாளர்களான கேசில்லாஸ், பிலிப் லஹம் மற்றும் கேல்ஸ் புயோல் ஆகியோரும் இதில் அடங்குவர்.
- இந்தப் பிரச்சாரமானது கோவிட் – 19 ஐ எதிர்த்துப் போராடுவதற்காக ஏற்படுத்தப் பட்டதாகும்.

- இந்தப் பிரச்சாரமானது "கொரானா வைரஸை ஒழிப்பதற்கான செய்தியை அனுப்புதல்" என்று அழைக்கப் படுகின்றது.
- இந்தப் பிரச்சாரமானது உலக சுகாதார அமைப்பின் அறிவுரைகளுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் 5 முக்கியமான நடவடிக்கைகளைக் கூறுகின்றது.
- கை கழுவுதல், முகத்தைத் தொடாமல் இருத்தல், தும்மும் போது கைக்குட்டையைப் பயன்படுத்துதல், சமூக விலகல் மற்றும் வீட்டில் இருத்தல் ஆகியவை இதில் அடங்கும்.




# முக்கிய தினங்கள்

## பாகுபாடற்ற தினம் - மார்ச் 1

- சிறுமிகள் மற்றும் பெண்கள் மீதான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1 ஆம் தேதியானது பாகுபாடற்ற தினமாகக் கொண்டாடப் படுகின்றது.
- மேலும் சம உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் பாகுபாடற்ற முறையில் நடத்துதல் ஆகியவற்றின் அவசியத்தையும் இந்தப் பாகுபாடற்ற தினமானது ஊக்குவிக்கின்றது.
- இந்தத் தினமானது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டு மார்ச் 1 அன்று கொண்டாடப் பட்டது. மேலும் இத்தினமானது UNAIDS அமைப்பின் நிர்வாக இயக்குனரான மைக்கேல் சிடிபே என்பவரால் பிப்ரவரி 27 அன்று தொடங்கப் பட்டது.
- இந்த ஆண்டில் இத்தினத்தின் கருப்பொருள் "சிறுமிகள் மற்றும் பெண்களால் எதிர்கொள்ளப் படும் பாகுபாடுகளுக்கு எதிரான போராட்டம்" என்பதாகும்.



## உலக உள்நாட்டு (சிவில்) பாதுகாப்பு தினம் - மார்ச் 1

- இந்தத் தினமானது 1990 ஆம் ஆண்டில் சர்வதேச உள்நாட்டு (சிவில்) பாதுகாப்பு அமைப்பினால் (International Civil Defence Organisation – ICDO) ஏற்படுத்தப் பட்டது.
- இந்தத் தினமானது 1972 ஆம் ஆண்டில் ICDO அரசியலமைப்பானது அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அமைப்பாக நடைமுறைக்கு வந்ததை குறிக்கின்றது.
- சிவில் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து உலக மக்களின் கவனத்தை ஈர்ப்பதும் பேரழிவுகளுக்கு எதிராகப் போராடுவதற்குப் பொறுப்பான அனைத்துச் சேவைகளின் முயற்சிகள், தியாகங்கள் மற்றும் சாதனைகளுக்கு மரியாதை செலுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- இந்த ஆண்டின் இந்தத் தினத்தின் கருப்பொருள், "குழந்தைகளின் பாதுகாப்பு, நமது பொறுப்பு" என்பதாகும்.

## உலக கானுயிர் தினம் - மார்ச் 03

- ஐக்கிய நாடுகளின் உலக கானுயிர் தினம் - 2020ன் கருப்பொருள், 'பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் பேணுதல்' என்பதாகும்.




## உலகக் கேட்புத் திறன் தினம் - மார்ச் 03

- உலக சுகாதார அமைப்பானது ஒரு கருப்பொருளைத் தீர்மானிப்பதன் மூலமும் பிரசுரங்கள் & சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் உள்ளிட்ட பிற விவாதப் பொருட்களை உருவாக்குவதன் மூலமும் ஒவ்வொரு ஆண்டும் உலகக் கேட்புத் திறன் தினத்தை அனுசரிக்கின்றது.



## தேசியப் பாதுகாப்பு தினம் - மார்ச் 04

- தேசியப் பாதுகாப்பு மன்றமானது (National Safety Council - NSC) "பாதுகாப்பு" குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தேசியப் பாதுகாப்பு வாரத்தை அனுசரிக்கின்றது.
- இங்கே "பாதுகாப்பு" என்பது கவனக்குறைவு அல்லது பொறுப்பற்ற தன்மை ஆகியவற்றின் காரணமாக விபத்துக்களைத் தடுப்பதற்கான முறையைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள், "மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புச் செயல்திறனை மேம்படுத்துதல்" என்பதாகும்.
- தேசியப் பாதுகாப்பு தினத்தின் முதலாவது அனுசரிப்பானது தேசியப் பாதுகாப்பு மன்றம் நிறுவப்பட்ட ஆண்டான 1966 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் மகாராஷ்டிராவின் நவி மும்பையில் அமைந்துள்ளது.




## நீடித்த வளர்ச்சிக்கான உலகப் பொறியியல் தினம் - மார்ச் 04

- நீடித்த வளர்ச்சிக்கான உலகப் பொறியியல் தினமானது 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 4 ஆம் தேதியன்று யுனெஸ்கோ சர்வதேசப் பொறியாளர்கள் மற்றும் பொறியியல் தினமாக கொண்டாடப்பட இருக்கின்றது.
- பொறியாளர்களின் செயல்பாடுகள் மற்றும் பொறியியல் துறை ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப் படுவதுடன், நீடித்த வளர்ச்சி மற்றும் நவீன வாழ்க்கைக்குத் தொழில் துறையின் முக்கியமான பங்களிப்புகளும் இதன் மூலம் கொண்டாப்பட இருக்கின்றன.

## ஜன் அவுசாதி திவாஸ் (மரபுசார் மருத்துவ தினம்) - மார்ச் 7

- மரபுசார் மருந்துகளின் (Generic Medicine) பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இது 2019 ஆம் ஆண்டு மார்ச் 07 அன்று தொடங்கப் பட்டது.
- பிரதான் மந்திரி ஜன் அவுசாதி பரியோஜனா (Pradhan Mantri Jan Aushadhi Pariyojana - PMBJP) என்ற திட்டமானது 2015 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று இந்தியப் பிரதமரால் அறிவிக்கப் பட்டது.
- இது இந்திய அரசின் இரசாயனங்கள் மற்றும் உரத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மருந்துத் துறையால் தொடங்கப் பட்டுள்ளது.




- 2020 ஆம் ஆண்டிற்குள் நாட்டில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது 1 PMBJP கேந்திராவை நிறுவ வேண்டும் என்று அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் உயர்தர மருந்துகளின் விலைகளானது சந்தை விலைக்குக் கீழே இருக்கும்படி அரசாங்கத்தால் குறைக்கப் படுகின்றன.
- 'ஜன் அவுசாதி கடைகள்' அரசாங்கத்தால் அமைக்கப் பட்டுள்ளன. இங்கு மரபுசார் மருந்துகள் கிடைக்கின்றன.
- பிற நிறுவன மருந்துகளை விட மரபுசார் மருந்துகள் மிகவும் குறைந்த விலையில் இங்கு கிடைகின்றன.

## சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 8

- இந்தத் தினமானது உலகெங்கிலும் உள்ள பெண்களை கௌரவிக்கின்றது. இது இவர்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சாதனைகளைக் கொண்டாடுகின்றது.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருள், "அனைவரும் சமம்" என்பதாகும்.
- 1917 ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யாவில் பெண்கள் வாக்குரிமையைப் பெற்ற பிறகு, மார்ச் 8 ஆம் தேதியானது அங்கு தேசிய விடுமுறையாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது இத்தினத்தை 1977 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடத் தொடங்கியது.
- சர்வதேச மகளிர் தினத்திற்கான ஐ.நாவின் கருப்பொருள், 'என்னுடைய தலைமுறை சமத்துவம்: பெண்களின் உரிமைகளை உணர்ந்து கொள்தல்' என்பதாகும்.



## மத்தியத் தொழிலக் பாதுகாப்புப் படையின் எழுச்சி (நிறுவன) தினம் - மார்ச் 10

- இந்த ஆண்டு மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படையின் (Central Industrial Security Force - CISF) 50வது எழுச்சி தினமானது கொண்டாடப்பட்டது.
- CISF ஆனது 1969 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இது இந்தியாவில் மத்திய ஆயுதக் காவல் படையின் (Central Armed Police Force - CAPF) ஒரு பிரிவாகும்.
- இது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் அல்லாமல் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.
- இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது.
- CISFன் பொது இயக்குநர் இந்தியக் காவல் பணி அதிகாரியான ராஜேஷ் ரஞ்சன் ஆவார்.
- இது நாட்டில் இருக்கும் விண்வெளி, அணு ஆயுதம், அரசு மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் அமைப்புகளைப் பாதுகாக்கின்றது.
- இது பேரழிவு மேலாண்மையிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றது.




## உலக சிறுநீரக தினம் 2020 - மார்ச் 12

- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமையன்று உலக சிறுநீரக தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள், "அனைத்து இடங்களிலும் அனைவருக்குமான சிறுநீரக ஆரோக்கியம் - தடுப்பு முதல் கண்டறிதல் வரை மற்றும் சமமான அணுகல் முதல் சிகிச்சை வரை" என்பதாகும்.



## உலக ரோட்டராக்ட் தினம் - மார்ச் 13

- இது உலகம் முழுவதும் ரோட்டராக்டர்களால் வழங்கப்படும் சேவைகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "ரோட்டராக்ட்" என்பது "ரோட்டரிகளின் செயல்பாடுகள்" என்பதைக் குறிக்கின்றது.
- ரோட்டரி கிளப் என்பது இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான ஒரு சமூக சேவை அமைப்பாகும்.
- ரோட்டராக்ட் ஆனது ரோட்டரி சர்வதேச இளைஞர் திட்டமாக 1968 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வட கரோலினாவில் தொடங்கப் பட்டது.
- முதலாவது ரோட்டராக்ட் சங்கமானது 1968 ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று நிறுவப்பட்டது.
- ரோட்டரி சங்கத்தின் குறிக்கோள் "சுய மேம்பாடு - சேவையின் மூலம் தோழமை" என்பதாகும்.




## உலக உறக்க தினம் - மார்ச் 13

- இது ஆண்டுதோறும் மார்ச் மாத சம இரவு தினம் அல்லது வட அரைக்கோள இளவேனிற் கால சம இரவு தினத்திற்கு முந்தைய வெள்ளிக் கிழமையன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது உலக உறக்க சங்கத்தின் உலக உறக்க தினக் குழுவால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.
- முதலாவது உலக உறக்க தினமானது 2008 ஆம் ஆண்டு மார்ச் 14 அன்று நிகழ்ந்தது.
- 2020 ஆம் ஆண்டின் கருத்துரு, 'சிறந்த உறக்கம், சிறந்த வாழ்க்கை, சிறந்த கிரகம்' என்பதாகும்.

***இது பற்றி***

- மார்ச் மாத சம இரவு தினம் ஆனது வட அரைக்கோளத்தில் இளவேனிற் கால சம இரவு தினம் (வசந்தகால சம இரவு தினம்) என்றும் தெற்கில் இலையுதிர் கால சம இரவு தினம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- மார்ச் மாத சம இரவு தினமானது வட அரைக்கோளத்தில் வசந்த காலத்தின் தொடக்கத்தையும் குளிர்காலத்தின் முடிவையும் குறிக்கின்றது. ஆனால் இது தென் அரைக்கோளத்தில் இலையுதிர்க் காலத்தின் தொடக்கத்தையும் கோடையின் முடிவையும் குறிக்கின்றது.




## பை நாள் - மார்ச் 14

- பை நாள் என்பது கணித மாறிலியின் (mathematical constant) வருடாந்திரக் கொண்டாட்டம் π (பை) ஆகும்.
- யுனெஸ்கோவின் 40வது பொது மாநாடு பை நாளை சர்வதேசக் கணித தினமாக நவம்பர் 2019 இல் முடிவு செய்தது.
- மார்ச் 14 இயற்பியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் பிறந்த நாளாகவும் அமைந்துள்ளது.
- பை தோராயமாக்கம் நாள் ஜூலை 22 அன்று அனுசரிக்கப் படுகிறது. (நாள்/மாத வடிவத்தில் 22/7)
- இரண்டு பை நாள் கணித மாறிலிக்கான டவ் நாள் என்றும் அழைக்கப்படுகிறது. இது ஜூன் 28 அன்று (மாதம்/நாள் வடிவத்தில் 6/28) அனுசரிக்கப் படுகிறது.




## நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் - மார்ச் 14

- ஆறுகளின் முக்கியத்துவம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது கொண்டாடப்படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினத்தின் கருப்பொருள், "பெண்கள், நீர் மற்றும் காலநிலை மாற்றம்" என்பதாகும்.
- இந்தத் தினத்தை உருவாக்குவதன் பின்னணியில் உள்ள முக்கியமான நோக்கமானது அழிவுகரமான நீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் எழுப்புவது, நீர்நிலைகளின் தூய்மைத் தன்மையை மீட்டெடுப்பது மற்றும் நமது நதிகளின் சமமான மற்றும் நிலையான மேலாண்மைக்கான தேவை ஆகியவையாகும்.

## சர்வதேசக் கணித தினம் - மார்ச் 14

- கணிதத்தின் சிறப்பு & முக்கியத்துவம் மற்றும் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் கணிதத்தின் அடிப்படை பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது கொண்டாடப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "எங்கும் கணிதம்" என்பதாகும்.
- தற்பொழுது மார்ச் 14 ஆம் தேதியானது பை தினம் என்று அழைக்கப்படுகின்றது. இத்தினமானது உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் கொண்டாடப்படுகின்றது.

## உலக நுகர்வோர் உரிமை தினம் - மார்ச் 15

- நுகர்வோரின் உரிமைகள் மற்றும் தேவைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தின் கருப்பொருள், 'நிலையான நுகர்வோர்' என்பதாகும்.




## தேசியத் தடுப்பு மருந்து தினம் - மார்ச் 16

- தடுப்பு மருந்தின் முக்கியத்துவம் குறித்து நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது தேசிய நோய்த் தடுப்பு தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- வாய்வழிப் போலியோ தடுப்பு மருந்து முதல்முறையாக வழங்கப்பட்ட தினமான 1995 ஆம் ஆண்டு மார்ச் 16 அன்று இத்தினமானது முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- தேசியத் தடுப்பு மருந்து தினத்தை கொண்டாடுவதன் பின்னணியில் உள்ள முக்கியமான நோக்கம் போலியோவுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் உலகிலிருந்துப் போலியோவை முற்றிலுமாக ஒழித்தல் ஆகியவையாகும்.

*குறிப்பு*

- 2020 ஆம் ஆண்டின் உலக நோய்த் தடுப்பு வாரமானது ஏப்ரல் கடைசி வாரத்தில் (ஏப்ரல் 24 முதல் 30 வரை) கொண்டாடப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் உலக நோய்த் தடுப்பு வாரத்தின் கருப்பொருள், 'அனைவருக்கும் தடுப்பு மருந்து' என்பதாகும்.

## ஆயுதத் தளவாட தொழிற்சாலைகள் தினம் - மார்ச் 18

- இது இந்திய அரசின் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் பாதுகாப்பு உற்பத்தித் துறையின் கீழ் செயல்படும் ஒரு தொழில்துறை அமைப்பாகும்.
- ஆயுதத் தளவாட தொழிற்சாலைகள் வாரியமானது (OFB - Ordnance Factories Board) உலகில் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் ஒரு மிகப்பெரிய உற்பத்தி நிறுவனம் ஆகும். மேலும் இது இந்திய அரசாங்கத்தால் நடத்தப்படும் மிகப் பழமையான அமைப்பாகும்.
- இந்த வாரியங்கள் சிறிய ஆயுதங்கள், ஏவுகணைகள், ராக்கெட் ஏவுகணைகள், ரசாயனங்கள், வெடிபொருட்கள், சுரங்கங்கள், கையெறி குண்டுகள், பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் பணியை மேற்கொள்கின்றன.
- இது பெரும்பாலும் "பாதுகாப்பின் நான்காவது தூண்" என்றும் இந்தியாவின் "ஆயுதப் படைகளுக்கு பின்னால் இயங்கும் படை" என்றும் அழைக்கப்படுகிறது.
- OFB ஆனது உலகில் 37வது மிகப்பெரிய பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தியாளராகவும் ஆசியாவில் 2வது மிகப்பெரிய பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தியாளராகவும் இந்தியாவின் மிகப்பெரிய பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தியாளராகவும் விளங்குகின்றது.
- டச்சு ஆஸ்டெண்ட் என்ற நிறுவனமானது மேற்கு வங்காளத்தில் இச்சாபூரில் துப்பாக்கி தூள் தொழிற்சாலையை நிறுவிய 1712 ஆம் ஆண்டு அன்று முதலாவது இந்திய ஆயுதத் தளவாட தொழிற்சாலையானது தொடங்கப் பட்டது.
- 1801 ஆம் ஆண்டில், கல்கத்தாவின் காசிப்போரில் துப்பாக்கி வண்டி நிறுவனமானது நிறுவப் பட்டது.
- இது தற்பொழுது வரை செயல்படும் இந்தியாவின் மிகப் பழமையான ஆயுதத் தளவாடத் தொழிற்சாலையாகும்.
- தற்பொழுது நாட்டில் 41 ஆயுதத் தளவாடத் தொழிற்சாலைகள் உள்ளன.




## சர்வதேச மகிழ்ச்சி தினம் – மார்ச் 20

- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "அனைவரும் ஒன்றிணைந்து மகிழ்ச்சி பெறுதல்" என்பதாகும்.
- முதலாவது சர்வதேச மகிழ்ச்சி தினமானது 2013ஆம் ஆண்டில் மார்ச் 20 அன்று அனுசரிக்கப்பட்டது.

## உலக சிட்டுக் குருவி தினம் – மார்ச் 20

- பறவைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20ஆம் தேதியானது உலக சிட்டுக் குருவி தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "நான் சிட்டுக்குருவிகளை நேசிக்கின்றேன்" என்பதாகும்.

## சம இரவு – பகல் புவி தினம் – மார்ச் 20

- உலக புவி தினத்தைப் போன்றே புவியைப் பாதுகாப்பதற்காக மனிதர்களால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை அனுசரிப்பதற்காகவும் சிறந்த காலநிலைக்காக சிறந்த உத்திகளை வகுப்பதற்காகவும் சம இரவு-பகல் புவி தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- ஒவ்வொரு ஆண்டும் சம இரவு-பகல் புவி தினமானது வசந்த கால சம இரவு-பகல் தினத்தன்று (இந்த ஆண்டு மார்ச் 20ஆம் தேதி) அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது வட அரைக் கோளத்தில் வசந்த காலத்தின் முதலாவது தினத்தையும் தென் அரைக் கோளத்தில் இலையுதிர்க் காலத்தின் முதலாவது தினத்தையும் குறிக்கின்றது.
- இத்தின அனுசரிப்பானது முதலாவது சம இரவு-பகல் புவி தினம் மற்றும் முதலாவது புவி தினம் அனுசரிக்கப்பட்ட 1970ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் தேதியிலிருந்து அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- மேலும் இத்தினமானது "இரவும் பகலும் சமமான புவி தினம்" என்றும் அழைக்கப் படுகின்றது.




## உலக வாய் சுகாதார தினம் – மார்ச் 20

- வாய் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக வாய் சுகாதார தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது எப்டிஐ உலக பல் கூட்டமைப்பினால் உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.
- பதின்ம வயதுடைய நலமுடன் இருப்பவர்கள் 32 பற்களையும் சூழிய (0) பல் துவாரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.
- மேற்கூறியவற்றை எண்ணியல் சார்ந்து குறிப்பிடப்பட்டால் 3/20 எனக் குறிப்பிட வேண்டும். எனவே இதற்காக மார்ச் 20ஆம் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "வாய்ச் சுகாதாரத்திற்கு ஒன்றிணைதல்" என்பதாகும்.

### *எப்டிஐ*

- எப்டிஐ என்பது சர்வதேச, உறுப்பினர் அடிப்படையிலான ஒரு அமைப்பாகும். இது உலகம் முழுவதும் உள்ள 1 மில்லியனுக்கும் மேற்பட்ட பல் மருத்துவர்களுக்கான ஒரு முக்கியமான பிரதிநிதித்துவ அமைப்பாக செயல்படுகின்றது.
- இது 1900ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் அமைந்து உள்ளது.




## உலக மீள்சுழற்சி தினம் – மார்ச் 18

- மீள்சுழற்சிகள் "ஏழாவது வளம்" என்று அழைக்கப்படுகின்றன.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மீள்சுழற்சித் தலைவர்கள்" என்பதாகும்.
- இவர்கள் ஒவ்வொரு ஆண்டும் 700 மில்லியன் டன் கார்பன்-டை-ஆக்ஸைடைச் சேமிக்க உதவுகின்றனர்.
- உலக மீள்சுழற்சி தினமானது உலக மீள்சுழற்சி அமைப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.

## உலகக் கவிதை தினம் – மார்ச் 21

- இது கலாச்சார, மொழியியல் படைப்பு மற்றும் அடையாளத்தின் மனித நேயத்தின் மிகவும் மதிக்கப்படும் வடிவங்களில் ஒன்றை அனுசரிக்கின்றது.
- யுனெஸ்கோ அமைப்பானது 1999 ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற தனது 30வது பொதுக் கருத்தரங்கின் போது மார்ச் 21ஆம் தேதியை உலகக் கவிதைத் தினமாகத் தேர்ந்தெடுத்தது.
- இது கவிதைப் படைப்புகளின் மூலம் மொழியியல் படைப்பிற்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் அழிந்து போகும் மொழியினங்கள் என்று கேள்வியுறும் மொழியினங்களுக்காக வாய்ப்புகளை அதிகரித்தலை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச நவ்ருஸ் தினம் – மார்ச் 18

- இது ஈரானியப் புது வருடப் பிறப்புத் திருவிழாவாகும். இது பாரசீகப் புது வருடம் என்றும் அறியப் படுகின்றது.
- நவ்ருஸ் தினமானது வட அரைதுருவக் கோளத்தில் வசந்த காலத்தின் முதல் தினத்தைக் குறிக்கின்றது. இது வழக்கமாக மார்ச் 21ஆம் தேதியன்று நிகழும் வசந்தகால சம இரவு-பகல் தினத்தன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது 2010 ஆம் ஆண்டில் ஒரு ஐக்கிய நாடுகள் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் ஐக்கிய நாடுகளால் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது.

## சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் – மார்ச் 21

- அனைத்து மனிதர்களும் பிறப்பின் போது சுதந்திரமாகவும் சமமான கண்ணியத்துடனும் உரிமையுடனும் உள்ளனர் என்றும் சமூகங்களின் வளர்ச்சி மற்றும் நலனில் இவர்கள் பங்கு கொள்ளும் திறன் கொண்டுள்ளனர் என்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூறியுள்ளது.
- இந்த ஆண்டு இத்தினமானது ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணையத்தால் மேற்கொள்ளப் பட்ட ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேசப் பத்தாண்டுகளில் இடைநிலை ஆய்வின் மீது கவனம் செலுத்துகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அங்கீகாரம், நீதி மற்றும் வளர்ச்சி ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேச பத்தாண்டுகளின் இடைநிலை மறு ஆய்வு" என்பதாகும்.

***பின்னணி***

- 1960 ஆம் ஆண்டில் இத்தினத்தில் நிறவெறிச் சட்டம் இயற்றப்பட்டதற்கு எதிராக தென் ஆப்பிரிக்காவின் சர்ப்பிவில்லியில் அமைதியாகப் போராடிய மக்கள் மீது காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், 69 மக்கள் கொல்லப் பட்டனர்.
- 1966 ஆம் ஆண்டில் இத்தினத்தைப் பறைசாற்றும் விதமாக, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இனப் பாகுபாட்டின் அனைத்து வடிவங்களையும் ஒழிப்பதற்கான தனது முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்காக சர்வதேசச் சமூகத்திற்கு அழைப்பு விடுத்தது.

## சர்வதேசக் காடுகள் தினம் – மார்ச் 21

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2012 ஆம் ஆண்டில் மார்ச் 12 ஆம் தேதியை சர்வதேசக் காடுகள் தினமாகப் பறைசாற்றியது.
- இத்தினமானது ஐக்கிய நாடுகள் காடுகள் மன்றம் மற்றும் உணவு & வேளாண் அமைப்பு (FAO - Food and Agriculture Organization) ஆகியவற்றால் கூட்டாக இணைந்து அனுசரிக்கப்பட்டது.
- 2020ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "காடுகள் மற்றும் பல்லுயிர்" என்பதாகும்.




## உலக மனநலிவு நோய் அறிகுறி தினம் – மார்ச் 21

- குரோமோசோம் 21ன் மிக அதிக பகுதியளவு (அல்லது முழுமையான) நகலைக் கொண்ட நபர்களிடையே மன நலிவு நோய் ஏற்படுகின்றது.
- 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மார்ச் 21 ஆம் தேதியை உலக மனநலிவு நோய் அறிகுறி தினமாக அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நாம் முடிவெடுப்போம்" என்பதாகும்.

## உலக தண்ணீர் தினம் – மார்ச் 22

- இத்தினமானது நன்னீர் முக்கியத்துவத்தின் தேவையின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நீர் மற்றும் காலநிலை மாற்றம்" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் உலக நீர் மேம்பாட்டு அறிக்கையானது ஒவ்வொரு ஆண்டும் உலக தண்ணீர் தினத்தின் போது வெளியிடப்படுகின்றது.
- ஐக்கிய நாடுகள் – நீர் என்ற அமைப்பானது இத்தினத்தை அனுசரிக்கும் தலைமை அமைப்பாகும்.
- முதலாவது உலக தண்ணீர் தினமானது 1993ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளால் தேர்ந்தெடுக்கப் பட்டது.




## தியாகிகள் தினம் – மார்ச் 23

- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23ஆம் தேதியானது சாகீத் திவாஸ் அல்லது தியாகிகள் தினமாகக் கொண்டாடப் படுகின்றது.
- பகத் சிங், சுகதேவ் தாப்பர் மற்றும் சிவராம் ராஜகுரு ஆகிய மூன்று சிறந்த இளம் தலைவர்களின் வீரம் மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றைக் குறிப்பதற்காக இத்தினமானது கொண்டாடப் படுகின்றது.

## உலக வானிலை தினம் - மார்ச் 23

- 1873 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவின் வியன்னாவில் நடந்த முதல் சர்வதேச வானிலை காங்கிரசில் இந்த நாள் நிறுவப்பட்டது. மேலும் மார்ச் 23, 1950 அன்று சர்வதேச வானிலை அமைப்பு உலக வானிலை அமைப்பாக மாறியது.




- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள் 'காலநிலை மற்றும் நீர்' ஆகும். இது 2020 ஆண்டிற்கான உலக நீர் தினத்தின் 'காலநிலை மாற்றம் மற்றும் நீர்' என்ற கருப்பொருளுடன் ஒத்துப் போகிறது.

- "ஒவ்வொரு துளிகளையும் எண்ணுங்கள், ஒவ்வொரு துளியும் அவசியம் ஆகும்" என்பது இந்த ஆண்டிற்கான உலக வானிலை நாளின் முழக்கமாகும்.

## உலக காசநோய் தினம் - மார்ச் 24

- உலகளாவிய தொற்றுநோயான காசநோயைப் பற்றியும் அந்நோயை அகற்றுவதற்கான முயற்சிகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- டாக்டர் ராபர்ட் கோச் என்பவர் இதே நாளில் தான் காசநோயை ஏற்படுத்தும் பாக்டீரியத்தைக் கண்டுபிடித்து அதை உலகிற்குத் தெரியப்படுத்தினார்.
- உலக சுகாதார தினம், உலக இரத்த தான தினம், உலக நோய்த்தடுப்பு வாரம், உலக மலேரியா தினம், உலக புகையிலை எதிர்ப்பு நாள், உலக ஹெப்படைடிஸ் தினம் மற்றும் உலக எய்ட்ஸ் தினம் ஆகியவற்றுடன் சேர்த்து உலக சுகாதார அமைப்பு (WHO) அனுசரிக்கும் எட்டு அதிகாரப்பூர்வ உலகளாவிய பொது சுகாதாரப் பிரச்சாரங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இந்த ஆண்டிற்கான உலக காசநோய் தினத்தின் கருப்பொருள் "காசநோய் முடிவுக்கு வரும் நேரம் இது" என்பதாகும்.




## மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கௌரவம் குறித்த உண்மைக்கான சர்வதேச உரிமைகள் தினம் - மார்ச் 24

- 1980 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் தேதி அன்று கொலை செய்யப்பட்ட மான்சிநொர் ஆஸ்கார் அர்னுல்போ ரோமெரோவின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒவ்வொரு வருடமும் இந்த தினம் அனுசரிக்கப் படுகிறது.
- மான்சிநொர் ரோமெரோ எல் சால்வடாரில் மிகவும் பாதிக்கப்படக் கூடிய விளிம்புநிலை மக்களுக்கு எதிராக ஏற்படும் மனித உரிமை மீறல்களை கண்டிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார்.

## அட்லாண்டிக் கடல் பகுதியின் அடிமைகள் வர்த்தகம் மற்றும் அடிமைத் தனத்தினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்வதற்கான சர்வதேச தினம் – மார்ச் 25

- இது 2007 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் சர்வதேச அனுசரிப்பாகும்.
- இத்தினமானது "வரலாற்றில் மிக மோசமான மனித உரிமை மீறல்" என்று அழைக்கப்படும் அட்லாண்டிக் கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அடிமைகள் வர்த்தகத்தின் விளைவாக பாதிக்கப்பட்ட மற்றும் இறந்தவர்களை நினைவு கூர்ந்து, அவர்களைக் கௌரவிக்கின்றது.

## கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பணியாளர் உறுப்பினர்களுடன் ஒன்றிணைவதற்கான சர்வதேச தினம் – மார்ச் 25

- இது ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப் படுகின்றது.
- இத்தினமானது அரசு சாரா அமைப்பு மற்றும் ஊடகத்தினரிடையே, நீதியை ஏற்படுத்துதல், அதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் உறுப்பினர்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது, பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரணப் பணிகள் முகமையில் பணியாற்றிய முன்னாள் பத்திரிக்கையாளரான அலெக்கொலெட் 1985 ஆம் ஆண்டு ஆயுதம் ஏந்திய மற்றும் துப்பாக்கிகளைக் கொண்ட மனிதர்களால் கடத்தப்பட்டதை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப் படுகின்றது.




## உலக திரையங்கு (நாடகக் கொட்டகை) தினம் – மார்ச் 27

- இது சர்வதேச திரையரங்கு நிறுவனத்தினால் 1962 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- “அரங்கேற்றம்” என்ற கலை வடிவத்தின் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை உணர்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.

## இராஜஸ்தான் தினம் – மார்ச் 30

- இந்த மாநிலம் இதற்கு முன்பு ரஜபுதினம் என்று அழைக்கப் பட்டது.
- 1949 ஆம் ஆண்டு மார்ச் 30 அன்று, பிகானிர், ஜெய்சால்மர், ஜெய்ப்பூர் மற்றும் ஜோத்பூர் ஆகிய சுதேச அரசுகள் இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டு, இராஜஸ்தான் மாநிலம் உருவானது.



### தனித்துவம்

- இது "அரசர்களின் நிலம்" என்று வெகுவாக அறியப்படுகின்றது.
- இது நிலப்பகுதியின் அடிப்படையில் மிகப்பெரிய மாநிலமாகவும் மக்கட் தொகையைப் பொறுத்த வரையில் ஏழாவது மிகப் பெரிய மாநிலமாகவும் விளங்குகின்றது.
- பழமையான ஆரவல்லி மலைப்பகுதியில் அமைந்துள்ள இராஜஸ்தானின் ஒரே மலைப் பகுதியான அபு சிகரத்தில் உள்ள சமண புனிதத் தலமான தில்வாரா கோவில் இங்கு அமைந்துள்ளது.
- இராஜஸ்தான் மாநிலமானது காலி பங்கன் மற்றும் பாலத்தல் ஆகிய இடங்களில் சிந்து சமவெளி நாகரிகத்தின் இடிபாடுகளைக் கொண்டுள்ளது.
- இது பறவை வாழ்விடத்திற்கென்று வெகு சிறப்பாக அறியப்படும் உலகப் பாரம்பரியத் தளமான கேவலாதேவ் தேசியப் பூங்காவைக் கொண்டுள்ளது.
- இந்த மாநிலமானது சவாய் மாதவ்பூரில் உள்ள ரந்தம்பூர் தேசியப் பூங்கா, ஆல்வாரில் உள்ள சரிஸ்கா புலிகள் காப்பகம் மற்றும் கோட்டாவில் உள்ள முகுந்தரா குன்று புலிகள் காப்பகம் ஆகிய 3 தேசியப் புலிகள் காப்பகங்களைக் கொண்டுள்ளது.

## உலக இட்லி தினம் – மார்ச் 30

- உலக இட்லி தினமானது சென்னையில் வசிக்கும் புகழ்பெற்ற உணவு சமையல் கலைஞரான இனியவன் என்பவரால் தொடங்கப்பட்டது.
- இது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இட்லி ஆனது இந்தியப் பிரதான உணவாக இருந்த போதிலும், சில வரலாற்றாசிரியர்கள் இதன் தாயகம் இந்தோனேசியா என்று கூறுகின்றனர்.
- இந்த நாடானது நொதிக்க வைத்தல் உணவிற்கான மிகச் சிறப்பான ஒரு நாடாகக் கருதப்படுகின்றது.
- இந்தப் பாரம்பரியமானது "வேக வைக்கப்பட்ட இட்லியாக" பொது ஆண்டு 800 முதல் பொது ஆண்டு 1200 வரையிலான காலகட்டங்களில் இந்தியாவிற்கு வந்தது.
- உளுந்தம்பருப்பு மாவிலிருந்துத் தயாரிக்கப்பட்ட உணவு வகையான "இட்லியஜ்" என்ற வார்த்தையிலிருந்து "இட்லி" என்ற பெயர் வந்துள்ளது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.
- இது கி.பி. 920 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு கன்னட நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- இது தவிர்த்து கி.பி.1130 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சமஸ்கிருத மனசோல்சா என்ற நூலானது உளுந்தம்பருப்பிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு உணவான "இடாரிகா" என்ற உணவைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.
- 17 ஆம் நூற்றாண்டில், தமிழ் மக்கள் முதன் முறையாக "இட்லி" என்ற ஒரு உணவை அழைத்தனர்.

# இதரச் செய்திகள்

## "வேர்ட்லைன் இந்தியா டிஜிட்டல் பணவழங்கீடுகள் – 2019" என்ற ஒரு அறிக்கை

- சமீபத்தில் "வேர்ட்லைன் இந்தியா டிஜிட்டல் பணவழங்கீடுகள் - 2019" என்ற ஒரு அறிக்கையானது நிகழ்நேர கட்டணச் செலுத்து நிறுவனமான வேர்ல்ட்லைன் இந்தியாவினால் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான டிஜிட்டல் பரிவர்த்தனைகளை பெங்களூரு நகரம் கொண்டுள்ளது. இதைத் தொடர்ந்து சென்னை, மும்பை மற்றும் புனே ஆகியவை அதிக எண்ணிக்கையிலான டிஜிட்டல் பரிவர்த்தனைகளைக் கொண்டுள்ளன.
- மாநிலங்களிடையே அதிக எண்ணிக்கையிலான டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்தில் உள்ளது.

## பிரீடம் ஹவுஸ் அமைப்பின் வருடாந்திர அறிக்கை

- பிரீடம் ஹவுஸ் அமைப்பினால் வெளியிடப்பட்ட அரசியல் உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகள் குறித்த வருடாந்திர அறிக்கையின் படி, இந்தியா உலகின் குறைந்த மக்களாட்சித் தன்மை கொண்ட நாடுகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.
- உலகச் சுதந்திரம் - 2020 என்ற அறிக்கையில் திமோர் லெஸ்டே மற்றும் செனகல் ஆகியவற்றுடன் இந்தியா 83வது இடத்தில் உள்ளது.




| Year | Political rights | Civil Liberties | Total Score |
|---|---|---|---|
| 2017 | 35/40 | 42/60 | 77/100 |
| 2018 | 35/40 | 42/60 | 77/100 |
| 2019 | 35/40 | 40/60 | 75/100 |
| 2020 | 34/40 | 37/60 | 71/100 |

## முதல் 5 இடங்களில் இந்திய மருந்துத் தொழில்துறை

- ஈக்விட்டி மாஸ்டரின் அறிக்கையின் படி, இந்திய மருந்துச் சந்தையானது அளவின் அடிப்படையில் மூன்றாவது பெரியச் சந்தையாகவும் மதிப்பின் அடிப்படையில் 14வது பெரியச் சந்தையாகவும் உள்ளது.
- இந்தியா தற்பொழுது உலகின் வளர்ந்து வரும் முதல் ஐந்து மருந்துச் சந்தைகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- யுனிசெப்பின் (ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம்) மருந்து விநியோக வருடாந்திர அறிக்கையானது இந்தியாவை உலகின் மிகப்பெரிய பொதுவான மருந்து விநியோக நாடாக அங்கீகரித்துள்ளது.
- இந்தியாவின் இரண்டாவது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக ஆப்பிரிக்காவும் மூன்றாவது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பாவும் விளங்குகின்றன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★